மர்மசாஸ்திரம்.

இஃது

மத்ராஸ் ஹைகோர்டு வகீல், பி. ஏ., பி. எல்.,

ஆர். வெங்கட சுப்பராவ் பந்துலு அவர்களால்

தெலுங்கில் எழுதப்பட்டுத் தமிழில் மொழி

பெயர்க்கப்பட்டது.

விலை ரூ 2-0-0 தபால் கூலியுடன் ரூ 2-4-0.

MARMA SASTRA

OR

THE SECRETS OF LIFE

BY

R. VENKATA SUBBA RAU, B. A., B. L.,

VAKIL, HIGH COURT, MADRAS.

Published by the Author

THE JANOPAKARINI PRESS, MOUNT ROAD, MADRAS.

1894.

[*All Rights Reserved.*]

PREFACE.

THIS work is the result of extensive reading combined with a close and thoughtful study of the social conditions prevailing in this country. Its aim is to impart to the people a knowledge of some of the most important laws of life, which govern their physical, mental and moral well-being. I believe that INDIA's only hope lies in her social regeneration, and shall feel amply rewarded if this work will, in any measure however humble, contribute towards the attainment of that great and noble end.

R. V. S.

MADRAS,
August 1894.

PRINTED BY SRINIVASA, VARADACHARI & CO., MOUNT ROAD, MADR

CONTENTS.

CHAPTER I.—THE SECRETS OF BIRTH.

MAN the head of Creation—born from a small ovule—male generative organs—female generative organs—menstruation and ovulation—impregnation and conception—barrenness, its causes and cures—prevention of conception by artificial means condemned—stages of development after conception—determination of sex—physical, mental and moral resemblance of children to parents—signs of pregnancy—duration of pregnancy—precautions for happy delivery.

CHAPTER II.—THE SECRETS OF CHILD-REARING.

Children necessary—how to bring them up—bathing—cold bath, warm bath, sea-bath—clothes—food—mother's milk, nurse's milk, cow's milk, condensed milk—time for weaning—pure air—exercise and play—proper time and place—proper forms of exercise—playthings—sleep—sleeping room—early to bed and early to rise—snoring, its cause and cure—education—moral training—common errors—hints to parents—diseases and accidents—cures and precautions.

CHAPTER III.—THE SECRETS OF LONGEVITY.

Love of life—life-elixirs—means of prolonging life—causes which shorten life—cleanliness—proper food—pure air—exercise—proper amount of sleep—excessive mental work—excessive sexual indulgence—music—rural life—travelling—peace, contentment, hope, courage—company of children—envy, jealousy, despair, melancholy, fear—married life.

CHAPTER IV.—THE SECRETS OF MARRIED LIFE.

Marriage necessary—selection of bride and bridegroom—the system of courtship—selection by parents—physical and mental adaptation—difficulty of determining adaptation before puberty—age, beauty, physical features and good qualities—means of determining character—haste—danger of relying on horoscopes and palmistry—proper adaptation necessary for happiness—infant-marriage—its evils—child-widows, unhappy unions, obstruction to education and to high aspirations, feeble offspring, premature death of child-mothers, and premature old age of child-husbands—causes of infant marriage—ridiculous instances—educated men running with the stream—[illegible]iage of old men to young girls—natural injustice of infant-marriage—practical [illegible]-*Sastra* enjoins only marriage after puberty—effect of caste—unification of [illegible] widow-marriage—*Seven Lakhs of Child-Widows!*—the custom of *Sati*—cruel [illegible]nt of widows—injunctions of *Smritis*—origin of these injunctions—inutility—[illegible] behind the curtain—reform imperative—moral courage essential—*Sastras* [illegible]s widow-marriage—unfair attitude of the orthodox party—blindness of

Religious Heads—natural injustice of opposition—heart-rending condition of child-widows—education of women—*Ten Thousand out of Ten Crores* !—an educated wife, a blessing—fancied evil effects of education—education, the best means of improving good qualities—the present condition—pressing need for education of girls—our Girls' Schools—what education is necessary for women—insufficiency of education in the Vernaculars—liberty of women—Europe and America—*gosha* system—Indian women are slaves—origin of the slavery—consequences—our duty—injustice—let men and women exchange places—Humanity—happiness of husband and wife—mutual love and confidence essential—the marvel of unification—equality—delicacy and superiority of woman—brutality of husbands and corporal punishment—duty of wives and husbands—our undivided families—the real bond of union between husband and wife—the blessing of children—unchastity—different classes of wives and husbands—a look into the present—causes of unchastity—unsuitable unions, gosha, idleness, bad company, bad thoughts, nautch-women, poverty and prostitution—*nymphomania* —evil means—eight inexplicable facts—evils arising from unchastity—the true happiness of a loving husband and wife.

CHAPTER V.—THE SECRETS OF SEXUAL INDULGENCE.

Sexual intercourse—the hymen—the happiness of sexual congress—pleasant surroundings—a happy pair—mutual love essential—impotence arising from mercenary intercourse—folly of using stimulants—a piece of advice—proper times for sexual intercourse—when intercourse is dangerous—limit for sexual indulgence—evils of excess and abstinence—masturbation—mental vice—spermatorrhœa, its causes and cure—impotence, its causes and cure—venereal diseases—their terrible character—causes and cure—the best means of prevention is correct life.

CHAPTER VI.—THE SECRETS OF MIND.

Mind the greatest secret of Creation—mind-power—Mesmerism—a physiological explanation—control of birds and animals—training of horses—trained elephants, tigers and lions—snake-charming—dangers—mind-cure—faith—pilgrimages, prayers, charms, amulets—holy water and holy ashes—failure of faith—dangers of too much faith—alleged higher phenomena of *mesmerism*—clairvoyance, thought-reading, envelope-reading, discovery of hidden treasure and stolen property—the frauds of *Madame Blavatsky*—*Mrs. Annie Besant*, a dupe—*Govinda Chetty* of Valangiman—the Bellary gentleman-juggler—discovery of treasure by magic, an instance in point—soothsayers and astrologers—a challenge to mesmerists, thought-readers and astrologers—*Ten Thousand Rupees*—devils—do they really exist ?—fancy and fear—solitude, darkness, moonlight, burial ground, haunted places, associations with the dead—mental derangement—manifestations—ignorance and mental weakness—will-o'-the-wisp—some diseases mistaken for devils—false devils—soothsayers—cure for devil-disease—counter-fear and faith—charms and amulets—devil-d[illegible] and enchanters—dangers—Death and Afterwards—PATH TO SALVATION.

பொருளடக்கம்.

முதலதிகாரம்.—ஜனன மர்மங்கள்.

சிருஷ்டிக்கு மனுஷியன் தலைமையானவன்—அணுமாத்திரமாகிய அண்டத்தினின்றும்பிறப்பு—ஜனன காரணங்களாகிய புருஷாதவயவங்கள், ஸ்திரீ அவயவங்கள்—இரஜோதரிசனம்—கருப்போற்பத்தி—சந்தான மில்லாமற் போவதற்குக் காரணங்கள்—உண்டாவதற்குச் சாதனங்கள்—நிறுத்துமுபாயங்கள்—கருப்பவிருத்தி—ஒன்பது மாதங்களிலுள்ள பரிமாணங்கள்—ஸ்திரீ புருஷசிசுநிருணயம்—பிள்ளைகளின் முகக்குறிகள், குணாகுணங்கள்—கருப்ப சின்னங்கள்—பிரசவகாலம்—சுகப்பிரசவத்திற்கு மார்க்கங்கள்.

இரண்டாம் அதிகாரம்.—பாலபோஷண மர்மங்கள்.

சந்தானம் ஆவசிகம்—பிள்ளைகளை வளர்க்கும் வழிகள்—ஸ்நானம்—தண்ணீர் முழுக்கு, வெந்நீர் முழுக்கு, கடல் முழுக்கு—வஸ்திரங்கள்—ஆகாரம், தாய்ப்பால், தாதிப்பால், பசுவின்பால், புட்டிப்பால்—பால்மறக்கடித்தல்—நல்வாயு—சரீரப்பழக்கம், விளையாட்டு—தகுந்தசமயம், இடம்—தகுந்த சாதகங்கள், விளையாட்டுகள்—விளையாட்டுப்பொருள்கள்—நித்திரை—பள்ளியறை—முன்சாமத்தில்படுத்தல், விடியற்சாமத்தில் எழுதல்—குறட்டை—இதற்குக்காரணம், நீக்குமுபாயம்—வித்தை, நீதி, நடவடிக்கை—சாமானியத் தவறுபாடுகள்—தாய்தந்தைகள் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள்—வியாதிகள், இடையூறுகள்—சிகிற்சைகள், சாக்கிரதைகள்.

மூன்றாம் அதிகாரம்.—ஆயுள்விருத்தி மர்மங்கள்.

உயிர்மேலாசை—பசுமங்கள் முதலிய சீவாமிர்தங்கள்—ஆயுள்விருத்திக்கு மார்க்கங்கள்—ஆயுட் சீணத்துக்குக் காரணங்கள்—பரிசுத்தம்—உசிதமான ஆகரரம்—நல்வாயு—சரீரசாதகம்—அற்பநித்திரை, அதிக நித்திரை—அளவுக்கதிகமாய்ஓதுதல்—ஆலோசனைசெய்தல்—அதிசம்போகம்—சங்கீதம், நாட்டுப்புறத்து வாசம் பண்ணுதல்—நானா தேச சஞ்சாரம்—அமைதி, திருப்தி, உற்சாகம், தைரியம்—சிறு பிள்ளைகளுடன் ஆட்டபாட்டங்கள்—பேராசை, அருவெறுப்பு, பகை, உற்சாகமின்மை, விசாரம், பயம்—கிரகஸ்தாசிரமம்.

நாலாம் அதிகாரம்.—தாம்பத்திய மர்மங்கள்.

விவாகம் ஆவசிகம்—வதூவர நிருணயம்—சுயமாய் வரித்தல்—தாய் தந்தைகள் சம்பந்தம் நிச்சயிப்பது— சரீரத்துக்கும் மனத்துக்கும் குணவியற்கைகளுக்கும் பொருத்தம்—சிறுதனத்தில் பொருத்தங்கண்டுகொள்வது அசாத்தியம்—வயது, ரூபம், முகலட்சணங்கள், சுகுண சம்பத்து—இவற்றைக் கண்டுகொள்ளும் விதம்—அவசரப்படுதல்—சாதகங்கள், சாமுத்திரிக லட்சணங்கள்—பொருத்தமும் பரஸ்பரா கருஷணமு மில்லாவிடின் சவுக்கியம் உண்டாகாது—பாலிய விவாகம்—கெடுதல்கள்—லட்சக்கணக்காய்ப் பாலவிதந்துக்கள், சுகசூனியமான தாம்பத்தியங்கள், விருத்திபங்கம், வித்தியாபங்கம், துர்ப்பல சந்தானம், பாலமனைவிகளின் அகாலமரணங்கள், யௌவனத்திலேயே விருத்தாப்பியம்—பாலியவிவாகங்கள் பிரபலிப்பதற்குக்காரணங்கள்—பரிகாசத்துக்கிடமான பாலிய விவாகங்கள்—படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கு முள்ள பேதம் பேச்சிலேயே—விருத்த விவாகங்கள், பாலியவிவாகத்தில் அநியாயங்கள்—இனிச்செய்யவேண்டியது—பாலிய விவாகம் சாஸ்திரவிரோதம்—சாதிபேதங்கள், கிளைகள், சிறுகிளைகள்—கைம்பெண் விவாகம்—எழுலட்சம் இளங்கைம்பெண்டுகள் !—உடன்கட்டையேறுதல், கைம்பெண்டுகளைச் சம்பந்தித்த குரூரவழக்கங்கள்—கபிலஸ்மிருதியிலுள்ள தருமங்கள்—இவ்வாசாரங்களுக்குக் காரணம்—நிருபயோகம்—திரையின்பின்னேக்குதல்—துராசாரங்களைத் தொலைப்பது அவசியம்—கைம்பெண் விவாகம் சாஸ்திரீயம்—சாஸ்திரிகள், ஆசாரியர்கள் முதலியவர்களின் அநியாய நடவடிக்கை—மதாசாரியர்களின் மௌட்டியம்—பாலவிதவைகளின் கோரமான தீநிலைமை—பெண் கல்வி—பத்துக்கோடிப்பேர்களுள் பதினாயிரம் !—கல்விச் செல்வமுள்ள கணவியினால் வருஞ்சவுக்கியம்—கல்வியினால் கேடுகள் விளையுமா ?—சற்குண விருத்திக்குக் கல்வியே பிரதானம்—இப்போதைய நிலைமை—கல்வியின் அகத்தியம்—நமது பாலிகாபாடசாலைகள்—பெண்களுக்குவேண்டிய கல்வி எத்தன்மைத்து ?—நமது தேசபாஷைகளிலுள்ள கல்விபோதுமா? ஸ்திரீசுதந்தரம்—யூரோப் அமெரிகா கண்டங்கள்—இராணிவாசம்—நமது தேசப்பெண்கள் அடிமைகளே—இவ்வடிமைத்தனத்திற்கு முகாந்தரம்—இதனால்வரும் பயன்கள்—நாமேதுசெய்யவேண்டும் ?—பெண்களுக்குள்ள நிர்ப்பந்தங்கள்நமக்கேயிருந்திருக்குமாயின், நாமெப்படிச் சகிப்போம் ?—தம்பதிகள் சுகப்படும் வழிகள்—அந்நியோந்நிய நேசம், விசுவாசம்—தாம்பத்தியமகிமை—பெண்சாதிகளைக் குறைநோக்கமாய் நோக்குதல், அடித்தல்—பெண்சாதிபுருஷர்களின் பரஸ்பரதருமங்கள்—நம்முடைய அவிபக்தகுடும்பங்கள்—தம்பதிகளின் ஐக்கியத்துக்கு முக்கியமான மார்க்கம்—சந்தானசம்பத்து—விபசாரம்—நானாவித தாம்பத்தியங்கள்—பிரஸ்துதானுபவங்கள்—விபசாரத்துக்குக்காரணங்கள்—விபசாரம் மானவசரீரத்துக்கு அவசியமா ?—சௌந்தரியங்கண்டு சித்தம்பிரமித்தல்—பெண்கள் இயற்கையாய்த் துட்டைகளா ?—

ஸ்திரீபுருஷர்களின் விபசாரத்துக்கு முக்கியகாரணம்—பொருத்தமில்லாக் கலியாணங்கள்—இராணிவாசம், சோம்பேறித்தனம், கெட்டசகவாசம், கெட்டகாரியங்கள்பார்த்தல், கெட்ட ஆலோசனைகள், கெட்டசம்பாஷணைகள், சிருங்காரபிரபந்தங்கள், கோயில்கள், உற்சவங்கள், புராணசிரவணம், நாடகங்கள், வேசைகள், ஏழமை—மதனப்பிணி—விபசார பிசாசங்களின் கள்ளச்சூழ்ச்சிகள், தந்திரங்கள்—சமாதானம் விளங்காத எட்டு அமிசங்கள்—விபசாரத்தினால் வருநஷ்டங்கள்—காதலித்துக் காதலிக்கச்செய்யும் குலசதியினால்வரும் சுகமேசுகம்.

ஐந்தாம் அதிகாரம்.—சம்போக மர்மங்கள்.

சம்போக சவுக்கியம்—உள்ளியுரி—புணர்ச்சியின்பம்—உல்லாசத்துக்கு வழிகள்—சுகதாம்பத்தியவருணனை—அந்நியோந்நிய நேசம் அவசியம்—பிரீதியில்லாப் புணர்ச்சியினால் புணர்ச்சி வலிமை குறைவுபடும்—லாகிரி பதார்த்தங்களினால்வரும் தீங்கு—இருநன்மொழிகள்—புணர்ச்சிக்கேற்ற சமயங்கள்—புணர்ச்சிகூடாத தருணங்கள்—புணர்ச்சியளவு—அதிசம்போகத்தினாலும் சம்போகவின்மையினாலும் வருங்கேடுகள்—அஸ்தப்பிரயோக முதலிய துரப்பியாசங்கள்—சித்தசாபலியம்—வீரியநஷ்டம்—காரணங்கள், சிகிற்சை—வீரியவிருத்திக்கு வழிகள்—இலேகியம்—சுகப்பிணிகள்—இவற்றின் பயங்கரத்தன்மை—பிளவை, மேகம், வெள்ளை, துருவடிப்புண், கிரந்திப்புண், அரையாப்புக்கட்டி, படர்தேமல், சிலந்தி, விரணங்கள்—சிகிற்சைகள்—சுகப்பிணிகளினின்றும் தப்பித்துக்கொள்ளும் சாக்கிரதைகள்—சன்மார்க்கம்.

ஆறமதிகாரம்.—மனோமர்மங்கள்.

மனம் பெரிய இரகசியம்—மனோ பலம்—"மெஸ்மெர்" வசீகரணசக்தி. "மெஸ்மர்" கிரியைகள்—பறவைகளைத் தூங்கச்செய்தல்—மிருகவசியம்—குதிரைகளையும், பசுக்களையும் சாதுப்படுத்தும் வழி—யானைகள், புலிகள், சிங்கங்கள் முதலிய துஷ்ட ஜந்துக்களைச் சாதுவாக்குதல்—சர்ப்பவசியம்—மனோ பலத்தினால் வியாதி நிவாரணம்—பக்தி, விசுவாசங்கள்—யாத்திரைகள்—தீர்த்த ஸ்நானங்கள், வேண்டுகோள்கள், முடிப்புகள், பிரார்த்தனைகள், சேவைகள், இரட்சாபந்தனங்கள், தாயித்துகள், திருஷ்டிபரிகாரங்கள்—ஜபதீர்த்தங்கள், மந்திர விபூதிகள்—பைராகிகள், மகா புருஷர்கள்—நொண்டி, குருடு, ஊமை—தேள்கொட்டு, பாம்புக்கடி—சூரிய நமஸ்காரங்கள், நவக்கிரக ஜபங்கள்—திவ்விய திருஷ்டி—பிறத்திய ரெண்ணங்களைக் கண்டுகொள்ளுதல், தூரத்துப் பொருள்களை நோக்குதல், லகோடாபிரசினைகள் சொல்லுதல், புதையல் கண்டு பிடிப்பது, போக்கடித்துக்கொண்ட பொருளைக்கண்டு பிடித்தல்—பிளாவட்ஸ்கீ துரைசானியின் கபடுகள்—ஆனிபெசாண்ட் துரை

சானியாரின் பைத்தியகார நம்பிக்கை—வலங்கிமான் கோவிந்தசெட்டி, பல்லாரி காரடிக்காரன்—மந்திரங்களினாலும், மைதீட்டுகளினாலும் புதையல் கண்டுபிடித்தல்—நெல்லூர் மாத்துவாசாரி—மந்திரக்காரர், குறிசொல்பவர், சோதிடர்கள்—பதினாயிரம் ரூபாய் வெகுமானம்—பேய்கள்—உண்டோ இல்லையோ? பயம், சித்தப்பிரமை—இறந்த சுற்றத்தார், சிநேகிதர்கள்—பேய்ச் சேஷ்டைகள், ஒன்றித்தனம், இருட்டு, நிலவு, சுடுகாடு, காடுகள், தோட்டங்கள், மரங்கள், வெளிப்பாங்குகள், பேய்மனைகள், கொள்ளிவாய்ப்பிசாசுகள்—குறிகள், ஏழுமலையான், அண்ணாமலையான் முதலிய தெய்வங்கள், மௌட்டியம், மனோவைகலியம்—சிலபிணிகளைப் பேய்களென்றுபாவித்தல்—கள்ளப்பிசாசுகள்—பேய்பிணிக்குப் பரிகாரம்—பூத வைத்தியர்கள்—குங்குமப்பொட்டு, கோலம், திருநீறு, மாப்பொம்மை, தூபம், குடவோசை, சிட்சை, மந்திரம், பீஜாட்சரம், காப்புத்தகடு, தாயித்து—பேயேவுதல்—பேயாண்டிகள், அபாயங்கள்—மரணம், மரணானந்தரம்—மோட்ச மார்க்கம்.

முதலதிகாரம்.

ஜனன மர்மங்கள்.

1. சர்வ சிருஷ்டிக்கும் மனுஷியன் முதன்மையானவன். மானுஷ சரீரத்தைச் செவ்வையாய்ப் பரீட்சிக்குங்கால், அதனுள மர்த்தப்பட்ட அவயவங்களின் பொருத்தமும், அதின் மகாற்புத மான இயந்திரங்களின் ஒழுங்கும், அவை செய்துவரும் பலவிதப் பட்ட வேலைகளும், நமக்குத் தெளிவுபட்டு, அப்படிப்பட்ட விசித் திரமான விக்கிரகத்தை நிர்மித்தவனாகிய தெய்வசிற்பியின் சாமர்த் தியமும் புகழப்படத்தக்கதாயிருக்கும்.

2. இச்சீவயந்திரமானது, கண்ணுக்குப் புலன்படாத சிற்ற ணுவளவுள்ள சிறு பிண்டத்தினின்றுற்பவிப்பதாகும். இந்த நம் முடைய மாமிசச்சதைகள், இவ்வெலும்புகளின் கூடு, இந்தச்சு வாசகோசம், இவ்வொழிவிலா இருதயம், இந்தப்புத்தி, இந்தப் பிராணம், ஆயிரமேன்,—இப்பேசுந் திறமையுள்ள மானிடன், இப் பஞ்சேந்திரியப் பிரதிமை, ஓர் சிறு அணுமாத்திரமான அண்டத் தினின்று பிறந்து வளர்ந்தது!

3. இவ்வற்புதமான அண்டம் எப்படிப்பட்டது? எவ்விடத் தது? இவ்வளவு விசித்திர விக்கிரகம் அதிலிருந்து வளர்ந்தவித மென்ன? இவ்விஷயங்கள் மிகவும் சோத்தியமானவை. இவற்றைச் செவ்வையாய் உணர்வதின் பொருட்டு, ஜனனகாரணங்களாகிய ஸ்திரீ புருஷர்களின் அவயவங்களது ஏற்பாடு தெரிந்திருக்கவேண் டியது ஆவசிகம். ஆதலின், முதலில் அவற்றை விவரிப்போம்.

ஜனன சாதனமான புருஷரதவயவங்கள்.

4. இவை பீஜங்களும் லிங்கமுமாம். இடது வலது பீஜங்கள் சாதாரணமாய்ச்சற்று ஏற்றங்குறைவு மாயிருக்கும். வெகு சூக் குமமான நாடிகளனேகங் கூடி இப்பீஜங்களுண்டாயின. அச்சூக் குமமான நாடிகளெல்லாவற்றையும் வரிசையாய்ப் பொருத்தினல்

சுமார் அரைமைல் நீளமிருக்குமென்று சொல்லுகிறார்கள். இந் நாடிகளே வீரியத்திற்கு உற்பத்தி ஸ்தானங்கள். அவையொன்றோ டொன்று கூடிக் கடைசியில் இரண்டு பீஜங்களினின்றும் இரண்டு நாடிகளேற்படும். இவ்விரண்டு நாடிகளும் மேற்பாகநோக்கி வியா பித்து, அடிவயிற்றில் மூத்திரகோசத்திற்குப் பின்பக்கத்தில், இரு புறத்துமுள்ள வீரியகமலங்களுடன் சேரும். இக்கமலங்கள் மிருதுவான மெல்லிய பைகள். சுமார் $1\frac{1}{2}$ அங்குலமளவுள்ளன. இவற் றினின்று முறையே யொவ்வொரு நாடி புறப்பட்டு மூத்திரநாடி யிற்சேரும். இவ்வாறு சேரும் நாடிகள் ஸ்கலன நாடிகளென்னும் பெயர் பெறும்.

5. லிங்கமானது இரத்தநாடிகளோடும் நரங்களோடும் நிறை வுற்ற ஓர் தசைத்தடியாயிருக்கிறது. புணர்ச்சியாவல் பிறக்கும் பொழுது இந்நாடிகளுள் இரத்தம் நிறைவாய்ப் பிரவகித்து லிங் கத்திற்கு எழுச்சியும் பிருவும் உண்டாக்கும். அப்படிப்பட்ட சமயத்தில் அது சாதாரணமாய் ஐந்து ஆறு அங்குல நீளமும் 1, $1\frac{1}{2}$ அங்குலம் கனமும் அடைந்திருக்கும். மூத்திரகோசத்தி னின்று வெளிப்பட்டு வரும் நாடி, லிங்கத்தின் அடிப்பாகத்தினூடே புகுந்து லிங்கத்தின் நுனியிலுள்ள துவாரத்தில் வெளிப்படும். வீரியம் வெளிப்படும் ஸ்கலன நாடிகள் இம்மூத்திரநாடிகளுடன் சம்பந்தப்பட்டவை. பீஜங்களிலுள்ள சூட்சுமநாடிகளில் பக்குவ மாகும் வீரியமானது, கமலங்களில் கூட்டப்பட்டு, இரதிசமயத் தில் அசைந்து ஸ்கலனநாடிகளின் வழியாய் மூத்திரநாடியிற் சென்று லிங்கநுனியினின்று வெளியில் பீச்சப்படும். இலிங்கத் துடன் சேர்ந்திருக்கும் வேறு சில சிறு நாடிகளின் திரவமும் இரதிகாலத்தில் வீரியத்துடன் கலக்கும்.

6. பாலியத்தில் லிங்கமும் பீஜங்களும் சிறியவையாயிருக் கும். யௌவனதசை தொடங்கும்பொழுது, என்றால் 15-16 வயது வந்தபிறகு, இவ்வவயவங்களுக்கு இரக்தம் எதேஷ்டமாய்ப் பெருகிவந்து புஷ்டிபட்டு, அவை சீக்கிரத்தில் வளரும். பீஜங்க ளில் வீரியமுற்பத்தியாகி, அப்போதப்போது நித்திராவஸ்தையில் ஸ்கலனமுமுண்டாகும். யௌவனத் தொடக்கத்தில் இன்னுஞ் சில மாற்றங்களும் காணப்படும். முகத்தின்மீதும் கீழ்ப்பாகத்தி லும் கேசங்களுண்டாகும். முகத்தில் பருக்கள் கிளம்பும். கும

லோசை வேறுபட்டு ஆண்குரலுண்டாகும். சரீரமெல்லாம் புஷ்டியும் திடமும் அதிகரித்துக் களையொளிகள் சொலிக்கும். சம்போகவிச்சை மேற்படும்.

7. வீரியம் வெண்மையாயும் கோழைபோலப் பசையுள்ளதாகவுமிருக்கும். ஊசி முனையினால் ஒரு துளி வீரியத்தை எடுத்து மைகிராஸ்கோப் என்னும் பூதக்கண்ணாடியினால் பரீட்சிப்போமாயின், அதில் சிறு பாம்புகள்போன்ற சீவரேணுக்களனேகம் காணப்படும். அவை நீளமாயிருக்கும். பெரிய தலையும் மெல்லிய சரீரமும் பொருந்தி வாலாட்டிக்கொண்டு வீரியத்திரவத்தில் ஊர்ந்துகொண்டிருக்கும். அரைநாழிகை நேரத்திற்குள் சுமார் ஓரங்குலத்தூரம் நகரும். இந்தச்சீவரேணுக்களே பிராணத்திற்கு மூலகாரணம். ஸ்திரீகளின் கருப்பாசயத்தில் உதிக்கும் அணுரூபமான அண்டத்திற்சேர்ந்து இவை கருப்பத்தையுண்டாக்கும்.

ஜனன காரணங்களாகிய ஸ்திரீ அவயவங்கள்.

8. ஸ்திரீகளின் மர்மஸ்தானத்தைப் பரீட்சித்துப்பார்க்கையில், நெருக்கமாய் இணங்கியிருக்கும் இரண்டு உதடுகள் காணப்படுகின்றன. அவ்வுதடுகளைப் பிரித்துப்பார்ப்பின், நிமிர்ந்திருக்கும் சருமமொன்று புலன்படும். இதையே பகலிங்கமென்பார்கள். புருஷர்களுக்கு லிங்கமெப்படிப்பட்டதோ அப்படிப்பட்டதே ஸ்திரீகளுக்குப் பகலிங்கமென்றறியத்தக்கது. என்றால், இரதி சுகத்திற்கு இது முக்கியமான அங்கம். புணருமாவல் மேற்பட்ட பொழுது, பகலிங்கத்திற்கும் அதற்குக்கீழே யொட்டியிருக்கும் சிற்றுதடுகளுக்கும் புளகமுதித்துக்கிளப்பமுண்டாகும். புருஷர்களுக்குள்ளதுபோல, ஸ்திரீகளுக்கு லிங்க மத்தியில் துவாரமில்லாது, அதற்குச் சமீபத்தில் கீழ்ப்பக்கத்திருக்கும் சிறு தொளை வழியாய் மூத்திரம் ஓடி வரும். இத்தொளை புருஷர்களுக்கிருப்பதைக் காட்டிலும் அகலமாயிருக்கும். மூத்திரம் வெளிப்படும் வேளை தவிர மற்றச் சமயங்களில் இது மூடுபட்டிருக்கும்.

9. இக்கூறின மூத்திரநாடியின் அடியில் சுருக்க முற்றிருக்கும் துவாரம் பகத்துவாரமென்றும், அதன்வழியாய் உட்பக்கஞ்

செல்லும் வழி பகமார்க்கமென்றும் சொல்லப்படும். இம்மார்க்கத்திலேயே சம்போக வேலையில் புருஷனுடைய லிங்கம் பிரவேசிக்கின்றது. சுமார் 5-6 அங்குலங்கள் நீள முடைத்தாகி, அகத்திய மேற்பட்டபொழுது அகலும் இயல்புள்ளதாய், மலமூத்திர மார்க்கங்களுக்கு மத்தியில், இப்பக மார்க்க மமைக்கப் பட்டிருக்கிறது. இதன் உட்டோல் இடைவிடாது ஊறிக்கொண்டிருக்கும் திரவ கணங்களினல் நனைவுற்று மிருதுவாயிருக்கும். பகமுகத்திலிருக்கும் இரண்டு சிறுநாடிகளின் வழியாய் புணர்ச்சியாட்டத்தில் திரவம் வெளிப்படுகின்றது. இதையே ஸ்திரீ வீரிய மென்பார்கள். ஆயினும், அது கருப்போற்பத்தியுடன் எவ்வளவேனும் சம்பந்தப் பட்டதல்ல.

10. பகமார்க்கத்து உண்முனையில் கருப்பகோசத்தின் முகம் பிரவேசித்திருக்கும். இக்கோசம் சுமார் 3 அங்குலம் நீளமும், மேற்பாகத்தில் 2 அங்குல அகலமும், ஓரங்கலம் கனமும் பொருந்திப், பைபோலச் சுருங்கிப் பகமார்க்கத்திற்குச் சார்வுள்ளதாய் மூத்திரகோசத்திற்குப் பின்பாகத்திலிருக்கும். பகமார்க்கத்தில் புகுந்திருக்கும் கருப்பகோசத்தின் முகத்திற்கு நுண்மையான வாயொன்றிருக்கும். இது சாதாரணமாய் மூடிக்கொண்டிருக்கும்.

11. கருப்பகோசத்தில் மேற்பாகத்து இருபக்கங்களினின்றும் இரண்டுநாடிகள் வெளிப்படும். இந்நாடிகள் 3-4 அங்குல நீளமுற்றிருக்கும். அவற்றின் நுனிகள் கிண்ணிகள்போன்ற உருவமுடைத்தா யிருக்கும். இக்கிண்ணிகளை யொட்டினுற்போலச் சிறிய பாதங்காய்கள்போன்ற பீஜங்களிரண்டுள்ளன. இவற்றின் பரிமாணம் 1-1½ அங்குலம். இவற்றை ஸ்திரீபீஜங்க ளென்று சொல்லக்கூடும். இவை வெகு நுட்பமான சிற்றணுக்களுடன் நிறைவுற்றிருக்கும். இவ்வணுக்களே அப்போதப்போது ஒன்றொன்றுய்ப்பக்குவமுற்று, அணுமாத்திரமான சினையாய் வெளிப்பட்டு வீரியத்திலுள்ள ஜீவரேணுக்களின் பொருத்தத்தினல் கருப்பத்தையுண்டாக்கும்.

இரஜோ தரிசனம்.

12. ஸ்திரீகளுக்குப் பாலியாவஸ்தையில் மேற் கூறப்பட்ட அவயவங்கள் விரிவுருதிருக்கும். யௌவனதசை யாரம்பிக்குங்

காலத்தில் அவற்றிற்கு வேண்டியவளவு இரத்தமும் புஷ்டியும் ஓடி, அவை சீக்கிரத்தில் விருத்தியடைவதேயன்றிச், சரீரமுழுவதுங்கூட மாறுபடும். முலைகள்பெருக்கும். மர்மஸ்தானத்தில் மயிர் முளைக்கும். தேககாந்தி அதிகரித்து முகத்திற் காந்தியுற்பத்தியாகும். பருக்கள் புறப்படும். புத்திவளர்வுறும். அப்புறம் ரஜோதரிசனம் தொடக்கமுறும். என்றால் சிறுமி திரளுவாள்.

13. நமது தேசத்தில் சாதாரணமாய் 12-13-14 வயதுவரும்பொழுது பெண்கள் முதன் முதல் திரள்வார்கள். சீதள தேசங்களிலோ, இன்னும் மூன்று நாலு வருடங்கள் கழிந்த பிறகு பெரிய மனுஷிகளாவார்கள். இரஜோ தரிசனமானது இரத்த ஊற்றமாய்க் காணப்படுகின்றதாயினும், உண்மையை ஆராயுங்கால், ஸ்திரீ பீஜங்களிலிருந்து ஓர்சிறிய அணுமாத்திரமான சினை பக்குவமடைந்து வெளிப்படத்தொடங்கியதென்பதற்கு அடையாளமாய்த் தெரிந்து கொள்ளத்தக்கது. இரஜோ தரிசன மாரம்பித்த பிறகு, 28 தினங்களுக்கொரு விசை, ஓர் சிறு சினை ஸ்திரீ பீஜங்களினின்று பக்குவமாகி வெளிப்படத் தொடங்கும். அப்போது கர்ப்பகோசத்திலிருந்து ரஜோரக்தம் ஊறிக்கொண்டிருக்கும். இப்படித் திரண்ட நாள் முதல் தூரம் நின்றுபோகும் வரைக்கும், என்றால், சுமார் 45-50 வருடங்கள் வயது வரைக்கும், ஒவ்வொருமாதமும் ஒவ்வோர் சினை பக்குவமாகி, அச்சமயத்தில் ரஜமானது ஒழுகிக் கொண்டிருக்கும். ஸ்திரீ கருப்பிணியாயிருக்கையிலும் பிரசவித்த பிறகு சொற்பகாலம் வரைக்குமாத்திரம், மேற்சொல்லப்பட்டபடி சினைமுதிர்வதும் இரஜம் ஒழுகுவதும் சாதாரணமாய் நின்றுபோயிருக்கும்.

14. ஸ்திரீ பீஜங்களினின்று சினை முதிர்ந்து வெளிப்படுந்தருணத்தில் ஸ்திரீகளின் மர்மஸ்தானத்திலும் சாமானியமாய்ச் சரீரத்திலும் சிலத்திரிபுகள் உண்டாகும். அவை யெவையெனில்—தேகத்தில் கொஞ்சம் அசௌக்கியமும் சோம்பலும், அடிவயிற்றில் பாரமும் தோன்றும், முலைகள் உப்பும். ஸ்திரீ பீஜங்களில் இரக்தம் நிறைந்து சினை மிகத்துரிதமாய் முதிர்வுறும். கருப்பகோசத்தில் அதிகமாய் இரக்தமாய்ப் பெருகுவதினால், அதன் உட்டோல் உப்பி மென்மை பெற்றிருக்கும். சினைமுதிர்ந்து பீஜங்களினின்று புறப்படும் வேளையில், இவ்வுட்டோலில் நிறைந்திருக்கும்

இரத்தம் ஒழுகவாரம்பிக்கும். இப்படி இரண்டு மூன்று நாள் இரஜமொழுகிப் பிற்பாடு குறைவுற்றுக் கடைசியில் அடியோடு நின்றுபோகும். இவ்விதமாய்ச் சினை முதிரும்பொழுதெல்லாம் சாதாரணமாய் இரஜமொழுகினபோதிலும், சிற்சிலருக்கு இரஜவொழுக்க மில்லாமலே சினை முதிர்வுற்றுக் கருப்பசித்தியுண்டாகும்.

15. இரஜம் சிவப்பு நிறமுள்ளதாயிருக்கும். ஆயினும் அது கேவலம் இரக்தமாகாது. கருப்ப கோசத்து உட்டோலினின்றும், பசமார்க்கத்து உட்டோலினின்றும் சாதாரணமாய ஊறிக்கொண்டிருக்கும் சுவேதத்திரவத்துளிகள் அதிகமாய் உண்டாகி இரஜோரக்தத்துடன் கூடுகின்றன. ஆகையினாலே ஆரோக்கிய வதிகளாகிய ஸ்திரீகளின் இரஜம் இரத்தம்போல உறையாது. நமது முன்னோர்கள் இரஜத்தின்மேல் இல்லாத குற்றங்களெல்லாம் ஏற்றி இரஜவொழுக்கக் காலத்தில் பெண்டுகளைத் தொடக்கூடாதென்றும், அவர்கள் அருகநெருங்கினவளவிலேயே தீட்டுவந்துவிடுமென்றும், பசும்புல் முதலிய பட்டுப்போகுமென்றும் சித்தாந்தப்படுத்தி, அவர்களை வீட்டுவெளியில் நிறுத்தித் தூரக்காரிகளாக்கி யிருக்கிறார்கள். இது வெறு மூடத்தனம். இரஜவொழுக்கக் காலத்தில் ஸ்திரீகளின் சரீரத்தை வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றவேண்டியிருக்கிறது. அப்படிக்காப்பாற்றாவிட்டால் அனேகமான கேடுகள் மூளும். ஆதலின் அப்படிப்பட்ட சமயங்களில் அவர்களை வாயிலிலிட்டுக்குளிர் காற்றிற்குப் பங்காக்குவதும், தண்ணீரில் குளிக்கச்செய்வதும், வேளைக்குச் சோறுபோடாதிருப்பதும், வெறுந்தரைமீதும் பீற்றற் பாய்களின் மீதும் படுக்கவைப்பதும், போர்வைக்குத்துணிகூடக் கொடாதிருப்பதும்—இவ்வாசாரங்களெல்லாம் மிகுந்த அவிவேகத்தைத்தெரியப்படுத்துகின்றன.

16. இரஜவொழுக்கம் சாதாரணமாய் 3-4 தினங்கள்வரைக்குமிருக்கும். சிலருக்கு 1-2 தினங்கள் மாத்திரமேயிருக்கும். வேறு சிலருக்கு 7 - 8 தினங்கள் வரைக்கும் நிற்காதிருக்கும். ஆரோக்கிய வதிகளாகிய ஸ்திரீகளுக்குச் சாதாரணமாய் 3 - 4 சேரங்கைகளைக் காட்டிலும் அதிகமாயொழுகாது. சிலருக்கு 10 - 12 சேரங்கைகள் கூட வொழுகுவதுண்டு. ஆயினும், பிணியினாலல்லாதபோது குறைவாயொழுகுவதே நல்லது. பட்டணவாசப் பெண்டுகளுக்கும், வேலை வித்தைகளில்லாது அசையாது கால் நீட்

டிக்கொண்டுட்சார்ந்திருக்கும் பெண்டுகளுக்கும், பலவீனப்பெண்களுக்கும் இரஜம் அதிகமாயொழுகும். நாட்டுப்புறத்துப்பெண்களுக்கும், சரீரத்தை மிகவும் கொழுக்கடிக்காது பாடுபட்டுவேலை செய்யும் பெண்களுக்கும், தேகவுறுதியும் ஆரோக்கியமுமுள்ள பெண்களுக்கும், ஒழுக்கம் குறைவாயிருக்கும்.

17. பெண்களுக்கு இரஜவொழுக்கமானது கிரமமாய் ஆகி வருங்காலம் வரைக்கும், சந்தான பிராப்தியாகும் யோக்கியதை கூடியிருக்கும். இரஜவொழுக்கம் கிரமமாய் ஆகாதபோது கருப்போற்பத்தியுண்டாக நேரிடாது. நேரிட்டாலும் நிலைபெறாது. நிலைபெறினும் சந்தானம் வெகு துர்ப்பலமாயும் பிணியினால் வருத்தப்பட்டுமிருக்கும். ஆதலால், இரஜவொழுக்கம் யுக்த காலங்களில் நேரிடாதிருந்தாலும், கருப்பதாரணையில்லாமலே இரஜவொழுக்கம் சிலகாலம் நின்றுபோயிருந்தாலும், இரஜவொழுக்கக் காலத்தில் வயிற்றுவலிகண்டாலும், இரஜம் உறைந்திருப்பினும், இயல்பான நிறமில்லாது வெளுப்பு மஞ்சள் முதலிய வருணங்கள் கூடியிருப்பினும், இரஜம் மிக அதிகமாயாவது மிகச்சொற்பமாயாவது ஒழுகினும், அனுரோக்கியசசின்னங்களாய்த் தெரிந்துகொண்டு, தகுந்த சிகிற்சையைச் செய்வித்துக்கொள்ளவேண்டும்.

கருப்போற்பத்தி.

18. ஸ்திரீ பீஜங்களில் ஒவ்வொருமாசமும் இரஜவொழுக்கக்காலத்தில் ஒரு சிற்றணுமாத்திரமான சினை முதிர்ந்து வெளிப்படுமென்று மேற்கூறியிருக்கிறோம். ஒருபொழுது வலது பீஜத்தினின்றும், மற்றோர்பொழுது இடது பீஜத்தினின்றும், இச்சினை வெளிப்படுகின்றது. அவ்வேளைக்கு, அதனருகிலுள்ள கருப்பநாடியானது, கிண்ணிபோன்றிருக்கும் தனது நுனியை நீட்டி அச்சினையைப்பற்றிக்கொள்ளும். பிற்பாடு அது தினதினமும் விருத்தியடைந்து அந்நாடியின் வழியாய் மெல்ல மெல்ல நகர்ந்துவந்துகொண்டிருக்கும். அப்படி வரும்பொழுது அச்சினைக்குப் புருஷவீரியத்திலுள்ள ஜீவரேணுக்கள் எதிர்ப்பட்டு, அவற்றினிணக்கம் கைகூடுமாயின், கருப்பஞ்சித்திக்கும். இல்லாவிடின் அது மெல்ல

மெல்லக் கருப்பகோசத்தைச்சேர்ந்து அதிலுள்ள திரவத்துளிகளுடன்கூடிப் பகமார்க்கத்தின்வழி வெளிப்போய்விடும். இப்படிச் சில பெண்டுகளுக்கு இரஜவொழுக்கம் நின்றுபோன 4 தினங்களுக்குள்ளாகவே சினை வெளிச் சென்றுவிடும். சிலருக்கு 7 - 8 தினங்கள் வரைக்கும் நின்றிருக்கும்.

19. சம்போகத்தின் முடிவில் புருஷனது வீரியம் பகமார்க்கத்தினிறுதியில் பீச்சப்பட்டுக் கருப்பகோசத்து வாயினுலிழுக்கப்படுகின்றது. அங்கிருந்து அதிலுள்ள ஜீவரேணுக்கள் ஆயிரமாயிரமாய்க் கருப்பபிலத்தின் வழியாய் உள்ளேயோடி நாலண்டையும் வியாபிக்கின்றன. அப்படிச்செல்லுமவற்றினுள் சில ரேணுக்கள், ஸ்திரீ பீஜத்தினின்று வந்துகொண்டிருக்கும் சினையை யெதிர்கொண்டு அதினுள் நுழையும். இவ்வெதிர்க்கோள், கருப்பகோசத்திலாவது, கருப்பநாடிகளிலாவது, அதின் நுனியிலாவது, என்றால், அச்சமயத்தில் சினை யெவ்விடத்து இருக்குமோ அவ்விடத்தில் உண்டாகும். விசேஷமாய்க் கருப்பநாடிகளிலுண்டாகும். ஜீவரேணுக்களுடன் சேர்ந்தபின்னர், அச்சினை, தனக்குள் திரிபுகள்பெற்று, நாடியின்வழியே கருப்பகோசத்தினுள் மெல்லெனச்சென்று, அதனுட்டோலில் அப்பொழுது எற்பட்டிருக்கும் சிறுசிறு மடிப்புகளுளொன்றோடு ஒட்டிநிற்கும். இப்படி நிற்பதே கருப்போற்பத்தி. இது சாதாரணமாய் ஸ்திரீகளுக்குத்தெரியாமலேயுண்டாகும். ஆயினும், சில ஸ்திரீகள் மாத்திரம் தமக்கப்பொழுதுண்டாகும் ஒருவிதமான மயக்கத்தினல் கருப்போற்பத்தி சமயத்தைத் தெரிந்துகொள்வர்களாம்.

20. ஸ்திரீ பீஜத்தினின்றும் வெளிப்படும் சினை அணுவளவினதென்று சொன்னோம். அது அங்குலத்தில் சுமார் 200 - ல் ஒருபங்கு பரிமாணமுளது. இதனுள் பிரவேசிக்கும் ஜீவரேணுக்களொவ்வொன்றும் அங்குலத்தில் 600 - ல் ஒருபங்கு நீளமும், [illegible]0,000 - ல் ஒருபங்கு கனமுமுள்ளதாகும். ஒருதுளி வீரியத்தில் ஆயிரம் பதினயிரம் ஜீவரேணுக்களிருக்கும். சினைக்குள் பிரவேசிக்கும் ஜீவரேணுக்களின் தொகையை நிச்சயிக்கமுடியாது. ஆயினும், குறைவான தொகை பிரவேசித்தால் பெண்சிசுவும், அதிகமான தொகை பிரவேசித்தால் ஆண்சிசுவும் ஜனிக்குமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

21. கருப்பத் துவாரத்திலிருந்து உட்பக்கம் ஊர்ந்து செல்லும் ஜீவரேணுக்களில் சில, சினையிருக்கும் பிரதேசத்திற்கு நேராய்ப்போகும்பட்சத்தில், 2 - 3 நாழிகைக்குள்ளாகவே அதற்குள் பிரவேசிக்கலாம். அவ்வாறு போகாதபட்சம், சினையும் ஜீவரேணுக்களும் கலந்துகொள்வதற்கு 7 - 8 தினங்கள்கூடப் பிடிக்கலாம். ஒருக்கால் கலக்காமலே போகலாம். கருப்பகோசம் ஆரோக்கியமான நிலைமையிலிருக்கும்பொழுது, ஜீவரேணுக்கள் 10 நாள் வரைக்கும் கூடப் பிழைத்திருக்கலாம். ஆதலால் கருப்போற்பத்தி லபிக்கும்பொழுது, சம்போகத்திற்குப் பிற்பாடு எவ்வளவு காலத்துக்குமேல் நேரிட்டதோ சரியாய் நிருணயிக்கச் சாத்தியமாகாது.

22. ஸ்திரீ பீஜத்திலிருந்து வெளிப்படும் சினை, இரஜவொழுக்கம் நின்ற பிற்பாடு 4 - தினங்கள் முதல் 8 - தினங்களுக்குள்ளே கருப்பகோசத்திலிருந்து சென்றுவிடுமென்று மேலே சொல்லியிருக்கிறோம். ஆதலின் கருப்போற்பத்தி சாதாரணமாய் அந்தக் காலத்திலேயே சித்திக்கவேண்டும். ஓர்பொழுது இரஜோதரிசனத்திற்கு 2 - 3 தினங்களுக்கு முன்னுகச் சம்போகம் நடந்திருந்தால், ஜீவரேணுக்கள் கருப்பகோசத்திற்குள்ளே சென்றிருந்து, பிறகு உற்பத்தியாகும் சினையுடன் சேர்ந்து கருப்போற்பத்தியை உண்டாக்கும்.

23. இரஜோதரிசனகாலத்தில் சாதாரணமாய் ஒரே சினை பக்குவப்பட்டு வெளிப்படுகின்றது. ஓரோர்பொழுது சிலருக்கு இரண்டு மூன்று சினைகள்கூடப் பக்குவமாகி வெளிப்படுவதுண்டு. அப்பொழுது இரட்டைப்பிள்ளைகளும் முக்கைப்பிள்ளைகளும் பிறக்கும். இச்சினைகள் கருப்பகோசத்தில் தங்கியிருக்குங்காலத்தில் ஒன்றோடொன்று உராய்ந்து கலந்துகொள்ளுமாயின், முதுகு முதலிய பாகங்கள் இரட்டையாய்க்கூடின பிள்ளைகள் பிறக்கின்றன.

24. மேற்கூறபபட்ட அமிசங்களைச் செவ்வையாய் ஆராயுங்கால், சில ஸ்திரீகள் கருப்பவதிகளாகாதிருப்பதற்குக் காரணங்கள் தெளிவுபடக்கூடும். ஸ்திரீபுருஷர்களிலெவருடைய மர்மாவயவங்களிலாவது, பிறவி யியற்கையினுலானதும் அல்லது வியாதியினுல் சம்பவித்ததுமான விகாரரூபங்களோ, குறைவுகளோ, அப்பியந்தரங்களோ, அனுரோக்கியமான திரவங்களோ உண்டாயிருந்தாலும், சினையிலாவது ஜீவரேணுக்களிலாவது ஜீவசக்தி குறைவா

யிருந்தாலும், ஸ்திரீபுருஷர்களுடைய சரீரதத்துவங்கள். ஒருதன்மையுடன் ஒத்துப் பரஸ்பரம் ஆகருஷணமில்லாதபொழுதும், கருப்பம் தங்கமாட்டாது. இக்காரணங்கள் அடியில் விரிவாய் விளக்கப்படும்.

25. இலிங்கமும் பகமார்க்கமும் சாதாரணமாய 5 - 6 அங்குல நீளமிருக்குமென்று கூறினோம். கிளப்ப முண்டான காலத்திற்கூட லிங்கம் மிகவும் குறியதாய், என்றால் 3 - 4 அங்குலமாத்திரமிருக்கும்பொழுதும், பகமார்க்கம் மிகவும் நீண்டதாய், என்றால், 7 - 8 அங்குல நீளமிருக்கையிலும், கருப்பகோசத்துவாரத்தை லிங்கத்தின் நுனி தொட முடியாமல் இதிலிருந்துவரும் வீரியம் அந்தத் துவாரத்துக்கு 1 - 2 அங்குல தூரத்தில் பீச்சப்படும். அந்த வீரியம் விடப்படும் பிரதேசத்திற்கு அப்புறமிருக்கும் பகமார்க்கத்தின் உட்டோல் சுருக்கமுற்றிருக்குமாதலின் அதன் வழியாய்க்கருப்பகோசத்திற்குள்ளே வீரியம் ஓடமாட்டாது. லிங்கம் மிகவும் நீண்டதாய், என்றால் 7 - 8 அங்குல நீளமிருக்கும்பொழுதும, பகமார்க்கம் மிகவும் குறியதாய், என்றால் 3 - 4 அங்குலமளவு இருக்கும்பொழுதும், லிங்கத்தின் நுனி கருப்ப கோசத்தின் வாய்க்கு ஒருபக்கம் ஒதுங்கினாற்போலச்சென்று வீரியத்தை அபிஷேகிக்கும். லிங்கம் மிகவும் மொத்தமாயிருக்கும்பொழுதும், பகமார்க்கம் கோணலுங்குறுக்குமாய் மடிப்புகள் விழுந்து நெருக்கமுற்றிருப்பினும், சம்போகக்கிரியை மிகவும் வருத்தகரமாயிருப்பதினால் கருப்பகோசத்துப் பிலத்தைத்தொடுமாறு வீரியம் இறைக்கப்படமாட்டாது. மேலும் முன்பக்கமாவது இடது வலபக்கமாவது லிங்கம் வளைந்திருந்தாலும், பகமார்க்கம் வளைவுபட்டிருந்தாலும், லிங்க நுனி கருப்பகோச வாயைத்தொடமுடியாமல் பகமார்க்கக்கோடியிலொரு பக்கம் ஒதுப்புறமாய்ச் சென்று வீரியத்தை யிறைக்கும். லிங்க நுனியின் மேற்றோல் முன்பின் வழுவாமல் வளைசலாய் நுனி தெரியாதிருக்குமாயின், அதன் வழியாய் வரும் வீரியம் குறிதப்பி வேகங்கெட்டுப் பக்கமாயொழுகும். ஆதலின் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சாதாரணமாய்க் கருப்போற்பத்தி சித்திக்கமாட்டாது.

26. கருப்பகோசம் அடிவயிற்றில் முன்பக்கமாய்த் தொங்கியிருப்பதினாலாவது, இயற்கையாயாவது, அதன் வாய் லிங்க நுனி

யை எதிர்கொள்ளும்படி யிராமல் மிகவும் ஒரு சாராய், அல்லது வளைவாய்ப் பகமார்க்கத்தைச் சேர்ந்திருக்கும்பொழுதும், அந்த வாய் பகமார்க்கத்து உட்டோலின் மடிப்புகளில் புகுந்திருக்கும் பொழுதும், அது மிகவும் நெடிதாய்த் திரைகள் விழுந்திருக்கும்பொழுதும், வீக்கத்தினாலாவது துன்மாமிசம் வளர்ந்ததினாலாவது இரத்தம், சீ முதலியவை கூடியிருப்பதினாலாவது கருப்பகோச பிலம் மூடிப்போயிருந்தாலும், உள்ளே வீரியம் பிரவேசிக்கமாட்டாது. மேலும் அப்படிப்பட்ட தருணங்களில் சம்போகம் ஸ்திரீகளுக்கு வருத்தத்தை யுண்டாக்கும். கருப்பகோசம் மிகவும் பலவீன ஸ்திதியில் இருக்கும்பொழுது அது வீரியத்தை யிழுத்துக்கொள்ள மாட்டாது.

27. கருப்பகோசத்து உட்டோலிலாவது பகமார்க்கத்திலாவது அனாரோக்கியமான திரவங்கள் ஊறியொழுகிககொண்டிருக்குமாயின், அவை வீரியத்திலுள்ள ஜீவரேணுக்களைக் கொன்றுவிடும். ஓரோர் காலத்தில் இவ்விரேணுக்கள் சினைக்குள் சேரக்கிடைத்தாலும் அச்சினை பிழைக்கவொண்ணாது. மேலும், கருப்பகோசத்து உட்டோல் வீங்கியாவது புண்பட்டாவது இருக்குமாயின், அந்தச்சினை அதை யொட்டிக்கொண்டு நிற்கமாட்டாமல் வெளிப்பட்டுப்போய்விடும்.

28. ஸ்திரீ பீஜங்கள் வியாதி கிரஸ்தமாயிருந்தால், அதிலிருந்து வரும் முட்டை நிர்ச்சீவமாயாவது பலவீனமாயாவதிருக்கும். ஆதலால், அது ஜீவரேணுக்களின் சேர்க்கையிலிருந்து விருத்தியடைந்து பிழைக்கமாட்டாது. இரஜவொழுக்கம் காலக்கிரமமில்லாமல் நேரிடும் பொழுதும், சிரகாலம் இரஜவூற்றமில்லாமல் நின்றுபோய் விட்டாலும், ஸ்திரீ பீஜங்கள் ஆரோக்கிய நிலைமையிலில்லை யென்றெண்ணத்தகும். மேலும், ஸ்திரீ பீஜங்களை யொட்டினாற்போ லிருக்கும் கருப்ப நாடிகளில் தடைகளெவையேனும் உண்டாயிருக்கும்பொழுதும், அவற்றின் உட்டோல் வீங்கிப் புண்பட்டிருக்கும்பொழுதும், கருப்போற்பத்திக்குப் பங்கம் நேரிடும்.

29. ஸ்திரீ சரீரம் வெகு ஸ்தூலமாய் வளர்வதினால் ஒரு பொழுது கருப்போற்பத்திக்கு ஆடங்கம் வருகின்றது. கடிப்பக்க பாகங்களில் அதிகமாய்ச் சதை வளர்ந்து ஸ்திரீ பீஜங்களையமுத்து

வதினால் அதினின்று ஆரோக்கியமாகிய சினை வெளிப்படுவதற்கு அநுகூலமிராது. ஓரோர்வேளை, அப்படி வளர்ந்த சதையினால் கருப்ப நாடிகளிழுக்கப்பட்டு அவை ஸ்திரீ பீஜங்களுக்கு அருகேயிராமல் தூரமாயிருக்கும். அப்பொழுது அந்தப்பீஜங்களிலிருந்து வெளிப்படும் சினையானது நாடிக்குள் சேரமாட்டாமல் அடிவயிற்றில் விழுந்துபோய்விடும். சரீரம் மிகவும் ஸ்தூலிப்பதினால் ஒருபொழுது கருப்பகோசத்துப் பிலம் மூடிக்கொண்டுபோய் இரஜவொழுக்கங் கட்டிப்போயிருக்கும்.

30. புருஷனது மூத்திரநாடி வியாதியினால் சிறுகிப்போய், லிங்கம் சுருங்கியிருக்குங்காலங்களில் மாத்திரம் மூத்திரவொழிவிற்கு இடமுண்டாய்ச் சம்போககாலத்தில் லிங்கம் கிளப்பமுற்றிருப்பதினால் வீரிய விறைப்புக்கு எள்ளளவும் வழியில்லாதிருக்கையிலும், ஹஸ்தப்பிரயோக முதலிய துரப்பியாசங்களினாலாவது அதிசம்போகத்தினாலாவது வியாதியினாலாவது பீஜங்கள் ஆரோக்கியங்கெட்டு வீரியமுற்பத்தியே யாகாமலிருக்கையிலும், உற்பத்தியானாலும் அதிலுள்ள ஜீவரேணுக்களுக்கு ஜீவசக்தி சிறிதுமில்லாதபொழுதும், குறைவாயிருக்கையிலும், மூத்திரநாடியின் உட்டோல் புண்பட்டிருப்பதினாலாவது அதில் விஷநீர்கள் ஊறிக்கொண்டிருப்பதினாலாவது அதின் வழியாய்ப்போகும் வீரியத்திலுள்ள ஜீவரேணுக்களின் பலம்கெட்டுப்போகையிலும், கருப்போற்பத்தி நேரிடமாட்டாது.

31. இரதிகேளியில் அபரிமிதமான ஆசக்தியுள்ள ஸ்திரீ புருஷர்களுக்குச் சந்தானமுண்டாவதரிது. ஏனெனில்—அப்படிப்பட்ட புருஷன் சம்போகாந்தத்தில் லிங்கத்தை மிகுந்த வலிமையுடன் அழுத்துவதினால் கருப்பகோசத்தின்வாய் பொறுக்கமாட்டாமல் வீரியத்தை யெள்ளளவும் இழுக்காமலே சரேலென்று பின்னுக்குப்போய்விடும். மேலும், அதிசம்போகத்தினால், புருஷனுடைய வீரியம், வலிமைகெட்டு அதிலுள்ள ஜீவரேணுக்கள் பலவீனங்களாயிருக்கும். வெகு அதிகமாகிய ரதிபிரீதியுள்ள பெண்டுகளில் கருப்பகோச பிலத்திற்கு வீரியத்தையிழுக்கும் சக்திகுறைவாயிருக்கும். ஆதலினால் சம்போக விறுதியில் லிங்கம் மெலிவுற்றுக்குறியதாகிவர அதன்பின்னையே பகமார்க்கம் சுருக்கமுற்றுவந்துகொண்டிருக்குங்கால், ஒரு துளியாவது இழுக்கப்படாமல்

வீரியமுழுவதும் வெளிப்பட்டுவந்துவிடும். சம்போகத்தில் சாமானியமான ஆசக்தியுள்ள பெண்டுகளின் கருப்பகோச பிலமானது சீக்கிரமாகவே வீரியத்தையாகருஷித்து உறிஞ்சிக்கொள்ளும். ஆனினல் அப்படிப்பட்டவர்களுக்குச் சுலபமாய்க் கருப்போற்பத்தியாகும். மேலும் அப்படிப்பட்டவர்களுடைய பகமார்க்கத்தின் வழியாய் பீச்சர்ங்குழல்கொண்டு வீரியத்தையடித்தாலும் கருப்போற்பத்தியாகக்கூடும்.

32. ஸ்திரீபுருஷர்களிருவரும் ஒரேவிதமான சரீரதத்துவங்கள் வாய்ந்தவர்களாயிருப்பினும், என்றால் அவர்களுடைய உருவ முதலிய சரீரதருமங்கள் சாமானியமாய் ஒத்திருக்கும்போழ்து, ஸ்திரீயினிடமுதிக்கும் சினைக்கும் புருஷனுடைய வீரியத்துள்ள சிவரேணுச்களுக்கும் பரஸ்பராகருஷணை மிகக்குறைவாயிருக்கும். அதனால் அப்படிப்பட்ட தம்பதிகளுக்குச் சந்தானமுண்டாகமாட்டாது. உண்டானாலும் ஆரோக்கியமற்றிருக்கும். ஆதலினாலேயே இரக்தசம்பந்தமுள்ள சமீபபந்துக்களை மணம்புரிவது மிகவும் அயுக்தமாயிருக்கிறது.

33. கருப்போற்பத்தி யுண்டாகாமற் போவதற்குக் காரணங்களை மேலேவிவரித்துரைத்தோம். அவற்றுள் எந்தக்காரணத்தினால் தவக்கம் நேரிடுகிறதோ, அதை அனுபவசாலிகளாகிய வைத்தியர்கள் ஆராய்ந்து விவரித்துச் சொல்வதேயன்றித் தகுந்த சிகிற்சைகளை அவர்களே செய்யவேண்டியிருக்கும். சொற்ப விஷயங்களில் மாத்திரம் சம்போககாலத்தில் சில உபாயங்களைத் தொடுப்பதினால் கருப்போற்பத்தி சித்திக்கக்கூடும். சந்தானங்கோருவோர்கள் இரஜவொழுக்கம் நின்றுபோன மறுநாள் சம்போகித்துப் பிற்பாடு இரண்டிரண்டு தினங்கள்விட்டுச் சம்போகிக்கவேண்டும். அடிவயிற்றில் முன்பக்கமாய்க் கருப்பகோசம் சாய்ந்திருக்கும்பொழுது, அடிவயிற்றைச்சுற்றி ஒருதுணியை இரண்டு மூன்று சுற்றுக்கெட்டியாய் வளைத்துக்கட்டித், தலைக்கணையினாலாவது பாதங்களினாலாவது கடிப்பிரதேசத்தை யுயர்த்துவது கருப்போற்பத்திக்கு மிகவும் அனுகூலமாயிருக்கும். சம்போகத்திற்குப் பூர்வம் இரண்டுமணிக்குள்ளாகவும், சம்போகத்திற்கு அனந்தரம் ஒரு மணிக்குள்ளாகவும், மலபாதையாவது ஜலபாதையாவது பெண் சாதிதீர்க்காதிருப்பதும் சில சந்தர்ப்பங்களில் சகாயகரமாயிருக்

கும். வீரியஸ்கலனகாலத்தில் புருஷன் தன்னுடைய பாரத்தை ஸ்திரீயினுடைய அடிவயிற்றின்மேல் போடுவதும், இல்லாவிடின், அடிவயிற்றின்மீது பாரஞ்சுமத்திக் குப்புறப் பெண்சாதிபடுப்பதும், ஓரோர்காலத்து அனுகூலிக்கும். லிங்கநுனியின் மேற்றோல் முன்னும் பின்னும் ஆடாதிருப்பதினால் கருப்போற்பத்திக்குத் தவக்கம் நேரிடுமாயின், சுன்னத்துசெய்வித்துக்கொள்வது ஆவசிகம். வீரியத்தில் புஷ்டியில்லையென்னும் சந்தேகமிருக்கும்பட்சத்தில், ஒரு துளி வீரியத்தை மைகிராஸ்கோப் என்னும் பூதக்கண்ணாடியினால் பரீட்சித்து அதிலுள்ள ஜீவரேணுக்களின் நிலைமையைத் தெரிந்துகொள்ளக்கூடும். அதிஸ்தூலமாக விருப்பதினால் பெண்டுகளுக்குக் கருப்போற்பத்தி அடையாதிருக்கும் பட்சத்தில், வேலைவித்தைகளுக்குச் சோம்பாமல் சரீரத்துக்குத் தகுந்த உடற்பழக்கங்கொடுப்பது உபயோகமாகும். வியாதியினால் கருப்போற்பத்தி கிடைக்காமலிருந்தால் தகுந்த அவிழ்தசேவை தவிர வேறுபாயங்கள் பயன்படா. வீரியபுஷ்டிக்கும் சிலசில வியாதிகளுக்கும் மருந்துகள் ஐந்தாம் அதிகாரத்தில் விவரிக்கப்படும்.

34. சந்தான மில்லாதவர்களனேகர் மேற்கூறிய விஷயங்களை யறியாதவர்களாய் அறிவிலாத்தனத்தில் மூழ்கி உபவாசங்கள், நோன்புகள், விரதங்கள், ஜபங்கள், சேவைகள், யாத்திரைகள், தீர்த்த ஸ்நானங்கள், அரசமரப் பிரதட்சணங்கள் முதலியவற்றை யாசரித்துக் காயகிலேசப்படுகிறார்கள். சீருஞ் செல்வமுமாய் வளர்ந்து வேலை வித்தையறியாது கொழுத்திருக்கும் ஸ்திரீகளுக்கு இக்காரியங்களிற் சிலவற்றினால் சரீர சாதகமுண்டாய் அவயவங்கள் ஆரோக்கிய மடைவதினால் ஒருக்கால் சந்தான யோக்கியதை சித்திக்கக்கூடும். ஆயினும், சாதாரணமாய்ச் செய்யவேண்டிய உபாயங்கள் இவையல்லவென்று நம்பத் தகுந்திருக்கிறது. மேலும், சந்தானங்கிடைக்காதபொழுது, அந்தக் குறைக்குக் காரணத்தை ஸ்திரீகளின் மேலேயே யேற்றுகிறார்கள். புருஷர்களிடத்துள்ள குறைகளினாற்கூடச் சந்தானஞ் சித்திக்காமற் போகலாம்; ஆதலால் மெய்யான காரணங்களை விசாரித்தறிந்து கொள்வது மிகவும் ஆவசிகமானது.

35. சந்தான மில்லாதவர்கள் இல்லாத தோஷத்தினால் விசனப்பட்டவர்களாய்ப் பலவிதமான பிரயத்தினங்களைச் செய்து

கொண்டிருக்கச், சந்தான முண்டாகாம லிருப்பதற்காகச் சிலர் அவிவேக காரியங்களுக்குட்படுகிறார்கள். இதனிமித்தமாக விற்கப்படும் ரப்பர் உறைகளையும் பைகளையும் உபயோகப்படுத்துவதும், பீச்சாங்குழல் முதலிய கருவிகளினால் மருந்து நீரடித்துப் பகத்தைக் கழுவிக்கொள்வதும், அனேகமான கேடுகளுக்கு மூல காரணங்களா யிருக்கின்றன. சம்போகத்திற்கு இயற்கைப் பயனாகிய சந்தான பிராப்தியை இவ்வாறு தடுப்பது மிகவும் தோஷமான காரியம். ஆதலால், பலவீனம், தரித்திரம், அதிக சந்தானம் முதலிய காரணங்களினால் சந்தானத்தை விரும்பாதவர்கள், ஒவ்வொரு மாதமும் சில தினங்களில் என்றால், இரஜவொழுக்கத்திற்குப் பூர்வம் 3 - 4 தினங்களும், இரஜவூற்றம் நின்றுபோனபின் 7 - 8 தினங்களும், சம்போகமொழிந்திருப்பது உத்தமம்.

கருப்பவிருத்தி.

36. கருப்போற்பத்தி யுண்டான பிற்பாடு கருப்பகோசமானது வளர்வதற்குத் தொடங்குகிறது. அதனுளுள்ள இரக்த நாடிகள் விசாலமதிகரித்துச் சருமம் கனப்படும். சினையொட்டிக்கொண்டிருக்கும் கருப்பகோசத்து உட்டோன்மடிப்பு வளர்ந்து முட்டையைச் சூழவுமாவரித்துக்கொள்வதினால், கருப்பகோசத்தில் ஒரு சிறிய கோளம் முளைத்ததுபோலத் தோன்றும். அவ்வாறு ஸ்திரப்பட்ட அண்டமானது கருப்பகோசத்து இரத்த நாடிகளிலிருந்து, முதன் முதல், சருமத்தின் வழியாகவும், பிற்பாடு நாபி நாடியின் வழியாகவும், புஷ்டியடைந்து தன்னிலுள்ள மலபதார்த்தங்களை அதனுள் சரித்துக்கொண்டு தினதினமும் விருத்தியடைகின்றது. இவ்விதமாய் ஒன்பது மாதங்கள் செல்லாநிற்கச் சிசுவு சம்பூரணமா யேற்பட்டுக் கருப்பகோசத்தில் தங்கமுடியாமல் வெளிப்பட்டுப் பார்க்குமவர்களுக்கு நேத்திரோற்சவத்தை யுண்டாக்குகின்றது. கருப்பம் விருத்தியடையுங் காலத்தில் எந்தக் காரணத்தினாலாவது உள்ளே தடையூறுகள் நேரிடும் பட்சத்தில் அவயவக் குறைகளும் விகாராகாரங்களும் உற்பவிக்கின்றன.

37. உற்பத்தியான பிற்பாடு ஒருமாதத்திற்குப், பிண்டமானது அங்குலத்தில் மூன்றிலொருபங்கு பரிமாணமடைகின்

றது. தலை, மூக்கு, செவிகள், வாய், கண்கள், முதுகெலும்பு, கால்கள், கைகள் இவற்றின் ஸ்தானங்கள் சூக்குமமாய்த் தோன்று கின்றன. * * * இரண்டுமாதங்கள் ஆகையில், மேற்சொல்லிய அவயவங்களின் ஆகிருதி ஸ்பஷ்டமாய்க் காணப்படுகின்றது. கண்ணிரப்பைகள் உருப்பட்டுக்கொண்டிருக்கும். மூக்கு முன்னுக்கு வரும், விரல்கள் தெரியும். சரீரத்துக்குத் தலை மிகவும் பெரிதாயிருக்கும். ஆண்பிள்ளை பெண்பிள்ளையென்னும் பேதந்தென்படும். நீளம் ஒரு அங்குலம். * * * மூன்றுமாதங்கள் கழியுங்காலை, கண்ணிமைகள், மூக்கு, உதடுகள், இவை செவ்வையாய் அமைகின்றன. மர்மாவயவங்கள் புலன்பட்டு பாற்பேதம் தெளிவுறத் தெரிகின்றது. நீளம் மூன்றங்குலம். பளுவு 2-பலம். * * * நான்குமாதங்கழியவே பிண்டத்தில் அசையும் வல்லமை காணப்படும். நீளம் 4-5 அங்குலம். பளுவு 4-பலம். * * * ஐந்தாம் மாதத்தில் பிண்ட அசைவு அதிகரிக்கின்றது. கருப்பகோசம் வளர்ந்து அடிவயிற்றைத் தொட்டுக்கொண்டிருப்பதினால் அவ்வசைவுகள் தாய்க்குத் தெளிவாய்த் தெரிவதேயன்றி ஒவ்வோர் பொழுது வலியையுங்கூட உண்டாக்குகின்றன. சரீரத்துக்குச் சிரம் பெரிதாகவேயிருக்கும். தலைமயிர் முளைப்பதற்குத் தொடங்குகின்றது. ஐந்தாமாதத்து இறுதியில், பிண்டம் 9-10 அங்குல நீளமும் 10-11 பலம் பளுவும் அடைகின்றது. * * * ஆறு மாதத்தில் மண்டை எலும்புகள் கெட்டிப்படுமேயாயினும் உச்சியண்டை மாத்திரம் இன்னும் தூரத்திலேயே இருக்கும். நகங்கள் முளைக்கும். ஆறுமாதத்திறுதியில் நீளம் 12-13 அங்குலம், பளுவு 20-25 பலம். * * * ஏழாமாதத்தில் அவயவங்களெல்லாம் தத்தம் உசிதபரிமாணங்களை யடைகின்றன. தலைமயிர் முளைக்கும். பிண்டம் தலைகீழாய்த் திரும்பிச் சிரம் கருப்பகோச பிலத்தைச் சமீபித்திருக்கும். ஏழாமாதத்திறுதியில் நீளம் 14-15 அங்குலம். பளுவு 30-40 பலம். * * * எட்டாமாதக்கடைசியில் பிண்டம் இன்னுங்கொஞ்சம் வளர்ந்து 15-16 அங்குலநீளமும், 40-50 பலம் பளுவும் அடைந்திருக்கும். * * * ஒன்பதாமாதவீற்றில் பிண்டம் பரிபக்குவமாகிச் சுமார் 18-அங்குலநீளமும், 60-70 பலம் பளுவும் உடைத்தாயிருக்கும். ஜனனகாலம் வரும்பொழுது இந்தப் பரிமாணங்கள் கொஞ்சம் அதிகரித்திருக்கும். சில சிசுக்களுக்கு இந்தப் பரிமாணங்கள் பேதித்திருக்கும்.

ஸ்திரீ புருஷ சிசு நிருணயம்.

38. ஜீவரேணுக்கள் முட்டையோடே கூடினபொழுதே ஸ்திரீ புருஷசிசு பேதத்திற்கு முகாந்தர முண்டாகின்றது. பிற்பாடு எந்தக்காரணத்தினாலும் அது மாறமாட்டாது. ஸ்திரீ புருஷர்களுடைய வலது பீஜங்களினின்று உற்பவித்த அண்டமும் ஜீவரேணுக்களும் கூடினவிடத்துப் புருஷசிசு ஜனிக்குமென்றும், இடது பீஜத்தினின்றுண்டாகிய சினையும் சீவரேணுக்களும் கூடினக்கால் ஸ்திரீசிசு ஜனிக்குமென்றும், சிலருரைத்திருக்கிறார்கள். ஆயினும், வியாதிமுதலிய காரணங்களினால் வலதுபீஜங்கள் அழிந்துபோனால் ஸ்திரீபுருஷர்களுக்குப் புருஷசந்தானமும், இடது பீஜங்களழிந்துபோனால் அவர்களுக்கு ஸ்திரீசந்தானமும் உற்பவித்த முகாந்தரத்தைப்பற்றி, முற்கூறிய கொள்கை தவறென்று அனைவரும் இப்பொழுது அங்கீகரித்திருக்கிறார்கள். அப்படி யாயின், எந்தக்காரணங்களினால் எந்தச் சந்தர்ப்பங்களில் புருஷசந்தான முற்பவிக்கும்? எப்பொழுது ஸ்திரீசந்தானமுற்பவிக்கும்? இஃது முக்கியமாய்த் தெரிந்துகொள்ளத்தக்க விஷயம்.

39. புருஷசிசு பிராப்தியாகுமா, ஸ்திரீசிசுபிராப்தியாகுமா? என்பது, அண்டத்தின் ஜீவசக்திக்கும் அதனுடன்கூடின ஜீவரேணுத்தொகுதியின் ஜீவசக்திக்கும், உள்ள தாரதம்மியத்தையொட்டியிருக்கும். அண்டத்தின் ஜீவசக்தி அதிகமாயிருக்குங்கால் அது ஸ்திரீயுருவத்தை யுண்டுபண்ணும். ஜீவரேணுக்களின் சக்தி யதிகமானபொழுது அது புருஷவடிவையுண்டாக்கும். இந்தத் தார்தம்மியம், ஸ்திரீபுருஷர்களின் பரஸ்பர தேகவலிமைகளுக்கிசைந்தும்; கருப்போற்பத்தி தருணங்களுக்கிசைந்தும் இருக்கும். அஃதெங்ஙனமெனில், ஸ்திரீயைக்காட்டிலும் புருஷனுக்கு அதிகமான தேகசக்தி அமைந்திருக்கும்பொழுது, சினையின் ஜீவசக்தியைக்காட்டிலும் அதனுடன்கூடும் ஜீவரேணுக்களின் சக்தி யதிகமாயிருக்கும். ஆதலின், சாதாரணமாய்ப் புருஷசந்ததி கிடைக்கும். புருஷனைக்காட்டிலும் ஸ்திரீக்கு அதிகதேகவுறுதி யுண்டாயிருக்கும்பொழுது; முட்டையின்வலி ஜீவரேணுக்களின் திறனை மிஞ்சியிருக்கும். ஆதலால் ஸ்திரீசந்தானம் சாதாரணமாய் இலபிக்கும். மேலும், இரஜவொழுக்கக்காலத்தில் உதிக்கும் முட்டை, தினதினமும் சிற்றளவு

விருத்தியடைந்துகொண்டு கருப்பநாடியின்வழியாய்க் கருப்பயிலுத்தைச் சமீபித்துக்கொண்டிருக்கும். ஆதலால், இரஜஸூற்றம் நின்ற பிறகு 7 - 8 தினங்கள் கடத்திச் சம்போகிக்கும்பட்சத்தில், சினை சிறிது வளர்ந்திருப்பதினாலும் சமீபத்திற்கு வந்திருப்பதினாலும், அதனுள் அதிகமாய்ச் சீவரேணுக்கள் சேர்ந்து புருஷசிசுவுருப்படும். இரஜவொழுக்கம் நின்றுபோன 2 - 3 தினங்களிலேயே சம்போகிக்கும்பட்சத்தில், சினை சிறிதாயிருப்பதினாலும் தொலைவாயிருப்பதினாலும், அதிகமாய்ச் சீவரேணுக்கள்சென்று அதற்குள் சேரமாட்டா. ஆதலால், ஸ்திரீசிசு வேற்படும்.

40. மேல்விஷயங்களைச் செவ்வையாய்ப் பரிசீலித்துப் பார்க்குங்கால் ஸ்திரீயைக்காட்டிலும் அதிக தேகவுறுதியுள்ள புருஷன், இரஜவொழுக்கம் நின்றுபோன பிறகு 7 - 8 தினங்கள் கழித்துச் சம்போகிக்கும் பட்சத்தில், புருஷ சந்தானம் நிச்சமாய்க் கிடைக்குமென்று சொல்லக்கூடும். அப்படிப்பட்ட புருஷன், இரஜவொழுக்கம் நின்றுபோன மறுதினத்திலேயே சம்போகித்தாலும், புருஷ சந்தானம் கிடைக்கக்கூடும். ஆனால் சாதாரணமாய் ஸ்திரீ சந்தானமே கிடைக்கும். ஸ்திரீயைக்காட்டிலும் குறைந்த தேகபலமுள்ள புருஷன் இரஜவொழுக்கம் நின்றுபோன 2 - 3 தினங்களுக்குள்ளாகவே சம்போகிக்கும் பட்சத்தில் ஸ்திரீ சந்தான முற்பவிப்பது நிச்சயம். அப்படிப்பட்ட புருஷன் இரஜவொழுக்கம் நின்றுபோன 7 - 8 தினங்கள் கழித்துச் சம்போகிக்கும் பட்சத்தில், புருஷ சந்தானங் கிடைக்கக்கூடும். கோரினவண்ண மிவ்வாறு ஸ்திரீ புருஷ சந்தானங்களைப் பிறப்பிக்கலாமென்பதற்கு உதாரணமாய், ஸ்விட்ஜர்லாண்டு தேசத்தில் சில பயிர்த்தொழில் செய்பவர்கள், பசுக்களின் பொலிவு சமயத்தைக் கண்டுபிடித்துச் சீக்கிரமாய்ப் போத்தை யேற்றுவதினால் கடாரிக்கன்றுகளையும், சில தினங்கள் சென்றதன்மேல் ஏற்றுவதினால் காளைக்கன்றுகளையும், பிறப்பிப்பதாக அத்தேசத்தாரது சாத்திரங்களினால் தெரியவருகின்றது.

பிள்ளைகளின் முகக்குறிகளும் குணகுணங்களும்.

41. தாய் தந்தையர்களின் சரீர லட்சணங்களும் குணகுணங்களும் பிள்ளைகளிற் காணப்படுகின்றன. அவர்களிருவரின் சரீ

ரங்களிலும் உண்டாகும் அணுமாத்திரமான பாகங்கள் கலப்பதி ஞல் கருப்போற்பத்தியாகிச் சிசு ஜனிப்பதைப் பரிசோதித்துப் பார்க்குங்கால், தாய் தந்தையர்களின் லட்சணங்கள் பிள்ளைகளில் பொருந்தியிருப்பது ஆச்சரியமாகமாட்டாது. தந்தையின் குண லட்சணங்கள் குமாரர்களிடத்தும் தாயின் குணலட்சணங்கள் குமா ரத்திகளிடத்தும் முக்கியமாய்க் காணப்படுகின்றன. ஒரோவொரு காலத்துத் தந்தையின் சாயல் குமாரத்திகளிடத்தும் தாயின் சாயல் குமாரர்களிடத்தும் அதிகமாய்க் காணப்படுவதுண்டு. மற்றொருக்கால், தாய் தந்தையர்களின் போலிகள் குமாரர்களி டத்தும் குமாரத்திகளிடத்தும் காணப்படாது மறைபட்டிருந்து, பேரர்களிடத்தும், பேர்த்திகளிடத்தும் தெளிவாய்க் காணப்படு கின்றன. ஆதலினே சில குழந்தைகளிடத்து அம்மான் முகக் குறிகளும் அத்தைகளின் முகக்குறிகளும் காணப்படுகின்றன. இவற்றைப் பரிசீலித்துப் பார்க்குங்கால், அம்மான் முகக்குறிக ளென்பவை தாயைப்பெற்ற தாய் தந்தையர்களின் லட்சணங்களா கவும், அத்தையின் முகக்குறிகள் தந்தையைப்பெற்ற தாய் தந் தையர்களின் லட்சணங்களாகவும், நிருணயிக்கப்படும். சில சந் தர்ப்பங்களில் தாய் தந்தையர்களின் குணங்களும் புத்திசுபாவங்க ளும் பிள்ளைகளிடத்து வித்தை சிட்சைகளினுல் மாறுவதினுலும், அதிகமாய் விருத்தியடைவதினுலும், முகக்குறிகள் வித்தியாச மாய்க் காணப்படுகின்றன.

42. பிண்டமானது புருஷரக்தசம்பந்தமுடையதாதலாலும், அதனிரத்தத்துக்கும் தாயினிரத்தத்திற்கும் பரஸ்பரசம்பந்தமுண் டாவதினுலும் கருப்போற்பத்தியான பிற்பாடு ஸ்திரீதத்துவம் புருஷதத்துவத்தை யநுசரித்துக் கொஞ்சமட்டும் மாறுகின்றது. இவ்வளவேயல்லாமல் புருஷசரீரத்தில் ஏதேனும் வியாதியிருக் கும்பட்சத்தில் அதனுடைய சம்பந்தம் ஸ்திரீசரீரத்திற்கூடக்கலந் தோடுகின்றது. ஆதலினே வேசைகள் முதலானோர்க்கு முதற் கருப்பம் எந்தப்புருஷனுல் இலபிக்கின்றதோ அவனுடைய முக சாடைகள் சில, பிற்பாடு இதரபுருஷர்களுக்குச் சனிக்கும் சந்தான த்திற்குக்கூட உண்டாகுமென்று சொல்லுகிருர்கள். அன்றியும், புனர்விவாகஞ் செய்துகொள்ளும் விதவைப்பெண்கள் சிலருக்கு, இரண்டாம் புருஷனுல் வாய்க்கின்ற சந்தானமானது, கொஞ்ச பாகம் முதற்பர்த்தாவினுல் உண்டான சந்தானத்தைப்போன்றிருப்

டிப்பட்ட சொரூபங்கள் பிள்ளைகளுக்கும் சித்திக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பூர்வ காலத்தில் உரோம்புரி பட்டணத்தில் ஒரு பெரிய உத்தியோகஸ்தன் ரூபவானாகிய புத்திரனைப் பெறக் கோரித் தன்னுடைய கட்டிலுக்கு நாற்புறத்திலும் மன்மத விக்கிரகங்களை நிறுத்தி வைத்ததாகவும், அவற்றின்மீது அவனுடைய பெண்சாதி சங்கம காலத்திலும் கர்ப்பிணியாயிருந்த போதிலும் தன்னுடைய திருஷ்டியை நிறுத்தியதினால் மன்மதாகாரம் பெற்ற புத்திரன் வாய்த்ததாகவும் படிக்கிறோம். மேலும், பசுக்கள் புணரும் தருணங்களில் அவற்றிற்கெதிராய்க் கோடுகளும் புள்ளிகளுமுள்ள வர்ண வஸ்திரங்களையாவது புஷ்பங்களையாவது கொம்புகளையாவது நிறுத்தி வைக்கும் பட்சத்தில், அப்படிப்பட்ட வருணங்களும் வரிகளும் புள்ளிகளுங்கூடிய கன்றுகள் பிறக்குமென்று சொல்லுகிறார்கள். அரேபியா தேசத்தில் குதிரைகள் கிரீடிக்குந் தருணத்தில் அவற்றினெதிரே உத்தமசாதிக் குதிரையை நிறுத்தும் வழக்கமுண்டு. அப்படிச் செயவதினால் எதிரில் நிறுத்திய குதிரையைப்போன்ற குட்டி பிறக்குமென்று தெரியவருகிறது. ஆதலினால் சங்கம காலத்தில் தம்பதிகள் தமக்குப் பிரியமாகும் மனுஷியன் மேலாவது உருவத்தின் மேலாவது மனத்தைத் திடமாய் நாட்டிவைக்க வேண்டியது. விகார சொரூபங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், விசாரம் பயமுதலியவை மனத்தினிலிருந்தாலும், நல்ல லட்சணங்கள் இசைந்த பிள்ளைகள் உண்டாகமாட்டார்கள். குடித்திருப்பதினாலாவது மயக்கந்தரும் பதார்த்தங்களைத் தின்றிருப்பதினாலாவது தம்பதிகள் நினைவு மறந்திருப்பார்களானால், மந்த புத்திகளுள்ள பிள்ளைகள் பிறப்பார்கள்.

46. கருப்போற்பத்தியான பிறபாடு, தாயினிரத்தத்தினின்று புஷ்டிபெற்றுப் பிண்டம் வளருமாதலின், அவளது சரீர நிலைமையையடுத்தும் மன நிலைமையையடுத்தும் சிசுவின் லட்சணங்கள் பேதித்திருக்கும். ஆதலால் கர்ப்பிணி ஸ்திரீகள் நிர்மல இருதயமுள்ளவர்களாய்ச் சந்தோஷத்துடன் கூடி எவ்விதமான விசாரமும் கோபமும் பகையும் பயமும் மனத்தினில் புகவிடாமல் ஆரோக்கியத்தைச் செவ்வையாய்க் காப்பாற்றிக்கொள்ளவேண்டியது. அவர்களுக்கு ஏதேனும் பெரியகஷ்டமாவது துக்கமாவது வியாகுலமாவது ஆசைப்பங்கமாவது நேரிடும்பட்சத்தில், பல

வீனர்களும் மந்தபுத்திகளுமான பிள்ளைகள் இலபிப்பார்கள். ஆதலினால் கர்ப்பிணி ஸ்திரீகளாகிய மாட்டுப்பெண்களை வருத்தப்படுத்தி மனத்தைத் துயரப்படுமாறு வதைக்காமல் அத்தியந்தமான தயையுடன் ஆதரித்துக்கொண்டு மனோற்சாகப்படுத்திக்கொண்டிருக்கவேண்டியது. மேலும் அங்கவீனர்களையும், அசங்கியவடிவங்களையும், பயங்கரசொரூபங்களையும் குரூரகாரியங்களையும் அசங்கியமானசேஷ்டைகளையும் கர்ப்பிணிகள் கவனித்துக் காண்டதுகூடாது. பயத்தையுண்டாக்குகின்ற கதைகளைக்கேட்பதும் தகாது. கொஞ்சகாலத்துக்குமுன்னே அங்கிலேய ராச்சியத்தைப் பரிபாலித்த ஜேம்ஸ் என்னுமரசன் தனது தந்தைபாட்டர்களைப்போலில்லாமல் மிகவும் கோழைநெஞ்சனுயிருந்தானென்று சரித்திரங்களில் திருத்தங்கூறத் தெரியவருகின்றது. இதற்கு முகாந்தரம் விசாரிக்க, அவனுடைய தாய் கர்ப்பவதியாயிருந்தகாலத்தில் சிரச்சேததண்டனை யொன்றைப்பார்த்து அச்சப்பட்டனளென்று தெரியவருகின்றது.

47. சூரிய சந்திர பிம்பங்களுக்குண்டாகும் மூளிகளைக்கண்டு அச்சப்படுவார்கள் என்னும் எண்ணத்தினுல், கர்ப்பிணி ஸ்திரீகள் கிரகண சமயங்களில் அசையாமல் படுத்திருக்கவேண்டுமென்று நமது பெரியோர்கள் விதித்திருக்கிறுர்கள். கிரகணங்களைத்தரிசித்த மாத்திரத்திலேயே கருப்பத்திலுள்ள பிண்டத்துக்கு அவயவக்குறைகள் வந்து நேரிடுமென்று நம்மவர்கள் சொல்வார்களாயினும் அது அவ்வளவு தூரம் நம்பத்தகுந்ததல்ல. வெள்ளைக்காரர்களில் கர்ப்பிணிப்பெண்டுகள் கிரகணங்களைப்பார்ப்பவர்களாயினும், அவர்கள் பயப்படாம லிருப்பார்களாதலின் பிள்ளைகளுக்கு மூளிகளாவது கேடுகளாவது நேரிடமாட்டாது. நமது ஸ்திரீகள் கல்வியுணர்ச்சி யில்லாதவராதலின் கிரகணங்களைப் பார்க்குமிடத்து மூடத்தனமான அச்சங்கள் பிறக்காமலிரா. ஆதலின் கருப்பிணிகளா யிருக்கும்பொழுது அவர்களைக் கிரகணங்கள் பார்க்கவிடாமல் வைப்பதே யுத்தமமாயிருக்கலாம்.

48. சம்போககாலத்தில் தம்பதிகள் தம்முடைய மனங்களில் எவருடைய சொரூபத்தை விடாத்தியானமாய் நினைத்துக் கொள்வார்களோ அப்படிப்பட்டவர்களுடைய ஆகிருதி சிசுவினுக்கும் பிடிபடுமென்று மேற்கூறப்பட்டிருக்கிறது. இதுவேயன்

றிக், கருப்பத்தினுள் பிண்டம் வளர்ந்து வருங்காலத்தில் தாயினுடைய மனம் குருவின்மீதாவது, பந்துமித்திரர்கள்மீதாவது அக்கம்பக்கத்தார்களு ளெவரில்மீதாவது அடிக்கடியும் நிறுத்தப் படுமாயின், அப்படிப்பட்டவர்களுடைய லட்சணங்கள் சிசுவினுக்குச் சித்திக்குமென்றும் சொல்லுகிறார்கள். ஆதலின், கருப்பவதிகளாயிருக்கும்காலத்தில் பெண்சாதிகள் மனைவர்களினால் வருத்தப்படுத்தப்படுவார்களாயின், அவர்களுடைய மனங்கள் விட்டுப் போய் இதரபுருஷர்கள்மீது நிலைகொண்டு அவர்களைக் கலியாணஞ் செய்துகொள்ளாமற்போனோமல்லவாவென்று கவலைப்படுவார்களாதலின், அப்படிப்பட்ட புருஷர்களின் வடிவவியற்கைகள் சிசுக்களில் காணப்படக்கூடும்.

49. இங்ஙனம் விவரிக்கப்பட்ட விஷயங்களை நினைவிலிட்டுக் கொண்டு, பாதிவிரதியசம்பன்னர்களான சில குடும்பஸ்தர்களுள் ஒரே வயிற்றில் பிறந்தவர்களில், சிலர் தேசவுறுதி வாய்ந்தவர்களாகவும் சிலர் பலவீனர்களாகவும், சிலர் ரூபவான்களாகவும் சிலர் குரூபிகளாகவும், சிலர் புத்திநுட்பமுள்ளவர்களாகவும் சிலர் மந்திகளாகவும், சிலர் தயாளுக்களாகவும் சிலர் கடின சித்தமுள்ளவர்களாகவும், சிலர் கபடமற்றவர்களாகவும் சிலர் கபடிகளாகவும், இவ்வாறு அனேகவிதமாய்ப் பரஸ்பர பேதங்கள் தோன்றுவதற்குக்காரணங்களை யாராய்ந்து நோக்குங்கால், அவர்களுடைய தாய் தந்தையர்கள் லேசமாயினும் நன்மைதீமைகளைப் பாராட்டாமல் தமது தேகநிலைமையையாவது மனநிலைமையையாவது கவனிக்காமல் தற்காலத்துச் சௌக்கியத்தை மாத்திரம் முக்கியப்படுத்திக் கொண்டு சம்போகவேலையை நடத்தி அப்போதைய கோரிக்கையை முடித்துக்கொண்டார்களென்று செவ்வையாய் விளங்குகின்றது. ஐயோ! அப்பேர்ப்பட்டவர்க ளெல்லாருக்கும் இதனுளிலுள்ள அம்சங்கள் செவ்வையாய்த்தெரிந்து விவேகமுண்டாயிருக்கும்பட்சத்தில், அவர்கள் மிகுந்த ஜாக்கிரதையுடன் நடந்துகொள்வார்களல்லவா? அறிவின்மையே! தப்புசெய்தவர்களைத் தண்டிக்காமல், எந்தப்பாவமுமறியாத பசும்பாலகர்களைப் பாதிக்கிறுயல்லவா? ஈதென்னநியாயம்!

கருப்ப சின்னங்கள்.

50. ஸ்திரீ கர்ப்பிணி யானளென்று தெரிந்துகொள்வதற்கு அனேக சின்னங்கள் உள்ளன. அவற்றுள், ஒன்றிரண்டுமாத்திரமே காணப்படும்பொழுது சந்தேகமிருப்பினும், நாலைந்து சேர்ந்து காணப்படுங்கால் கருப்ப முண்டாயிற்றென்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடும். இந்தச்சின்னங்கள் அடியில் ஒன்றன்பின்னென்றாய் விவரிக்கப்படுகின்றன.

51. முதலாவதுகுறி—தூரம் நிற்றல், என்றால் இரஜவொழுக்கம் நின்றுபோதல். ஆரோக்கியவதிகளாகிய பெண்டுகளுக்கு இது முக்கியக்குறிப்பாயிருப்பினும், ஒருக்கால் நோய் மூலமாய்க் கூடத் தூரம் நின்று போகலாமாதலின், இதர சின்னங்கள் கூடப் பார்க்கவேண்டியது. மேலும் சிலருக்குக் கருப்போற்பத்தியான சில மாதங்கள் வரைக்கும் இரஜோதரிசனமாய்க்கொண்டே யிருக்கும். எங்கோ ஒவ்வொருவருக்கு இரஜவொழுக்க மில்லாமலே கருப்போற்பத்தி யாகுமென்று மேலே கூறியிருக்கிறோம்.

52. இரண்டாவதுகுறி—பகவர்ணம். பகமார்க்கத்தின் உட்டோல் சாதாரணமாய்ச் சிவப்பு நிறமடைந்திருந்து, கருப்போற்பத்தியானபிற்பாடு நீலவர்ணமாக மாறிப்போகும். ஓர்சிறிய கண்ணாடிகொண்டு பகத்தின் பிரதிபிம்பத்தை யுண்டாக்கிக் காண்பதினால் இந்தவர்ணத்தைச் சுலபமாய்த் தெரிந்து கொள்ளக்கூடும். தொடக்கக்குறிகளில் இதுமிகவும் நம்பத்தகுந்தது.

53. மூன்றாம்குறி—விடியற்காலத்து ஓக்களிப்பு. ஸ்திரீகளுக்குக் கருப்போற்பத்தியாகி 15 - 20 தினங்களுக்குப் பிற்பாடு வயிற்றில் ஓக்களிப்புண்டாகி விடியற்காலத்தில் வாயிலெடுப்பார்கள். மேலும் சிலருக்கு அன்னங்கூட அருவெறுப்பாயிருக்கும். இந்த வமனங்கள் சாதாரணமாய் மூன்று நாலு மாதங்கள் வரைக்கும் உண்டாகும். சிலருக்குச் சற்றேறக்குறையப் பிரசவகாலம் வரைக்கும் நின்று மிகுந்த கஷ்டத்தையுண்டாக்கும். ஒரோவொருவருக்கு வமனமுண்டாகவேமாட்டாது.

54. நாலாங்குறி—உமிழெச்சலதிகரித்தல். கருப்பவதிகளுக்கு வாயில் விசேஷமாய் நீரூறி ஓக்களிப்பாயிருப்பதினால் உமி

ழதிகமாகி ஒவ்வொருக்கால் சொள்ளுநீருமொழுகும். இது சாதாரணமாய்ச் சொற்பதினங்களுக்குமாத்திரமேயிருக்கும். சிலருக்குப் பிரசவகாலம்வரைக்கு மிருக்கும்.

55. ஐந்தாஞ்சின்னம்—முலைகளில் உண்டாகும் மாற்றங்கள்—கருப்போற்பத்தியான இரண்டாமாதத்தில் முலைகள் பருக்கத்தொடங்கிக் கொஞ்சங்கொஞ்சம் வலிதோன்றும். அப்புறமவைபெரிதாகிக் கெட்டிப்படும். முலைக்காம்புகளும் அவற்றைச் சூழக் கொஞ்சம் பாகமும் கருமைபாய்ந்து மேனேக்கி யுப்பும். சில மாதங்களான பின்னர் முலைகளைப் பிதுக்கிப்பார்ப்பின், நீர்போன்ற திரவத்துளிகளாவது பாலாவதுவரும். ஒரு சமயத்து வியாதியினல் தூரம்நின்றுபோகுங்காலத்தில்கூட, முலைகளிலும் மேற்சொல்லிய மாற்றங்கள் காணப்படும். அன்றியும் சில ஸ்திரீகளுக்குக் கருப்போற்பத்தியில்லாமலே ஸ்தனங்களில் பாலூறுவதுண்டென்றும், சில கிழவிகளுக்கும் கன்னிகைகளுக்கும் புருஷர்களுக்கும் தேய்ப்பினுலும் பிடிப்பினுலும் பாலுண்டாகி, அவர்கள் தாதிகளாய்க்கூட இருப்பதுண்டென்றும் சாத்திரங்களிற் கூறப்பட்டிருக்கிறது.

56. ஆறுமடையாளம்—சிசுவின் இருதயத்தொனி. கருப்போற்பத்தியான நாலைந்து மாதங்களுக்குமேல், அடிவயிற்றின்மேல் செவியூன்றிக் கேட்குங்கால், உட்பிண்டத்து ஈரல்குலையானது துடித்துக்கொண்டிருப்பது நுட்பமாய்க் காணப்படும். புருஷசிசுவாயின், நிமிஷமொன்றுக்கு 130 - 135 துடிப்புகளிருக்குமென்றும், ஸ்திரீசிசுவாயின் 140 - 145 துடிப்புகளிருக்குமென்றும் வைத்தியசாஸ்திரிகள் விளம்புகிறார்கள்.

57. ஏழாங்குறி—சிசுவின் அசைவு. கருப்போற்பத்தியானபிறகு சுமார் நாலுமாதங்களுக்குக் கருப்பகோசம் வளர்ந்து வயிற்றைமுட்டுவதினல், அதனுட் குழந்தை அசைந்தபொழுதெல்லாம் தாய்க்குப் புலன்படும். இவ்விடிப்புகள் பறவைகள் இறக்கைகளையடித்துக்கொள்வதுபோ லிருக்குமெனபாாகள். வயிற்றுமீது கைவைத்துப்பார்க்குமிடத்து அவை ஏனையோருக்கும் தெரியவரும். விரல்களினல் மெல்லென அடிப்பதினுலும், தண்ணீரில் கைநனைத்து வயிற்றுமேல் வைப்பதினுலும் சிசுவினசைவுகளை உடனேக்குடனே உண்டாக்கக்கூடும்.

58. எட்டாஞ்சின்னம்—வயிறு வளர்வது. சிசுவாட்டங் தாய்க்குத் தெரியத் தொடங்கியபிற்பாடு, வயிறு கிரமகிரமமாய்ப் பெருத்துக் கெட்டிப்படும். தொப்புளும் மேலுக்குமேல் கிளம் பினதாய்க் குழிவு நீங்கி அடிவயிற்றுடன் சமமாகிவிடும். சிற்சில ருக்குக் கருப்போற்பத்தி முகாந்தரமாயல்லாமல் கொழுவு வளர் வதினல் வயிறு பெரிதாவதுமுண்டு. அப்பொழுது அமுக்கிப் பார்த்தால் வயிறு மிருதுவாயிருக்கும்.

59. அல்லாமலும், கர்ப்பிணிகளுக்கு அன்னத்தின்மீது அவ் வளவாய் ஆவலில்லாதிருப்பினும் சிறு தின்பண்டங்களில் ஆவலதி கரிக்கும். சிலருக்கு விபூதி சாம்பல் முதலிய பதார்த்தங்களைக் கூடப் புசிக்கு மாவலுதிக்கும். கருப்பவதிகளுக்குச் சமயாசமயங் களில்லாமல் கண்டபொழுதெல்லாம் தூக்க மயக்கம் பிடிக்கும். அப்பொழு தப்போழ்து ஈரலில் எரிச்சல் தோன்றும். மனஞ் சலிக்கும். முக விளக்கம் குறையும். முகம், கழுத்து, கைகள் முத லிய பிரதேசங்களில் பசுமையான மச்சைகள் தோன்றிப், பிரச வித்தபின்னர் மறைந்துபோகும். மூத்திரவொழிவு அனேகந்தரம் உண்டாகும். சிலருக்குப் பற்கள் குளிர் வெடுக்கும், சிலருக்குப் பிரசவத்துக்கோர் பல்விழுக்காடு உதிர்ந்துபோகும்.

பிரசவகாலம்.

60. சாதாரணமாய்ச், கருப்போற்பத்தியான 280-தினங் களுக்குப் பின்னர் பிரசவமுண்டாகும். ஓர் பொழுது இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னவது பிந்தியாவது பிரசவ முண் டாகலாம். ஆகினும் ஒன்பது மாதத்திற்கு முன்னர் உண்டாவது அகால பிரசவமா யெண்ணத்தக்கது. சாதாரணமாய்க் கடைசி விசை தூரங்குளித்ததினமுதல் கணக்கிட்டுக்கொள்ளும் வழக்கத்தி னல் கருப்பகாலம் 280-நாட்களிலும் அதிகமாயிருப்பதுபோல வெண்ணப்படும். மேலும், தூரமானபிற்பாடு சீக்கிரகாலத்திலே யே நடந்த சம்போகத்தினல் கருப்போற்பத்தியானபோது ஸ்திரீ சிசுவும், 10-12 தினங்கள் சென்ற பின்னர் நடக்கும் சம்போகப்ப யனுய்ப் புருஷ சிசுவும், உற்பவிக்கும் காரணத்தைப்பற்றிக் கடை சித்தடவை ஸ்திரீ பஹிஷ்டையாகி ஸ்நானஞ்செய்த நாண்முதல்

கணக்கிடும் பட்சத்தில், பெண் குழந்தையைக் குறைந்தகாலம சுமப்பதாகவும் ஆண்குழந்தையை அதிககாலம் சுமப்பதாகவும் காணப்படும்.

சுகப்பிரசவத்திற்கு மார்க்கங்கள்.

61. கர்ப்பிணிகளாயிருக்குங்காலத்தில் ஸ்திரீகள் தம்முடைய சரீரத்தையும் மனத்தையும் வெகு சாக்கிரதையுடன் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிடின் தமக்கேயன்றிக் கருப்பத்தினிலுள்ள சிசுவினுக்குக்கூடத் தவறுமல் ஆனி நேரிடுமென்றும், பின்கூறப்பட்ட காரணங்களினுல் நன்முய் விளங்கும். எல்லாவிதமாகவும் சாக்கிரதையோடுகூடியிருக்கும் பெண்டுகளுக்குச் சுகப்பிரசவமுண்டாகுமென்பதற் கையமெள்ளளவுமில்லை. ஆதலின், இதனடியில் சொல்லப்படும் விஷயங்களைக் கருப்பவதிகள் செவ்வையாய்க் கவனிக்கவேண்டியது.

62. கருப்பிணிஸ்திரீகள் ஆகாரவிஷயத்தில் மிகுந்த சாக்கிரதையெடுத்துக்கொள்ளவேண்டியது. மிதபோசனத்தை முக்கியமாய் அனுஷ்டிக்கவேண்டியது. ஜீரணமாகாப் பண்டங்களையும் மிகவும் உஷ்ணமான பதார்த்தங்களையும் புசிக்கக்கூடாது. மாப்பணியாரங்களை யடிக்கடிப் புசிப்பது ஒக்காது. அபூர்வமான பட்சணவகைகளின்மேலும் சிறுதிண்டிகளின்மேலும் கோரிக்கைசென்முல், கூடியமட்டும் புத்தியைக்கட்டிவைப்பதே யுத்தமம். ஒருவேளை அப்படிப்பட்ட சிற்றுண்டிகளைப் புசிப்பினும் வெகு சொற்பமாகவே புசிக்கவேண்டியது. இராத்திரி வேளைகளில் சொற்பமாய்ப் போசனஞ் செயபவேண்டியது. ஆகார பதார்த்தங்களை யப்போதைக்கப்போது மாறுதல் செய்துகொண்டு மலபந்தமில்லாதவண்ணம் சாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டியது. அதிகமாய் மலபந்த மிருக்கும் பட்சத்தில் கொஞ்சம் ஆமணக்கெண்ணெய் வாங்கிக்கொள்ளலாம். காரமாயிருக்கும் பேதி மருந்துகள் கூடாது.

63. கருப்பிணிகள் நித்திரைக்குமுள்ளு விசாலமாகவும் பரிசுத்தமாகவு மிருக்கவேண்டியது. பலகணிக்கு வெகு சமீபத்திலாவது குளிர்காற்றுக்கு எதிராகவாவது, வெட்டவெளியிலாவது படுக்கக்கூடாது. இரவுகளில் வெகு நேரஞ்செல்லும்வரைக்கும்

விழித்திருக்கக்கூடாது. முன் சாமத்தில் படுக்கைக்குச்சென்று அருணோதயத்திலேயே படுக்கையை விட்டெழுவது மிகவும் ஆரோக்கியகரமானது.

64. கருப்பவதிகள் தகுந்த சரீரப்பயிற்சி செய்துகொண்டு வரவேண்டியது. சுகப்பிரசவத்திற்கு இது பிரதானமார்க்கம். பாடுபட்டுழைத்துக் கூலிகொண்டுயிர்க்கும் பெண்களும் நாட்டுப்புறத்துப்பெண்களும் வெகு சுகமாய்ப் பிரசவிப்பதும் ஐசுவரியத்தில் அடிபடும் நாகரிகப்பெண்களுக்குப் பிரசவம் புனர்சன்மமா யிருப்பதும் ஜகத்பிரசித்தமா யிருக்கிறது. ஆதலின், கருப்பிணி ஸ்திரீகள் வேலைவித்தைகளை விட்டுவிடாமல், மிதமாய்த் தேகப்பயிற்சி செய்துகொண்டு பரிசுத்தவாயுவை யனுபவித்துக்கொண்டிருக்க வேண்டியது. அப்படிச் செய்யாமல், அவர்கள் சோம்பற்சாவடிகளாய் கால்கைகளை நோகடிக்காமல் கண்டபொழுதெலாம் வீட்டிலேயேபடுத்தும் உட்கார்ந்துங் காலங்கடத்தினால், தாங்கள் பலவீனத்தை யடைவதேயன்றிப் பிறக்கப்போகும் பிள்ளைக்குக் கூடப் பலவீனத்தை யுண்டாக்குவார்கள். அவர்கள்படும் பிரசவ வருத்தம் சொல்லிமுடியாது. நல்வாயுவுலாவும் தோட்டங்கள் முதலிய விடங்களில் பிரதிதினமும் 1 - 2 மணிநேரம் உலாத்துவதும், வீட்டுவேலைகளை யொழுங்குபடப்பார்ப்பதும், கருப்பிணிப் பெண்டுகளுக்குத் தகுந்த சரீரப்பயிற்சிகளுள் உத்தமமாய்க்கூறத் தகுந்திருக்கின்றன.

65. கருப்பவதிகள் தமது சரீரத்துக்கு அதிகமான ஆயாசத்தை யுண்டாக்கிக்கொள்ளக் கூடாது. பெரும்பாரங்களைத் தூக்குவதும், உயரிடங்கள் ஏறுவதும் இறங்குவதும், குதிப்பதும், தாண்டுவதும், ஓடுவதும், விசேஷமாய் உடம்புவளைப்பதும், மேலெழும்பியாவது கால்களைத்தூக்கியாவது பொருள்களை எட்டிப்பிடிப்பதும், நடனமாடுவதும், கும்மியடிப்பதும், இவைபோன்ற வழக்கங்களும் ஆகாது. அவற்றின் மூலமாய் ஒருவேளை கருவழிவு நேரிட்டாலும் நேரிடக்கூடும். அடிக்கடிச் சம்போகஞ்செய்வதும் கருப்பவதிகளுக்குக் கூடாது. மாதங்கள் நிறைய நிறையச் சம்போகத்தை யவசியம் குறைத்துவிடவேண்டியது. இல்லாவிடின் கருவீழ்ச்சியாவது அகால பிரசவமாவது நேரிடும். கருப்பவதிகளுக்கு எக்காலும் உபரதியேலாது.

66. மிகச்சூடாகவாவது மிகக்குளிர்ச்சியாகவாவது இருக்கும் நீரில், கர்ப்பிணிகள் முழுகக்கூடாது. மேலும், குளிக்கும்பொழுது நீரில் நெடுநேரம் ஊறக்கூடாது. சரீரத்தைப் பிண்ணுக்கு முதலியவற்றைக்கொண்டு அத்தியந்த முறுதியாகத் தேய்க்கவுங்கூடாது. சமுத்திரம், நதிகள், குளங்கள், ஏரிகள் முதலியவற்றில் கருப்பவதிகள் ஸ்நானஞ் செய்யவுங்கூடாது.

67. கருப்பிணி ஸ்திரீகள் உடுக்கும் வஸ்திரங்கள் மிகவும் இலேசாகவும் பரிசுத்தமாகவு மிருக்கவேண்டியது. அன்றியும், கருப்பம் விருத்தியாகவாக அவர்கள் சேலைகளை நழுவினாற்போற் கட்டிக் கொள்ளவேண்டியது. இறுகக் கட்டிக்கொள்ளும் பட்சத்தில், இரத்தம் நேராயோடாமற் போவதேயன்றிச், சிசுவுவளர்வதற்கு வேண்டிய இடவிசாலமு மில்லாமற்போய்விடும். கருப்பம் அறுபட்டு வீழ்ந்துபோனாலும் போகலாம். கருப்பிணி ஸ்திரீகள் இறுகலான ரவிக்கைகளையும் உடுக்கக்கூடாது. உடுத்தால், முலைகள் பருப்பதற்குத் தடையுண்டாவதினால் பிரசவத்திற்குப் பிற்பாடு தாய்ப்பாலுக்குத் தவிக்கவேண்டிவரும்.

68. கருப்பிணிஸ்திரீகளுக்குச் சாமானியமாய் உண்டாகும் வமன்முதலிய சிறுநோவுகள் மருந்துகளின் ஆவசிகமில்லாமலே சொஸ்தமாகும். ஏதேனும் பெரும்பிணியுண்டாகுமாயின் நல்ல கெட்டிக்கார வைத்தியனை விசாரிக்காமல் அவிழ்தங்கள் தின்னக்கூடாது. மாதங்கள் நிறைந்துவருமளவு சில கருப்பிணிகளுக்குக் கால்களிலும், மர்மபிரதேசத்திலும் கொஞ்சம் வீக்கம்தோன்றக்கூடும். பிண்டம் கீழுக்குச் சரிவதனால் இரத்தவோட்டத்திற்கு இடையூறுண்டாய், இவ்வீக்கங்கண்டு பிரசவத்திற்குப் பிறகு அது தனக்குத்தானே சொஸ்தமாகுமாதலின், மருந்துகளுபயோகிக்க வேண்டிய அவசரமிருக்காது. முகமுதலிய தேகபாகங்களில் வீக்கங்காணும்பட்சத்தில், தட்சணமே வைத்தியனுக்குக்காட்டி யுதவி தேடவேண்டியது.

69. கருப்பவதிகளாயிருக்குங்காலத்தில், ஸ்திரீகள் மிகவும் உல்லாசமாய்க் காலங்கழிக்கவேண்டியதென்றும், எவ்விதப்பட்ட விசனத்தையாவது வியாகுலத்தையாவது மனத்தில் ஏற்றக்கூடாதென்றும், பின்னேகூறியிருக்கிறோம். எல்லாவற்றிலும் முக்கியமானது—அவர்கள் தங்களுடைய பிரசவ விசனத்தைக்குறித்து

எள்ளளவும் அச்சம் பாராட்டாதிருப்பது. அப்படிப்பட்ட அச்சத்தையாவது ஐயத்தையாவது மனத்தை வருத்தப்படுத்தவிட்டால், வியாதியுதித்துக் கடைசியில் ஆபத்து சம்பவிப்பது நிச்சயம். பெரிய பெரிய பட்டணங்களில் இரண்டொரு பெண்களுக்குப் பிரசவமரணம் நேரிட்டக்கால், அந்தச் செய்தியை ஏனைய கருப்பிணிகள் கேட்டுப் பயப்படுவதினால், அவர்களுக்குக்கூடக் கேடுமூள்வது நிச்சயம். ஒருக்கால், இவ்வச்சமானது, தேசமுழுவதும் ஒட்டுவாரொட்டிகளைப்போல வியாபித்து கருப்பிணிஸ்திரீகளனேகரை நமன்பாலாக்கிவிடும். இது மிகவும் துக்ககரமானது. சரீராரோக்கியத்தைச் செவ்வையாய்க் காப்பாற்றிக்கொள்ளும்பட்சத்தில் கருப்பிணிகளுக்குச் சுகப்பிரசவம் தவறாது கிடைக்குமாதலின், அவர்கள் அந்த விஷயத்தைக்குறித்துச் சிற்றளவும் சந்தேகிக்காமல் தைரியத்தோடு கூடியிருக்கவேண்டியது. வீட்டவர்களும் அண்டை அயலார்களும்கூட, அவர்களுக்குப் பயத்தை மூட்டும் செய்திகளைச்சொல்லாமல், தைரியத்தை வற்புறுத்தவேண்டியது. சுரம், அம்மை முதலிய ஒட்டுநோய்களிருக்கும் கிருகங்களுக்குக் கருப்பிணிப்பெண்கள் போகக்கூடாது. அன்றியும், அப்படிப்பட்ட வீடுகளிலிருக்கும் பெயர்வழிகளைக் கருப்பிணிகளிருக்கும் வீட்டண்டைவரவிடக்கூடாது.

70. பிரசவகிருகமானது மிகவும் பரிசுத்தமாகத் துர்வாசனைகள் ஏதுமில்லாதிருக்கவேண்டியது. பிரசவசமயத்தில் மருத்துவச்சியும் இன்னுமிரண்டொருவர் மாத்திரம் அறைக்குளிருக்கலாமேயன்றி, அக்கம்பக்கத்துள்ளவர்க ளெல்லாரும்கூடிச் சந்தடி செய்யக்கூடாது. தீட்டுநாட்களில் வேலையற்றுப் பார்க்கவருபவர்களையெல்லாம் அறைக்குள் வரவிடக்கூடாது.

71. பிரசவித்த பிற்பாடு, காய்ந்தாறிக் கொண்டிருக்கும் பாலைக் கொஞ்சம் பருகக்கொடுத்தால், உடற்றளர்ச்சி கொஞ்சங் குறையும். நகச்சூடாயிருக்கும் கஞ்சி கொஞ்சங் கொடுத்தாலுங் கொடுக்கலாம். நாலைந்து நாள்வரைக்கும் பாலாயினும் இலகுவான வேறெவ்வாகாரமாயினும் கொடாது இலங்கணங்கள் போட்டு வைக்கும் வழக்கம் மிக மூடமானது. பிள்ளைபெற்ற மூன்று நாலு தினங்களுக்குள்ளே மலசுத்தியாகாதபட்சத்தில் கொஞ்சம் கொட்டைமுத் தெண்ணெய் கொடுக்கவேண்டியது.

72. பிரசவித்தபிறகு 7-8 நாட்கள் வரைக்கும் பிள்ளைத்தாய்ச்சி படுத்த நிலையிலேயே இருக்கவேண்டியது. கட்டில்மேல் எழுந்து உட்காருவது கூடாது. பள்ளிகொண்டவாறே எல்லாக் காரியங்களையும் நடத்திக் கொள்ளவேண்டியது. இவ்வாறு கூளைப் பாற்றிக்கொள்ளாத பட்சத்தில், கருப்பகோசமானது எபபோதைய நிலைமைக்கும் அளவுக்கும் மீளமுடியாமல், கீழுக்கிறங்கிப்போய், பெரிதாய் நின்று தொங்கிக்கொண்டிருக்கும். அன்றியும் எழுந்துட்காரும்போழ்தும் நடக்கும்பொழுதும் கருப்பகோசத்திலிருந்து இரத்தம் ஒழுகித் தீங்குசெய்யும். அனேகர் முரட்டுப்பெண்கள் இந்தப்படி இளைப்பாறுமல் பிள்ளைபெற்ற இரண்டு மூன்று தினங்களுக்கே எழுந்து நடமாடித் திரியத்தொடங்குவார்கள். அப்படிப்பட்டவருக்கு எவ்வபாயமும் நேரிடாததுபோலத் தோன்றினும், அவர்களுடைய கருப்பகோசம் சிறுகவோ பெருகவோ நோயுண்டிருக்குமென்றே நம்பவேண்டியது. ஆதலால், பிரசவித்த 7-8 தினங்கள் வரைக்கும் பள்ளிகொண்டே யிருக்கவேண்டியது. முக்கியமாய் நாகரிக ஸ்திரீகள் இவ்வாறு தப்பாமல் நடத்தவேண்டியது. மேலும் பத்துநாள் தீட்டுகழிந்து குளித்தபிறகுகூட அதிகமாய் நடமாடக்கூடாது. மாதத்தீட்டு கழியும் வரைக்கும் எவ்வளவுக் கெவ்வளவு வேலையோய்ந்திருக்க அவ்வளவுககவவளவு நன்கென்று எண்ணவேண்டியது. பிள்ளைபெற்ற இரண்டு மாதங்கள்மட்டும் குளிர் காற்றிலும், குளிர் நீரிலும் நடமாடுவதும், சரீரத்திற்காயினும் மனத்திற்காயினும் அதிகமான ஆயாசத்தை யுண்டாக்கி வேலைகளைச் செய்வதும் ஆகாது. பிரசவித்த மூன்று மாதங்கள் வரையிலும் ஸ்திரீகள் சம்போகத்திற்கு யோக்கியமாயிருக்கமாட்டார்கள்.

இரண்டாம் அதிகாரம்.

பாலபோஷண மர்மங்கள்.

73. சந்தானபாக்கியத்துக்குச் சரிபானது வேறென்று இவ்வுலகத்தில் காணப்படாது. எத்தனைவிதமான சௌக்கியங்களிருந்தபோதிலும் சந்தானமில்லாதபட்சத்தில் தம்பதிகளுக்குச் சமஸ்தமும் குறைவாகவேதோன்றும். சந்தானமுள்ளவர்களுக்கு இடைவிடாமல் சந்தோஷமே மேலிட்டுக்கொண்டு எத்தனைகஷ்டங்களிருந்தபோதிலும் தோன்றுது. பிள்ளைகளின் மிருதுவான தேங்குதலைகள், அவர்களுடைய ஆட்டபாட்டங்கள், நகை, அழகு, செல்வம்—இவை தாய்தந்தைகளுக்குப் பரமானந்தத்தையுண்டாக்குந் தன்மையுள்ளன. விசாரங்களையெல்லாம் போக்கடிக்கும் அமிர்த சஞ்சீவிகள். தம்பதிகளிருவீரும் பிள்ளைகளின் மூலமாய் ஐக்கியப்பட்டு எக்காலும் அநுராகமென்னும் நேசவாழியில் நீந்திக்கொண்டிருப்பார்கள்.

74. பிள்ளைகளின் வழியாய்த் தாய்தந்தைகளுக்குச் சந்தோஷம் பிறக்குமென்று சொல்வதில், நல்லபிள்ளைகளையே குறித்ததாகக் கருதிக்கொள்ளவேண்டியது. ஆரோக்கிய பாக்கியமும், சற்குணசம்பத்தும், தீர்க்காயுளும் பொருந்தியிருக்கும் சந்தானமே சந்தோஷகரமானது. அஃதல்லாதது துக்கத்துக்கு முதற்காரணமாம். எப்பொழுதும் பிணிவருத்தமுற்ற பிள்ளைகளும், குலத்துக்கபகீர்த்தி கொண்டுவரும் கோடரிக்காம்புப் பிள்ளைகளும், அற்பாயுசுள்ள பிள்ளைகளும், இவர்களுடைய தாய்தந்தையர்களின் பழைய வினைப்பயன்கள். ஜனன மரணங்களைக் கணக்கிட்டுப் பரிசீலித்துப் பார்க்கையில், பிறந்த பிள்ளைகளில் பகுதிப்போர் 5-வயதுப் பிராயமாவதற்கு முன்னரே மிருதியடைந்ததாகத் தெரியவருகிறது. ஐயோ! என்னவிசாரம்! ஒவ்வொரு குடும்பத்திலும் எவ்வளவு பரிதவிப்பு! பிறந்தவர்களில் பகுதிப்பேர் சிறுபிள்ளைத்தனத்திலே மாய்ந்துபோவது! இதற்குச் சனங்களின் மூடத்தனமே காரணமென்றும், பிள்ளைகளை வளர்க்கும் வழிகளும் அவர்களை

நன்ருய்ப் போஷித்து ஆரோக்கியத்தைக் காப்பாற்றுமுபாயங்களும் அவர்சணிமித்தமாய் எடுத்துக்கொள்ளவேண்டிய சாக்கிரதைகளும் அனைவருக்கும் தெரிந்திருக்கும்பட்சத்தில் இப்படிப்பட்ட துரவஸ்தையிராதென்றும், மஹாவித்துவான்களாகிய வைத்தியசாஸ்திரிகளனேகர் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கியிருக்கிருர்கள். ஆதலால் இவ்வதிகாரத்தில் விவரிக்கப்படும் விஷயங்களைச் செவ்வையாய்க் கவனிப்பது அத்தியந்த ஆவசிகமானது.

ஸ்நானம்.

75. ஆரோக்கியத்துக்கு ஸ்நானம் முக்கியசாதனம். ஸ்நானத்தினல் சரீரத்திலுள்ள அழுக்குகளெல்லாம் நீங்கிப்போய்ப் பரிசுத்தமுண்டாகும். நரங்கள் புஷ்டியடையும். தேககாந்தியதிகரித்து மனத்துக்கு மிகுந்த மனக்கவர்ச்சியாயிருக்கும். அனுதினமும் ஸ்நானஞ்செய்யாதவர்களுடைய சரீரம் அருவெறுப்பாக விருப்பதேயன்றி, அதனுளுள்ள நுட்பமாகிய துவாரங்களிலெல்லாம் அழுக்கடைந்துபோய் வியாதியையுண்டுபண்ணும். நித்தியமும் ஸ்நானஞ்செய்வதனல் வருஞ்சௌக்கியத்தைப் பழக்கப்படுத்திக் கொண்ட மனுஷியர்கள் போசனத்தையாவது ஒழித்துவிடுவார்களேயன்றி ஸ்நானத்தைத் தவிர்த்துக்கொள்ளமாட்டார்கள். பச்சைப் பிள்ளைகளுக்கு ஸ்நானம் அத்தியந்தமாவசிகமானது. தின்தினமும் ஸ்நானபாக்கியத்தை யனுபவியாத குழந்தைகள், பலவீனமாயும் பிணிவருத்த முற்றவர்களாயும் அழகுகெட்டவர்களாயுமிருப்பார்கள்.

76. சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் உதயஸ்நானமே க்ஷேமகரமானது. போசன முடித்த பிறகு ஸ்நானஞ்செய்யக்கூடாது. நிறைவயிறுமீது ஸ்நானம் செய்வதினல் அசீரணம முதலிய வியாதிகள் பிறக்கும். வெற்றுவயிற்றுமேல் உடற்குளிப்பு பசியைத் தூண்டியதிகரித்துச் சரீரத்திற பிணியின்மைக்கு முக்கிய வேதுவாயிருக்கும். பச்சைப் பிள்ளைகளுக்குப் பாலூட்டின்பின்னேடே குளிப்பாட்டக்கூடாது. பலவீனர்களான குழந்தைகளுக்கு விடியற்காலபோசனமான பிற்பாடு 2-3 மணிநேரம் பொறுத்துக் குளிப்பாட்டவேண்டியது.

77. பச்சைக் குழந்தைகளுக்கு நகச்சூடான வெந்நீரே பிரசஸ்தமானது. மிகவும் சூடான நீரை உபயோகிக்கவேகூடாது. அப்படிப்பட்ட வெந்நீரை யூற்றினால் பலவீனத்தையுண்டாக்கும். குளிர்ந்த ஜலத்தில் குளிப்பது குழந்தைகளுக்குச் சலதோஷத்தையுண்டாக்கும். கொஞ்சம் பிராயமுற்றிய பிள்ளைகளுக்கும், பெரியவர்களுக்கும், உடம்புக்கு ஒத்துக்கொள்ளுமானால், குளிர்ந்த நீரில் குளிப்பது பிணியின்மையையும் உடல் வலிமையையுந்தரும்.

78. அப்போதப்போது சமுத்திர ஸ்நானஞ்செய்வது சரீரத்துக்குச் சௌக்கியகரமானது. கடலலைகளில் களிப்புடன் குளிப்பதும், நீந்துவதும், துளைவதும், குளிக்குங்காலத்தில் கடற்காற்றையனுபவிப்பதும் அத்தியந்த உற்சாகத்தை யுண்டாக்கும். உவர்நீர் படுவதினால் மயிர் முதலிய கெட்டிப்படும். சிறுகுழந்தைகளைப் பலவந்தப்படுத்திச் சமுத்திரஸ்நானஞ் செய்விக்கக்கூடாது. அவர்கள் சம்மதப்பட்டு ஸ்நானஞ்செய்யும்பொழுதுகூட 5-6 நிமிஷங்களைக்காட்டிலும் அதிகநேரம் ஸ்நானம் செய்யவிடக்கூடாது.

79. ஸ்நானத்தைப் பரிசுத்தமாய்ச் செய்யவேண்டியது. சரீரத்து அவயவங்களெல்லாவற்றினையும் செவ்வையாய்க் கழுவித் தேய்க்கவேண்டியது. முக்கியமாய் அக்கிள் அடித்தொடை முதலிய மறைவிடங்களை நன்றாய்த் தேய்க்கவேண்டியது. ஏனெனில்—அந்தப்பாகங்களில் காற்றுடாமல் வெயர்வை பிடித்து அழுக்கு அதிகமாய்க் கூடிநிற்கும். நமது தேசத்தில் சிலவிடங்களில் ஸ்திரீகள் ஸ்நானஞ்செய்கையில் சேலைகளை வீழ்ப்பது நல்வழக்கமல்லவென்று சிலரபிப்பிராயப்படுவார்கள். ஆயினும் சரீர முழுவதையும் செவ்வையாய்த் தேய்த்துக்கொள்வதற்கு இது மிகவும் அனுகூலமென்று தெரிந்துகொள்ளவேண்டியது. புருஷர்கள் வஸ்திரங்களை வீழ்த்துவிட்டுக் குளிப்பதே யுத்தமம். அவ்வாறு ஸ்திரீ புருஷர்கள் ஸ்நானஞ்செய்வதற்கு வீட்டுக்கு வீடு மறைவிடங்களைக் கட்டிவைத்துக்கொள்ள வேண்டியது. மேலும் தலைமயிர்களின் அடியில் அழுக்கு சேராமல் பரிசுத்தமாய் வைத்துக்கொள்வதி னிமித்தம், வாரத்திற்கொருவிசையாவது எண்ணெய் தேய்த்துக்கொண்டு முழுகுதல ஆவசிகம்.

80. ஸ்நானஞ் செய்கையில் வெகுநேரம் நீரில் ஊறக்கூடாது. அன்றியும், ஸ்நானஞ்செய்யும்பொழுதாவது, செய்த உட

னேயாவது சரீரத்துக்குமேல் குளிர்காற்று படக்கூடாது. ஸ்நானஞ்செய்தவுடனே உடம்பை உலர்ந்த துண்டியொன்றனுடன் நன்ருய்த் துடைத்துக்கொள்ளவேண்டியது. செவி மூக்கு முதலிய விடங்களில் ஈரம் தங்கவிடக்கூடாது. பிள்ளைகளுக்கு நீரூற்றித் துடைத்தவுடனே, தாயாவது, தாதியாவது, முதுகு, மார்பு, வயிறு, கால்கள், கைகள், இவற்றின்மீது இரண்டு மூன்று தடவைகள் தன்னுடைய உலர்ந்த கையுடன் மெதுவாய்த் தேய்க்கவேண்டியது. அப்படி யுறைப்பதினுல் இரத்தத்துக்கு நன்ருய் ஓட்டங் கொடுக்கும்.

வஸ்திரங்கள்.

81. குழந்தைகள் உடுக்கும் வஸ்திரங்களும் உடைகளும் மிகவும் பரிசுத்தமா யிருக்கவேண்டியது. பளுவாயும் பிகுவாயுமிருக்கக்கூடாது. இத்தேயத்தில் தனவான்கள்கூடத் தம்முடைய பிள்ளைகளைக் குறித்து எள்ளளவும் கருத்துச் செலுத்தாமல் அவர்களை அம்மணமாய்த் திரியவிடுகிருர்கள். இப்படிப்பட்ட அசிரத்தை மிகவும் குரூரமானது. அதனுல், பிள்ளைகளின் சரீர மிருதுத்துவமும் அழகும் கெடுவதேயன்றி, அவர்களுக்குப் பலவித வியாதிகளுக்குங் காரணமாகும்.

உணவு.

82. சிறு பிள்ளைகளுக்கு முலைப்பால் உணவு. சிசுக்களுக்கு முலையூட்டி வளர்ப்பது தாய்களின் தீராக்கடமை. நீட்டுக்காரிகளாகிய சில பெண்டுகள் தம்முடைய அழகே பிரதானமென்றெண்ணிக்கொண்டு - பிள்ளைகளுக்குத் தாதிகளையிட்டுப் பாலூட்டுவித்துத் தாம் பற்று முதலியவற்றைப்போட்டுக்கொண்டு பாலை வற்றடிக்கிருர்கள். பணக்காரிகளாகிய ஸ்திரீகள் முக்கியமாய் இவ்வாறு செய்கிருர்கள். இது மிகவும் வெறுக்கத்தக்கது. அப்படிப்பட்டவர்களைக் குரூரஜந்துக்களாய்க் கருதக்கூடுமேயன்றித் தாய்களென்று சொல்லக்கூடவே கூடாது. வயிற்றிற் பிறந்த பிள்ளைகளுக்குத் தம்முடைய சரீரத்தில் ஊறும் பாலைக்கொடுத்து வளர்ப்பதைக் காட்டிலும் பெற்றதாய்க்குப் பின்னையானந்தமொன்றும் காணப்ப

டாது. அவ்வாறு செய்வதினுல் தாய் குழந்தைகளுக்குப் பரஸ்பர வாஞ்சை யதிகரிப்பதேயன்றி, அவர்களிருவருக்கும் சரீராரோக்கியமும் செவ்வையாயிருக்கும். தாய்க்குச் சீக்கிரமாய்த் திரும்பவும் கருப்போற்பத்தியு முண்டாகமாட்டாது. பிள்ளைகளுக்குப் பால் கொடுக்காமல் சம்போக சுகத்தையே பாராட்டும் பெண்டுகளுக்கு இடைவிடாமல் பிள்ளைப்பேறுண்டாய், அவர்கள் நாளுக்கு நாள் மெலிந்து போவார்கள். ஆதலில் எதேஷ்டமாய்ப் பாலூறும் ஸ்திரீகளனைவரும் தமது சிசுக்களைக் கூலிக்காரிகளுக் கொப்பிக்காமல், தாமே பால் கொடுத்து வளர்க்கவேண்டியது.

83. தாய்க்குப்பாலில்லாதபட்சத்தில், பால் தாதியைக்கொண்டு பாலூட்டுவிப்பதே உத்தமமானது. சிசுவினுக்கு மனுஷிய ஸ்தனியத்தைக்காட்டிலும் மேன்மையானது வேருென்று அகப்படமாட்டாது. சிசுவின் சரீரம் கனிபோலச் செவ்வையாய் வளர்வதற்கும், உடல்வலி நன்ருய் ஊறுவதற்கும், பிணிவராது காப்பாற்றுவதற்கும் பிணிகண்டபோது காப்பாற்றுவதற்கும், திருப்தியையுண்டாக்குவதற்கும், மனுஷமுலைப்பாலே பரமௌஷதமாதலில், தாய்க்குப்பாலில்லாவிடத்துத், தாதியினுல் பால்கொடுப்பிப்பதே யுத்தமம். ஆனுல் பால்தாதியை அமர்த்துவதில் மிகுந்த சாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டியது. எல்லாவிதத்திலும் திருப்திகரமாயிராத தாதியை அமர்த்துவதைக்காட்டிலும் பசுவின்பால்கொண்டு சிசுவைக்காப்பாற்றுவதே நன்று.

84. பாற்ருதி 25-வயதுக்குட்பட்ட ஈடுள்ளவளாயும் ஆரோக்கியவதியாயுமிருக்கவேண்டியது. அவளுடைய சரீரம் பரிசுத்தமாகவும் எவ்விதமான வியாதியுமில்லாதிருக்கவேண்டியது. அவளுடைய குழந்தைகள் பிணியுற்றிருக்கக்கூடாது. பிள்ளை இறந்துபோயிற்ருயின், தாயினுல் வந்த பிணிபட்டு இறக்கவில்லையென்று ஐயந்தீர நிருணயித்துக்கொள்ளவேண்டியது. பால் நிறைவாயிருக்கவேண்டியது. பால்குடிக்கும்பொழுது திடீரென இழுத்துப் பிள்ளைவாயைப் பரிசோதித்துப் பார்த்தால், பால்நிறைவாய் வருவதும் வராததும் தெளிவுபடும் பாலானது கொஞ்சம் நீலங்கலந்த வெள்ளைவருணமுள்ளதாய் இலேசாயிருக்கவேண்டியது. மிகவும் இளையதும் முற்றியதுமாகாமல் பிள்ளையின் பிராயத்துக்கிசைந்தவாறிருக்கவேண்டியது. முலைக்காம்புகள் புண்பட்

டாவது கெட்டியாகவாவது இருக்கக்கூடாது. பிள்ளைவாய்கொள்ளாத அவ்வளவு மிகத்தடித்ததாயுமிருக்கக்கூடாது. தூரமாய்க்கொண்டிருக்கும் தாதியும் கோபமுள்ளவளான தாதியும்கூடாது. தாதியைத் தன்வீட்டிற்குப்போய்ப் புசித்துவரவிடக்கூடாது. அப்படிப்போகவிட்டால் அவளுக்கிஷ்டமான பதார்த்தங்களையெல்லாம் புசிப்பாளாதலால், பிள்ளைக்குக்கேடுவிளையும். தாதியை வீட்டோடே வீடாய் வைத்துக்கொண்டு அவளுடைய சாப்பாட்டு விஷயமாய்த் தகுந்த சாக்கிரதை யெடுத்துக்கொள்வதும், அவளாலான சிறிதோ பெரிதோ வேலைவித்தைகளைச் செய்வித்துக்கொள்வதும், பிள்ளைக்கு வஞ்சனையில்லாமல் பால்கொடுப்பதும் கொடாததும் கண்டுகொள்வதும் அத்தியந்த ஆவசிகமானது.

85. முலைப்பால் கொடுத்துவரும் தாய்களும் தாதிகளும் ஆகாரவிஷயத்தில் மிகுந்த சாக்கிரதையாயிருக்கவேண்டியது. புசிக்கும் பதார்த்தங்களின் குணமானது பாலிலுமிறங்குமாதலின், அசீரண பதார்த்தங்களையாவது அத்திபுஷ்ண பதார்த்தங்களையாவது, சிசுவுகளுக்குப் பிணியுண்டாக்கும் வேறெவ்விதமானபதார்த்தங்களையாவது அவர்கள் தின்னக்கூடாது. அனுகூலமானவற்றை மாற்றிமாற்றிச் சாப்பிட்டு வரவேண்டியது. முலைப்பாலூட்டுங்காலத்தில் ஆகார பதார்த்தங்களை மாற்றுவதினாலேயே, மலப்பிடிப்பை அடித்துப்போடவேண்டியதேயன்றிப், பேதிக்கு மருந்து சாப்பிடுவதினாலல்ல. அதிகமாய் மலப்பிடிப்பிருக்குமாயின் கொஞ்சம் பச்சை (வெள்ளை) கொட்டைமுத்தெண்ணெயைச் சாப்பிடலாம். மேலும் பால்கொடுக்கும் பெண்கள் சாமானியமான வீட்டுவேலைகளைச் செய்துகொண்டு, சரீரத்துக்கு ஏற்ற சாதகத்தைச் செய்வித்துக்கொண்டு, நல்வாயு வீசுமிடங்களிலுலாத்திக்கொண்டிருக்கவேண்டியது. உட்கார்ந்து அசையாது சோம்பேறிகளாயிருக்கும் பெண்களின் முலைப்பால் ஆரோக்கியகரமாயிருக்கமாட்டாது. பால்கொடுக்கும் பெண்பிள்ளைகள் மனத்தினில் எவ்விசாரமுமிட்டுக்கொள்ளாமல் சந்தோஷமாக விருக்கவேண்டியது.

86. வேலைசெய்து களைத்திருக்கும்பொழுது பால்கொடுக்கக்கூடாது. அச்சமயத்தில் பால் மிகவும் சூடாயிருக்குமாதலின் சிசுவுக்குப் பிணிவந்துசேரும். அன்றியும் தூரமாரம்பித்த பிற்பாடும் கருப்போற்பத்தியானபிற்பாடும் பால்கொடுப்பதை நிறுத்தி

விட்டு வேறொருவரினால் கொடுப்பிக்கவேண்டியது. கருப்பிணியாயிருக்கும்பொழுது பால்கொடுக்கும்பட்சத்தில், சிசுவுக்குப் பிணியுண்டாக்குவதேயன்றிக், கருப்பவிழ்ச்சிகூட நேரிடக்கூடும். பாலூட்டுங்காலத்தில இருந்தாற்போலிருந்து பால்குறைவுபட்டுப் போனால், கருப்போற்பத்தியுண்டானதாக வெண்ணக்கூடும். தாய்க்குச்சுரம், அம்மை முதலிய நோய்கள் நேரிடுமாயின், சிசுவை வேறாய்வைத்து வேறெவர் மூலமாகவாவது பால்கொடுப்பிக்க வேண்டியதேயன்றித் தாய்மூலமாய்க்கூடாது.

87. நல்ல பாற்றுதி அமராதபொழுது, குழந்தைகளுக்குக் கழுதைப்பாலாவது ஆட்டுப்பாலாவது கொடுப்பது நலமென்று வைத்தியர்கள் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்விரண்டு ஜந்துக்களின் பாலும் சற்றேறக்குறைய மனிதர் பால்போலிருக்கும். ஆயினும் நந்தேசத்தில் குழைந்தைகளுக்குப் பசுவின் பால் கொடுப்பதே வழக்கமாயும் ஆரோக்கியகரமாயுமிருக்கிறது. பசுவின் பால் மனுஷியப் பாலைக்காட்டிலும் கெட்டியாதலினால், சரிக்குச் சரி நீர் கலந்து காய்ச்சிக், கொஞ்சம் வெள்ளைச் சர்க்கரையும் ஒரு சின்ன உப்புக்கல்லையும் கலந்து, நகச்சூடாய் ஆறவிட்டுப் பிள்ளைகளுக்கு ஊட்டவேண்டியது. இது மனுஷியப்பாலை யொத்திருக்கும். நீர் கலப்பதினால் பசுவின் பால் இலேசாய்ச் சுலபத்தில் சரிப்புக்குவரும். ஆதலால் சளிபிடிக்குமென்று பயந்து நீர் கலக்காமற் கொடுக்கக்கூடாது. சர்க்கரை யதிகமாய்ச் சேர்க்கக்கூடாது. சேர்த்தால், அஜீரணமுண்டாகும். சொற்பமாய் உப்புக்கலப்பதினால், ஜீரணசக்திக்குத் தூண்டுகோளா யிருப்பதேயன்றி நாக்குப் பூசிகளும் புழுக்கமாட்டாது.

88. கூடியமட்டும் குழந்தைக்கு ஓராவின்பாலே கொடுக்க வேண்டியது. பாற் பசுவிற்குப் பசும்புல்லும் வைக்கோலுமே போடவேண்டியது. கொள்ளு கடலை முதலிய தானியங்களைத் தீனி வைக்கக்கூடாது. வைத்தால் பாலில் வாயுவையுண்டாக்கும் குணங்கூடுகின்றது.

89. சீமையிலிருந்துவரும் டப்பிப்பாலைச் சிற்சிலர் உபயோகிக்கிறார்கள். ஆனால், அகப்படும் பட்சத்தில், ஆன்பாலே பிரசஸ்தமென்று பலமுண்டாக்குந் தன்மையதென்றும் தெரிந்துகொள்ளவேண்டியது. ஆன்பால் கிடைத்தபொழுதுகூடப் பிரயாசத்

தைக் குறைத்துக்கொள்வதற்காக டப்பிப்பாலேயே சிலர் கொடுத்து வருகிறார்கள். இது மிகவும் அவிவேகமானது. டப்பிப்பால் எல்லாக் குழந்தைகளுக்கும் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. ஒத்துக்கொண்டாலும், பசுவின்பால்போல ஆரோக்கியத்தையும் பலத்தையும் கொடுக்கமாட்டாது. ஆதலின், கஷ்டமென்றெண்ணிச் சோம்பாமல், பிள்ளைகளின் அபிவிர்த்தியைக்கோரும் தாய்கள், மேற்கூறிய வண்ணம் நீரும் சர்க்கரையும் உப்பும் கலந்துவைத்த பசும்பாலேயே கொடுக்கவேண்டியது. இந்த விதியை யநுசரித்து வளர்க்கப்பட்ட பிள்ளைகளனேகர் செவ்வையாய் வளர்ந்து விருத்திக்கு வந்தார்களென்று கனவைத்தியர்கள் விளம்பியிருக்கிறார்கள். நீர் கலக்காததான ஆன்பாலைக் குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடாதென்றுமாத்திரம் முக்கியாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியது. குழந்தை வளர வளரக் கொஞ்சம் கொஞ்சமாய் நீரைக் குறைத்துக்கொண்டு கடைசியில் பால் இரண்டு பங்கும் நீர் ஒரு பங்குமாயிருக்குமாறு கலக்கவேண்டியது.

90. பிள்ளைகளுக்கு 10-மாதம் வயது வரும்வரைக்கும், தாய்ப்பால், தாதிப்பால், அல்லது மேற்கூறிய விதமான ஆன்பாலு மாத்திரமே கொடுக்கவேண்டியதே யன்றிப், பால் தவிர வேறெவ்விதமான ஆகாரத்தையும் கொடுக்கக்கூடாது. பிள்ளைகளுக்குப் பசும்பால் கொடுக்கும்பொழுது, பாற்புட்டியை யுபயோகிப்பது உத்தமம். பாற்புட்டியுடன் குடிப்பிக்கும்பொழுது, பிள்ளைகள் முலைப்பால் குடித்தவாறே திருப்தியடைவதேயன்றி, அப்பொழுது அவர்களுடைய வாயில் ஊறும் உமிழ் நீர்கூடப் பாலுடன் கலந்து ஜீரணம் சுலபமாகும். பாற்புட்டியை நகச்சூடான நீருடன் அப்போதைக்கப்போது கழுவிப் பரிசுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டியது. அதற்கு மாட்டப்படும் ரப்பர் முலைக்காம்பைக்கூட அடிக்கடிச் சுத்தப்படுத்தவேண்டியது. இரண்டு பாற்குப்பிகளை வைத்துக்கொள்வது மிகவும் அனுகூலமாயிருக்கும்.

91. முலைப்பால் கொடுத்தாலும் சரி, பசும்பால் கொடுத்தாலும் சரி, காலநியமத்துக்கேற்கக் கொடுக்கவேண்டுமேயன்றிப், பிள்ளைகள் அழுதபொழுதெல்லாம் கொடுக்கக்கூடாது. இரண்டு மூன்று மாதங்கள் வரைக்கும் பகலில் 5 - 6 தடவைகளும், இரவில் 2 - 3 தடவைகளும் கொடுக்கவேண்டியது. பிற்பாடு கிரமமாய்க்

குறைத்துக்கொண்டுவந்து பகலில் 3-4 தடவைகளும் இரவில் 1-2 தடவைகளுமாத்திரமே யூட்டவேண்டியது. இப்படிப் பழக்கப்படுத்தினுல், அந்தவேளைகளுக்குச் சரியாய்க் குழந்தைகள் பாலுக்காக அழுவார்கள். காலநியமமில்லாமல் பலதடவையும் பால்கொடுப்பதினுல பிள்ளைகளுக்கு அஜீரணமுண்டாகும். பால் கொடுப்பதற்கு முன்னுதாய் முலைகளைப் பரிசுத்தமாய்த் துடைத்துக்கொள்ளவேண்டியது.

92. குழந்தைகளுக்கு 12-மாதப்பிராயம் வரும் வரைக்குமே முலை கொடுக்கவேண்டியது. அதன்மேல் முலைப்பாலினுல் வரும் பலமானது போதாதாதலினுல், கிரம கிரமமாய் முலைக்குடிப்பை மறக்கடித்து, பசும்பால் அதிகமாய்க்கொடுத்துக்கொண்டு, சுலபமாய்ச் சரிக்கத்தக்க அன்னம் கொஞ்சத்தைப் பழக்கப்படுத்த வேண்டியது. தாய் பலவீனமுள்ளவளாயிருக்கும்பொழுது 2-3 மாதங்களுக்கு முன்னமே முலையூட்டுவதை நிறுத்திவிடவேண்டியது. குழந்தை பிணி வருத்த முற்றிருக்கும்பொழுதும் துர்ப்பலமாயிருக்கும்பொழுதும் 2-3 மாதங்கள் அதிகமாய்க்கூட முலைகொடுக்கலாம். ஆனுல், 2-3 வருஷப்பிராயம் வரும்வரைக்கும் பிள்ளைகளுக்கு முலைகொடுக்கும் வழக்கமானது எவ்வளவேனும் நலமானதல்ல. அதனுல் குழந்தைகள் மக்குத்தட்டிப் போவதேயன்றித் தாயினுடைய ஆரோக்கிய நிலைமைக்குக்கூடப் பங்கம்வரும்.

93. முலைப்பால் விட்டுவிட்ட பிற்பாடு, சாதாரண போசனமே குழந்தைகளுக்கு ஆரோக்கியகரமானது. பிள்ளைகளுக்குப் பாலுடன் சமானமான ஆஹாரம் வேறொன்றுமிலதாதலின், நல்ல பசும்பாலைத் தவிராமல் குடிப்பித்துவரவேண்டியது. சுவைபிறப்பிப்பதற்காக மிகச்சொற்பமாய் வெண்சர்க்கரையைச சேர்க்கலாம். குடிப்பதற்கு மனமில்லாதபட்சத்தில், பாலுஞ்சோறுமாய்க் கலந்தாவது புசிக்கும்படியாய்ச் செய்யவேண்டியது. விருந்துச்சாப்பாடுகளும் பட்சணங்களும் மிடாய்முதலிய சிற்றுண்டிகளும் ஜீரணசக்தியைக்கெடுத்து வியாதியையுண்டாக்கும். ஆதலால், பிள்ளைகளின் போராட்டத்தைத் தவிர்ப்பதற்காக அவர்களைப் பலகாலும் அவ்வித பதார்த்தங்களைத் தின்னவிடக்கூடாது. குழந்தைகளுக்கு உண்பிக்கும் அன்னமும் காய்கறிகளும் மிருதுவாயிருக்கும்படிச சமைப்பிக்கவேண்டியது. அவர்களுக்குப்பிடிக்

காத காய்கறிகளைப் பலவந்தப்படுத்தித் தின்பிக்கக்கூடாது. அப்போதப்போது நல்லநல்ல பழவகைகளைத் தின்னக்கொடுக்கலாம். பச்சைக்காய்கறிகள் வியாதியையுண்டாக்கும்.

94. பிள்ளைகள் போசனம் செய்யும்பொழுது அவர்களைத் தொந்தரவுசெய்து உண்பிக்கக்கூடாது. உண்டைகளாக்கி விழுங்கவிடாமல், செவ்வையாய் மென்று சாப்பிடும்படிச் செய்யவேண்டியது. சோற்றை எவ்வளவுக்கெவ்வளவு நன்ருய் மென்று தின்பார்களோ அவ்வளவுக்கவ்வளவு சுலபமாய்ச் சீரணமாகுமென்று அறிந்துகொள்ளவேண்டியது. மேலும், பிள்ளைகளைப் பலவந்தப்படுத்தி, அவர்களாவற்பட்டுத் தின்பதைக்காட்டிலும் அதிகமாய்த் தின்பிக்கக்கூடாது. அப்படி யுண்ணச்செய்தால், அஜீரணமுண்டாகும். ஆதலின் அபேட்சையுள்ள தாய்கள் தமது பிள்ளைகளுக்குப் பசியுள்ளமட்டுக்குமே சோறு ஊட்டிச் சும்மாவிருக்கவேண்டியது. உடம்புக்குப் பலமுண்டாதல், வயிற்றில் ஜீரணமாகுஞ் சோற்றளவைப் பொறுத்திருக்குமேயன்றித் தின்பிக்கும் சோற்றளவை யொட்டியிராததலின் மிதபோசனம் ஆரோக்கியகரமென்று அறியவேண்டியது. ஓர்பொழுது போசனஞ்செய்யாமல் பட்டினியிருத்தலும் ஜீரணகோசத்தை நன்னிலைமைக்குக் கொண்டு வருவதற்கு உதவிகரமாயிருக்கும்.

95. குழந்தைகள் தமக்குத்தாமே சாப்பிடும் படியாய் அவர்களுக்குச் சிறுவயதிலேயே பழக்கப்படுத்த வேண்டியது. 4-5 வருஷங்கள் ஈடு வந்த பிறகு வேருெருவர் அன்னம் பிசைந்து ஊட்டுவது நலமானதல்ல. பெரியவர்களுக்குச் சமீபத்தில் உட்கார்ந்து, பார்ப்போர்களுக்கு ஆனந்தகரமாய்த் தம்முடைய சிறு கைகளுடன் தாமே சோற்றைப் பிசைந்து கொண்டு தின்னும்படிப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பது மிகவும் சிலாக்கியமானது.

Very important.

நல்ல வாயு.

96. பிள்ளைகள் இடை விடாது வீட்டிலேயே தங்கியிருக்கக் கூடாது. நல்ல வாயுவுலாவும் தோட்டங்களிலும் கழனிகளிலும் ஊருக்கு வெளிப்பாங்குகளிலும் கொஞ்ச நேரம் உலாத்தவேண்டியது. பட்டணங்களில் கடைத்தெருக்களில் திரிவதினல் பய

ஞென்றுமில்லே. அவ்விடத்துக்காற்று தெருத்தூசுடன் கூடிப்பரிசுத்தமற்றிருக்கும். ஆதலால் பரிசுத்த வாயு வீசிக்கொண்டிருக்கும் பிரதேசங்களிலேயே பிள்ளைகள் ஆட்ட பாட்டங்களைப் பழகவேண்டியதாகும். கடலோரத்துப் பட்டணங்களில், கடற்காற்றை யனுபவிப்பதைக்காட்டிலும் சிலாக்கியமான தேதொன்றுமில்லே. சமுத்திர தீரத்தில் குழந்தைகள் மணற்பாங்கில் விளையாடிக்கொள்வது, ஆகா! என்ன விநோதம்! உப்பங்காற்றின் உயர்ச்சியை என்னவென்று வருணிப்பது! பலவீனமானவர்களுக்கு அது புதுப்பிராணத்தைக்கொடுக்குமென்றால் நம்பக்கூடியதாயிருக்கிறது. தீர்க்க வியாதியினல் பீடிக்கப்பட்டு வாழும் தீரா நோயாளிகளுக்கு அது பரமௌஷத மென்னத்தகும். பிள்ளைகளுக்கது அமிர்தத்துக்குச் சமானமானது. இது மெய், முக்காலு மெய்.

சரீரப்பயிற்சி, விளையாட்டம்.

97. ஆரோக்கியபலங்கள் உண்டாயிருப்பதற்கும் செவ்வையாய உடம்பு வளர்வதற்கும் பிள்ளைகளுக்கு நல்லவாயுவேயன்றிச, சரீரப்பழக்கமும் அத்தியந்த ஆவசிகமானது. இடைவிடாது வீட்டிலேயே தங்கியிருந்து காலாடாமல் வளர்ந்துவரும் பிள்ளைகள் பலவீனர்களாயும் பிணியாளிகளாயுமிருப்பார்கள். நாட்டுப்புறத்துக் குழந்தைகளும், எளியவர்களின் குழந்தைகளும் சாதாரணமாய் ஆரோக்கியம் வாய்த்தவர்களாயும் திடதேகமுள்ளவர்களாயுமிருப்பார்கள். நந்தேசத்தில் பெண்குழந்தைகளுக்குச் சிற்றளவாயினும் சரீரப்பயிற்சியில்லாமற்போவதினல், அவர்கள் செவ்வையாய் வளராமல், தேகவலிமையில்லாதவர்களாய்ப், பிரசவ காலத்தில் கஷ்டங்களுக்காளாகிறார்கள். அனேகர் அகாலமிருத்தியுவுக்குப் பலியாகிறார்கள். தனவான்களுடைய குடும்பங்களில் இந்தக் குறைவு முக்கியமாய்க் காணப்படுகிறது. ஐயோ! என்ன கஷ்டம்! பெண்குழந்தைகளுக்கும் ஆண்குழந்தைகளுக்கும்கூடச் சரீரப்பயிற்சி ஆவசிகமென்று நம்மவர்களுக்கு என்றைக்குத் தெரிவது? இத்தேசத்தில் பிரபலித்திருக்கும் மூடாசாரங்கள் என்றைக்கு அடியோடு நசித்துப்போவது? நம்முடைய துக்கங்கள் என்றைக்கு நீங்குவது?

98. இம்மொழிகளைக்கேட்டுப்பழிக்கும் எ நிபுணர்காள்! பச்சைக் குழந்தையைப் பார்த்தீர்களா? அது நிரந்தரமும் அசைவதும் கால்கைகளை யாட்டுவதும் கண்டீர்களா? இதுவே அதனுடைய சிறு சரீரத்திற்குக் கடவுள் ஏற்படுத்திய பயிற்சி. இந்தப்பயிற்சியில்லாவிடின் அது வளரமாட்டாது. மேலும் சௌக்கியமும் சந்தோஷமும் அடைந்திருக்க முடியாது. இவ்வாறே பெரிய குழந்தைகளுக்கும் சரீரப்பயிற்சி ஆவசிகமென்று நம்பவேண்டியது. ஆண் குழந்தைகளுக்சேயன்றிப் பெண் குழந்தைகளுக்குச் சரீரசாதகம் அக்கரையில்லையென்பது மூடத்துவத்தைத்தெரியப்படுத்தும். ஆண் பிள்ளைகளைப்போலவே பெண் பிள்ளைகளும் செவ்வையாய் வளர்ந்து ஆரோக்கியமும் பலமும் அடைந்து சுகமாய்ச் சீவிப்பது முக்கியமே யல்லவா!

99. பச்சைக்குழந்தைகளுக்குச் சரீரப்பயிற்சியைப் பரமசிவனே ஏற்படுத்தியிருக்கிறன். ஆதலின் நாம் அதிகமாய்ச்செய்யவேண்டியதேதுமில்லை. தகுந்த உடுப்புகளை உடுத்து அப்போதப்போது நல்ல வாயு வீசிக்கொண்டிருக்கும் பிரதேசங்களுக்குக் கொஞ்ச நேரம் இட்டுப்போகும் பட்சத்தில் ஆரோக்கியம் விருத்திப்படும். பலமான காற்று வீசு மிடங்களுக்குக் கொண்டு போகக்கூடாது. மேலும் மிகுந்த இளமைத்தனத்திலேயே பிள்ளைகளைத், தள்ளும்வண்டிகளில் உட்காரவைத்து உலாத்துவதற்குக் கூட்டிப்போதல் கூடாது. அப்படியழைத்துப் போயின், அவர்கள் செவ்வையாய் உட்காரமாட்டாமல் முன்னும் பின்னும் தலையும் அரையும் அசைவதினல், தீங்குகள் நேரிடும்.

100. பச்சைக்குழந்தைகளைக் குறித்து இன்னுமொரு சங்கதி. தமது அன்புக்கிசையத் தாய்கள் அனேகர் தம்பிள்ளைகள் நடக்கப்பார்க்கக் கோரிக், கால்களில் பலமூறுவதற்கு முன்னரே அவர்களுக்கு நடை கற்பிக்கிருர்கள். இளம்பிராயத்தில் காலெலும்புகள் மிகவும் மென்மையாயிருக்கையிலேயே பிள்ளைகளை நிற்கவைப்பதினல் சரீரபாரத்தை யவை சுமக்க மாட்டாமல் வளைவுண்டுபோய், முற்றின பிறகு குறுக்குக்காலும் கோணற்காலும்விழுகின்றன. ஆதலின், பிள்ளைகள் தமக்குத்தாம் நிற்கக்கூடுந் தருணத்தைக் கண்டபிறகே நடை கற்றுக் கொடுக்கவேண்டியது. மற்ருேர் பிள்ளைகளைக்காட்டிலும் தமது பிள்ளைகளே முன்னுதாய்

நடக்கவேண்டு மென்னு மூற்சாகத்தைத் தாய்கள் விட்டுவிடவேண்டியது.

101. சரீரசாதகத்திற்கு உதயமும் அஸ்தமனமும் தகுந்த வேளைகள். போசனஞ் செய்த பிறகு 2 - மணி நேரத்திற்குள்ளேயாவது போசனத்துக்கு முன்னர் 1 - மணி நேரத்திற்குள்ளேயாவது சரீரசாதகஞ் செய்யக்கூடாது. ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் இசைந்த சரீரசாதகங்களில், பரிசுத்த வாயுவுலாவும் வெளிப்பாங்குகளில் பரபர வென்று நடப்பதும் ஓடுவதும் சிரேஷ்டமானவை. தளர்ச்சியுண்டாகி வீழ்ந்துபோகும் வண்ணம் நடப்பதும் ஓடுவதும் கூடாது. பந்தாட்டம், பல்நிச்சு, நாலு தூணாட்டம், உருண்டையான வளையத்தைப் புரட்டிக்கொண்டோடுவது, காலின்கீழிருந்து கயிறு படாமல் குதிப்பது, ஊஞ்சலாட்டம், இவை கூடப் பிள்ளைகளுக்கு நல்ல சரீர சாதகத்தையும், சந்தோஷத்தையும் உண்டாக்கும். ஊஞ்சல்களைச்சுத்த வாயுவு பரவுமிடத்தில் ஏதாவது ஒரு மரச்சொம்புச்குக் கட்டவேண்டியது. கொம்பும் கயிறும் கட்டியாயிருப்பதை முன்னே பார்த்துக்கொள்ளவேண்டும். மயக்கம் உண்டாகு மாறு கிறு கிறுவென்று சுழன்று விளையாடுவது கூடாது. பிள்ளைகளை வெளியே போகவிடாமல் வீட்டிலேயே விளையாடச் செய்வதுங்கூடாது. சிற்சிலவேளைகளில் வீட்டிலேயே விளையாடிக்கொண்டாலும், வெளியிடங்களில் மனம் போனபடி விளையாடிக்கொண்டு சரீரசாதகத்தைச் செய்தாலே அவர்கள் சுகமாருதத்தைச் சுவாசித்துச் சந்தோஷமும் ஆரோக்கியமும் அடைந்திருப்பார்கள்.

102. குழந்தைகளைச் சிறு குதிரைமேல் சவாரி செய்வித்தல் மிகவும் சிரேஷ்டமும் சந்தோஷகரமுமானது. குதிரைச்சவாரியினுல் மார்பு விசாலமடையும், தேகம் திடப்படும். தைரியம் அதிகரிக்கும். ஆதலால், சாத்தியப்படும்பொழுது பிள்ளைகளுக்குக் குதிரைச்சவாரி கற்பித்தல் உத்தமம். வண்டிமேலேறி உலாத்தப்போவதினுல் நல் வாயு படக்கூடுமாயினும் ஏற்ற சரீரப் பயிற்சி யுண்டாவதில்லை. வியாதியினுல் துர்ப்பலைகளாயிருப்போர்களுக்கு இது நலமாயிருக்கும்.

103. பெண்பிள்ளைகளுக்கும், ஆண்பிள்ளைகளுக்கும் நீச்சு மிகவும் சிலாக்கியமான சரீரப்பழக்கம். அதனுல் சரீரம் உறுதிப்

படும். மார்பு அகலும். சுவாசகோசங்கள் பலப்படும். ஜீரணசக்தி அதிகரிக்கும். தைரியம் அதிகப்படும். மேலும் ஓரொரு வேளை நீச்சு பிராணரட்சணைக்குக்கூடப் பிரயோசனப்படும்.

104. தோட்டத்திலாவது கொல்லையிலாவது நாலைந்துகுழி நிலத்தைக் குழந்தைகளுக்குப் பிரத்தியேகமாய்க்கொடுத்து, அதில் அவர்கள் பூங்கொடிகள், செடிகள் முதலியவற்றைநட்டு வளர்க்குமாறு செய்வது மிகவும் நலமானது. சரீரம் அழுக்குப்படுமென்று ஆலோசிக்கக்கூடாது. அவ்விடம் மண்வெட்டிச் செவ்வைப்படுத்துவதினாலும் நீரூற்றுவதினாலும் அவர்களுக்கு நல்ல சரீரப் பயிற்சி கிடைப்பதேயன்றி, அவர்களுடைய சிக்கானிக்கைகளுடன் புதைத்த விதைகள் பூமியிலிருந்து முளைப்பதும், செடிகள்வளர்வதும், பூக்கள் பூப்பதும், தினதினமும் அவற்றின் அழகுகள் அதிகரிப்பதும், இவையெல்லாம் அவர்களுக்கு அபரிமிதமான சந்தோஷத்தையுண்டாக்கும். கவனமும் கவலையும் விருத்தியடையும். சிருஷ்டியின் மேன்மை மனத்தில் நன்றாய் நாட்டும். அப்போதப்போது அவர்கள் ஆவலுடன் தாய்தந்தைகளை அழைத்துப் போய்த் தாம்வளர்த்த சிறுதோட்டத்தைக்காட்டிக் களிக்கும்பொழுது ஆகா! அந்த ஆனந்தம் சொல்லிமுடியாது.

105. பிள்ளைகள் விளையாடிக்கொள்வதற்குப் பொம்மைகளை வாங்கிக்கொடுத்தல் அத்தியந்தம் ஆவசிகமானது. அவர்களுடைய புத்தி எப்படிப்பட்ட பொம்மைகளின்மேலோடுமோ, அப்படிப்பட்டவற்றை முக்கியமாய் வாங்கிக்கொடுக்கவேண்டியது. உடைத்துவிடுவார்களென்று எண்ணக்கூடாது. பொம்மைகளை வாங்கிக் கொடுத்தல், மனம்போனபடி விளையாடிக்களிப்பதற்கேயன்றி அவற்றை எப்பொழுதும் பத்திரமாய் ஒளித்துவைப்பதற்கல்ல. ஆதலால் பொம்மைகளையுடைக்கடித்துப் பரிசோதித்துப் பார்க்கையில் குழந்தைகள்மேல் கோபித்துக்கொள்ளக்கூடாது. அவர்களுக்கு அறிவுண்டாவதற்கு இதுவும் ஒரு முக்கியமார்க்கமே. பிள்ளைகளையோடவிட்டு அவர்களுடைய சரீரத்துக்குச் சிறுகப்பெருகப் பயிற்சியுண்டாக்கும் சிறுசிறு வண்டிகள் குதிரைகள் முதலிய சாமான்களும், நகைப்பும், களிப்பும், ஆவலும் உண்டாக்கும் சாமான்களும், வாங்கிக்கொடுக்கவேண்டியது. தீங்குசெய்யும் தன்மையுள்ள விளையாட்டுச்சாமான்களைக் கொடுக்கக்கூடாது. மேலும் கத்தி

கள், துப்பாக்கிகள், நெருப்பு, நெருப்புக் குச்சிகள் முதலிய வஸ்துக்களுடன் பிள்ளைகளை விளையாடவிடக்கூடாது.

106. வீட்டிற்குள் பிள்ளைகள் குதிக்கும்பொழுதும், இரையும்பொழுதும், உரத்துச் சிரிக்கும்பொழுதும், அவர்கள்மேல் கோபித்துக் கொள்ளக்கூடாது. பெரியவர்களான பிறகு அவர்களுக்குக்கஷ்டங்கள் இருக்கவே யிருக்கின்றன. ஆதலால் சிறுபிள்ளைத்தனத்தில் அவர்களுண்டைய சந்தோஷத்தைக் கெடுக்கக்கூடாது. அன்றியும் அவர்களுக்கு அவ்வித சந்தடியே பரமானந்தகரமான சங்கீதமாயிருக்கும். உற்சாகத்துடன் வளர்வதற்கு அதுவே முக்கியமார்க்கம். என்றைக்கும் விஷமம் செய்யாமல் இளமையிலிருந்து புத்திசாலிகள்போல நடந்துகொள்வது பிள்ளைகளுக்கு இல்லாவியற்கை. அவ்விதப் பிள்ளைகளைப் பார்ப்பது மகாபரிதாபமாயிருக்கும். பிள்ளைகளுக்கு ஆகாரமும் நித்திரையும் எப்படி ஆவசிகமோ அப்படியே விளையாட்டும் ஆவசிகமானது. விளையாட்டில்லாமல் அவர்கள் பிழைக்கமாட்டார்கள். விளையாட்டில்லாமற்போனல் அன்னம்கூட இஷ்டமாயிருக்காது. ஆடவிடாமல் இடைவிடாது படிப்பித்துவந்தால், பிள்ளைகள் தவருமல் மந்திகளாய் விடுவார்கள்.

107. சிலர் பணக்காரர்கள் தமது பிள்ளைகளுடைய சரீரத்துக்கு எவ்வளவேனும் ஆயாசமுண்டாககாமல், அவர்களை மிக்க செல்வத்துடன் வளர்த்து வருகிருர்கள். இது பெரிய தப்பெண்ணம். குழந்தைகளைக்கொண்டு சிறு சிறு வேலைகளைச்செய்வித்துக் கொண்டால் அவர்களுக்கு வேலையில் ஆவலும் அதிகமான சந்தோஷமும் உண்டாகும். ஆதலில், வேண்டியபொழுதெல்லாம் வீட்டு நாற்பக்கமும் அனுப்பிவைத்து அவர்கள் கொண்டுவரத்தக்க பொருள்களை அவர் மூலமாய் வருவித்துக்கொள்வதும், சணக்கிடுவது, சேர்த்துவைப்பது, வரிசையா யடுக்குவது முதலிய வேலைகளை அவர்களுக்கு அப்போதப்போது கொடுப்பதும், மிகவுஞ் சிலாக்கியமென் றெண்ணவேண்டியது. சாத்தியமானவரைக்கும் அவர்களுடைய சொந்த வஸ்துக்களை அவர்களே பத்திரமாய்க்காப்பாற்றி வைத்துக்கொள்ளும்படிச் செய்யவேண்டியது.

நித்திரை.

108. குழந்தைகளுக்கு ஆகாரம் எவ்வளவு ஆவசிகமோ நித்திரையும் அவ்வளவு ஆவசிகமே. முலையுண்ணும் குழந்தைகளுக்கு நித்திரை மிகவும் ஆவசிகம். அதனாலேயே அவர்கள் செவ்வையாய் வளர்ந்து ஆரோக்கியம் அடைந்திருப்பார்கள். பெரிய பிள்ளைகளுக்கு ஒவ்வொரு தினமும் 8-9-மணிநேரம் நித்திரையிருக்கவேண்டியது.

109. குழந்தைகள் தூங்குமறை மிகவும் விசாலமாகவும், பரிசுத்தமாகவும், சுத்தவாயு வீசுவதுமாக விருக்கவேண்டும். சுவர்களுக்கு நல்ல சுந்தரமான படங்களைக் கட்டித் தொங்கவிடவேண்டியது. அறை நிறையப் பெட்டிகள் முதலிய சாமான்கள் இருக்ககூடாது. அனேகம் பெயர் பிள்ளைகள் ஓரறையிலேயே தூங்கக்கூடாது. பரிசுத்த வாயுவில்லாத பட்சத்தில் பிள்ளைகளுக்குச் செவ்வையாய்த் தூக்கம் பிடிக்காமற்போவதேயன்றி, அவர்கள் துயினீங்கி யெழும் பொழுது உற்சாகமடைந்திருப்பதற்குப் பதிலாய்ச் சோர்வடைந்திருப்பார்கள். குளிர்காற்றுக் கெதிராகக் குழந்தைகளைப் படுக்கவைக்கக்கூடாது. படுக்கை மிகவும் துப்புரவாயிருக்கவேண்டியது. அப்போதப்போது வெயிலில் காயப்போடவேண்டியது. வருஷத்திற்கொருதடவை படுக்கையைப்பிரித்துப் புதிதாய்த் தைப்பிக்கவேண்டியது. தொட்டில்களில் குழந்தைகளைப் படுக்கவைத்து ஆட்டித்தூங்கச் செய்வது அவ்வளவாய் யுக்தமானதல்ல. அப்படிச் செய்வதினால் அவர்களுடைய நித்திரை கலக்கப்பட்டிருக்கும்.

110. குழந்தைகளுக்கு இளம்பிராயத்திலேயே பிரத்தியேகமாய்ப் படுப்பதை வழக்கப்படுத்தவேண்டியது. இரண்டு மூன்று குழந்தைகளை ஒருபடுக்கைமேல் படுக்கவைப்பது நல்லதல்ல. ஆண்பிள்ளைக் குழந்தைகளையும் பெண்பிள்ளைக் குழந்தைகளையும் ஒருபடுக்கைமேல் படுக்கவைப்பது சிறிதேனும் சரியாகாது. நோயாளிகளாகிய குழந்தைகளையும் ஆரோக்கியமான குழந்தைகளையும் ஓரிடத்தில் படுக்கவைப்பதும் தகாது. மேலும், வயோதிகர்கள் பக்கத்தில் பிள்ளைகளைப்படுக்கவிடக்கூடாது. அப்படிச் செய்வதினால் பெரியவர்கள் தேகசௌக்கியத்திற்கு நலமுண்டாகிச், சிறுபிள்ளைகளின் சரீரம்மெலிந்து களையற்றுப்போய்விடுமெ

ன்று சொல்லுகிருர்கள். ஆதலால், எவ்வளவு சமீபித்த பந்துக்களுடைய சமீபத்திலாயினும் குழந்தைகள் படுக்கக்கூடாது. சில தாய்கள் ராத்திரிகளில் சிசுவினுடைய வாயில் முலையைவைத்துப் பாலூட்டிக்கொண்டவாறே தூங்குகிருர்கள். இதுபெரிய துரப்பியாசமென்றறியத்தக்கது.

111. குழந்தைகளை இரவில் முன்சாமத்திலேயே படுக்கவைக்கவேண்டியது. அப்படிச் செய்தாலே அவர்கள் திருப்தியாய்த்தூங்கி அருணோதயத்தில் எழுந்திருக்கக்கூடுவார்கள். விரைவிலேயேபடுத்து விரைவிலேயே எழுந்திருக்கும் வழக்கம் மிகவும் சிலாக்கியமானது. ஆரோக்கியத்துக்கும் சவுக்கியத்துக்கும் இதுபிரதானமானது. இவ்வப்பியாச மில்லாமற்போயின் பெரியவர்களாவது துாலபம். பிள்ளைகள் துயின்றுகொண்டிருக்கும்பொழுது அவர்களிடங்கூடிச் சந்தடிசெய்யக்கூடாது. அவர்களருகில் பெருவெளிச்சத்தைக் கொண்டுபோகக்கூடாது. செவ்வையாய்த் தூங்கும்பொழுது அவர்களையெக்காலும் எழுப்பக்கூடாது. அப்படி யெழுப்புவதினுல் அவர்களுக்குக் கலக்கமுண்டாகிக்கெடுதல் நேரிடும். அவர்கள் தமக்குத்தாம் துயிலொழியும் வரைக்கும் அவர்கள் வழிக்குப்போகாதிருக்கவேண்டியது. ஆயினும் விழித்துக்கொண்ட பிற்பாடு சோம்பேறித்தனத்தினுல் எழாமல் படுக்கைமேல் புரண்டுகொண்டு படுத்திருக்கவிடக்கூடாது.

112. பிள்ளைகள் படுத்துக்கொள்ளுமுன்பு அவர்கள் ஒன்றுக்குப்போய் வரும்படித் தாய்கள் சாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டியது. அப்படிச் செய்வதினுல், அவர்கள் செவ்வையாப் படுத்துத் தூங்குவதேயன்றிப், படுக்கையையும் நனைக்க நேரிடாது. அன்றியும் வீட்டுவேலைகள் முடிந்த பிற்பாடு தாய்கள் குழந்தைகளெல்லாரிடத்துஞ் சென்று, அவர்கள் செவ்வையாய்ப் படுத்துத் தூங்குவதைப்பரீட்சித்துப்பார்த்து, ஏதாவது அரைகுறைகளிருந்தால் அவற்றை யொக்கப்படுத்திவிட்டுப் பிற்பாடு தாங்கள் படுக்கச்செல்ல வேண்டியது.

113. குழந்தைகளைத் தூங்க விடும்பொழுது, அவர்கள் சந்தோஷத்துடன் கூடியிருக்கும்படிச் சாக்கிரதையெடுத்துக்கொள்ளவேண்டியது. அழுதுகொண்டே தூங்கப்போகும் பட்சத்தில் அவர்களுடைய மனங் கலவரப்பட்டுத் துயிலும் கலக்சமுறுவதி

னல், துயிலெழும்பொழுது அவர்கள் லேசமாயினும் உற்சாக மில்லாதவர்களாய் மிகவும் தளர்வுற்றிருப்பார்கள். இனிமையாய் தாலாட்டுகள் பாடின விடத்துப் பிள்ளைகள் சந்தோஷத்துடன் துயிலுவார்கள். அன்றியும் அவர்களைப்படுக்கவைக்கும்பொழுது தாய்கள் ஆசையுடன் தடவிககொடுத்து முத்தமிடும் பட்சத்தில் அவர்கள் பரம சந்துஷ்டியுடன் உறங்குவார்கள. ஆகா! பெரிய வர்களானபிறகு இம்முத்திகள் நினைவுக்கு மீண்டு எவ்வளவு மனச சுகத்தைப்பிறப்பிக்கும்?

114. சில பிள்ளைகள் அதிகமாய்க்குறட்டைவிட்டுத் தூங்கு வார்கள். மூக்கினல் மூச்சிழுப்பதற்குப்பதிலாய் வாயினலிழுப் பதினல் இக்குறட்டை யுண்டாகின்றது. சலதோஷமுதலிய கார ணங்களினல் மூக்கோட்டைகள் அடைபட்டுப்போய் வாயினல் மூச்சுவிட நேரிடுவதுண்டு. ஓரோர் சமயத்தில் தொண்டைக்குப் பக்கத்திலிருக்கும் தந்துக் குழல்கள் வீங்கியிருப்பதினல் கூட இப் படி நேரிடலாம். சிற்சில வேளைகளில் இக்காரணங்களினல் வாயி னல் மூச்சுவிடுவது தொடக்கமாய்ப், பிற்பாடு அப்பியாசத்தினல் நிலை பெற்றுப்போய் விடும். இது மிகக் கெட்ட பழக்கம். இத னல் ஓரோர் சமயத்தில் தொண்டையில் வியாதியுண்டாகும். சில ருக்குப் புரு மார்பு விழும். ஆதலால் அசட்டை செய்யாமல் இத் துரப்பியாசத்தைத் தூரத்தொலைக்க வேண்டியது. சலதோஷ மாவது வீக்கமாவது இருக்கும்பொழுது, தகுந்தமருந்துகள் மூல மாய்ச் சொஸ்தப்படுத்திக்கொள்ளவேண்டியது. வியர்தியொன்று மில்லாமல் அப்பியாசமாத்திர மிருக்கும்பொழுது வாயினல் மூச் சுவிடவேண்டாமென்றும் மூக்கினல் மூச்சுவிட வேண்டுமென்றும் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டியது. மேலும், அவர்கள் தூங் கிக்கொண்டிருக்கும்பொழுது உதடுகளிரண்டையும் மெதுவாய் ஒட்டச் சேர்க்கவேண்டியது. இப்படிச் சிலதினங்கள் செய்வதி னல் மூக்கினல் மூச்சுவிடுவது வழக்கப்பட்டுக் குறட்டை விடுவது நீங்கிப்போய்விடும்.

வித்தை.

---

115. பிள்ளைகளுக்கு 8-9 வருஷங்கள் வயதுவரும்வரைக் கும் வீட்டிலேயே வைத்துக்கொண்டு வித்தை கற்பிப்பது உத்த

மம். பாடசாலைகளில் பல பிள்ளைகளுடனும் சேர்வதினால் சிற்சில கெட்டவழக்கங்கள் பிடிபடும். அன்றியும், இளம்பிராயத்திலேயே பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்பும்பட்சத்தில் அவ்விடத்தில் அசௌக்கியகரமான பலகைகள்மீது உட்காருவதினாலும் கூட்டத்தில் சேர்ந்து அறைகளுக்குள் இருப்பதினாலும், சரீராரோக்கியத்துக்குக்கூடப் பங்கம் நேரிடும்.

116. பிள்ளைகளைக் கண்டபொழுதெல்லாம் படிப்பித்தல் ஆனிகரமானது. தினத்துக்கு 3 - 4 மணிகளைக்காட்டிலும் அதிக நேரம் படிக்கவிடக்கூடாது. படிக்கச்செய்யும்பொழுது அவர்களை அதிகமாய்த் தொந்தரவுப்படுத்தாமல், படங்கள்மூலமாயும், பொம்மைகள் மூலமாயும், வஸ்துக்களைக்காட்டித் தெளியக்கூறுவதினாலும், அவர்களுக்குக் கற்பிப்பது மனத்திற்கு இன்பமாயிருக்கும்.

117. அதிசீக்கிரமாய் வித்தைகற்பிக்கவேண்டுமென்று பிள்ளைகளை ஓய்வொழிவில்லாமல் படிக்கச்செய்யக்கூடாது. ஒரேயடியாய் வளரவேண்டுமென்று இன்னுமதிகமாய் ஆகாரத்தைக் கூரியுண்பிப்பதுபோலாகும். ஆதலால் அவர்கள் பரபரவென்று பரீட்சைமேல் பரீட்சையாய்த் துரிதகாலத்திலேயே தேறிவிடவேண்டுமென்று தாய்தந்தைகள் கவலைப்பட்டு பேராசைபாராட்டத்தகாது. அவர்களுடைய சரீரசவுக்கியத்தையும் பலத்தையும் முக்கியமாய்க் கவனித்துக்காப்பாற்றி வித்தைபயிற்றுவது உத்தமமானது. அதித்துரிதமாய் எல்லாம் கற்றுக்கொள்ளும் பிள்ளைகள் சாதாரணமாய்ப் பலவீனமுள்ளவரா யிருப்பார்கள். ஆதலால் அவர்களைக் குறித்து மிகவும் சாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டியது.

118. பிள்ளைகளுச்குச் சரீரத்தில் எவ்வளவு சிறிதுநோயா யிருப்பினும் அவர்களைப் பலவந்தப்படுத்திப் படிப்பிக்கக்கூடாது. அன்றியும், அவர்கள் படிக்கும்பொழுதாவது மற்றெந்த வேலை செய்யும்பொழுதாவது, நெடுநேரம் குனிந்துகொண்டிருப்பது கூடாது. அப்படிக் குனிந்துகொண்டிருப்பதினால் சுவாசகோசங்களுக்குப் பிணியுபாதியுண்டாகும். ஓர் சமயத்தில் இருதயத்திற்குக்கூடத் தீங்குண்டாகும்.

119. பெண் பிள்ளைகளுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும்கூடச் சங்கீதம் கற்பிப்பது மிகவும் நலமானது. சங்கீதத்தினால்வரும்

ஆனந்தம் இவ்விதப்பட்டதென்று சொல்வதற்கு மாளாது. எவ்விதத் துன்பங்கள் நேரிட்டபோதிலும் சங்கீதசவுக்கியத்தினால் மனத்தினுக்கு அமைதியுண்டாகும். விசாரங்களெல்லாம் தொலைந்துபோய்விடும். அன்றியும் வாய்ப்பாட்டினால் மார்பு விசாலமடைந்து சுவாசகோசங்கள் உறுதிப்படும். குரலுக்கு இனிமையுண்டாகும். உச்சரிப்பு திருத்தப்படும். ஆதலால் சிறுகவோ பெருகவோ சங்கீதப் பயிற்சி அனைவருக்கும் ஆவசிகமானது.

120. பெண்பிள்ளைகளுக்குச் கல்விபயிற்றுவது எவ்வளவு முக்கியமோ வீட்டுவேலைகள் கற்பிப்பதும் அவ்வளவு முக்கியமே. எவ்வளவு செல்வமுள்ளவர்கள் பிள்ளைகளாயினும், சமையல்செய்வது, வீடு ஒக்கப்பண்ணுவது, முதலான வீட்டுவேலைகள் கற்றிருக்கவேண்டியது. அப்படிக் கற்றிருந்தாலே அவர்களினால் புருஷர்கள் சௌக்கியமடையக்கூடும். அவர்களுக்கும் சரீரசவுக்கியம் அமைந்திருக்கும். வேலைவித்தைகளொன்றுமில்லாமல் அழகிகளாய் வீண்காலம் கழிக்கும்பெண்கள், சோம்பேறித்தனம் முற்றிக் கணவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்றவாறு சவுக்கியத்தை உண்டாக்கமாட்டார்கள். தாங்களும் சுகிக்கவேலார்.

121. பெண்குழந்தைகளுக்கு வித்தை பயிற்றுவது ஆவசிகமேயாயினும், நன்னடக்கையுள்ள உபாத்தியாயிகள் வித்தை சொல்லிக்கொடுக்கும் பாடசாலைகளுக்கே அவர்களை யனுப்பவேண்டுமேயன்றிப்புருஷர்கள் வாத்திகளாயிருக்கும்பாலிகாபாடசாலைகளுக்குஅனுப்புதல் அவ்வளவாய் உசிதமானதல்ல. உபாத்தியாயர்களாயிருக்கும் புருஷர்கள் எவ்வளவு உசிதவொழுக்கமுள்ளவர்களாயிருப்பினும், அவர்கள் ஓதுவிக்கும் வித்தையினால் உசிதமான பெண்ணியற்கைகள் குட்டிகளுக்குச் செவ்வையாய்ப் பிடிபடாது. அப்பொழுது எவ்வளவு வித்தைவந்திருந்தும் என்னபிரயோசனம்?. இஃதிப்படியிருக்க, யோக்கியர்களைப்போலப் பாசாங்கு செய்யும் மகாபுருஷர்களிடம் வித்தை பயிலுவதினால் பாலிகைகளின் கதியென்னவாகும்? ஐயோ! நமது தேசத்தில் ஸ்திரீகள் கல்வியுணர்ச்சி யில்லாதவர்களாவது பற்றி யல்லவா புருஷர்கள் உபாத்தியாயர்களாயிருக்கும் பாடசாலைகளுக்குப் பெண்குழந்தைகளை யனுப்பவேண்டி வந்திருக்கிறது! தாயே கலைமகளே! உன்னுடைய குழந்தைகளின்மேல் என் இவ்வளவு பராமுகமாய்த் தயையற்றிருக்கிறாய்?

ஒழுக்கம்.

122. குழந்தைகளை மிகவுஞ் செல்வமாய் வளர்க்கக்கூடாது. வளர்க்கும்பட்சத்தில் பெரியவர்களாகும்போது அவர்கள் கஷ்டங் களைப் பொறுக்கச்சக்தியற்றிருப்பார்கள். மேலும் அவர்களை அதி கமாய்ச்சீராட்டக்கூடாது. சீராட்டத்தினுல் பிள்ளைகள் பயபக்திக ள்கெட்டவர்களாய்ப் படிப்பொட்டாமல் கடைசியில் உப்புக்கல் லுக்கும் உதவாக்கரையாய்விடுவார்கள். ஆதலால் மனம்போனபடி வளரவிடாமல் பிள்ளைகளைத் தகுந்த அடக்கவணக்கங்களுக்குட்படு த்திக்கொண்டுவரவேண்டியது.

123. சிறுபிள்ளைத்தனத்திலேயே பிள்ளைகளுக்கு விநயபயங் களையும் கீழ்ப்படிவும் மரியாதையும் கற்பிக்கவேண்டியது. பாலி யத்தில் நாட்டிக்கொள்ளும் அப்பியாசங்கள் தவமுமல் விருத்தி யடையுமாதலின், நற்குணங்கள் பிடுபடுமாறும் துர்க்குணங்கள் தொலைந்துபோகுமாறும் தாய்தந்தையர்கள் தகுந்த சாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டியது. தாய்தந்தையர்களிடத்துப் பய பக்திகள்காட்டி அவர்கள் சொல்லிய வண்ணம் பிள்ளைகள் நடந்து கொள்வது மிகவும் ஆவசிகமானது. ஆதலால் அவர்களுக்கு எவ் வளவு அன்பு நிறைந்திருந்தபோதிலும் பயபக்திகளுடன்கூடியிரு க்கவேண்டியது. மேலும் பிள்ளைகள் விஷயமாய் எடுத்துக்கொள் ளும் சாக்கிரதைகளில், தாய்தந்தையர்களிருவரும் ஒற்றுமைப்பட் டிருக்கவேண்டியது. ஒருவர் செய்யுநன்று இரண்டாம்பேர் ஏன் றைக்கும் கெடுப்பதுகூடாது. தாய் குற்றங்கூறுகையில் தகப்பன் குறுக்குப்படுவதும், தகப்பன் குற்றங்கண்டபொழுது தாய் தடுக்க வருவதும் சரிப்படாது. அன்றியும் அவர்கள் பிள்ளைகளுக்கு அசா த்தியமான வேலைகளையாவது கீழ்ப்படியமுடியாக் கட்டளைகளையாவ து ஏற்பாடுசெய்து அந்தவண்ணம் அவர்கள் செய்யாவிடின் கீழ்ப் படி வில்லாமையாகப் பாவிப்பதுகூடாது.

124. பிள்ளைகளிடத்துத்தாய்தந்தையர்கள் மிகவும் அன்பு கூர்ந்திருக்கவேண்டியது. அன்பே பிள்ளைகளுக்கு அமிழ்தம். அன்பில்லாவிடின் அவர்கள் செவ்வையாய் வளரமாட்டார்கள். குற்றங்கள் செய்தபொழுது அன்புடனேயே அவர்களுக்கு நல் லொழுக்கத்தைப் போதிக்கவேண்டியது. கோபித்துக்கொண்ட

பொழுதும் அடம்பிடித்தபொழுதும் அவர்களை யன்புடனேயே மீட்கவேண்டியது. அன்பில்லாவிடின் பிள்ளைகளுடைய மனத் துக்குக் குதூகலமிருக்கமாட்டாது. இவ்வுலகத்தில் பிள்ளைகளு க்கு அன்பே எல்லாவற்றிலும் அதிகமான சவுக்கியம். முக்கிய மாய்த் தாயினுடைய அன்புக்குச் சமானமானது ஏதுமில்லை. தாய ன்பறியாத பிள்ளைகள், ஐயோ பாவம்! அவர்களைக் கருணாகரக்கட வுளே கண்டிருந்து கனிந்த மனத்துடன் இரங்கிக் கண்காணித்துக் காப்பாற்றவேண்டியது.

125. எத்தனைவேலைகளிருப்பினும் தகப்பனானவன் பிரதி தினமும் கொஞ்சகாலத்தைத் தன்னுடைய பிள்ளைகள் விஷயமாய்ச் செலுத்தவேண்டியது. அவ்வாறு செய்தாலே அவர்களுடைய புத்தியுக்திகளும் இயற்கைகளும் அறிந்துகொள்வதற்கும் அவர் களைச் சன்மார்க்கத்தில் நிறுத்துவதற்கும் அனுகூலமேற்படும். மேலும், தகப்பன் எவ்வளவு பெரியவனானபோதிலும், தன்னுடைய குழந்தைகளுடன் சற்றுநேரம் விளையாடிக்கொள்வது தன்னுடைய பெரியமனுஷத்தனத்திற்குக் குறைவாய் எண்ணக்கூடாது. குழந் தைகளின் விளையாட்டுகளிலும் விஷமங்களிலும் பிரவேசித்தபொ ழுதும், தகப்பனுடைய முதுகுமேலும் தோள்கள்மேலும் கழுத்து மேலும் கால்கள்மேலும் ஏறித்துவைக்கும்பொழுதும், தகப்பனுக் கும் பிள்ளைகளுக்குங்கூடப் பலே! என்னகொண்டாட்டம்! எவ் வளவு அன்பு!

126. சொல்லிய வண்ணம் சரியாய் நடந்துகொள்ளும்பொ ழுது குழந்தைகளுக்குப் பழங்கள் பணியாரங்கள் முதலியவற்றை யாவது துட்டுகளாவது வெகுமானமாய்க் கொடுக்கக் கூடாது. அவ்வித வெகுமானங்கள் கொடுப்பதினால் சொல்லியவார்த்தைகள் கேளாதிருப்பதற்கு அவர்களுக்கு இன்னுங்கொஞ்சம் தூண்டுகோ லாய் விடும். குழந்தைகள் நல்ல காரியங்களைச் செய்தபொழுது அவர்களைப்புன்சிரிப்புடன் நோக்கி மெச்சிக்கொண்டு சந்துஷ்டி யடைவதே அவர்களுக்குப் பெரிய வெகுமானம். அதனால் பிள் ளைகளுக்கு ஆனந்தம் பெருகுவதுபோல் வேறெதனாலும் உண்டாக மாட்டாது. தாய்தந்தையர்களின் புகழ்மொழிகள் பிள்ளைகளு க்கு அத்தியந்த மகிழ்வு. நல்லவேலைகளைச் செய்வதற்கு அவை தூண்டுவதுபோல மற்றேதொன்றும் செய்யமாட்டாது. புகழ்த்

தக்க வேலைகளைச்செய்யும்பொழுது பிள்ளைகளை ஒழியாமல் துதிப்பதுங் கூடாது.

127. பிள்ளைகள் சேட்டைகள் செய்யும்பொழுதும் சொன்னவார்த்தைகள் கேளாதபொழுதும், பூச்சாண்டிக்குப் போட்டுவிடுவேனென்றும், பூச்சாண்டிவருகிறுனென்றும், பைக்குள்போட்டுக்கொண்டுபோவானென்றும், இன்னும் இப்படிப்பலவிதப்பட்ட வார்த்தைகளினுல் அவர்களைப் பயமுறுத்துவது மிகவும் அவிவேகமானது. அப்படிச்செய்வதினுல் அவர்களுக்கு வாலிபத்திலேயே கோழைத்தனம் பிடிபட்டுப் பெரியவர்களானபோது தைரிய குணம் குறைவாயிருக்கும். அன்றியும், அவ்விதபயத்தினுல் ஒருவேளை அவர்களுடைய சரீரத்துக்குக்கூடத் தீங்கு நேரிடும். இராத்திரிவேளைகளில் சொப்பனததில பிதற்றிக்கொண்டு தூக்கத்தில் பயப்பட்டு அழுவதினுல ஆரோக்கியம் குலைந்துபோகும்.

128. பிள்ளைகளின்மேல் உறத்துச் சினந்துகொண்டு கடுமையான வார்த்தைகளைப்பேசக்கூடாது. அவை அவர்களுடைய நெஞ்சுகளில் நாராசங்கள்போலேறி வேதனை செய்யும். அவர்கள் குற்றஞ்செய்யினும், கோபித்துக்கொள்ளினும், குளிர்ந்தசொற்களினுல் மனமிளகப் புத்திகள் சொல்லி ஆதரவுப்படுத்தவேண்டியது. வாக்கண்டனம் செய்யும்பொழுதுகூட, கோபத்திற்குப்பதிலாய் விசனக் குறிகளைக்காட்டவேண்டியது. குற்றஞ் செய்தபொழுது அவர்களைத்தொடைமேல் உட்காரவைத்துக்கொண்டு, தமக்கு மிகவும் விசாரமாயிருக்கிறதென்றும், செவ்வையாய் நடந்து கொண்டால்எவ்வளவோ சந்தோஷமாயிருக்குமென்றும் சொல்லும்பட்சத்தில், அவர்கள் வெட்கப்பட்டவர்களாய் அன்புடன் தழுவிக்கொண்டு இனிமேல் இப்படித் தவறுசெய்யோமென்று கூறுவார்கள். ஒருமுறை குற்றத்தையொப்புக்கொண்டதன் மேல், எப்பொழுதும் அதையே யெடுத்துச்சொல்லிக்காட்டக்கூடாது. மேலும் பத்துக் குற்றத்துக்கு ஒன்றும் செய்யாமல் சும்மாவிருந்து பிற்பாடு ஒருதடவை பக்கென்று எரிந்துவிழக்கூடாது.

129. குழந்தைகளைப் பொய்சொல்லவிடக்கூடாது. அவர்கள் ஏதேனும் குற்றஞ்செய்தபொழுது அன்புடன்கேட்டு ஒப்புக்கொள்ளும்படிச் செய்யவேண்டியது. அவர்களைப் பயமுறுத்தியாவது கோபத்துடனுவது கேட்கும்பட்சத்தில், பொய்பேசுவ

தற்கு முகாந்தரமேற்படும். ஏதாவது வஸ்துவை யுடைத்துவிட்ட பொழுது, அவர்கள்மேல் சினந்துகொள்ளாமல் நல்வார்த்தைகளுடன் அவர்களுடைய குற்றத்தை யொப்புக்கொள்ளச் செய்ய வேண்டியது. அப்படி யொப்புக்கொண்ட தட்சணமே அவர்களை யன்புடன் தடவிக்கொடுத்து முத்தமிட்டு இனிமேல் சாக்கிரதையாயிருக்கும்படிப் போதிக்கவேண்டியது.

130. பிள்ளைகளின் சொற்களில் கண்ணியம்வைத்து அவர்கள் சொல்வது மெய்யென்று நம்புவது மிகவும் பிரசஸ்தமானது. அவ்வாறு நம்பிக்கைவைத்தால் அவர்கள் மெய்யே பேசிவந்து என்றைக்கும் மோசஞ்செய்யக் கருதாதிருப்பார்கள்.

131. பிள்ளைகள் ஒருவரோடொருவர் சண்டைசெய்யும்பொழுது அவர்களை நல்லவார்த்தைகளுடன் அமைதிப்படுத்திக் கலகம் கூடாதகாரியமென்றும், ஒருவரையொருவர் நேசிக்கவேண்டுமென்றும் சாந்தத்துடன் போதிக்கவேண்டியது. பிள்ளைகளின் சண்டைகளைத் தீர்க்குங்காலத்தில் தாய்தந்தையர்கள் பட்சபாதம் காட்டக்கூடாது. எல்லாரிடத்தும் சமானமான பிரேமைகாட்டி நியாயமாய்த் தீர்ப்புசெய்யவேண்டியது. ஒரு பிள்ளையினிடமதிகமாய்ப் பட்சங்காட்டியக்கால் மிகுந்த பிள்ளைகளுக்கு மனம்நொந்து கலகங்கள் அதிகரித்துவரும்.

132. தப்பிதங்கள் செய்தபொழுதுகூடப் பிள்ளைகளை யடிப்பது நல்லதல்ல. சாத்தியமானவரைக்கும் நல்லவார்த்தைகளையே பேசி நல்லவழிக்குக் கொண்டுவரவேண்டியது. தலைமேல் குட்டுவதும், செவிகளை முறுக்குவதும், தொடையைக் கிள்ளுவதும், இவைபோல்வனவும் மிகவும் ஆனிகரமானவை. அடிக்கிறேம் பாரென்று குழந்தைகளை யாதொரு காரணமுமில்லாமலே என்றைக்கும் அச்சுறுத்துவதுகூடாது.

133. தாய்தந்தையர்களைக்கண்டு பிள்ளைகள் கற்றுக்கொள்வார்களாதலால், அவர்கள் எல்லாவிஷயங்களிலும் கிரமமாய் நடந்துகொள்வது மிகவும் ஆவசிகமானது. ஆயிரம் நீதிகள் போதிப்பதைக்காட்டிலும் ஒருதரம்செய்துகாட்டுவது நலமுள்ளதாதலின், மெய்பேசுவது, துப்புரவாயிருப்பது, வைகறையில் துயிலொழிவது, இவைமுதலிய நற்குணங்கள் தாய்தந்தையர்களிடமிருந்தாலன்றிப் பிள்ளைகளுக்குப்பிடிபடாது.

134. பிள்ளைகளைக் கெட்டசகவாசஞ் செய்யவிடக்கூடாது. எதிராளியைச்கண்டு கற்றுக்கொள்ளுமியற்கை பிள்ளைகளுச்கு அதிகமாயிருக்குமாதலின், இந்தவிஷயமாய்த் தாய்தந்தையர்கள் தகுந்த சாக்கிரதையெடுத்துக்கொள்வது மிகவும் ஆவசிகமானது. மேலும் வேலைக்காரர்கள் மூலமாய்ப் பிள்ளைகளுக்கு அனேக துரப்பியாசங்கள் பிடிபடுகின்றன. ஆதலின், நல்லவர்களை அமர்த்திக்கொள்வது பிரதானமானது. திக்குவாயும், ஒன்றரைக்கண்ணுமுள்ளவர்களை நியமித்துக்கொள்ளக்கூடாது. எப்பொழுதும் அவ்விதமானவர்களிடத்திருப்பதினால் குழந்தைகளுக்குக்கூட அவ்விதக்குறைகள் உண்டாகக்கூடும். கொஞ்சம் வயது முதிர்ந்த பின்னர், பெண்பிள்ளைகளையும் ஆண்பிள்ளைகளையும் சேர்ந்துவிளையாடிக்கொள்ளவிடக்கூடாது. மேலும், அவர்களுக்கு அக்கிரமமான பரிசயத்தை இருக்கவிடலாகாது.

135. பிள்ளைகளெதிரில் என்றைக்கும் இரகசியங்கள் பேசிக்கொள்ளக்கூடாது. சொல்லிக்கொண்டால் அவர்கள் அவற்றை வெளிப்படுத்துவார்கள். மேலும் பிள்ளைகளெதிரில் வசவுவார்த்தைகளை யுச்சரிக்கக்கூடாது. வேலைக்காரர்கள்கூட அப்படிப்பட்ட சொற்களை யுச்சரிக்காத வண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டியது. பிள்ளைகளுக்குக் கெட்டவார்த்தைகளைச் சொல்லிக்கொடுத்து மற்றவர்களெதிரில் சொல்லச்செய்து கொண்டாடுவது எள்ளளவு நலமுள்ளதல்ல.

136. பிள்ளைகளுக்கு மோசபுத்தி கற்றுக் கொடுக்கக்கூடாது. மேலும் அவர்களையும் எப்பொழுதும் மோசஞ்செய்யக்கூடாது. அவர்களுடன் சொல்லிய பேச்சை யான்றும் தவறக்கூடாது. தவறும்பட்சத்தில் அவர்கள் மறுபடியும் நம்மை நம்பவொண்ணார்கள். ஆதலால் ஏதாவது கொணர்ந்து கொடுப்போமென்றாவது எவ்விடத்திற்காவது அழைத்துக்கொண்டு போவோமென்றாவது மற்றெந்த விஷயத்தைக்குறித்தாயினும் அவர்களுடன் வெறும்வார்த்தைகள் சொல்லக்கூடாது. அவ்விதப்பேச்சுகளை அவர்கள் மறக்கமாட்டார்களாதலால் சொல்லியவண்ணஞ் செய்வித்தல் முக்கியமானது.

137. உடன்பிறந்தவர்களையாவது, தோழப்பிள்ளைகளையாவது, தொண்டுகளையாவது, ஏனையோர்களையாவது, அடிக்கடியும்

வருத்தப்படுத்திக்கொண்டு சிலகுழந்தைகள் முரட்டுக்குணம் பொருந்தியவர்களாயிருப்பார்கள். இதை ஆவசிகம் ஒழித்துவிடவேண்டியது. இவ்வியற்கை முற்றிவருமாயின் பெரியவர்களானபொழுது தயாளுத்தனமற்று ஈர இரக்கமில்லாதவர்களும், குரூரச்சுபாவமுள்ளவர்களுமாய் அனேகவிதமான இடையூறுகளுக் காளாவார்கள். மேலும் தோழக்குழந்தைகளை அநியாயம்பண்ணி அவர்களுடையபொருள்களை அக்கிரமமாய் அபகரித்துக்கொள்ளவிடக்கூடாது. செட்டு சில்லறைக்கெல்லாம் சினந்துகொள்வது பிள்ளைகளுக்குப் பழக்கப்படுத்தக்கூடாது. இரங்கிய இளநெஞ்சுடனும், பொறுமையுடனும் இத்துர்க்குணத்தைப் போக்கடிக்கவேண்டியது.

138. கேட்டபேச்சுக்கு உத்தரவுகொடுக்காமல் ஊமைகளைப்போல இருக்கும் இயற்கையைப் பிள்ளைகளிடத்துப் பிறப்பிக்கக்கூடாது. குழந்தைகள் விநயங்கெட்டு வாய்க்குவந்தபடியெல்லாம் வதறுவதும்கூடாது. பெரியவர்களுடைய நடவடிக்கைகளையும் வழிகளையும் அநுசரிப்பதும்தகாது. நய, பய, விநயங்கள் இசைந்தமட்டும் பொருந்தியிருந்து, நாலுபேர் நடுவில் பதமையாய் நடந்துகொள்ளும் பிள்ளைகள், பெற்றவர்களுடைய இருதயக்கட்டுகளைப் பின்னிக்கொண்டு அபரிமிதமான ஆனந்தத்தை யுண்டுபண்ணுவார்கள்.

139. பிள்ளைகள் உலகவறிவு பெறவேண்டியவர்களாதலின், புதுப்பொருள்களைக்கண்டபொழுதும் ஏதேனும் தெரியாதவிஷயம் காணப்பட்டபொழுதும் திரும்பித்திரும்பி வினவிக்கேட்பார்கள். அப்பொழுது அவர்கள்மேல் கசிந்துகொள்ளாமல் அவர்களுக்கு அச்சங்கதிகளைச் செவ்வையாய்த் தெரியப்படுத்தவேண்டியது. அவை அவர்களுக்குச் சொல்லக்கூடாத விஷயங்களாயின், சொல்லத்தகாதென்று தெளிவுபடத் தெரியப்படுத்தவேண்டியது.

140. தங்களுடைய விளையாட்டுசசாமான்கள், பொம்மைகள் முதலியவற்றைத் தாமேசாக்கிரதையாய்க் காப்பாற்றி ஒழுங்காய் வைத்துக்கொள்ளும்படிப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டியது. சோம்பல், அசிரத்தை, ஒழுங்குபாடில்லாமல் பொருள்களை வழிக்குக் குறுக்கேபோடல், இவைபோன்ற கெடுவழக்கங்களை மாற்றவேண்டியது. கிரமமாய்ப் பொருள்களை யிட்

டுக்கொள்ளும் வழக்கம் பெரியவர்களான பிறகு மிகவும் பிரயோசனப்படும்.

141. சிலர் அவிவேகிகள் பிள்ளைகளை வெறுமெனப்போராட்டங்கொடுத்து அழமூட்டுகிருர்கள். அவ்வாறு செய்வது அவர்களுக்கழகென்று சொல்லுவார்கள். ஆயினும் அது மிகவும்கெட்ட வழக்கம். பாவம்! பச்சைப் பிள்ளைகளை அழமூட்டுவது, ஐயோ! அது எவ்வளவு குரூரமானது. அவர்களுடைய அழுகை, அந்தோ கோ! அது எவ்வளவு துக்ககரமானது! அதனுல் சந்தோஷமெப்படிப்பிறக்கும்? அதைப் பிள்ளைகளைப் பெற்றவர்கள்யான்றும் காதிலேற்றமனந்தாளார்.

142. சிரிப்பு பிள்ளைகளுக்குப் பரமானந்தகரமானது. நகையினுல் அவர்களுடைய மார்பு அகலும், மூச்சுப்பைகள் பலப்படும். இரத்தம் செவ்வையாய் ஓடி இருதயத்தைச் சந்தோஷத்துடன் பொங்கச்செய்யும். சீரணசக்தி அதிகரிக்கும். ஆரோக்கியத்திற்கும் தேகபலத்திற்கும் சிரிப்பு தேவாமிர்தத்திற்கொப்பானது. ஆதலின் பிள்ளைகள் சிரித்துக்கொண்டிருக்கும்பொழுது அவர்கள்மேல் கோபித்துக்கொள்ளக்கூடாது. இவ்வளவேயல்லாமல், கேட்பவர்களுக்குக்கூடப் பிள்ளைகளின் சிரிப்பு விசாரங்களைப் பறக்கடித்துச் சந்தோஷத்தைப் பிறப்பிக்கும். பிள்ளைகளின் சிரிப்பு—ஆகா! அதன் கலகலத்தொனி, அதன் இன்னலைகள், அதன் இயற்கையியல்பு, அதன் உல்லாசம், அதன் உற்சாகம், அதன் மிருதுவும் இனிமையும்! அதனைக்காட்டிலும் மனச்சந்துஷ்டிகரமாகவிருக்கும் இசையொலி இவ்வுலகில் பிறிதேதேனுமுளதோ? இல்லை

வியாதிகள், இடையூறுகள், சிகிற்சைகள்.

143. இவ்வதிகாரத்தில் இதுவரையிற் சொல்லியவண்ணம் பிள்ளைகளைச் சாக்கிரதையாய்ப் பாதுகாத்துவந்தால் அவர்களுக்கெந்தவிதமான வியாதிகளும் நேரிடமாட்டா. ஒருவேளை சம்பவிக்கும்பட்சத்தில், தொடக்கத்திலேயே தகுந்த சிகிற்சைகள் செய்து தவிர்க்கவேண்டுமேயன்றி அவற்றை ஏறவிடக்கூடாது. ஆரம்பத்தில் அற்ப சிகிற்சையினுல் குணப்படுத்தக்கூடிய வியாதிகள் பலத்துப்போகவிடப்படுமாயின் பெரிய பெரிய மருந்துகளுக்

கும் இல்குவில் கீழ்ப்படியாமற்போய்விடும். சிற்சில சொற்ப வியாதிகளுக்கு இதனடியில் சிகிற்சைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. பெரிய வியாதிகள் நேரிடுமாயின் தகுந்த வைத்தியனைக் கொண்டு அவிழ்தம் தருவிக்கவேண்டியது. ஒன்றையும் ஒளிக்காமல் எல்லா அமிசங்களையும் சம்பூரணமாய் வைத்தியனுக்குத் தெரியப்படுத்தவேண்டியது.

144. குழந்தைகளுக்குச் சம்பவிக்கும் வியாதிகளில் வைசூரி, யென்றால், பெரியம்மை மிகவும் பிராணசங்கடமானது. ஆயினும் தெய்வானுக்கிரகத்தினால் அம்மைகுத்து முபாயம் கண்டுபிடிக்கப்பட்டது முதல் இப்பிணியினால் பிராணாபத்து நேரிடுவது மிகவும் குறைந்துபோய்விட்டது. சிலர் மூடசனங்கள் அம்மைகுத்துவதினால் உண்டாகும் உபயோகத்தைத் தெரிந்துகொள்ளக்கூடாதவர்களாய்த் தங்களுடைய பிள்ளைகளை வைசூரிக்கிரையாக்கிவிடுகிறார்கள். அம்மைகுத்துவிப்பதினால் எவ்வளவு சிறுபிள்ளைக்காயினும் லவலேசமும் அபாயமில்லை. பெரியம்மைவராமல் தடுப்பதற்கு இதுவே சரியானசாதனம். அம்மைகுத்தின பின்னர் ஒருவேளை அம்மைவார்த்தபோதிலும் மிகவும் சொற்பமாயிருக்கும். ஆதலில், குழந்தைகளுக்குத் தடையின்றி அம்மைகுத்துவிக்கவேண்டியது. செவ்வையாய் அம்மைபலிக்காதபட்சத்தில் இன்னுமோர்தடவை பால்குத்தவேண்டியது. செவ்வையாய்ப் பலித்தாலுங்கூட, ஏழுவருஷங்களுக் கோர்முறை திரும்பவும் பால்குத்திக்கொள்ளுதல் நலமென்று சொல்லுகிறார்கள். வாழ்நாளில் குறைந்தபட்சம் இரண்டுதரமாவது பால்கட்டுவித்துக்கொள்ளவேண்டியது. கட்டி, சிரங்குகள் எழும்பியிருக்கும்பொழுதும், பிணியினால் வருத்தப்படுத்தப்பட்டபொழுதும் குழந்தைகளுக்குப் பால்கட்டுவிப்பதுகூடாது.

145. பிள்ளைகளுக்கு 7 - 8 மாதப்பிராயம் வந்தபிற்பாடு பல் முளைப்பதற்கு ஆரம்பமாகும். சிலருக்கு 1 - $1\frac{1}{2}$ வருஷங்கள் சென்றாலன்றிப் பல்முளைக்கத் தொடங்குவதில்லை. இளம்பற்களின் தொகை இருபது. இவை 7 - 8 வருஷங்கள் வயதுவரைக்கும் நின்றிருந்து பிறகு ஒன்றொன்றாய்க் கழன்று உதிர்ந்துபோக நல்ல பற்கள் முளைக்கும். இளம்பற்கள் முளைக்கும் தருணமானது குழந்தைகளுக்கு மிகவும் அபாயகரமானது. அப்பொழுது அவர்

களுக்குச் சாதாரணமாய் இரேசனங்களும், கட்டிகளும், சுரமும், வலிப்பும்காணும். ஆதலால், அவர்களுடைய தேகசவுக்கியத்தைக்குறித்து மிகவும் சாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டியது. பச்சைப் பிள்ளைகளுக்கு மரக்கிலுகிலுப்பைகள் முதலிய கெட்டி வஸ்துக்களை விளையாடிக்கொள்வதற்குக் கொடுக்கக்கூடாது. அவற்றைவாயில் அடிக்கடிக் கௌவிக்கொள்வதினால் பல்லீறுகள் கெட்டிப்பட்டுப்போய்ப் பற்கள் எளிதாய் முளைப்பதற்கு முடியாமல் வேதனையுண்டாகும். குழந்தைகள் தம்முடைய பெருவிரலைச் சப்பும்வாடிக்கை நலமுள்ளதென்று நம்பவேண்டும். அதினால் பல்லீறுகள் மெதுவடைந்து பற்கள் எளிதாய் முளைக்கும். மேலும், வாயில் உமிழ்நீர் ஊறி ஆகாரத்தைச் சீக்கிரமாய்ச் சீரணிக்கும் சக்தியுண்டாகும்.

146. இளம்பருவத்தில் குழந்தைகளுக்கு மலபந்த மில்லாது செவ்வையாய் மலசுத்தியாகுமாறு தாய்கள் அடிக்கடிப்பரிசோதித்துப்பார்த்துக்கொள்ளவேண்டியது. மலமானது வெண்மையாகவாவது, சாம்பல்வர்ணமாயாவது, கொதகொத வென்றாவது, பசையாகவாவது, துர்வாசனையுள்ளதாகவாவது இருக்குமிடத்தில், குழந்தைக்கு அசீரணமுண்டாயிருப்பதாக அனுமானித்துச், கொஞ்சம் ஆமணக்கெண்ணெய் பேதிக்குக்கொடுக்கவேண்டியது. மேலும் அவர்களுடைய ஆகாரத்தைக்குறித்தும், முலைகொடுக்கும் தாய்கள் தங்களுடைய ஆகாரத்தைக்குறித்தும், ஏற்றகவலையெடுத்துக்கொள்ளவேண்டியது. அசீரண பதார்த்தங்களைப் புசிக்கக்கூடாது. சருக்கரை, மிடாய், மாப்பணியாரம், நன்றாய்ப்பழுக்காத பழங்கள், இவை முதலியவற்றைப் புசிக்கக்கூடாது. அசீரணத்தை நிவாரணஞ்செய்யாமல் கருத்தழிந்திருப்பின், அதிசாரமும், கடைசியில் இரத்தபேதியுமாய் முடிந்துவிடும்.

147. பலகாலும் மூக்குச்சொரிதல், பற்களைக்கடித்தல், தூக்கத்தில் உலுக்கிவிழுதல், வயிற்றுவலியினால் அடிக்கடிச் சங்கடப்படுதல், வாய்நாறுதல், இக்குறிப்புகள் பிள்ளைகளிடத்துக்காணப்படுமாயின் சிறுபுழுக்களும், நாக்குப்பூச்சிகளும் இருப்பதாகக்கருதிக்கொள்ளவேண்டியது. இரவில் படுத்துக்கொள்ளும்பொழுது 1-2 நெல்மணியிடையுள்ள "சாண்டோனீன்" என்னும் நாக்குப்பூச்சிமருந்தைச் சாக்கரையுடன் கலந்துகொடுத்து மறுநாளுதயத்

தில் கொஞ்சம் ஆமணக்கெண்ணெய் போட்டவேண்டியது. நாக்குப்புழுக்களிருக்கின்றனவென்று தெளிவாய்த் தெரியாதபட்சத்தில் இம்மருந்தைக் கொடுக்கக்கூடாது.

148. பிள்ளைகளுக்குச் சம்பவிக்கும் வியாதிகளில் வலிப்பு வாதமானது மிகவும்கெட்டது. இதையே சிறுபிள்ளைநோயென்றும், சன்னியென்றும், மாந்தியமென்றும்சொல்லுவார்கள். ஆகார விஷயமாய் அசிரத்தை செய்வதினால் அசீரணமுண்டாகி இந்தப் பிணி நேரிடும். இளம்பல் முளைக்கும் தருணத்தில்கூட இந்நோய் உண்டாவதுண்டு. உடனே சிகிற்சைசெய்யும்பட்சத்தில் இதனால் சாதாரணமாய்ப் பிராணபயமில்லை. வேறுபாயங்கள் தெரியாது நம்மவர்கள் இந்நோய்கண்டபொழுது அடிக்கடிப் பிள்ளைகளின் நெற்றியில சுருட்டுத்தீ, தீமஞ்சள் முதலியவற்றினால் சூடுபோடுகிறார்கள். "ஸ்மெல்லிங் ஸால்ட்" என்றால் நவச்சாரம்,—கிட்டவிருக்குமானால் அதைமோப்பங்காட்டித் திரும்பவும் அறிவுமீளச் செய்யலாம். இரண்டு பொட்டுகள் "உடுகலாம்" கண்ணில் சொட்டுவதினால்கூட அறிவுமீளும். ஈரவெங்காயத்தைமென்று மூக்கிலூதுவதினால்கூட உணர்ச்சிதிரும்பும். இழுப்புவலிகண்டபொழுது குழந்தையின் முகத்தின்மேலும் மார்புமீதும் குளிர்நீர் அடித்து, ஒருதுணியைத் தண்ணீரில் நனைத்து 10-12 தடவைகள் ஒத்திடங்கொடுக்கவேண்டியது. அன்றியும் வெந்நீரில் கால் மணிநேரம் பிள்ளையை நிறுத்திவைக்கவேண்டியது. பிற்பாடு ஆமணக்கெண்ணெய் ஊற்றி, அசீரணத்தை நிவர்த்திசெய்யவேண்டியது. இவ்வாறு செய்யச்சொல்லிக் கனவைத்தியர்கள் போதிக்கிறார்கள்.

149. சலதோஷம்—இதற்குப் பால்மேல்கிளம்பி வரும் ஆவியை மூச்சுவாங்குவது நல்லது. நல்ல சீரகத்தை மோந்துபார்பதும், மிளகை ஊசியில் கோர்த்துப் பொசுக்கிப் புகையை மோப்பம் பார்ப்பதுங் கூட நல்லது. * * தடிமன்—இதற்குக்கொஞ்சம் உப்பை வெந்நீரில் கரைத்து அந்நீரை மூக்கினால் உறிஞ்சவேண்டியது. * * தலைவலி—"உடுகலாம்" போட்டுத்தேய்ப்பதினால் சமனப்படும். * * குரல் கம்மிப்போதல்—கழுத்தைச் சுற்றிலும் வெந்நீருடன் ஒத்திடங்கொடுப்பதும் வெந்நீரை யடிக்கடிக்கொப்பளிப்பதும் நல்லது. சிவக்கக் காயும் தணல்மேல் சா

றித்துப்புதலினால் சூடுண்டாகிக் கழுத்துவலி குறையும். * * தொண்டையண்டையிருக்கும் நாடிகளின் வீக்கம்—இதனால் தூக்கத்தில் குறட்டையுண்டாகுமென்று இதன் முன்னேயே சொல்லியிருக்கிறோம். வீக்கத்தின்மேல், ஒரு இறகினால் "டிஞ்சர் அயோடின்" என்னும் தைலத்தைத்தடவிக் குளிர்காற்றுபடாதபடி பிளானல் துணியைக் கழுத்தைச் சூழச்சுற்றிக் கட்டவேண்டியது. * * பொன்னுக்கு வீங்கி—இதற்குக் கசகசா வித்துறைகளைக் கஷாயம் காய்ச்சி பிளானெல் துணியுடன் தினத்திற்கு 3-4 விசை ஒத்திடம் போடவேண்டியது. காற்றுபடாத வண்ணம் கழுத்தைச்சூழப்பிளானெல் துணியைச்சுற்றவேண்டியது. கஞ்சி, பால், குழையக்கொதித்த சோறு, இவற்றை மாத்திரம் சாப்பிடவேண்டியது. கொஞ்சம் ஆமணக்க நெய்யூற்றி மலசுத்தியுண்டாக்கவேண்டியது. * * உண்ணாக்கு நீண்டிருப்பது—இதற்கு "போடாஷ் கிளோரேட்" என்னும் மருந்தாவது "டானிக் ஆஸிட்" என்னுமருந்தாவது நீரில் சொற்பமாய்க்கரைத்து அடிக்கடிக் கொப்பளிக்கவேண்டியது. * * வாய்பூத்துப்போவது—சொஞ்சம் வெண்காரம் தேனில்கலந்து வாயில்பூத்தவிடத்தின்மேல் தடவவேண்டியது. * * கண்வலி—வெந்நீருடன் கண்களைச் சுத்தமாய்க் கழுவவேண்டியது. நீரில் கொஞ்சம் படிக்காரம்கரைத்து அந்த நீர்ச்சொட்டுகளைக் கண்களில் தினத்துக்கு மூன்று நாலு தடவைகள்போடவேண்டியது. வெளிச்சம் பார்ப்பதைக் குறைக்கவேண்டியது. * * காதுவலி—வெந்நீரோடாவது சூட்டுப்போடாவது காதுசூழ ஒத்திடம்போடவேண்டியது. உள்ளிப்பூண்டை யரைத்து எண்ணெயில் கொதிக்கவிட்டுக் காதைசுற்றிலும் பற்றும்போடலாம். நகச்சூடான வெந்நீர்கொண்டு பீர்ச்சாங்குழலடித்துச் செவியைப் பரிசுத்தப்படுத்தலாம். * * வயிற்றுவலி—வெந்நீரினாலாவது, சுடுமுப்பினாலாவது, சுடுதவிட்டினாலாவது அடிவயிற்றின்மேல் ஒத்திடம்போடவேண்டியது. இரண்டு மூன்று சொட்டுகள் "பெப்பர்மிண்ட் அரக்கு" நீரில்கலக்கிக் குடிப்பிப்பதனால் சமனப்படும். * * பொடுகு—புளித்தமோரைப்பொடுகின்மேல் செவ்வையாய்த்தேய்க்கவேண்டியது. * * படர்தாமரை—"டிஞ்சர் அயோடின்" என்னும் தைலத்தை யொருசிறகினால் தடவவேண்டியது. கொஞ்சம் துரிசு அல்லது மயிற்றுத்துத்தத்தை நீரில்கரைத்து அந்த நீரைத் தேய்ப்பதும் நலமானது. * * பாலுண்ணிக்காய்—இவற்றின்மேல்

"நைட்ரிக் ஆஸிட்" என்றால் வெடியுப்பு திராவகத்தை ஒருசிறு குச்சிகொண்டு தடவவேண்டியது. மயிற்றுத்துத்தக்கல்லொன்றை நீரில் நனைத்துப் பாலுண்ணிமேல் தேய்ப்பதும் நல்லது. இவ்வாறு செய்யுமபட்சத்தில் பத்துநாளுக்குள் பாலுண்ணிக்காய்கள் உதிர்ந்துபோய்விடும். வெடியுப்புத் திராவகத்தையாவது மயிற்றுத்துத்தத்தையாவது பாலுண்ணிக்காயைச் சுற்றியிருக்கும் சருமத்தின்மேல் படவிடக்கூடாது.

150. கால்சுளுக்கு—இதற்குத் தினத்திற்கு இரண்டு மூன்று தடவை வெந்நீரொத்திடம் போடவேண்டும். நடக்கக்கூடாது. நடந்தால் சுளுக்கு சொஸ்தமாவது கஷ்டம். சுளுக்குகையில் அடிபட்டுக் கால்வீங்கும்பட்சத்தில், தட்சணமே தண்ணீரில் கால்மணி நேரம் வைக்கவேண்டியது. * * தலைத்திமிர்—கீழேவிழுந்து அடிபடுவதினால் தலைத்திமிரேறியபொழுது, முகத்தின்மேல் தண்ணீர் தெளித்து ஈரத்துணியுடன் ஒத்திடம் போடவேண்டியது. * * கண்ணாடிச்சுக்கல், குண்டூசி முதலியவற்றை விழுங்கினக்கால் பேதிக்கு மருந்துகொடுக்கக்கூடாது. கொடுத்தால் அவை உட்டோலில் கீறிப்புதைந்துபோய் மகாப்பிரமாதமாய்விடும். கெட்டியான ஆகாரத்தைக்கொடுத்து அதிகமாய் நீர்குடிக்கவிடாமல்வைத்தால் அதனுடன்கூடி வெளிக்குப்போய்விடும். * * மூக்கிலே விதையாவது மணியாவது ஏறிப்போய்விட்டால் கொஞ்சம்பொடியைமோப்பங்காட்டினால், தும்மல்வந்து அதைவெளியில் தள்ளிவிடும். வெளிப்படாதபட்சத்தில் வைத்தியனுக்குக்காட்டவேண்டியது. * * செவியில் ஏதாவது விதையாவது மணியாவது விழுந்தபட்சத்தில், காதுகீழாயிருக்கும்படித் தலையை வளைத்துத், தலைமேல் இரண்டு மூன்று குலுக்குகள் குலுக்கவேண்டும். அப்படிச் செய்தும் வெளியில் விழாதபட்சத்தில், குச்சியினால் செவியில் குடையக்கூடாது. குடைந்தால் இன்னுமதிகமாய் உள்ளே போய்விடும். ஆதலால் காது கீழேயிருக்கும்படி வளைத்து, வெதுவெதுப்பான நீருடன் பீர்ச்சாங்குழலடித்தால், அந்த நீருடனேகூட மணியாவது விதையாவது அடித்துக்கொண்டுவந்துவிடும். * * காதில் ஈயாவது, எறும்பாவது, புழுவாவது நுழைந்தபொழுது கொஞ்சம் எண்ணெயாவது நீராவது வெதுவெதுப்பாய்க்காய்ச்சி உள்ளேயூற்றினால், மூச்சுவிடமுடியாமல் இறந்து அதனுடன்

அடித்துக்கொண்டுவந்துவிடும். * * உடல் எரிந்துபோவது—காற்றுப்படாமல் தட்சணமே எண்ணெய் தடவி, மேலே அரிசிமாவு தடவிக்கட்டுசட்டவேண்டியது. வெந்நீரில் தினதினமும் நனைத்து வைப்பதினால் உபாதிகுறைவாயிருக்குமென்றும், சீக்கிரமாய்ப் புதுத்தோல்கூடிவருமென்றும் சொல்லுகிறார்கள். * * கட்டிக்கொண்டிருக்கும் துணிக்கு விளக்காவது தணல்சுவாலையாவது பட்டெரியும்பட்சத்தில், விழுந்தடித்தோடாமல் கீழேவிழுந்து புரண்டால் எரிவு தணிந்துபோய்விடும். ஓடும்பட்சத்தில் காற்றுவீசி எரிவு அதிகமாய்விடும். உடம்பைச்சுற்றிலும் தடிப்பான துணியாவது, சமக்காளமாவது, திவாசாவது சுற்றித்தேய்ப்பதினால்கூட சுவாலைகள் ஆறிப்போய்விடும். அருகாமையில் நீரிருக்குமானால், மேலே கொட்டிவிடவேண்டியது. * * விரல் அறுபட்டுப்போனால் தட்சணமே யொருபீற்றற்றுணியை நனைத்துச்சுற்றி நீரூற்றவேண் யது. வெண்சருக்கரையைக் காயத்தின்மேல் வைப்பதினால்கூ இரத்தவூற்றம் தடைப்படும். * * நாய்கடித்தபொழுது, கடிமே பாகலிலைச்சாற்றைப் பிழிந்து பழையகாசுவைத்துக் கட்டவே டியது. பிற்பாடு மாக்கட்டுகெட்டவேண்டியது. வெறிநாய்கடி பொழுது இரத்தம் ஓடவிடாமல் விரலினால் அழுத்திப்பிடித்து கடிக்குள் சூழவும், "ஸில்வர் நைட்ரேட்" என்னும் மருந்தை மூக கினால் தொடவேண்டியது. அப்படிப் பரிசிப்பதினால் புண்வளராமற்போவதேயன்றி, விஷங்கூட முறிந்துபோய்விடும். இம்மருந்து கிடைக்காதபட்சத்தில், கடியில்சூழவும் சிவந்தகொள்ளியின் நுனியினால் மேலோடு தொடவேண்டியது. * * தேள்கொட்டியவிடத்துப், படிக்காரம் கொணர்ந்து விளக்குத்தீயிலாவது த தீயிலாவது, புஸபுஸவென்று பொங்கும்படியாய்க்காய்ச்சிச், கொட்டியவிடத்தில் கெட்டியாய் ஒட்டவேண்டியது. இப்படி இரண்டு மூன்றுவிசைசெய்தால், வலிதீரும்.

3/10/97
0430 Am

மூன்றாம் அதிகாரம்.

ஆயுள்விருத்தி மர்மங்கள்.

151. அனைவருக்கும் பிராணனானது தித்திப்பாயிருக்கும். எவ்வளவு காலம் பிழைத்திருந்தாலும், எத்தனை சுகங்களை யனுபவித்தாலும், இன்னும் பிழைத்திருக்கவேண்டுமென்ற ஆவலே அதிகமாயிருக்கும். எத்தனை கஷ்டங்கள் பிராப்தியானாலும், எவ்விதத் துன்பங்களுக்காளாயிருந்தாலும், எவ்வளவு தரித்திர நிலைமையிலிருந்தாலும், எத்தனை வியாதிகள் வருத்திக்கொண்டிருந்தாலும், பிராணன்மேலாசை நீங்காது. மானம் போனாலும் பிராணன் மேலாசை போகாது. பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள் கூடக், கடைசியில் கிரகசாரவசத்தினால் சிறைச்சாலைக்குப் பாலாளர்களாகியும், உயிர்விடுவதற்கு மன மொப்பாதவர்களாயத் திரும்பவும் தம்மவர்களுடன் கூடிச் சுகிக்க வேண்டுமென்றெண்ணி, விடுதலை காலத்தை யெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். புத்திப்பிரமை பிடித்தாலொழிய மனிதர்கள் தற்கொலைக் குடன்படார்கள். சமஸ்த சுகங்களையும் அனுபவித்துக்கொண்டு எல்லாவிதமான சந்தோஷமும் கிடைத்திருந்து, வைராக்கியமேலிட்டுத் தூண்டுவதினால் இப்பிறவி மீது வெறுப்புண்டாகிப் பிராணத்தியாகஞ் செய்து கொண்ட பரம புருஷர்கள் மிகவும் அரிதாயிருக்கிறார்கள்.

152. இவ்வளவு தித்திப்பாகிய பிராணத்தைச் சிரகாலம் இச்சரீரத்தில் நிறுத்திவைக்க வேண்டுமென்றும், மரணமில்லாமலே செய்துகொள்ள வேண்டுமென்றும், அனேகர் படாதபாடுகளும் பட்டுப், பற்பங்கள், மூலிகைகள், சஞ்சீவிகள் முதலிய சிவாமிழ்தங்களைக் கண்டுபிடிப்பதற்காக முயற்சிசெய்து வந்தார்களாயினும், அப்படிப்பட்டவையெங்கும் காணப்படவில்லை. ஆலோசித்துப்பார்க்குமிடத்துப் பிறந்தது முதல் சரீர ஆரோக்கியத்தைக் கருத்துடன் [illegible] க்கொண்டு அதன் விஷயமாய்த் தகுந்த சாத் [illegible] ாள்வதே தீர்க்காயுளுக்கு ஒரே வழியா [illegible] தலின் எவ்வெந்தக்காரியங்களினால் ஆ

யுட் சீணத்துக்குக் காரணங்கள் ஏற்படுமோ, எப்படிப்பட்டவை ஆயுள் விருத்திக்குச் சாதனங்களாயிருக்குமோ தெரிந்திருப்பது மிகவும் உபயோககரமானது.

153. இரண்டாமதிகாரத்தில்சொல்லப்பட்டபடிப், பாலியத்தில் தகுந்த சாக்கிரதையுடன் வளர்க்கப்படும்பட்சத்தில், தீர்க்காயுளுக்கு மார்க்கமேற்படும். வெகு சுகுமாரமாய் வளர்வது அற்பாயுளுக்குக் காரணமாம். அப்படி வளர்வதினால் சரீரமும் மனமும் சீக்கிரமாய் முதுமைப்பட்டு, வயது முதிர்வதிற்கு முன்னரே விருத்தாப்பியம் வந்து சேர்ந்து அகால மரணம் உண்டாக்கும்.

154. தீர்க்காயுளுக்குப் பரிசுத்தம் ஆவசிகமானது. சரீரத்தையும், வஸ்திரங்களையும், வீட்டையும் மற்றெல்லாவற்றினையும் பரிசுத்தமாய் வைத்திராத பட்சத்தில் வியாதிகள் தவறாமற் பிறக்கும். ஆரோக்கியத்துக்கு நித்திய ஸ்நானம் அத்தியந்த ஆவசிகம். அப்போதப்போது சமுத்திர ஸ்நானம் செய்வதினால் சரீரத்துக்கு உறுதி யுண்டாகும்.

155. ஆகாரத்தை வேளை தவறாமல் புசிப்பதும், போசன சமயத்தில் எவ்வித விசாரமும் மனத்தினில் வைத்துக்கொள்ளாமல் உல்லாசமாயிருப்பதும், மிதமாயும், அமைதியுடனும் புசிப்பதும், இராத்திரியில் இலகு போசனஞ் செய்வதும்—இவையெல்லாம் தீர்க்காயுள் பெறும் வழிகள். சாப்பாட்டுராமத்தனத்தினால் சீரணசக்தி குன்றி ஆயுட் சீணம் லபிக்கும். மச்ச மாமிசங்களைப் புசிப்பவர்களைக்காட்டிலும் காய்கறிகளைத் தின்பவர்கள் அதிககாலம் சீவித்திருப்பார்களென்று சிலர் பெரு வைத்தியர்கள் துணிவுற்றிருக்கிறார்கள். குடியினால் ஆயுள் குறைவுற்றுப்போகும். பிராந்திபுட்டித் தோழர்காள்! இதனுண்மையை மனத்தில் நிறுத்துங்கள்!

156. தீர்க்காயுளுக்கு நல்ல காற்று மிக ஆவசிகமானது. வீட்டிலுள்ள வாயுவு பரிசுத்தமாக விருக்கவேண்டும். முக்கியமாய்ப் பள்ளியறை மிகவும் அகன்றதாகவும் பரிசுத்த வாயுவின் வீச்சுள்ளதாகவும் இருக்கவேண்டியது. [illegible]பெரிய பெரிய பட்டணங்களில் வீசும் வாயுவைக்காட்டிலும் ந[illegible] புறங்களில் வீசும் வாயு ஆரோக்கியகரமாகவும் [illegible]மாகவும் இருக்கும்.

157. தீர்க்காயுளுக்குத் தேகப்பழக்கம் கூட மிக ஆவசிகமானது. எத்தனை வயதுவந்தபோதிலும் சிறுகவோ பெருகவோ சரீரப்பயிற்சி யில்லாவிடின் ஆரோக்கியம் செவ்வையாய் இருக்கமாட்டாது. நடப்பது, குதிரைச்சவாரி செய்வது, பந்தாடுவது, மண்வெட்டுவது, விறகு பிளப்பது, வேட்டையாடுவது, இவை முதலிய சரீர சாதகங்களி லேதேனு மொன்று இருந்தாலே ஆகாரம் நன்ருய்ச் சீரணமாகிச் சரீரத்துக்கு வலிமையுண்டாகும். எப்பொழுது கண்டாலும் வீட்டிலேயே சாய்வு நாற்காலிகளின் மேலும், பட்டு சோபாக்களின் மேலும், ஹம்ஸ தூலிகா தற்பங்களின் மேலும் படுத்திருந்து, வீடுவிட்டு வெளிப்படும்பொழுது குதிரை வண்டிகளின் மேலேயே புறப்பட்டு வரும் தனவான்களுக்குத் தொப்பைகள் வளர்ந்துபோய் வியாதிகள் மேலிட்டுவரும்.

158. தீர்க்காயுளை அபேட்சிக்குமவர்கள் நித்திரை விஷயமாய்த் தகுந்த சாக்கிரதை மேற்கொண்டிருப்பது மிகவும் முக்கியமானது. விழித்துக்கொண்டிருக்குங் காலத்தில் சீவசக்தி மிகமாய்ச் செலவிடப்படுமாதலின், அது மறுபடியுங் கூடிவருவதற்கும், அவயவங்களுக்குக் களைதீர்ப்புண்டாவதற்கும் நித்திரை மிக ஆவசிகமானது. அதிக நித்திரையினாலும் அற்ப நித்திரையினாலும் ஆயுள் க்ஷீணமடையும். கண்டபொழுதெலாம் படுக்கையிலேயே கிடந்திருக்கும் மகானுபாவர்களது சரீரங்கள் சோம்பேறித்தனத்திலூறிப்போய் வியாதிகளுக் குறைவிடங்க ளாய்விடும். அற்ப நித்திரையினால் இளைப்பாற்றம் போதாமல் தேகவுறுதி கெட்டுச் சீக்கிரமாய்விருத்தாப்பியம் வந்து சேரும். பிரதிதினமும் 6-மணி தேசகாலத்துக்குக் குறைவு படாமலும் 8-மணிப் போழ்துக்கு அதிகப்படாமலும் நித்திரை செய்யவேண்டியது. பகலில் நித்திரித்து இரவுகளில் விழித்திருப்பது அற்பாயுளுக்கு மூலகாரணமாகும். இராத்திரிச் சமயங்களில் நெடுநேரமட்டும் விழித்திருக்கக்கூடாது. முன்சாமத்தில் படுக்கப்போய் விடியற்சாமத்தில் துயிலெழுவது தீர்க்காயுளுக்கும் ஆரோக்கியத்திற்கும் நல்வழியென்று பெரி[illegible] கூறுகிருர்கள். சீக்கிரத்தில் படுத்து அருணோதயத்[illegible]ருந்தால் சரீரத்தில் உற்சாகம் நிறைவுற்றிருக்கும். [illegible] பிறகு எழுந்திருக்கும் வழக்கமுள்ளவர்கள் அ[illegible]வதேயன்றி, விருத்திக்குக் கூடவராமல்

மூதேவிக்கிருப்பிட மாய்விடுவார்கள். போசனஞ் செய்தவுடனே சயனிக்கக்கூடாது. சயனித்தால் சீரண கோசத்திலிருக்கும் பார வேற்றத்தினால் நித்திரை கலக்கப்பட்டதாகி கனவுகளும் பிதற்று களும் அதிகமாகும். மேலும் நித்திரை நீங்கியபொழுது உற்சாக த்திற்குப்பதிலாய்த் தளர்ச்சியும் சிடுமூஞ்சித்தனமும் சொட்டிவழி யும். படித்துக்கொள்ளு நிலையிலேயே படுத்துத் தூங்குவது பெ ரிய துரப்பியாசம். படிக்கப்பட்ட விஷயங்கள் தூக்கத்தில் நினை வுக்குத்திரும்பி மனவமைதியைக் கெடுத்துவிடும். சயனிக்கும் பொழுது மனத்தினில் எவ்வித விசாரங்களையுமாவது ஆலோசனை களையாவது வைத்துக்கொள்ளக்கூடாது. நின்மல நெஞ்சுடன் நித்திரிக்கவேண்டியது. எவ்வளவேனும் சஞ்சலமிருந்தபோதி லும், நன்றாய்த் தூக்கம் பிடியாது. மேலும், பிரதிதினமும் ஏற வோ குறையவோ சரீரப் பழக்கமில்லாவிடினுஞ் செவ்வையாய்த் தூக்கம் வரமாட்டாது. சரீரத்தைப் படுத்தாமல் வீட்டிலேயே கிடந்திருக்கும் பணக்காரர்களுக்குப், பட்டுப் படுக்கைகளின் மேற் படுத்தாலும் கண்ணுக்கு இமைப்பாடேனும் வராதிருப்பதும், பாடு பட்டுழைத்துப் பிழைத்துவரும் கூலிச் சீவனக்காரர்கள் கரடு முர டான கற்றரைகளின் மேல் படுத்தாலும் அயர்ந்து அறிவு நீங்கி உறங்கிச்சுகிப்பதும், அனைவருமறிந்த விஷயமேயல்லவா?

159. வெகு அதிகமாய்ப்படிப்பதினாலும் எண்ணமிடுவதினா லும், சீவசக்தி சீக்கிரத்தில் குன்றிப்போய் ஆயுட்சீண முண்டா கும். முக்கியமாய் வாலிபத்தில் இப்படிச் செய்வதினால் சரீரா ரோக்கியங்கெட்டு ஆயுள் க்ஷீண மடையும். இளைப்பாறுதலின்றி இரவும் பகலும் ஓய்வொழிவில்லாமல் வேலை செய்வதினாற் கூட ஆரோக்கியமழிந்து ஆயுட்சீணம் வந்து சேரும். வேலைவித்தை யில்லாமல் சோம்பேறித்தனத்தின் மூழ்கியிருப்பதும் அற்பாயு ளுக்குக் காரணமாகும்.

160. யௌவனத்தில் அதிகமாய்ச் சம்போக சவுக்கியங் களையனுபவிக்குங்கால், சீக்கிரகாலத்திலேயே சரீரத் திடனழிந்து விருத்தாப்பியம் வந்து சேரும். ஆயுள் குறை[illegible] அன்றியும், சம்போக சவுக்கியங்களினிமித்தம் மருந்து[illegible]ங்கள் முத லிய வற்றைப் புசிப்பதினால் சீவசக்தி [illegible]ரைந்து போய் விடும்.

161. சங்கீதத்தினால் ஆயுள் விருத்தி சித்தியாகும். அதனால் இளைப்பும் விசனமும் பறந்துபோய் உற்சாக மதிகரிக்கும். சீவ சக்தி விருத்திக்கும். சங்கீதத்தினால் ஆயுசு விருத்தியடைவதேயன்றி, வாழ்ந்திருக்குங் காலமெல்லாம் சந்தோஷமும் கூடியிருக்கும்.

162. நல்ல பள்ளியூர்களில் வாசஞ் செய்வதினால் சாலக் காலம் சீவிக்கக்கூடும். அவ்விடத்துப் பரிசுத்த வாயு ஆரோக்கியத்தைத்திடப்படுத்தும். பட்டணத்திலுள்ள சந்தடி குழப்பங்களேதுமில்லாமல் அமைதியாயிருப்பதினால் மனத்துக்கு மிகவும் இன்பமாயிருக்கும். பச்சையான பயிர் பூண்டுகள் முதலிய செழித்திருக்கும் இனிய பிரதேசங்கள் உல்லாசத்தை யுண்டுபண்ணும். பெரிய பெரிய பட்டணங்களிலிருப்பவர்கள் அப்போதப்போது பள்ளிப் புறங்களுக்குப்போய்க் கொஞ்ச காலமிருப்பதினால் சரீரமும் மனமுங் கூடச் சுகப்படும்.

163. அனேக தேசங்களைப் பார்த்துவருவதினாற் கூட ஆயுள் விருத்திப்படும். பிரயாணத்தினால் உண்டாகும் சந்தோஷமும், அவ்வந்த பிரதேசங்களிலிருக்கும் விசித்திரங்களைப் பார்ப்பதினால் ஆனந்தமும், மனத்தில் நிறைந்து அறிவை மறப்பிக்கும், சவுக்கியமும் அதிகரிக்கும். வேளைக்கு ஸ்நானமாவது, சோறாவது, துயிலாவது கிடைக்காமல், சகல விதமான கஷ்டங்களையும் பட்டுப் பிரயாணஞ் செய்வதினால் ஆயுள் விருத்திக்குப் பதிலாய் ஆயுட்சீணமுண்டாகும்.

164. அமைதி, திருப்தி, தயவு, சினேகம், உற்சாகம், தைரியம்—இவை சந்தோஷத்தைப்பிறப்பித்து ஆயுளை விருத்தி செய்யும். முக்கியமாய், விருத்தாப்பியத்தில் சந்தோஷத்துடன் கூடியிருக்குமிடத்து ஆயுள் விருத்தியடையும். சிறு குழந்தைகளுடன் ஆட்டமும் பாட்டமுமாய் இடைவிடாது கூடி யிணங்கி யிருப்பதினால், சீவசக்திக்குப் பதன் வருமென்று சொல்லுகிறார்கள். பூர்வகாலத்தில் ரோமாபுரி பட்டணத்தில் பெண் பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றிக் கொண்டிருந்த ஓர் உபாத்தியாயன் மிகவும் முதிர் வயது வரைக்கும் பிழைத்திருந்ததாகத் தெரியவருகிறது. இடைவிடாமல் யௌவன ஸ்திரீகளுடைய சகவாசத்திலிருப்பதினால் எவ்வளவு முதுமை யுள்ளவர்களுக்காயினும் அதிக விசித்திரமா

ய்ச் சிவசக்தி பலப்படுமென்று சொல்லுகிறார்கள். ஆயினும் யுவதிகளுக்கு மாத்திரம் இது நஷ்டகரமாயிருக்கும்.

165. பேரார்சை, அருவெறுப்பு, பகை, உற்சாகமின்மை, நிராசை, விசாரம், சஞ்சலம், துக்கம், கோபம், பயம்—இவற்றினால் சிவசக்தி கெட்டு ஆயுட்சீண முண்டாகும். முக்கியமாய் மரண பயத்தை வைத்துப் பாராட்டக் கூடாது. இதனால் ஆயுள் குன்றுவதுபோல வேறெதனாலும் குன்றாது. இவ்வச்ச மிருப்போருக்கு எவ்வித சுகங்களாயினும் சந்தோஷத்தைத் தூண்ட மாட்டா. எந்த வேலை செய்தபோதிலும், என்ன நேரிடுமோவென்னும் சமுசயமானது இடைவிடாது வருத்திக்கொண்டிருக்கும். அடிக்கடி மரண பயத்தைப்பாராட்டுபவர்கள் சீக்கிரமாய்ப் பரலோக பதவியடைவார்கள்.

166. கிரகஸ்தாசிரமமென்றால் இல்லற வாழ்க்கையானது ஆயுள் விருத்திக்குச் சாலவும் அனுகூலமானது. அதனால் மனஞ் சஞ்சலப்படாமலிருப்பதேயன்றிச் சந்தோஷமும் சவுக்கியமும் அதிகப்படும். புருஷனுக்குப் பெண்திக்குக் குறைவு போன்றது மற்றேதுமில்லை. எத்தனை சவுக்கியங்களிருப்பினும், பெண் திக்கில்லாதவனுக்கு ஆழ்ந்தறியாக்குறைவு தோன்றிக்கொண்டிருக்கும். உலகத்தின் மீது ஆசையின்மையும் அருவெறுப்பும் பிறக்கும். கணவி கணவர்களின் அந்நியோந்நிய நேசத்தைக்காட்டிலும், தாய் தந்தையர்களுக்கும் குழந்தைகளுக்கும் உள்ள பரஸ்பர பிரிய பந்தத்தைக்காட்டிலும், இனிமையானது வேறியாதுள்ளது? இந்தப் பிரேமாமிர்தத்தைக்காட்டிலும் ஆயுள் விருத்திக்குப் பரமௌஷதம் மற்றேதுண்டு? குணவதியாயிருக்கும் பெண்சாதியும் சற்குணமுள்ள சந்தானத்தையும் பெற்ற மனுஷியன் எக்காலும் ஆனந்த சமுத்திரத்தில் நீந்திக்கொண்டு சுகதரங்கங்களில் ஓல மாடிக் கொண்டிருப்பான். மேலும்—

"கற்புடுத்தன்பு முடித்து நாண்மெய்ப் பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயினில் லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு?"

நான்காம் அதிகாரம்.

தாம்பத்திய மர்மங்கள்.

167. கிரகஸ்தாசிரமமானது ஆயுள் விருத்திக்கும் சௌக்கியத்திற்கும் முக்கியமானதென்று சொல்லியிருக்கிறோம். வமிசாபிவிருத்திக்கு இன்றியமையாததென்று சொல்லவேண்டிய நிமித்தமே யில்லை. ஒருவருடைய சகாயம் ஒருவருக்கிருந்தாலன்றி ஸ்திரீ புருஷர்கள், தம்முடைய குறைகளும் கோரிக்கைகளும் தீர்ந்து சம்பூரணானந்தத்தை அடைய நேரார்கள். புருஷனுக்குப் பெண்சாதிக் குறைபோன்றது வேறொன்றுமில்லை. கணவியில்லாத்தினமானது உலகமெல்லாம் காரிருண் மூண்டது போலிருக்கும். ஒரு பெண்ணி னிமித்தமாய் எத்தனை யுத்தங்கள் நடக்கவில்லை? எத்தனைபேர் மாண்டுபோகவில்லை? எத்தனை ராஜாதி ராஜர்கள் தங்களுடைய ராஜ்ஜியங்களைத்தோற்கவில்லை?

168. காமவிகாரத்துக்கும் மோகபாசங்களுக்கும் உட்படாமல் நிர்மல இருதயம் வாய்ந்திருப்பது அசாத்திய மல்லவென்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் சர்வசாதாரணமாய் இவ்வுலகத்தில் ஏதோஒரு காலத்திலாவது சித்த சஞ்சலம் பிறக்காமல் காலங்கழித்தவர்கள் அகபபடுவது மிகவும் அரிது. உலகப்பற்றுக்கோடில்லாதவர்களாய் யோகத்தியானத்திலிருந்த சில மஹாருஷிகளின் நற்சரித்திரங்களைப் பிரபந்தங்களில் படித்து வருகிறோம். சந்நியாசிகள், குருக்கள், வேதாந்திகள், முதிய பிரமசாரிகள் முதலியவர்களில் அனேகருடைய நடவடிக்கைகளைக் கண்ணாரப்பார்க்கிறோம். நெடுங்காலம் பரஸ்பர சம்பந்தமில்லாததினால் மதோன்மத்தர்களாயிருக்கும் ஸ்திரீ புருஷர்களைக்கூட அறிவோம். இப்படியிருப்பதினால், கிரகஸ்தாசிரமம் உத்தமமென்று சொல்வதற்கு எள்ளளவும் சமுசயமில்லை. இவ்வாசிரமத்தை யவலம்பிக்காமல் நன்னடக்கை பொருந்தியிருக்கு மவர்கள் உற்சாக வீனர்களாயிருப்பார்களே யன்றி அதிகமான சௌக்கியத்தை யனுபவிக்கவொண்ணார். ஆதலின் ஸ்திரீ புருஷர்கள் பரிபூரண சவுக்கியத்தைப் பெறக் கோரு

வார்களாயின், விவாகம் செய்துகொள்வது மிகவும் ஆவசிகமானது. பரஸ்பர நேசக்கட்டினுலும், பரமானந்தகரமான சந்தான சம்பந்தத்தினுலும், மரணகாலம் வரைக்கும் ஐச்கியப்பட்டிருந்து சுக துக்கங்களில் ஒருவரோடொருவர் தோழமைப் பட்டு மனமொத்துவாழுங் கணவி கணவர்கள்—ஆகா! அவர்களுடைய பிறப்பே பயன் பட்ட பிறப்பு.

169. இங்ஙனம் வாழ் நாண் முழுவதும் பெண்சாதி புருஷர்களின் சுக துக்கங்களுக்கு மூலமாயிருக்கும் விவாக சம்பந்தமானது ஏற்படக்கூடிய விதி எவ்வகைத்து? எவ்வித சந்தர்ப்பங்களில் அஃது அந்நியோந்நிய தோழமைக்கு ஆதாரமாயிருக்கும்? எப்பொழுது கணக்கிலா இடையூறுகளை யுண்டு பண்ணும்? எப்படிப்பட்ட ஸ்திரீ புருஷர்களுக்கு அனுகூல தாம்பத்தியம் இணைபட்டிருக்கும்? எத்தனையாம் வயதில் மணம் புரிய வேண்டியது? இது முதலிய விஷயங்களை விசாரிப்பது அத்தியந்த ஆவசிகமானது.

வதூவரர்களின் நிருணயம்.

170. விவாகத்தினல் வரும் நன்மை தீமைகளுக்கும் கஷ்ட சுகங்களுக்கும் பாத்தியப்பட்டவர்களாயிருக்குங் காரணத்தினல், வதூவரர்கள் வயது வந்த பிற்பாடு தம்மைத்தாம் வரித்துக் கொண்டு மணம்புரிவதே நியாயமாயிருக்கிறது. எல்லாருடைய அபிருசிக்களும் இஷ்டங்களும் கோரிக்கைகளும் ஒரேவிதமாகவே இராவாதலினல், ஒருவருடைய ஏற்பாடு மற்றொருவருக்கு ஒருக்கால் சரிப்படாமற் போகலாம். ஆதலின், வதூவரர்களே தங்களுடைய இஷ்டங்களை யநுசரித்து விவாக விஷயத்தை நிச்சயித்துக் கொள்ளுதல் சர்வோத்தமமானது. ஆயினும், சாதாரணமாய் அவர்கள் மோகாந்தகாரத்தில் மூழ்கி நன்மை தீமைகளை ஆலோசித்தறிந்துகொள்ளமாட்டாமல் அவசரப்பட்டு அநுகூலமற்ற சம்பந்தங்களுக்கு உடன் படுவார்கள். ஆதலால், தாய்தந்தையர்கள் அவர்களைப் பத்திரமாய்க் கவனித்து வந்து, தகுந்த ஆலோசனை சொல்லி அவ்விதத் தீர்மானங்களிலிருந்து காப்பாற்றுவது ஆவசிகமானது.

171. ஐரோபா கண்டத்திலும் அமெரிகா கண்டத்திலும் இபபடிக் குறித்த வழியாகவே விவாகங்கள் நடந்துவருகின்றன. சிறுதனத்திலேயே குழந்தைகளுக்குக் கலியாணஞ் செய்து அழ கும் குழகும் பார்க்கவேண்டுமென்னும் அபிலாஷையாவது, அவர் களை ஒரு வீட்டுக்காரர்களாக்கவேண்டுமென்னும் ஆவலாவது அத் தேசத்துத் தாய் தந்தையர்களுக்கில்லை. யௌவனப் பருவமுற்ற பிறகு பிள்ளைகள் தமக்குத் தாமே சம்பந்தங்களை யேற்படுத்திக் கொண்டு, பிற்பாடு சாதாரணமாய்த் தாய்தந்தையர்களின் அநு மதி பெற்று விவாகஞ் செய்துகொள்வார்கள். நமது தேசத் திற்போல அத்தேசத்துப் பெண்டுகள் இராணிவாச மென்ப தறியாமல் புருஷர்களுடன் கலந்து திரிவார்கள். நேயத்துடன் சம்பாஷிப்பார்கள். இப்படி இணங்கித்திரிந்து பேசிக்கொண் டிருப்பதினால், அவர்கள் கெட்ட நடவடிக்கைகளுள்ளவர்களெ ன்றெண்ணுவது பிறழ். அவர்களனைவரும் சிறுகவோ பெருக வோ கல்வி கற்றவர்களாயிருப்பார்கள். அனேகர் அதிக நீதி வதிகளும் குணவதிகளு மிருக்கிறார்கள். அத்தேசத்தில் அநாதி யாய் இவ்வழக்க மேற்பட்டிருப்பதினால், ஸ்திரீ புருஷர்கள் இண ங்கித்திரிந்து சம்பாஷிக்கு மாத்திரத்திலேயே துர்ப்புத்திகளுக்குத் தூண்டுகோ லுண்டாக மாட்டாது. பூர்வகாலத்தில் நம்முடைய தேசத்தில்கூட ருதுவான பிற்பாடே ஸ்திரீகளுக்கு விவாகம் நட ந்து வந்ததென்றும், வதூவரர்களுடைய இஷ்டானுகூலங்களை யொட்டியே நடத்தப்பட்டனவென்றும், சுயம்வரங்களும் காந்த ருவ விவாகங்களுங்கூட அடிக்கடி நடந்ததுண்டென்றும், புராண இதிகாசங்கள் மூலமாய்த் தெரியவருகின்றது. தற்காலத்தில் வதூ வரர்களின் இச்சை யனிச்சைகளைச் செவ்வையாய் அறிந்துகொ ள்ளாமலே பெற்றோர்கள் தத்தம் பிள்ளைகளுக்குக் கலியாணஞ் செய்கிறார்கள். மேலும பிராமண வைசிய சாதிகளில் வாயறி யாப் பச்சைப் பிள்ளைகளுக்குக்கூட விவாகங்கள் பலவிடங்களில் நடந்துவருகின்றன. ஐயோ! எவ்வளவு பொல்லாக்கதி பிடித் துக்கொண்டது!

172. ஒருவரையொருவர் சுவேச்சையாய் வரித்து மணம் புரிந்தவர்களனைவரும் சவுக்கியத்தை யடைவார்களென்றாவது, பெற்றோர்களின் பிரயத்தினமூலமாய் மணமபுரிந்தவர்களெல்லாரு ம் இடையூறுகளுக்காளாவர்களென்றாவது சொல்லத்துணியோம்.

விவாகத்துக்குப் பூர்வம் வதூவரர்கள் ஒன்றுபட்டிணங்கித் திரிவதினுல் ஒருவருடைய இயற்கை முதலியவற்றை யொருவர் கொஞ்சமட்டும் அறிந்துகொள்ளக்கூடும். ஆனுல், அப்படியொத்துத் திரிய இடங்கொடுப்பதினுல் ஓர் பொழுதேனும் கெட்ட காரியங்களுக்குக்காரணமுண்டாகாதென்று நிச்சயமாய்க் கூறுவதும் அசாத்தியம். வயது வந்த பிற்பாடுகூட ஸ்திரீ புருஷர்களுடைய உண்மையான வியற்கைகளைச் சீக்கிரகாலத்திலேயே கண்டுகொள்வது எவ்வளவேனும் எளிதானதல்ல. ஆதலின், வதூவரர்களும் தாய் தந்தையர்களுங்கூடப் பலகாலும் பிறழ்ந்துபோகிருர்கள். இப்படியிருக்க, ஈடு வராத சிறுபிள்ளைகளின் சுபாவங்கள் பெரியவர்களானபொழுது எந்தவிதமாய் இருக்குமோ சரியாய் நிச்சயிப்பது எப்படிச் சாத்தியமாகும்? அப்படிப்பட்டவர்களுக்குக் கலியாணஞ் செய்வது அவர்களுடைய கழுத்துக்குப் பெரிய கல்லைக் கட்டுவதாய்க் கருதத்தகும். தயை கூர் நெஞ்சத்தவர்களான தாய்தந்தையர்களே! ஓர் சொல்லைக்கேளுங்கள். உங்களுடைய பிள்ளைகளின் புத்தி மலர்ந்த பின்னர் அவர்களுடைய சுபாவங்களுக்கேற்ற சம்பந்தங்களைத்தேடி, எல்லாவிஷயங்களையும் அவர்களுக்குச் செவ்வையாய் விளக்கப்படுத்தி, அவர்கள் சொந்தமாய்த் தெரிந்துகொள்வதற்கும் தகுந்த அநுகூலங்களைக் கொடுத்துப், பிற்பாடு அவர்களுக்குக்கலியாணஞ் செய்யுங்கள். இப்படிச் செய்வதே கிரமமானவழி. இதுவே நியாயம். இதுவே க்ஷேமகரமானது. இவ்விஷயங்களைக் குறித்து இன்னுங் கொஞ்சதூரம் விவரித்துச்சொல்லவேண்டியிருக்கிறது. இப்பொழுது வதூவரர்களுடைய குணவியற்கைகளைக் கண்டுகொள்ளும் வழிகளையும், அவர்களுக்கு அநுகூலம் உண்டாவதும் ஆகாததும் நிருணயிக்கும் நெறி முறைகளைக்குறித்தும் விசாரணை செய்வோம்.

173. வதூவரர்களின் தேகதத்துவங்களுக்கும், மனத்தத்துவங்களுக்கும் குணுகுணவியற்கைகளுககும் பொருத்த மிருக்க வேண்டியது என்ருல், அவை ஒருவரையொருவர் விரும்பச்செய்யுமாறு இருக்கவேண்டுமேயன்றி, வெறுப்பைப் பிறப்பிக்குந்தன்மையவாய் இருக்கக்கூடாது. இப்படி மெய்யான ஆகருஷணம் இருந்தாலே அவர்களிருவரும் வெகுகாலம் அந்நியோந்நியநேசங் கூர்ந்து சுகமுற்று வாழ்வார்கள். இல்லாவிடின், மரணபரியந்தம், அனேக கஷ்டங்களுக்காளாவார்கள். வதூவரர்களின் சரீரங்களு

க்கும் மனங்களுக்கும் பரஸ்பர ஆகருஷணமிருப்பதும் இல்லாததும் கண்டு பிடிப்பதற்கு மெய்யாய் அவர்களுக்குத்தான் முடியுமேயன்றி, வேறெவருக்கும் சாத்தியமாகாது. அடிக்கடி அவர்கள் கூட மோகவசத்தினல் அவசரப்பட்டு தவற்றபிப்பிராயங்களில் சிக்குப்பட்டு மோசம்போய்த் தவிக்கிருர்கள். சிறுதனத்தினின்றும் பிள்ளைகளின் இயற்கையாதிகளைச் செவ்வையாய்த் தெரிந்துகொண்டு வரும் தாய் தந்தையர்கள், இம்முற்கூறிய பொருத்தங்களைக்கொஞ்சமளவு நிருணயிக்கச் சக்தியுற்றிருப்பரேயாயினும், கடைசியில் வதூவரர்களின் இஷ்டா யிஷ்டங்களை நன்குணர்ந்த பின்னரே விவாக நடத்தவேண்டியது. அவர்களுடைய இஷ்டங்களுக்கு விரோதமாய் என்றும் கலியாண நடத்தக் கூடாது. ஈடு வந்து புத்தி விரிவதற்கு முன்னர் இந்த விஷயத்தில் இஷ்டங்களும் அபிப்பிராயங்களும் தேர்ந்துரைப்பதற்கு வதூவரர்களுக்குச் சக்தியிராதென்று சொல்லவே வேண்டியதில்லை.

174. பிராயத்தில் வதூவரர்கள் ஒருவருச்சொருவர் நன்ருய் ஏற்றிருக்கவேண்டியது. இருவருடைய வயதுகளுக்குப் 7-8-வருஷங்கள் வித்தியாச மிருப்பது உத்தமம். வதூவரர்களின் வயதுகள் ஒத்திராத பட்சத்தில், அவர்களுடைய சரீரங்களுக்கும் மனங்களுக்கும் பொருத்தம் இருக்கமாட்டாது.

175. வதூவரர்களின் சரீரம் ஆரோக்கிய முள்ளதாயிருக்க வேண்டும். பலவீனமாயும் பிணிவருத்த முற்றதாயும் இருக்கக் கூடாது. தாய் தந்தையர்கள், தமையன் தம்பிகள், தமக்கை தங்கைச்சிகள்—இவர்களுடைய சரீரதத்துவங்களை நோக்கியும், ஆயுளாரோக்கியங்களை நோக்கியும் வதூவரர்களின் சரீர வியற்கை முதலியவற்றை நன்ருய்ச் சீர்தூக்கி யறியவேண்டியது. குஷ்டரோகம், க்ஷயரோகம், பைத்தியம் முதலியவை அவர்களுடைய வமிசத்தில் எங்காளுமிராத விஷயத்தை நிச்சயமாய்க் கண்டுகொள்ள வேண்டியது.

176. அழகு மிகவும் ஆவசிகமானது. சௌந்தரியத்தைப் புகழ்ந்துகொண்டாடாத ஸ்திரீபுருஷர்கள் இவ்வுலகத்தில் இல்லை. சௌந்தரியத்தைக்கண்டு புருஷர்கள் முக்கியமாய்ப் பிரமிக்கிருர்கள். ஸ்திரீகள்கூடச் சௌந்தரியத்தைப் பார்ப்பார்களாயினும் புருஷர்களின் சாமர்த்தியம், அவர்களுடைய சேஷ்டைகள், தை

யஸ்தைரியாதிகுணங்கள், கீர்த்தியான சரித்திரம் முதலியவற்றைக் கண்டு அதிகமாக ஆசைப்படுகிறார்கள். அழகைமாத்திரம் மேற்படுத்தி மணம்புரிவது என்றைக்கும் நன்றன்று. நற்குண நன்னடக்கை முதலிய இல்லாமல் அழகு மாத்திரம் பெற்றிருக்கும் பெண்சாதியைப் பகையாளியென்றே கருதவேண்டும். உதவாக்கரையான புருஷன் எவ்வளவு லட்சணமுள்ளவனாயினும் யாது பயன்? ஆதலின் மேற்றலுக்கு மாத்திரங்கண்டு பிரமித்து மதிகெடாமல், எல்லாவிஷயங்களும் சாவகாசமாய் விசாரித்துச் சம்பந்தஞ்செய்துகொள்ளவேண்டியது.

177. வதூவரர்களின் முகவடிவு முதலிய தேகவியற்கைகள் வித்தியாசப்பட்டிருக்கவேண்டியது. ஒரேவிதமுள்ளனவாயிருக்கும்பட்சத்தில் அவர்களுக்குச் செவ்வையாய்ப் பரஸ்பர ஆகருஷணை இருக்கமாட்டாது. இரத்தம் ஒத்திருக்கும் சமீபசம்பந்தங்களுக்குப் போலியதிகமாதலினால் பொருத்தம் குறைவாயிருக்கும். ஆதலால், அவ்விதச் சம்பந்தங்களுக்குப் பிறக்கும் சந்தானமானது ஆரோக்கிய மற்றதாகவும் பிணிவேதனை யுள்ளதாகவுமிருக்கும். அறிவுவிளக்கமுங் கூடக் குறைவாகவேயிருக்கும். ஆதலால், அம்மான் பெண், அத்தை பெண், அக்காள் தங்கைச்சிகளின் பெண்கள் முதலியவரை மணம்புரிவது மிகவும் அயுக்தமானது.

178. வதூவரர்களிருவருக்கும் சற்குணசம்பத்தும், நல்வழி நல்லொழுக்கங்களும் பொருந்தியிருப்பது மிகவுமுக்கியமானது. அருணெஞ்சு, மெய்மை, நல்லொழுக்கம், கல்வி, பகுத்தறிவு, அறனுடைமை, கடவுளன்பு, இவற்றை முக்கியமாயெண்ணவேண்டும். நெஞ்சழுத்தம், குரூரம், கடுகடுப்பு, பெருஞ்சினம், பொய்மை, சூது, கள்ளம், துன்னெறி, செருக்கு, இறுமாப்பு, அசைகை, தன்னயம்பார்த்தல், சோம்பல், போக்கிரித்தனம், இவைபோன்ற துர்க்குணங்களிருப்பின் சம்பந்தங்கூடாது. வதூவரர்களின் வீடுகளில் அவர்களுடைய பிரவர்த்தனை சம்பாஷணை முதலியவற்றைச் சிலமாதங்கள் பரியந்தம் கருத்துடன் ஆராய்ந்து பார்த்தாலே இக்குறித்த நற்குணதுர்க்குணங்களை நன்றாய்த் தெரிந்துகொள்ளலாமேயன்றி, இரண்டொரு தினங்களில் கண்டுகொள்வது அசாத்தியமென்றறியவேண்டியது. தாய்தந்தைகளின் யோக்கியதாயோக்கியதைகளைக்கண்டு சிற்றளவு வதூவரர்களின் குணவியற்கைகளைத்

தெரிந்துகொள்ளலாம். தகப்பனுடைய குணங்கள் மகனுக்கும், தாயினுடைய குணங்கள் மகளுக்கும் சாதாரணமாய் இறங்குகின்றன. ஆதலால் அவர்களுடைய யோக்கியதையைக்குறித்தும், குணசாரங்களைக்குறித்தும் எவ்வளவேனும் அநுமானமிருந்தபோதிலும் சம்பந்தத்தைத் தவிர்க்கவேண்டியது.

179. கன்னிகைகளை நிச்சயிக்கும்பொழுது, அவர்கள் நன்னடக்கையும், பெற்றோர் கட் பால் பயபக்தி விசுவாசமும், உடற்பிறந்தாரிடத்து அன்பும், உசிதமான நாண விநயங்களும், அமைதியும், சாக்கிரதையும், பரிசுத்தமும், வேலைவித்தைகளில் ஆவலும், வாய்ந்தவர்களாயிருப்பதைப் பார்க்க வேண்டியது. வீட்டுவேலைகளில் தாய்க்குக் கைத்துணையாயிருக்கும் கன்னிகைகளே மனைவருக்கும் சுகமுண்டாக்குவரேயன்றி இராணி வாசமாய் வளர்ந்து முதுகு குனியாதவர்கள் உதவமாட்டார்கள். சிறிதும் நாண வடக்கமில்லாக்கன்னிகைகளும், அதிக வெட்க முள்ளதுபோலப் பாசாங்கு செய்யும் கன்னிகைகளும், மிகவும் ஒய்யாரமாய் நடக்கும் கன்னிகைகளும், தளுக்குகள் காட்டும் குலுகுலுக்கிப் பெண்களும், விழிகள் புரட்டிக்கொண்டு ஓரப்பார்வைகளும் கோணற்பார்வைகளும் பார்க்கும் கன்னிகைகளும், வெகு சாமர்த்தியத்துடன்கல்விகள்பேசுங்கன்னிகைகளும், வெகு எக்கச்செக்கமாய்ப் பேசுங்கன்னிகைகளும், அடக்க வணக்க மில்லாமல் துடுக்கு நாக்குள்ள கன்னிகைகளும், ஒதுக்க விலக்கங்களில்லாமல் புதியவருடன் இடம் பிடுங்கும் கன்னிகைகளும், கட்டு திட்டத்துடன் வளர்க்கப்படாத கன்னிகைகளும், கெட்ட சகவாசங்கள் செய்து பட்டித்தனமாய்த்திரியும் கன்னிகைகளும், குணவதிகளான மனைவிகளாவாரென்று சொல்வது மிகவும் அசாத்தியம். தாய்கள் கெட்ட நடவடிக்கைகளுள்ளவர்களாயிருக்கக்கண்டு புதல்விகளின் குணங்களை நம்பி மணம் புரிவதைக்காட்டிலும் கழுத்துக்குக் கல்லைக்கட்டிக்கொண்டு கிணற்றில் குதிப்பதே நல்லது. இனி, மாமிகளுடனும் மைத்துனிகளுடனும் கெட்ட தோழமைப்பட்டு அவர்களுடைய பெண்களை மணம்புரியும் அவிவேகிகளின் பாக்கியத்தையும் சம்பந்திகளுடன் துர்ச்சம்பந்தங்கள் செய்துகொண்டு, மாட்டுப்பெண்களைச் சம்பாதிக்கும் மஹா புருஷர்களின் யோக்கியதையும், எப்படி வருணிக்கக் கூடும்?

180. வதூவரர்களின் குணவியற்கைகளை நிருணயிக்கும் பொழுது எவ்வளவேனும் அவசரப்படக்கூடாது. இரண்டொரு தினங்கள் தூரப்பார்வைகள் பார்த்துவிட்டு மேற்றளுக்குகளுக்கு மாத்திரம் பிரமைப்பட்டுச் சம்பந்தங்களை நிச்சயித்துவிடாமல், மாதங்கள் கணக்காய்ப் பலவழியே பரிட்சித்துக் கண்டுபிடித்து மெய்யான குணகுணங்களை ஆரத்தீரத் தெரிந்துகொள்ளவேண்டியது. இப்படிப் பரிசோதிக்கையில், வதூவரர்களுக்குச் சுகுண சம்பத்தும் அவர்களிருவருக்கும் பொருத்தமுங்காணப்பட்டாலே அவர்கள் அந்நியோந்நியாநுராகம் வாய்ந்து வாழ்நாண் முழுவதும் கஷ்டசுகங்களைப் பகுத்து வாழ்வார்களென்பது நிச்சயம். மேற்றளுக்குகளின் மூலமாய் உண்டாகும் காதலாவது அன்பாவது நெடுங்காலும் நிற்கமாட்டாது. ஆதலால், முதன் முதலில் பிறக்கும் ஆலோசனைகளுக்கு இடங்கொடாமல், திறந்த கண்களுள்ளவர்களாய்ச் சமஸ்த விஷயங்களையும் செவ்வையாய்ப் பரிசீலித்துக் கொள்ளவேண்டியது.

181. வதூவரர்களின் குணவியற்கைகளும் ஆயுளைசுவரியங்களும் அவர்களுடைய சாமுத்திரிக லட்சணங்களின் மூலமாயும் ஜாதக சக்கரங்களின் மூலமாயும் கண்டுபிடிக்கக் கூடுமென்று இத்தேசத்திலனேகர் வீண்பிரமைப்படுகிறார்கள். முகக்களையின் காந்தியைக்கண்டும், சரீரத்தின் ஆகிருதியின் உதவியினாலும், புத்தியுக்தி சக்திகளையும் குணகுணங்களையும் ஒருவாறு நிருணயிப்பதற்குச் சிற்சிலவிடத்துச் சாத்தியமாகலாம். ஆயினும் இனிவரப்போகுமெல்லாவற்றினையும், மூக்கின்மூலமாயும் மூஞ்சியின்மூலமாயும், கைகளின் நீளத்தினாலும் கண்களின் அகலத்தினாலும் அனுமிக்கலாமென்பது வெறும் பைத்தியகாரப்பேச்சேயன்றி வேறல்ல. ஆயுட்பிரமாணம், போகபாக்கியங்கள், கஷ்டசுகங்கள், சுகுண துர்க்குணங்கள், வித்தை, உத்தியோகம், சந்தானபிராப்தி, விபசாரம், இவை போலும் விஷயங்களை உள்ளங்கை இரேகைகளினாலும், உதரத்தின் மடிப்புகளினாலும், உடம்பின்மேலுள்ள சுழிகளினாலும், பிறந்த லக்கினத்தினாலும், கிரகங்களின் கேந்திரத்தினாலும் நிருணயிப்பது மானிடரால் முடியாத காரியமென்றறியத்தக்கது. பெண்பிள்ளையின் சரீர வியற்கைகள் ஆண்பிள்ளைகளின் சரீரவியற்கைகளைப்போன்றிருக்கும்பட்சத்தில் அவர்களை நம்பக்கூடாதென்றும், கெண்டைக்

காற்றசைகள், தொடைகள், முலைக்காம்புகள், புயங்கள், கைகள், கன்னங்கள், மேலுதடு, இவை முதலிய பிரதேசங்களில் உரோமம் முளைக்கப்பெற்றிருக்கும் ஸ்திரீகளின் நடவடிக்கை சிலாக்கியமாயிருக்கமாட்டாதென்றும், சொல்லுகிறார்கள். இதனுண்மை அநுபோகத்தினாலே அறிந்துகொள்ளத்தக்கதாயிருக்கிறது.

182. மேற்கூறிய விஷயங்களெல்லாவற்றினையும் செவ்வையாய்ப் பரிசீலித்துக் கலியாணஞ் செய்துகொண்டாலே தம்பதிகள் வாழ்நாளிறுதிவரைக்கும் கஷ்டசுகங்களில் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கக்கூடுவர். வதூவரர்களின் சரீரங்களுக்கும் மனங்களுக்கும் சுபாவங்களுக்கும் பரஸ்பர ஆகருஷணையிருந்தாலே அவர்களுக்கு அந்நியோந்நிய அநுராகம் பொருத்தமுற்றிருக்கும். சரீர ஆகருஷணை மாத்திரமிருந்து மனங்கள் கலந்திராதபட்சத்தில் அவர்கள் செவ்வையாய்ச சுகிக்கவொண்ணார். மனங்களும் சுபாவங்களும் எவ்வளவு பொருத்தமுற்றனவாயினும், சரீர அனுகூலமில்லாதபட்சம் சவுக்கியம் முழுச்சுழியென்றே யெண்ணவேண்டியது. வதூவரர்களுக்கு இருக்கவேண்டிய பொருத்தங்களையெண்ணாமல், தனம், உத்தியோகம் முதலிய ஆகருஷணைகளினாலும், பெற்றோர்களின் பலவந்தத்தினாலும், பந்துக்கள் சினேகிதர்கள் முதலியவர்களது தூண்டுகோளினாலும் கலியாணங்கள் நடந்துவருகையில், தம்பதிகளுக்கு ஒருவர்மேலொருவர் நண்பும் நேசமும் மனப்பொருத்தமும் எவ்வாறு பிறக்கும்? கேவலம் சௌந்தரியத்தினால் வலையிற் சிக்குண்டு மோகாந்தகாரத்தில் மூழ்கி மணம்புரிந்தவர்களும், தாயினியற்கைகள் குழந்தைகளுக்கு வருமாவென்றும் நற்குணங்களை நாமினிக்கற்பிக்கலாமென்றும் மனத்தைச் சமாதானப்படுத்தி மணம்புரிந்தவர்களும், குலப்பெருமை கீர்த்திகளைச் செவ்வையாய் விசாரிக்காமல் குழியில் விழுந்தவர்களும், சாதக சக்கரங்களையும் சாமுத்திரிக லட்சணங்களையும் நம்பி மணக்கோலம் பூண்டவர்களும், உச்சிக்குழி மூடுவதற்கு முன்னரே மணம்புரிந்தவர்களும், ஈடுசோடு பாராமல் மணம்புரிந்தவர்களும், இவர் போல்வார் அனேகர் அநுபவிக்கும் மகாவைபோக சௌபாக்கியத்தைக் கண்ணாரக்கண்டுகொண்டே யிருக்கிறோம். கல்வியிற் பெரியோரென்றும், செல்வத்திற் பெரியோரென்றும், உத்தியோகமுள்ளவரென்றும், ஊரில் செல்வாக்குள்ளவரென்றும், செருக்குற்றுத் தற்புகழ்ச்சிக்காரர்களாய்ப், பேரர்களுக்குப் பாட்டர்களாயிருந்தும்

கிழத்தனத்தில் இளங்கன்னிகளைக் கலியாணஞ் செய்துகொண்டு, இடர்களுக்காளாகி உள்ளுள்ளே மனங்கொதிக்க மேலுக்கு மகா கோப்பியமாயிருப்பவர் சிலர் எமது கண்களுக்கிப்போது கரதலாமலகமாய்ப் புலன்படுகிறார்கள். பெரியோர்களே! பிழைபொறுங்கள்.

பாலிய விவாகம்.

183. வதூவரர்களின் சரீரங்களுக்கும் மனங்களுக்கும் குணகுணங்களுக்கும், இயற்கைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் பொருத்தமும் பரஸ்பரக் கவர்ச்சியும் இருப்பினே அவர்கள் வாழ்நாளெல்லாம் கஷ்டசுகங்களில் ஒருவரோடொருவர் இணக்கமுற்றுச் சுகித்துவாழக்கூடுவரென்றும், இப்பரஸ்பர மனக்கவர்ச்சி விஷயத்தை நிருணயிப்பதற்கு வதூவரர்களே தகுந்தவர்களென்றும், ஈடுவந்து புத்தி செவ்வையாய் விரிவுறுமுன்னர் இவ்விஷயத்தை அவர்கள் நிருணயிக்கச் சக்தியற்றிருப்பரென்றும், தாய்தந்தையர் சம்பந்தங்களை நிச்சயிக்கும்பொழுதுகூட வதூவரர்களின் அநுமதியைச் சார்ந்தே கலியாணங்களை நடத்தவேண்டுமென்றும், மேலே விவரித்திருக்கிறோம். யூரோப் கண்டத்திலும் அமெரிகா கண்டத்திலும், ஸ்திரீகள் யௌவனவதிகள் ஆனபிறகே மணம் புரிவரென்றும், அவர்கள் கோரியவரர்களையே விவாகஞ்செய்துகொள்வார்களென்றும், நமது தேசத்திற்கூடப் பூர்வகாலத்தில் இவ்வித ஆசாரமேயிருந்ததென்றும் சொல்லப்பட்டது. இப்பொழுது அப்படிப்பட்ட மேன்மையானகாலமானது முழுகிப்போய், பிராமண வைசிய சாதிகளில் பெற்றோர்கள் தம்முடைய விநோதத்திற்காக வாயறியாப் பச்சைக் குழந்தைகளுக்குப் பொம்மைக் கலியாணஞ் செய்யும் கலிகாலம் வந்துசேர்ந்தது. இதர சாதிக் கன்னிகைகளுக்குச் சாதாரணமாய் ருதுவான பிற்பாடே கலியாணம் நடந்துவருகின்றதாயினும், வதூவரர்களின் இச்சைகளுக்கிசையக் கட்டிக்கொடுப்பது மிகவும் அரிது. இத்துராசாரத்தினால் அனேகவிதமான அனர்த்தங்கள் சம்பவித்துத் தேசத்துச் சனங்களைப் பாழாக்குகின்றன. இவற்றைச் சாங்கோபாங்கமாய் விசாரித்துச் செய்யவேண்டிய பரிகாரங்களை யாலோசனை செய்வோம்.

184. பாலிய விவாகத்தினால் சிலர் பாலிகைகள் சிறுதனத்திலேயே கைம்பெண் நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட துரதிஷ்டம் பிடித்த இளம் பெண்கள் பத்துப்பிராயத்துக்கு உட்பட்டவர்கள் இப்பொழுது நமது தேசத்தில் சுமார் லட்சம் பெயர் இருப்பதாகக் குடிக்கணக்குப் புத்தகங்களினால் தெரியவருகிறது. ஐயையோ! இதனால், தனவிரயமும், நிரபராதிகளான இந்தப்பசும் பாலிகைகளுக்கு மரணபரியந்தம் பரிக்கவேண்டிய பொறுக்க முடியாத்துன்பமும் தவிர, இவ்விலட்சம் பெண்களுக்கும் கலியாணஞ் செய்வித்ததனால் வந்த பய னென்ன?

185. இனி வைதவ்வியம் அடையாமல் சீராயிருந்தவர்களுட் சிலர் வாலிபர்களும் பாலிகைகளும், வைசூரி முதலிய நோய்களினால் கண்கள் கைகால் கெட்டும், குரூபிகளாகவும், துர்ப்பல தேகமுள்ளவர்களாயும், சமுசார சுகத்திற்கு உபயோகமற்றவர்களாய், ஒருவருக்கொருவர் துன்பத்திற்கு மூலகாரணங்களாயிருக்கிறார்கள். விவாககாலத்தில் வதூவரர்களின் அங்கீகாரமாவது பரஸ்பரம் இச்சையாவது இலேசமாயினும் இல்லாத காரணத்தினால் மனங்கள் சிற்றளவாயினும் கலக்காது நேசக்கட்டு உண்டாகாமலே சிலர் துன்பத்திற்காளாகிறார்கள். வதூவரர்களின் சுகுண துர்க்குணங்கள் சிறுதனத்தில் சரிவர நிலைபெறாத காரணத்தினால், விவாகதினத்தில் தாய்தந்தையர்கள் எண்ணியவாறு முடியாமல், கடைசியில் அவை கோணலாய் முடிவதினால் சிலதாம்பத்தியங்கள் துக்ககரங்களாய்விடுகின்றன.

186. இப்படிப்பட்டவை யெவையுமின்றிச் சுகமனுபவிக்கிறார்களென்றுகொண்டிருக்கும் வெகு தம்பதிகளின் அவஸ்தையைக்காணுங்கள். ஒரு நமது தேசத்தில் தவிர மற்றையெல்லாத் தேசங்களிலும் புருஷர்கள் தாம் சுதந்தரமாய்ப் பெண்சாதி பிள்ளைகளைப் போஷிக்கச் சக்தி வந்த பிற்பாடே விவாகம் செய்துகொள்வார்கள். நம்முடைய தேசத்தில அப்படியில்லாது தாய் தந்தைகள் பச்சைப் பிள்ளைகளுக்கே பெண்சாதிகளை யொட்டக்கட்டுவதினால் நம்முடைய வாலிபர்கள் கௌமார தசையிலே சுதந்தர நடவடிக்கையும் சுக சந்துஷ்டியையும் சுவை யுணராதவர்களாய் எப்போதும் உற்சாகமற்றவர்களாயிருக்கிறார்கள். நடவடிக்கையை நிலைபெறச்செய்துகொண்டு, சுகுணசம்பத்தியைச் சேகரித்து,

வித்தைபுத்திகளில் பிரபலித்து, தைரியசாகசங்களில்தேறி, சுதந்தரநடத்தையைப் பழக்கிக்கொள்ளவேண்டிய இக்கௌமாரபிராயத்திலேயே, மாடுகளுக்குக் கழுத்துக்கொம்பு கட்டியதுபோல நம்மவர்கள் வாலிபருக்குச் சமுசாரத்தை யொட்டக்கட்டித், தலையெடுத்துக்கொள்ளமாட்டாமல் செய்வதினால், அவர்கள் உற்சாகமும் தைரிய சாகச முதலியவு மில்லாதவர்களாய், ஊக்கத்துடன் சுதந்தரித்து எவ்வித நற்காரியமும் செய்வதற்குச் சக்தியற்ற உதவாக்கரைகளாகிறார்கள். அதனாலேயே நமது சிறுவர்கள் சாதாரணமாய்ப் பாடசாலைகளில் படித்துக் கொள்ளும் வரைக்கும் தேசோபகாரத்துக்காகப் பாடுபடவேண்டுமென்றும், துராசாரங்களைத் தொலைத்துவிடவேண்டுமென்றும், பெண்களின் நிலைமையைச் செவ்வைப்படுத்த வேண்டுமென்றும் கருதி மிகுந்த உற்சாகத்துடன் சங்கங்களை ஸ்தாபித்துப் பிரசங்கங்கள் செய்து தைரியத்துடன் துராசாரங்களைத் தூஷிக்கச் சக்திபெற்றிருந்தும், விவாகமாய்ப் பெண்சாதி குடித்தனஞ் செய்யவந்த இரண்டு மூன்று வருஷங்களுக்குள்ளேயே தம்முடைய முன்னைய சங்கதிகளெல்லாம் மறந்துபோய், முன்னைய உற்சாகமழிந்து, வாடிய முகமுள்ளவர்களாய்த் தேசாபிமானமென்னும் சொல்லையே நினைவுக்கு வருவித்துக்கொள்ளாமல், முன்னைய பிரசங்கங்களையும் விட்டுவிட்டு, தைரிய சாகசங்களையும் சுதந்தரத்தையும் போக்கடித்துக்கொண்டு எவர்களுடைய கால்களைப் பிடித்துக்கொண்டாவது பற்பலவிதமாய் இச்சகங்கள் பேசிக்கெஞ்சியிரந்து மாதத்திற்குப் பதினைந்து ரூபாய் வேலை யொன்றைச் சம்பாதித்துக்கொண்டு லஞ்சங்கள் பெற்றோ, கள்ளங்கள் கபடுகள் செய்தோ தமது பெண்சாதி பிள்ளைகளைப் போஷிப்பதே பரமார்த்தமென்று சித்தாந்தப்படுத்திக்கொண்டு, உலோகோபகாரமாய்ப் பாடுபடக்கருதியவர்களைப் பார்த்துப் பரிகசித்துக்கொண்டு அவர்களையும் உற்சாகவீனர்களாக்கித் தாமும் உலகத்திற்கு வெறுஞ்சுமைகளாகிறார்கள்.

187. புருஷனுடைய கதியிப்படியிருக்க, இனிப்பெண்ணினுடைய துரவஸ்தையைக் காணுங்கள். அந்தச் சிறுமி கணவனுக்குத் தொண்டுசெய்வது மாத்திரமேயன்றி மாமியின்பணிச் சலைக்கூடச் செய்யவேண்டியிருக்கும். சாதாரணமாய்ப் புருஷன் வீட்டிலுட்கார்ந்து சுகபோசனஞ் செய்துகொண்டிருக்கும் பராதீனனாயிருப்பதினாலும், தன்னைமாத்திரமேயன்றித் தன்னுடைய

கணவனைக்கூடப் போஷிக்கவேண்டியவர்கள் மாமிமாமர்களாயிருப்பதினாலும், மாமிமாமர்களுக்குப் பூரணமாய்க் கோபம்வரும்பட்சத்தில் வீட்டில் தங்குவதே கூடிவராதாதலினாலும், இளமனைவி புருஷனைக்காட்டிலும் மாமிமாமர்களுக்கேயுட்பட்டு அவர்களுக்கே கட்டளைப்படி நடக்கிறவளாய் இருக்கவேண்டிய அகத்தியமேற்படுகின்றது. இக்காரணத்தைப்பற்றிச், சிறுகணவிகள் அனேகர், கணவனுடைய மனத்துக்குத் தூரமுள்ளவர்களாய்ச் சீவிதகாலமெல்லாம் சுகமறியாதவர்களாய் விடுகிறார்கள். இதுவுமன்றிச் சிலர், மாமியார் மாட்டுப்பெண் வரிசையினால், அதிகமானவருத்தங்களுக்குப் பலியாகிறார்கள்.

188. பாலதம்பதிகளுக்கு லபிக்கும் இதரமான இடுக்கண்களைச் செவிகொடுத்துக் கேளுங்கள். சரீரம் செவ்வையாய் வளராததற்குமுன்பே திரட்சிக்கலியாணமுடிந்து அதனாலுண்டான சந்தானமானது, சாதாரணமாய்த் துர்ப்பலமுள்ளதாய்ப் பெற்ற அறையிலேயே பைசலாவோர்களும், பிற்பாடு கொஞ்சகாலம் தம்பதிகளுக்கும் பந்துக்களுக்கும் வருத்தமுண்டாக்கி விட்டொழிந்துபோவார்களுமாய்ப் பிறப்பார்கள். அவ்வித பாக்கியத்தைப்பெறாமல், வெகுகாலம் கஷ்டங்களை யநுபவித்துப் பிழைத்திருக்க வரங்கொண்ட பிள்ளைகள், பிணிபீடிதர்களாய்ப் பலவீனமான சரீரங்களுள்ளவர்களாயிருப்பார்கள். விளையாடிக்கொண்டு வேடிக்கையாயிருக்கவேண்டிய பருவத்திலேயே திரட்சிவேடிக்கை நடந்து பிள்ளைபெறவேண்டிய வேடிக்கையைக் காணவேண்டிய பாக்கியம் பெண்களுக்குண்டாவதினால், அத்தாய்களுக்குப் பிள்ளைகளை வளர்ப்பதற்குச் சக்தியில்லாமல் அக்குழந்தைகளைப் பாழாக்குகிறார்கள். பிள்ளைகளின் பேச்சு அப்படியிருக்கப், பிள்ளைகளைப்பெற்ற தாய்களும் தந்தைகளுங்கூடச் சீக்கிரகாலத்திலேயே சரீரக்கட்டு தளர்ந்துபோய் இளமைப்பருவத்திலேயே முதுமைபெற்றவர்களாய் அற்பாயுசுக்காரர்களாய்விடுகிறார்கள். ரஜஸ்வலையான வளவினாலேயே கன்னிகை சம்போகத்திற்குத் தகுந்தவளாகமாட்டாளென்றும், சமஸ்தாவயவங்களும் பரிபூர்த்தியாவதற்குப், பிற்பாடு கொஞ்சகாலஞ் செல்லவேண்டுமென்றும், இதற்குள்ளே வதூவரர்களைப் புணரவிட்டால் அவர்களுடைய தேகங்கள்கெட்டுப் பிணிகளுக்குத் தஞ்சங்களாவதேயன்றி அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளும் அழிந்துபோவார்களென்றும் வைத்

தியசாஸ்திரிகள் விளம்பியிருக்கிறார்கள். இவ்விதமாய்ப் பாலிய விவாகத்தினால் சுகமுண்டாகாமற்போவதேயன்றி, விவாகமில்லாத பட்சத்துத் திடகாயர்களாய்ச் சிரகாலம் சீவிக்கத்தகுந்த தம்பதிகளின் ஆயுளும் ஊனமடைகின்றது. மிக்சவாலிபத்தில் கருத்தரித்தவர்களனேகர் மிருத்தியுவுக்கு இரையாவதைக்கூடக் கண்ணாரப் பலதடவையுங் காண்கிறோம்.

189. பாலிய விவாகத்தினால் வித்தியாபங்கங்கூட நேரிடுகின்றது. சமுசாரவிசாரமில்லாமல் சுவேச்சையாய்ப் பிழைக்க வேண்டிய பாலியபிராயத்திலேயே சமுசாரம் வந்து மேலே விழுவதினால் படிக்க மனம் போகாமல், வீட்டிலோர் மூலையில் தாய் தந்தைகளும், மற்றோர் மூலையில் பெண்சாதி பிள்ளைகளும் திரவியஞ் சேகரித்துக் குடும்ப சம்ரட்சணை செய்யும்படி நித்தியம் போராட்டங்கொடுத்துக்கொண்டிருக்க உத்தியோக நிமித்தமாய்க் கிருஷிசெய்யாமல் எப்படிச்சும்மாவிருப்பது? நாமறிந்தவர்களுக்குள்ளேயே எத்தனைபெயர் வாலிபர்கள் மிகவும் புத்தி வல்லமையுள்ளவர்களாயினும் சமுசார பாரம் மேலே வீழ்வதினால் படிப்பை விட்டு விட்டு முன்னே வரக்கூடிய பெரும் பயன்களை இழந்து கொள்பவரில்லை? சிறுமையிலேயே சமுசார சவுக்கியத்தைச் சுவை பார்ப்பதினால் எத்தனை பெயர் வாலிபர் வித்தையில் அபிருசிகெட்டுப் படிப்பை மூட்டை கட்டிவைக்கிறவர்களில்லை? வாலிபர்களின் நிலைமையே யிப்படி யிருக்க, இனிப்பாலிகைகளின் வித்தியாபிவிருத்திக்கு எள்ளளவேனும் இடமிராதல்லவா?

190. அன்றியும், இப்பாலிய விவாகங்களினால், இளமையிலேயே பிள்ளைகள் பிறந்து குடும்பம் வளர்வதினாலும், இவர்களுடைய விவாகமுதலிய பிரயோசனங்களி னிமித்தமாய்க் குலாசாரங்களை யொட்டி அபரிமிதமான பொருளைச் செலவழிக்கவேண்டி வருவதினாலும், நமது தேசத்தில் வெகு குடும்பங்கள் வறுமைக்குளாகப்பட்டுப், பிற்பாடு, கடன்களில் சிக்குண்டு சொல்லிமுடியாத இடையூறுகளுக்குப் பாத்திரமாகின்றன. சிலவிடங்களில் விவாகங்களின் பொருட்டு வாங்கவேண்டிய கடன்களின் மூலமாய்ப் புருஷர்கள் தங்களுக்கு அதற்கு முன்பு சீவனதாரங்களாயிருந்த மானியங்களைப் போக்கடித்துக்கொண்டவர்களாய்ப், பெண்சாதிகள் வீட்டுக்குக் குடித்தனஞ் செய்ய வரும் வேளைக்குச் சோ

ற்றுக்குங் கதியில்லாமல் கப்பறையைக்கையிலெடுத்துத் தாளம் போட்டுத்திரியவேண்டிய நிலைமைக்கு வருகிறார்கள். இன்னுஞ் சிலவிடங்களில் அவர்களுடைய விவாகங்களுக்காக வாங்கிய கடன் களை, அவர்களுடைய பெயரர்களும் அவர்களுடைய சந்ததியார்க ளும் கூடத்தீர்த்துக்கொள்ள வேண்டிவருகிறது. ஒன்றுக்கும் உத வாத இந்தப் பாலியவிவாகங்களுக்காக இபபடி வீண் செலவு செய் வதைக்காட்டிலும், அந்தப் பொருளிலொருபாகத்தைச் செலவிட் டுச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்த பட்சத்தில் அவர்களெவ்வ ளவு சுகப்படுவார்கள்?

191. இவ்வித துரவஸ்தைகளுக்குக் காரணங்களாயிருக் கும் பாலிய விவாகங்கள் நமது தேசத்தில் பிரபலிப்பதற்குக் கார ணங்களனேகம் காணப்படுகின்றன. சில தாய் தந்தைகள் தாம் பிழைத்திருக்கையிலே தம்முடைய பிள்ளைகளுக்குக் கலியாணஞ் செய்து அழகும் விழவும் வேடிக்கையும் வினோதமும் பார்க்கவே ண்டுமென்கிற அபிலாஷையுடன் பச்சைப் பிள்ளைகளுக்குக் கலி யாணஞ் செய்வார்கள். சிலர் பெயரர்களுடையவும் பெயர்த்திக ளுடையவும் கலியாணங்களைக் காணவேண்டுமென்று அவசரப் பட் டுக் கொண்டிருக்கும் கிழத் தாய் தந்தைகளின் நிர்ப்பந்தத்தினால் செய்வார்கள். மூடங்களாகிய பெண்டாட்டிகளின் போர்பட மாட்டாமல் சிலர் செய்வார்கள். கலியாணத்தோடே கலியா ணமாய்ச் செய்து விட்டால் பணச் செலவு கூடிவருமென்று சிலர் செய்வார்கள். பிள்ளைகளுக்குச் சீக்கிரமாய் ஒரு முடி போட் டுவிட்டால் தாம் யாதொரு சிந்தையுமின்றி ஹாயியாக விருக்கலா மென்று செய்வார் சிலர். நல்ல சம்பந்தம் மிஞ்சிப்போகிற தென்று செய்வார் சிலர். சிலர், வேகமாய் விவாகஞ் செய்யாத பட்சத்தில் தம்முடைய குழந்தைகள் கெட்டுப்போவார்களென் னும் அச்சத்தினாற்செய்வார்கள். வேறு சிலர், தமது பிள்ளை களுக்கு விவாகமாகாதபட்சத்தில் தமக்கு நாலுபேர் நடுவில் அவ மானகரமென்றும், தகுந்த சம்பந்தங் கிடைக்கவில்லையென்று பிரஸ்தாபம் பிறந்து தம்முடைய பிரதிஷ்டைக்குக் குறைவாயிரு க்குமென்று மெண்ணிச்செய்வார்கள். இன்னுஞ் சிலர், பால்யத் திலேயே விவாகமாகாதபட்சத்தில் சாஸ்திரவிரோதமென்ற தவற் றெண்ணத்தினால் செய்வார்கள். இவ்விதப்பட்டவர்களேயன்றி, சுயபிரயோசனத்தை நாடினவர்களாய் மானுஷதர்மத்தைத் தொ

லேத்துவிட்டுத் தயாசூனியர்களாகி ரொக்கம்பெற்றுக்கொண்டோ, மருமகனிறந்தால் அவனுடைய சொத்தெல்லாம் தமக்கே சேரு மென்றோ, மாப்பிள்ளை வீட்டில்சேர்ந்து தாமெல்லாரும் சுகமாய்ச் சாப்பிட்டுக் காலங்கழிக்கலாமென்றோ, தாங்கள்பெற்ற வாயறியாச் சிசுக்களை யுதவாக்கரைகளுக்கும், அங்கவீனர்களுக்கும், குரூபி களுக்கும், கிழவர்களுக்கும், விவாகமென்னும் பெயர்வைத்துப் பலியிடுவார்கள். எந்தக்காரணத்தினால் நடக்கும் பாலிய விவா கங்களுக்காயினும் சோதிடர்களும், புரோகிதர்களும், யாஜகர் களும் உடன்பட்டுச் சமஸ்தவிதமாகவும் முடிக்கச்செய்வார்கள். இப்படிப்பட்ட காரியங்களினாலேயே தனஞ்சம்பாதித்து வயிற்றை நிரப்பிக்கொள்ளக்கருதிய சுயகாரியப்புலிகள் அவற்றை வற்புறுத் தாமல் பின்னை யென்னசெய்வார்கள்? எவருடைய ஏவுதலினால் செய்தாலும், எவ்வபிப்பிராயத்துடன் செய்தாலும், எக்காரணத் தால் செய்தாலும், இயற்கைக்கு விரோதமாயிருக்கும் பாலிய விவாகத்தினால் உண்டாகும் நிவாரிப்பதற்கருமையான கெடும் பயன்கள் விளையாமற்போகவேமாட்டா.

192. இப்பாலிய விவாகங்கள் இப்பொழுது நமதுதேசத் தில் மேலுக்குமேல் பிரபலித்துவருகின்றன. பூர்வம் ஏழெட்டு வருஷங்கள் வயதுவரவிட்டாவது பாலிகைகளுக்குக் கலியாணஞ் செய்துவந்தார்கள். இப்பொழுது பால்மறந்திராத பச்சைப் பெண்குழந்தைகளுக்குக்கூடக் கலியாணஞ்செய்வது சாதாரண மாய்க்கொண்டிருக்கிறது. மேலுக்குமேல் இந்தக் கலியாணங்கள் விவேகிகளுக்குப் பழிப்புக்குப் பாத்திரங்களாகி, மணமணையின் மீது மணமகன் அன்னையைக்காணாது அழுவதும், மணமகள் பாலுக்காக அழுவதும், அவர்களுடைய அழுகையை அடக்குவ தற்காக சிலசமயங்களில் பிரம்பைக் கையிற்பிடித்து உபாத்தியா யரும், இன்னுஞ் சிலசமயங்களில் பருப்புத்தேங்காயும் தேட வேண்டிவருவதும், பெண்சாதியாரோவென்று தெரியமாட்டாமல் குட்டியை மடியிலிட்டுக்கொண்டு பாலூட்டிக்கொண்டிருக்கும் தாயின் கழுத்துக்கே கலியாணமாப்பிள்ளை தாலியைக்கட்டுவதும், போர்பிடிக்கும் மணமகன்மூலமாய்த் திருமங்கலியம் கட்டுவிப்பதற் குக் கையினாலாகாமல் புரோகிதனே மணமகளுக்கு மங்கள சூத் திரத்தைக்கட்டி விவாக தந்திரத்தை நடத்துவதும் சம்பவிக்கின் றது.

193. பூர்வகாலத்தில் பிராமண வைசிய சாதிகளில் தவிர மற்றைய சாதிகளில் சாதாரணமாய்ப் பாலியவிவாகங்கள் நடந்ததில்லை. இக்காலத்தில் மூன்றுவயதிலேயே முண்டைத்தனம் கட்டிக்கொண்ட பாலிகைகள் சூத்திரர்களில் கூட காணப்படுகிறார்கள். இப்பொழுது நஷ்டகரமென்றெண்ணிப் பிராமணர்கள் தமதாசாரங்களிற் சிலவற்றை ஒழித்துவிடுவதற்கு முயன்று கொண்டிருக்கையில், லாபநஷ்டங்களைக்கொஞ்சமாயினும் பகுத்துணராமல், இதர சாதிகளில் சிலர் அவிவேக சிரோமணிகள், பிராம்மணர்கள் ஆசரிப்பதுபோலத்தாமும் ஆசரித்து வந்தால் தமக்குப் கௌரவம் வருமென்றெண்ணி அவர்களுடைய துராசாரங்கள் சிலவற்றைத் தாமும் பின்பற்றி வருவதேயன்றி ஏனையோருக்கும் அவ்வழிகளைக்கற்றுக்கொடுக்கிறார்கள். ஐயோ! எவ்வளவு மௌட்டியம்!

194. உபதேசத்துக்குப் போன விடத்து உள்ள மதியுங் கெட்டதுபோல நமது தேசத்தில் படிப்பு விருத்தியடைய வடையப் பாலிய விவாகங்களும் அதிகரித்து வருகின்றன. பெரிய பெரிய வித்துவான்கள் கூடப் பாலிய விவாகங்கள் விநாச காரணமென்று வாதித்துக்கொண்டு வந்து, தங்களுடைய வரிசை வந்தபொழுது தங்களுடைய குமாரத்திகளுக்குச் சிறுதனத்திலேயே கலியாணஞ் செய்கிறார்கள். படித்துக்கொண்டவர்களுக்கும் படித்துக்கொள்ளாதவர்களுக்கும் பேச்சுகளில் தவிரக் காரியங்களில் அவ்வளவாய் வித்தியாசங் காணப்படாது. நல்ல சம்பந்தங்கள் மிஞ்சிப் போகுமாம்! ஆண்பிள்ளைகளின் தாய் தந்தைகளும் பெண் பிள்ளைகளின் தாய் தந்தைகளும் கூட அவர்களுக்குப் பாலியத்தில் கலியாணஞ் செய்வதை விட்டு விட்டால் சம்பந்த மெப்படி மிஞ்சிப்போகும்? எல்லாருஞ் செய்தால் நாங்களுஞ் செய்வோமென்றால், முதலில் தலையிட்டுக்கொள்பவர்கள் யாவர்? முதலில் சிலர் வழிகாட்டினால், எல்லாரும் ஏன் பின்தொடரமாட்டார்கள்? தாய் தந்தைகளின் மனங்களை நோகச்செய்யமாட்டார்களாம்! ஆகா! என்ன தயவு! நியாயமில்லாத பிடி பிடித்து, கால் மேல் காலை நீட்டிக்கொண்டு இடம் பெயர முடியாத கிழத்தாய் தந்தைகளின் மனங்களைப் புண் படுத்த மாட்டாத பரம தயாளுக்கள், தங்களுடைய பெற்ற வயிற்றில் பிறந்த மூக்குப்பச்சையாறாத அழகிய குமரி

களுக்கு வேகமாய் விவாகங்கள் செய்து, வாழ் நாளெல்லா மனுப விக்கவேண்டிய கொடுந்துன்பங்களை யுண்டாக்குவதற்கு எப்படி மனமொப்புமோ? இவ்விதப்பட்ட வெறுஞ் சாக்குகளை விட்டு விட்டுப், படித்தவர்களனைவரும் தாங்கள் நற்காரியமென்று திடமாய் நம்பியதை எப்பொழுது பயப்படாமல் செய்ய வாரம்பிப்பார்களோ அப்பொழுதே நம்முடைய தேசம் நன்னிலைமைக்கு வரத் தொடங்குமே யன்றிக், கிரியா சூனியமான வீண்சொற்களினால் என்றைக்கும் நன்னிலைமைக்கு வரமாட்டாது.

195. பாலிய விவாகங்களைக்காட்டிலும் விருத்த விவாகங்கள் மிகவும் கோரமாயிருக்கின்றன. பெரிய சம்பந்தங்களுக்கும் தனத்திற்கும் ஆசைப்பட்டு, 60-வயதுள்ள கிழங்களுக்குக்கூட 10-வயதுகூடவாகாத பச்சைக் குழந்தைகளைக் கொடுப்பதைப் பலதடவையும் பார்க்கநேரிடுகிறது. புக்ககத்தில் வாழ்க்கைப்பட்டுக் குடித்தனஞ்செய்துவரும் குமாரத்திகளையும் பிள்ளைகளைப் பெற்ற தகப்பன்களாகும் குமாரர்களையும்பெற்ற பற்கழன்றுபோன பரமவிருத்தர்கள்கூடப் புத்தியீனர்களாய்ப், புருஷனுக்குப் பெண்திக்கு ஆவசிகமென்றும், கால்வலித்தாலும் தலைவலித்தாலும் பெண்சாதி யொருத்தியே அக்கரைக்கு வருபவளென்றும், சமாதானங்களைச் சொல்லிக்கொண்டு சிறு கன்னிகைகளைக் கலியாணஞ் செய்துகொள்ளுகிறார்கள். இவர்கள் உண்மையாய்ப் பாரமார்த்திகளேயாவர்கள். இவர்களுடைய புண்ணியம் வீண்போகாது. ஆனால், இவர்களுக்குப் பெண்களைக்கொடுக்கும் பெற்றோர்கள் கொடிய மிருகங்களோ, பேய்களோ, பெரும்பிசாசுகளோ சொல்வது அசாத்தியம். இனி அத்தம்பதிகளுடைய சௌக்கியமா? ஐயோ! அவர்களுக்கு எவ்வளவு பொருத்தம்! எவ்வளவு இணக்கம்! எவ்வளவு ஐக்கியம்! என்ன பேரன்பு! எவ்விதமான திருப்தி! எவ்வள்வு பாதிவிரத்தியமகிமை!

196. பாவம்! கலியாணமென்றால், சிறு குழந்தைகளுக்கு என்னதெரியும்? பலவித வர்ணப்புடவைகள், உடம்பு நிறைய உடமைகள், பூக்கள், பழங்கள், பட்சணங்கள், பணியாரங்கள், வீடுநிறைய விளக்குகள், அலங்காரங்கள், உற்றார், சுற்றத்தார், விருந்துகள், வேடிக்கைகள், ஆட்டுகள், பாட்டுகள், ஆரதிகள், வாத்தியங்கள், தேவடியாள் கச்சேரி, நாட்டியம், நர்த்தனம்—ஊர்

கோலம், உச்சவம், மத்தாப்பு, கொம்புவாணம், ஆகாசபாணம், நட்சத்திரவெடி—இந்த வைபோகங்கள் பிள்ளைகளுக்கு எவ்வளவு ஆநந்தகரமானவை! நான் குதிரைச்சாரட்டுமேல் ஏறி ஊர்கோலம் போவேன்—நான் யானைமேல் அம்பாரியேறி மேளதாளத்துடன் ஊர்கோலம் போவேன்—என்று அவர்கள் பேசிக்களிப்பார்கள். ஆனால், வாழ்நாண்முழுவதும் சுமக்கவேண்டிய பெருங்கல்லொன்று அவர்கள் கழுத்துக்குக் கட்டப்பட்டதென்று அறியார்கள் அல்லவா?

197. இளங்கணவிகள், இளங்கணவர்கள், இளந்தாய்கள், இளந்தந்தைகள், இளங்கைம்பெண்டுகள்—அந்தோகோ! இவர்கள்தானா இத்தேசத்தில் இப்பொழுது மிகுந்திருக்கும் மகாபாக்கியம்! இனி என்றைக்கும், சீதைகள், திரௌபதிகள், சாவித்திரிகள், தமயந்திகள் சன்மமெடுக்கமாட்டார்களா? ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும், சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும், இக்காலத்தவர்களுக்கும் மூற்காலத்தவர்களுக்குங்கூட, விநாசகாரணமாகிய துராசாரங்கள் எப்பொழுது நிலைபெயர்ந்தோடுமோ? தோழிகளைக்கோரிக் குயில்கள் தோட்டங்களிலினிமையாய்க் கூவுகின்றன. புறவுகள் மருளுற்றுக் காதலுடன் கலந்துகூடுகின்றன மிருகங்களும் தத்தம் இசைக்குத் தகுந்தவற்றைத் தேடிக்கூடுகின்றன. மானிடப்பிறவியெடுத்த வாலிபர்களும் பாலிகைகளு மாத்திரம் ஈடுவந்த பிறகு தங்களுடைய மனம்போனபடி மணம் புரிவதற்குச் சுதந்தரம் பெற்றிருக்கப் புண்ணியம்பண்ணவில்லையா! ஐயோ! எவ்வளவு கொடும்பாவிக்காலமிது!

198. யூரோப், அமெரிகா தேசங்களிற்போலவே நம்முடைய தேசத்திலும் ஸ்திரீகளுக்குச் சர்வசுதந்தரங்கொடுப்பது நன்கென்றும், அவர்களுக்குச் சாதாரணமாய் 24-25 வருஷங்கள் ஈடுவந்தபிறகே கலியாணஞ்செய்வது உத்தமமென்றும், எங்களுடைய அபிப்பிராயமாக இதனால் தெரிந்துகொள்ளவேண்டியதென்று சொல்வதல்ல. தொன்றுதொட்டு வேற்றுவழக்கங்களைப் பின்பற்றிவந்த நமக்கு அத்தேசத்து வழக்கங்கள் என்றைக்கும் சரிப்பட்டுவரமாட்டா. பெண்களாவது புருஷர்களாவது ஈடுவந்த பிற்பாடு வெகுகாலம் வரைக்கும் விவாகஞ்செய்துகொள்ளாமலிருக்கும்பட்சத்தில் அவர்களுடைய சித்தவிருத்தி ஸ்திரமாயிருப்

பது மெத்த துர்லபமானது. வித்தையின்பரிசம் சிறிதுமில்லா நமது பெண்களை அவ்வாறு கன்னிகைகளாக நீடூழி நிறுத்திவைப்பது மிகவும் அவிவேகம். மேலும் புத்திவிரிவுற்ற பின்னர் சொற்பகாலத்தினுள்ளே மணம்புரியுமிடத்துத், தம்பதிகளின் மனங்களில் அந்நியோந்நிய விசுவாசமானது நிலையூன்றி அவர்களுடைய அபிவிர்த்தியுடனேகூட அதுவும் வளர்வுற்றுவரும். ஆதலின் வதூவரர்களுடைய சரீரமும் புத்தியும் செவ்வையாய் வளர்ந்ததன் பிறகு அவர்களுக்கு விவாகம் ஆவசிகமுங் க்ஷேமகரமுமாயிருக்கும். அப்பொழுது அவர்கள் நன்மை தீமைகளைப் பகுத்துநோக்கிப், பரஸ்பரானுகூலத்தைத் தெரிந்துகொள்ளக்கூடுவர். பெற்றோர்களும் பிள்ளைகளின் குணகுண வியற்கைகளைக் கொஞ்சமட்டாவது ஐயமின்றி யறிந்துகொள்ளக்கூடுவர்.

199. பிராமண வைசிய சாதிகளில் கன்னிகைகளுக்குத் திரளும் பருவத்திற்கு முன்னரே கலியாணஞ் செய்யவேண்டுமென்னுமாசாரம் மத்திய காலத்தில் கற்பிக்கப் பட்டதேயன்றிப் பண்டைதொட்டுப் பழகிவருவதல்ல. இவ்வாசாரத்தை இப்பொழுது ஓரடியிலடித்துவிடுவது அசாத்திய மாயினும், 12-வருஷ பிராயம் வரைக்குமாவது கலியாணஞ் செய்யாமல் கன்னிகைகளை நிறுத்தி வைக்கவேண்டியது. இருதுவாய் விடுவார்களென்ற பயத்தைப் பாராட்டக்கூடாது. சிறுதனத்தில் கலியாணஞ்செய்யும் காரணத்தினுல் பெண் குழந்தைகளின் மனங்கள் புருஷர்களின் மேலும் விவாக சவுக்கியங்களின் மேலும் ஓடிப் புத்தி சீக்கிரமாய் முதிர்ந்துபோய்ச் சீக்கிரத்தில் அவர்கள் இருதுவாய் விடுகிறார்களென்றும், கலியாணஞ் செய்யாது விட்டு வைத்திருந்தால் அவ்வளவு சீக்கிரமாய் இருதுவாக மாட்டார்களென்றும் வைத்திய சாஸ்திரிகளனேகர் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் பெண் பிள்ளைகளுக்கு 12-வருஷப் பிராயத்திற்குள் கலியாணஞ் செய்வது மிகவும் அக்கிரமமானது. வாலிபர்களுக்கு 18-வருஷப் பிராயம் வருவதற்குள் விவாகஞ் செய்வதுங்கூடாது. இக்காலத்தில் இத்தேசத்தில் இவ்விதிகளே மிகவும் க்ஷேமகரமாயிருக்கும்.

200. இந்தப்பாழ்ங்கால்த்தில் பிராமணசாதியவர்கள், தமது குட்டிகளுக்குப் பன்னிரண்டு வயது முடியும்வரைக்கும் கலியாணஞ் செய்யாதிருக்கும்பட்சத்தில், அண்டை அயலிலுள்ள

பாட்டிபேர்த்திக ளனைவருங்கூட்டங்கூடி மூக்கின்மேல் விரலிட்டு-கேட்டீர்களா ஆச்சரியத்தை! அந்த மூன்றும்வீட்டுக் கலியாணிக்கு இன்னுங் கலியாணமாகவில்லையாம்! என்றொருத்தியும், எங்கேயும் அழகிய வரனகப்பட வில்லையாம்! என்றொருத்தியும், கடைக்கோடியில் எந்தக்கடை கெட்டவனுக்குக் கட்டப்போகிறார்களோ! என்று வேறொருத்தியும், பெரியமனுஷியான பிற்பாடு சுயம்வரங் கட்டப்போகிறார்களாம்! என்றின்னொருத்தியும், இதுவரைக்கு மாகாமலிருந்தாலல்லவா? என்று மற்றொருத்தியும், ஆகப் பலபெயர் பலவிதமாய்ப் பகர்வார்கள். நகைப்புக்காட்டுவார்கள். பழிப்பார்கள். படாதபாடும் படுத்துவார்கள். ஆயினும் இந்தப்பயனிலாச் சொற்களைப் பெற்றோர்கள் சிற்றளவும் சட்டை செய்யக்கூடாது.

201. சுருதி ஸ்மிருதிகளில் ஸ்திரீகளுக்கு உசித வயதுவந்த பிறகே விவாகம் விதிக்கப்பட்டிருக்கிறதாயினும், பாலியவிவாகங்கள் எங்கும் பண்ணச்சொல்லி விதிக்கப்படவில்லை. உசித வயது வந்து பேரறிவுற்றவளாய் முலைகள் முன்னுக்குவந்த பிறகே கன்னிகைக்குக் கலியாணம் நடக்கவேண்டுமென்று ருக்வேதத்தில் தெளிவாய்க்கூறப்பட்டிருக்கிறது. விவாகத்தின் நாலாந்தினத்தில் வதூவரர்களின் சம்பாஷணையை யுணர்த்துகின்ற வேதமந்திரங்களில், "நீ யோக்கியனென்றும் தபோமகிமையினால் பிறந்து தவத்தினால் வளர்ந்தாயென்றும் நான் மனத்திற்குச் சரிவரத்தெரிந்துகொண்டேனாதலால், என்னிடத்தில் பிள்ளைபெறவேண்டுமென்ற காதலுடைய நீ இனிச் சந்தோஷ பூர்வமாய்ச் சந்தானத்தையடைவையாக" என்று வரனைநோக்கிக் கன்னிகை சொல்வதாகவும், "நீ இச்சமயத்தில் நாயகனிடம்கூடவேண்டுமென்று விரும்புவதாக என்மனதாரக்கண்டுகொண்டேனாதலால், யுவதியாகிப் புத்திரகாமியாகியிருக்கு நீ என்னையணைந்து சந்தானத்தைப் பெறுவைய்யாக," என்று கன்னிகையை நோக்கி வரன்சொல்வதாகவும், தேற்றமுறக் காணப்படுகிறது. ஆபஸ்தம்ப, ஆசுவலாயனாதி சூத்திரங்களியாவுங்கூடக், கலியாணத்து நாலாநாளிரவில் கருப்பாதானம் நடக்கவேண்டியதென்று சொல்லுகின்றன. இக்காலத்தில் நடந்துவரும் பாலிய விவாகங்களில், விவாகத்திற்கு ஆவசிகமாகிய கருப்பாதானம் நடக்காமற்போயினுங்கூட, நம்முடைய புரோகிதர்கள் நாலா

நாளிரவில் கருப்பாதான மந்திரங்களை யுச்சரிக்கும் வழக்கத்தை மாத்திரம் விட்டுவிடவில்லை. விவாக மந்திரங்கள் சொல்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் பொருள் விளங்காத வடமொழியில்லாது, வழக்கத்தில் நாடிவரும் தேசபாஷைகளிலிருக்கும்பட்சத்தில், இச்சங்கதிகள் ஜனங்களுக்குத்தெரிந்து துராசாரங்களெல்லாம் தொலைந்துபோகுமல்லவா! மேலும், மனுஸ்மிருதியில் ஸ்திரீகளுக்குத் திரளும் பிராயம் வந்தபின்னரே விவாகம் விதிக்கப்பட்டிருக்கிறது. இதுவேயன்றி, இருதுவான பிற்பாடு மூன்று வருஷங்கள் காத்திருந்து, இதற்குள் தகப்பன் விவாகஞ்செய்யாதபட்சத்தில், கன்னிகை சுயமாகவே வரனைக்கோரிக்கொள்ளலாமென்று கூடக்கூறப்பட்டிருக்கிறது. அவ்விதக் கன்னிகைக்காவது அவளைக்கலியாணஞ்செய்துகொள்ளும் கணவனுக்காவது, எவ்விதமான பாவமுமில்லையென்றுகூடச் சொல்லப்பட்டிருக்கிறது. கன்னிகை முதுக்குறைவுற்ற பிறகு தகுந்தவரனகப்படாதபட்சத்தில், மரண பரியந்தமும் பிறந்தகத்திலே வைத்துக்கொள்ளவேண்டியதேயன்றிக், குணவீனனுக்கு என்றைக்கும் கொடுக்கக்கூடாதென்றும் மனுஸ்மிருதியில் தெளிவுபட விளக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாகவே இதரமான ஸ்மிருதிகளில்கூடச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, மத்தியகாலத்தில் சிலர் மகானுபாவர்கள், இரஜஸ்வலைகளாகும்வரைக்கும் கன்னிகைகளை விவாகமின்றி வளரவிட்டால் அவர்களுடைய குணங்கள் கெட்டுப்போகலாமென்று அபிப்பிராயப்பட்டு, 8, 9, 10-வயதுகளுக்குள்ளேயே அவர்களுக்குக் கலியாணங்கள் செய்யவேண்டுமென்று சுலோகங்களையும் வசனங்களையும் கற்பனைசெய்து அவற்றைச் சிற்சில ஸ்மிருதிகளில் நுழைத்து, இப்பொழுது நமதுதேசத்தை நாசப்படுத்துகின்ற துராசாரங்களின் புண்ணியத்தைக் கட்டிக்கொண்டார்கள்.

202. சாத்திர விதிகளைக்குறித்து இன்னுமோர் வார்த்தை. நமது தரும்சாத்திரங்களில் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களென்று நான்கு சாதியார்கள் மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுதோ பிரதி சாதியும் அனேக கிளைகளும் சிறு கிளைகளுமாய்ப் பிரிவுண்டுபோய் அளவு கணக்கில்லாத பகுப்புகளாயேற்பட்டுப்போயிருக்கிறது. இதனால், ஒவ்வொரு பிரிவும் மிகவுஞ் சிறியதாகி அதிலுள்ள சிறுபெண்களுக்குத் தகுந்த சம

பந்தங்கள் சரிப்படும் விஷயமாய்ப் பயமுற்பவித்துப், பாலிய விவாகங்கள் மேலுக்குமேல் அதிகமாய் விட்டன. அன்றியும் எந்தப் பகுப்பினர் அந்தப் பகுப்பிலேயே விவாகஞ் செய்து கொள்ளுங்காரணத்தினால், பலவீன சந்ததிகள் பிறக்கின்றன. இந்தமட்டிலேயே இச்சாதி பேதங்களால நமதுதேசம் பெரும்பாலும் கெட்டுப்போய்விட்டது. இன்னும் வேரோடு நசித்துப்போக விருக்கிறது. ஆதலால், மகாசனங்களே! கண்டிறந்து பாருங்கள்! பூர்வ காலத்தில் சாதிபேதங்களில்லாமல் விவாகங்கள் நடந்துவந்தனவென்று கிரந்தங்களில் படிக்கின்றோம். மனுஸ்மிருதியில் வேற்று சாதி விவாகங்களுக்கு விளக்கமுறச் சம்மதிதரப்பட்டிருக்கிறது. இப்பொழுது வேற்றுச் சாதியார் விவாகங்கள் செய்துகொள்ளாமலிருப்பினும், ஒரு சாதியிலாவது வேறுவேறு வகுப்பினர்கள் விவாகங்களேன் செய்துகொள்ளமாட்டார்கள்? பிராமணோத்தமர்களே! நீங்கள் முதற்குடியினரென்னும் பேர்பெற்றீர்களே! முன்னே நீங்களேன் வழிகாட்டமாட்டீர்கள்? ஏன் உங்களுக்குள வேறு வேறு வகுப்பினருக்கு விவாகங்களை நடத்தமாட்டீர்கள்? இனிக் கட்சிகளை யொழித்துவிடுங்கள். தோழமைப்படுங்கள். கிளைஞராகுங்கள். தேசத்தாயின் முறையைச் சற்றுக்கேளுங்கள். நன்னிலைமைக்கு மீளுங்கள்.

203. அருணெஞ்சுற்ற தாய் தந்தையரே! இப்பொழுது சொல்லப்பட்ட தனைத்தையும் முடிவுகூரக் கேட்டீர்களல்லவா! இனி, வாயறியாப்பூச்சிகள், கண்திறவா இளங்குட்டிகளுக்குக் கலியாணஞ்செய்ய உங்களுக்கு மனமொப்புமா? தனத்தையும் கனத்தையுங்கண்டு, வயிற்றிற் பிறந்த பிள்ளைகளுக்குக் கன்னெஞ்சுடன் உங்கள் கைபாரக் கஷ்டங்கள் தேடித்தருவீர்களா? உங்கள் வீடுகளை இளங் கைம்பெண்களுடன் நிரப்புவீர்களா?—ஏன் பேசீர்? தைரியம் வகியுங்கள். இரஜஸ்வலைகளானாலுமாகட்டும், உங்கள் பாலிகைகளுக்குப் பன்னிரண்டு வருஷப் பிராயம் வருவதற்குள் என்றைக்கும் எக்காரணத்தினாலும் கலியாணங்கள் செய்யவேண்டாம். இப்படியென்று பிரமாணஞ் செய்யுங்கள். சர்வ அமங்கலங்களும் நடந்துவரும் இக்காலத்தில் சாஸ்திர வசனங்களின் சுவை போய்விட்டது. வேத வாக்கியங்கள் விஷமாய்விட்டன. ஐயோ! நீங்கள் இடுப்பிழுத்துக் கட்டாமற்போனால், இன்னுமென்னகதி?

கைம்பெண் கலியாணம்.

204. இந்த மகா தேசத்தை விழுங்கி விடுகின்ற துராசாரங்களில் நம்முடைய கைம்பெண்டுகளை வேதனைப் படுத்துமவை மிகவும் குரூரமானவை. இவை பண்டைதொட்டுப் பிரபலித்திருப்பதினால் நம்முடைய நெஞ்சமும் மனமும் அழுத்தமடைந்து போய்க் கன்னெஞ்சுகளாய்க் கட்டி கட்டிக் கொடூரத்தைச் சிறிதும் எண்ணாமல் அவற்றைச் சர்வசாமானியமாகவே பார்த்துக் கொண்டிருக்கிறோம். சிற்றெறும்பாயினும் துன்பப் படுத்த மனமொப்பாத இள நெஞ்சர்கள் கூட மனுஷியர்களைப் பீடித்துவரும் கெடுவழக்கப் பிசாசங்களைக்கண்டு நிவாரிக்கமாட்டாமல் நிர்த்தயையுள்ளவராய்ச சும்மாவிருக்கிறார்கள்.

205. நமது தேசத்தில் இப்பொழுது பத்து வருஷப்பிராயத்துக்குட்பட்ட விதவைப்பெண்கள் சுமார் லட்சம் பெயர் இருக்கிறார்கள். அதன்மேல் 14-வருஷப் பிராயத்துக் குட்பட்டவர்கள் இரண்டு லட்சம் பெயா இருக்கிறார்கள். அதன் மேல் 19-வயதுக்குட்பட்டவர்கள் நாலு லட்சம் பெயரிருக்கிறார்கள். இவ்வேழு லட்சம் பெயர் பாலவிதவைகளின் பாரத்தைச் சுமந்து கொண்டிருக்கும் இத்தேசத்திலிருந்து ராஜ்ஜிய லட்சுமி தொலைந்து போய்விட்டாளென்றால் என்ன ஆச்சரியமுள்ளது? அவர்களுடைய பெரு மூச்சு படாதிருப்ப தெப்படிக்கிடைக்கும்? அவர்களுடைய வயிற்றெரிச்சல் வீண்போகுமா?

206. கொஞ்சகாலத்திற்கு முன்புவரைககும், இறந்துபோன புருஷனுடன் சதிகள் உடன் கட்டை யேறுவது நமது தேசத்து வழக்கங்களுளொன்றாயிருந்தது. இந்தக்கோரமான துராசாரத்தைத் துரைத்தனத்தார் பற்பல கட்டு திட்டங்களை யேற்படுத்திக் காலகிரமத்தில் வெகு சிரமத்தின்மேல் ஓட்டிவிட்டார்களாயினும், இப்பொழுது இளங்கைம்பெண்டுகள் அநுபவித்துவரும் கஷ்டதசையைக்காட்டிலும் அதுவே ஆயிரமடங்கு நலமுடையதென்று ஒவ்வோர் பொழுது மனத்திற்குத்தோன்றுகின்றது. அந்தோகோ! அவர்களுடைய கஷ்டங்களை நினைத்த மாத்திரத்திலேயே எவ்வளவு கன்னெஞ்சுள்ளவனுக்காயினும் கண்களில் நீர்ததும்புகின்றது. அப்பொழுதப்பொழுது இவ்வுலகத்தில் அனேகரை

ஓர் வீச்சிலேயே துடைத்துக்கொண்டு போய் விடும் வைசூரி வாந்திபேதி முதலிய ஒட்டு நோய்கள், நம்முடைய பால விதந்துக்களின் வாதையைத் தீர்ப்பதற்காகக் கடவுளால் படைக்கப்பட்டனவோ வென்று ஒவ்வோர்பொழுது சமுசயம் தோன்றுகின்றது. இளம் பிராயத்திலேயே கன்னிகைகளுக்குக் கலியாணஞ்செய்துவைத்து, அதுவரைக்குமெவ்வளவோ செல்வத்துடன் வளர்த்துவந்து, அவர்களுக்கு அமங்கலைத்தனம் பிராப்தமாகி நெஞ்சு பகீரென்று வெடித்துப் போகுமாறிருக்குஞ் சமயத்தில், இன்னுமதிகமான பிரியத்துடன் ஆதரிப்பதற்குப் பதிலாய்ப், பரிதாபமெல்லாமடியோடே நீக்கிவிட்டு, அவர்களுடைய திறமான நகைகளையும் சேலைகளையும் பிடுங்கிக்கொண்டும், அவர்களுடைய ஆவிக்குச் சமானமாய்ப் பாவிக்கப்பட்ட தலைமயிரை வெழுமெனச் சிறைத்துவிட்டும், ஒருவேளைச் சோறும் ஒருவேளை பலாகாரமுமாய்ச்செய்தும், பட்டினிகளுக்கு உடன்படுத்தியும், அவர்களைச் சர்வசவுக்கியங்களுக்கும் தொலைவிலிட்டுச்சொல்ல முடியாத் துன்பங்களுக்காளாக்குகிறார்கள். ஐயோ! இது எவ்வளவு குரூரம்! எவ்வளவு அநியாயம்! அவர்களுடைய நடவடிக்கை குற்றமற்றிருக்கவேண்டுமென்று அவர்களை மேன்மேலும் அதிகமான நிர்ப்பந்தங்களுக்குட்படுத்துகிறார்கள். இதுவேயன்றி, அவர்களை மகாபாதகிகளாய்ப் பாவித்துச், சுபகாரியங்களின் சோலிக்குவரவொட்டாமல் தடுத்து, அவர்களுடைய முகங்களைப் பார்த்தமாத்திரத்திலேயே அமங்கலம் சம்பவிக்குமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தத் தரித்திர முண்டையை மணந்து தங்கமான புருஷன் யமலோகஞ்சேர்ந்தானென்றும் பலர் நிந்திக்கிறார்கள். எங்கேயோ ஓரோரிடத்தில் தவிரப், பாலவிதவைகளனைவரும் இப்படிப்பட்ட பொறுக்கரிய கொடுநிலைமையில் போடப்பட்டு, இக்கேடுகெட்ட பிழைப்பைக் காட்டிலும் மரணமே நலமென்று கருதவேண்டிய அகத்தியமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

207. கேளுங்கள்—நமது தேசத்தில் விதவைகளுக்காகக் கபிலஸ்மிருதியில் விதிக்கப்பட்டிருக்கும் கடமைகள். சுலோகத்தின்பொருளை ஏற்றக்குறைவுகளின்றி உள்ளதுள்ளதுபோல வெளியிடுகிறோம். "நாயகன் காலஞ் செய்து விட்ட பெண் சாதி தயிர் குடிக்கக் கூடாது; பால் குடிக்கக்கூடாது; சுகந்தப்பொருள்களை யண்டக்கூடாது; நல்ல சேலை யுடுக்கக் கூடா

து; அலங்காரம் பண்ணிக்கொள்ளக் கூடாது; பாட்டுக்கேட்கக்கூடாது; தாம்பூலம் போட்டுக்கொள்ளக கூடாது; மையிட்டுக்கொள்ளக்கூடாது; பூக்களின் வாடையிலேயே நிற்கச் கூடாது; கட்டில் முதலிய சுகசையமைகளின் மேல் படுக்கக் கூடாது; உடம்புக்கு நலுங்கு இட்டுக்கொள்ளக்கூடாது; எண்ணெய் தேய்த்துக்கொண்டு முழுகக்கூடாது; வெந்நீரில் குளிக்கக் கூடாது; பல்லக்கு, வண்டி முதலியவற்றின்மேல் ஏறக்கூடாது; இப்படிப்பட்ட இதரமான பதார்த்தங்களெவற்றினையும் இச்சிக்கக் கூடாது; ஒருவர்மேல் தயைகாட்டக்கூடாது; கோபப்படக்கூடாது; புண்ணியகாரியங்களைச் செய்யக்கூடாது; சுபகாரியங்களைச் செய்யக் கூடாது; இந்தக் காரியங்களில் எவற்றைச்செய்தாலும் தாய்தந்தையர்களின் கையினுலும் உற்றூர் சுற்றூர் கையினுலும் அடிபட வேண்டியது; உப்பு தின்னக்கூடாது; புளி தின்னக்கூடாது; தித்திப்பு தின்னக்கூடாது; அறுபது வயது வரும்வரைக்கும் ஒரு வேளை பகுதி வயிற்றுக்கே யுண்ணவேண்டியது." இவ்விதப்பட்ட விதிகளை நியமிப்பதைககாட்டிலும், ஒருதரமாய் அவர்களுடைய தலைகளைத் தறித்துப்போடவேண்டுமென்று விதிப்பதே நலமாயிருக்கும்.

208. இவ்விதக் குரூரகொடுமைக்குக் காரணம் நம்மவர்களுடைய அவிவேகத்தைத் தவிர மற்றேதும் தெரியவராது. விதந்துக்களுக்கு விவாகஞ்செய்யக்கூடாதென்னும் கெட்ட ஆசாரத்தை எவ்வாறோ ஒருவாறு தொடர்ந்துவந்து, அவர்களைத் தீயவொழுக்கத்தினின்று விலக்குவதற்காக இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்களை நியமித்திருக்கிறார்கள். ஆயினும் இது எவ்வளவு பைத்தியகாரத்தனம்! காமசாந்திக்காக ஏற்பட்டிருக்கும் நியாயவழியாகிய விவாகபந்தத்தை விலக்கிவிட்டு, நமது சிறு கைம்பெண்களை எவ்விதப்பட்ட கட்டுதிட்டத்தில்வைத்தாலும், அவர்களை எவ்விதப்பட்ட துன்பங்களுக்கு உட்படுத்தியபோதிலும், அவர்களுடைய சௌந்தரியத்தை எவ்விதவுபாயங்களினல் கெடுத்துவிட்டாலும், அவர்களுடைய சரீரங்களை எவ்வளவு இளைக்கச்செய்தாலும், எத்தனை நற்போதனைகள் செய்தபோதிலும், அவர்களைச் சரிவரக்காப்பாற்றிக்கொள்வது என்றைக்கும் சாத்தியமாகாது. சர்வ இந்திரிய சேஷ்டைகளையும் துறந்துவிட்டு அடவிகளில் கந்தமூலபலங்களைப் புசித்துத் தலைகீழாய்த் தவம்புரியும் மகாமுனிகள்கூட, அப்பொழு

தப்பொழுது காமவிகாரத்தினல் விவேகத்தைத் துறந்து ஆகாத காரியங்களைச்செய்து அவஸ்தைப்படுகிருர்கள். அப்படியிருக்க உப்பும் புளியும் காரமும் சாப்பிட்டு, எங்குகண்டாலும் சமுசார சுகங்களைக் கண்ணாரக்கண்டு, யௌவனப் பருவமுள்ளவர்களாகிய சுந்தரபுருஷர்களி னடுவிலு, மாயோபாயங்களைத் தொடுக்கும் தீயவர்கணடுவிலும் திரிந்துகொண்டு, நல்ல யௌவன தசையிலிருக்கும் இளங்கைம்பெண்டுகளுக்கு இந்திரிய நிக்கிரகணமெவ்வாறு சாத்தியப்படும்? சாத்தியப்படாதென்பதற்குத் திருஷ்டாந்தம் சிற்றமங்கலைகளுளனேகரது நடவடிக்கையேயாகும். மன்மதனல் வருத்தபபட்டு விபசார நடத்தையில் வீழ்ந்து எவ்வுபாயத்தினுலாவது சோரபுருஷர்களுடன் புணர்ந்து, அவர்கள் அனேகமான அனர்த்தங்களை யுண்டுபண்ணுகிருர்கள். இது அனைவருக்கும் தெரிந்த இரகசியமேயல்லவா?

209. ஆசாரியர்களென்றும், சாஸ்திரிகளென்றும், சோதிடர்களென்றும், வேதாந்திகளென்றும், விதவைப் பெண்களிடத்துக் சேர்வார் அனேகர், அவர்களுக்குக் காமோபதேசங்களைச் செய்து அவர்களுக்குக் காமத்தைத்தீர்த்துத்தாமும்திருப்தியடைகிருர்கள். அனேக குடும்பங்களில் அமங்கலைகள் வீட்டுவேலைக்காரர்களுக்கும் சமையல் பிராமணர்களுக்கும் ஐக்கியமாகிருர்கள். கொஞ்சம் ஸ்திதி கிடைத்துச சுதந்தரம்பெற்ற கைம்பெண்டுகள், தங்களுடைய நிலவள விவகாரங்களைச் சரிவரப்பார்த்துக்கொள்வதற்காக யாரையாவது காரியஸ்தர்களை நியமித்துக்கொண்டு, அவர்களுடன்கூடிப் பகிரங்கமாய் மனம்போனபடிச் சஞ்சரித்துக் களிக்கிருர்கள். வீட்டிலுள்ள நிர்ப்பந்தங்களைப் பொறுக்கச் சக்தியற்றவர்களாய் அனேகர் தற்கொலை செய்துகொள்ளத் துணிகிருர்கள். சிலர் தங்களுக்கெதிர்ப்பட்ட எந்தத் தட்டானையோ, வண்ணனையோ, அம்பட்டனையோ, துலுக்கனையோ, பட்டுநூல்காரனையோ பிடித்துக்கொண்டு வீடு விட்டோடிப் போகிருர்கள். மேலும் திருட்டு விபசாரத்தினல் கருத்தரிக்கும் பட்சத்தில், அனேகர் மருந்துகள் சாப்பிட்டுக் கருவழித்துக்கொள்ளுகிருர்கள். அப்படிப்பட்ட மருந்துகள் விகற்பமாய் முடிவதினுல் சிலர் உயிர்களையே யிழந்து விடுகிருர்கள். சிலர் சிசுவத்திகளைச் செய்கிருர்கள். சிலர் தாம் பெற்ற பிள்ளைகளைக் கண்டு கண்டு கையினுல் கொல்ல மனமொப்பாமல், குளக்கரை மீதிலோ, ஸ்நானமண்டபங்

களிலோ, மரத்தடிகளிலோ, சாவடித்திண்ணைகளின் மேலோ படுக்கவைத்துப்போகிறார்கள். இன்னுஞ் சிலர் தேவடியாட்களுக்கோ வண்ணார்களுக்கோ, பரியாரிகளுக்கோ, பறையர்களுக்கோ, தட்சிணையோடு கூடத்தானஞ் செய்கிறார்கள். இதையெல்லாம் நினைத்த மாத்திரத்திலே, எப்படிப்பட்டவருக்கும் உரோமம் சிலிர்க்கின்றது.

210. ஐயையோ! நமதுதேச முழுவதும் விபசாரத்துடனும், கள்ளக்கணவர்களுடனும், கூட்டிக்கொடுப்பவர்களுடனும், பிண்டஹத்தி செய்வோர்களுடனும், சிசுவத்தி செய்வோர்களுடனும் நிறைந்து அழுகி ஊழ்த்துப்போகின்றது. தகுந்த பரிகாரத்தைச்செய்யாமல் அசட்டையாயிருப்பதினால் நல்லவிடங்கள்கூட மண்ணடித்துக்கொண்டு போகின்றன. விபசாரநடவடிக்கைகளில் தலையிட்டுக்கொண்ட முண்டைச்சிகளின் தோழமையினால் கணவர்களுடன் இல்லற நடத்திவரும் இல்லாட்கள்கூட விபசாரச் சுவைகண்டு பொல்லாதவர்களாய்விடுகிறார்கள். தான்கெட்டதுமல்லாமல் சந்தனபுஷ்கரணியுங் கெடுத்தானென்னும் உலகநீதியானது வீண்போகாதல்லவா! ஏ மூடசனங்களே! ஏ கல்வி பயின்ற சான்றோர்களே! சாஸ்திரங்களையுணர்ந்த சாஸ்திரோத்தமர்களே! தேசாபிமானிகளே! இவ்விதத் தீ நிலைமையைக்கண்டு எவ்வாறு மனஞ்சகிக்கிறீர்கள்? எவ்வாறு உங்கள் வீடுகளில் நடக்கும் அவமானகரமான காரியங்களைக்கண்டும், காணாதவர்களைப் போலச் சஞ்சரித்துக்கொண்டு அபிமானத்தை விலக்கிவிடுகிறீர்கள்? உங்கள் பெண்களுக்கும், மாட்டுப்பெண்களுக்கும், தங்கை தமக்கைகளுக்கும், அண்ணி மைத்துனிகளுக்கும் முண்டைமுக்காடுகள்போட்டு, அவர்கள்செய்யும் கெட்டகாரியங்களை நன்குணர்ந்தும், எந்தமுகத்துடன் நால்வர் நடுவில் வெட்கங்கெட்டுத் தலையெடுத்துக்கொண்டு திரிகிறீர்கள்? ஓடிப்போன சிறுக்கிகளைக் கூடத்திரும்பவும் போய்க்கூட்டிவந்து, உறவினர் வீட்டுக்குப்போயிருந்தார்களென்று போக்குச்சொல்லி வீட்டிலிட்டுக்கொண்டு எப்படி வெட்கங்கெட்டபிழைப்புப் பிழைக்கிறீர்கள்? வீடுவிட்டோடிப் போகவேண்டாமென்று மன்றாடி அவர்களுக்கு இன்னுங் கொஞ்சம் அதிகமான சுதந்தரத்தைக்கொடுத்து வீட்டிலேயே விபசரித்துக்கொண்டிருக்க எப்படிச் சம்மதி கொடுக்கிறீர்கள்? பெண்களுக்குப் பிள்ளைக் குளிப்பாட்டிப் பிள்ளைகளை வளர்ப்பதற்

குப் பதிலாய்க் கருவழிப்பதற்கும், சிசுவத்தி செய்வதற்கும் பெற்றோர்கள் எப்படி உடன்படுகிறார்கள்? உங்களுடைய பெருமை பிரதிஷ்டையெல்லாம் எங்கே பாழாய்ப்போயின? உங்களுடைய மான மரியாதைகள் எங்கே மண்ணாய்ப்போய்விட்டன? உங்களுடைய கருணையெல்லாம் எங்கு கரியாப்போய்விட்டது? உங்களுடைய ஆண்மையெல்லாம் எங்கே அழிந்து சாம்பலாய்ப்போய் விட்டது? நீங்கள் பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களானாலென்ன, மந்திரிகளானாலென்ன, ராஜாக்களானாலென்ன, மகா தனவான்களானாலென்ன, சமஸ்த விதமான சண்டாள நடத்தைகளையும் வீட்டில் கூட்டி வைத்துக்கொள்ளும் உங்களுடைய பிழைப்புமொரு பிழைப்பென்றே யெண்ணுகிறீர்களா? இனி நீங்கள் பகுத்துக் கொடுக்கும் பணத்துக்காசைப் பட்டு உங்களுடைய சந்தர்ப்பணைகளிலும் சமாராதனைகளிலும் போசனஞ் செய்யும் பிராமணோத்தமர்களையும், உங்களுடைய பிட்சைகளை யங்கீகரிக்கும் குருசுவாமிகளையும் என்ன பெயரிட்டுக் கூப்பிடுவது? இப்படிப்பட்ட மகா புருஷர்களா குலத்தைக் கெடாமற் காப்பாற்றுபவர்கள்?

211. அடக்க முடியா அசங்காரத்தினால் இப்படி ஏசிக்காட்டினோமே யன்றிப், பாவம்! அனேகர் பெற்றோர்களும் உற்றோர்களும் தமது பால விதந்துக்களின் துன்னிலைமையை உன்னியுன்னி அளக்கலாத்துயரக்கடலிலாழ்ந்து, அதனால் விளையும் அனர்த்தங்களினால் பொறுக்கரிய துயரத்தில் மூழ்கியே புத்தி பிறழ்ந்து கிடக்கிறார்கள். விதவைகளுக்கு விவாகம் செய்யக்கூடாதென்று எத்தனை சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருப்பினும் சட்டை செய்யாமல், செய்வதே சிரேயஸ்கரமென்று திடவபிப்பிராயங் கொண்டு துணிவுற்றிருக்கிறார்கள். ஆனால், குலத்துக்கு அப்புறம் விலக்கப்படுவோமென்னும் பயத்தினால் கலக்கமுற்று உலகத்திற்கு உட்பட்டு, ஒன்றும் செய்யமுடியாதிருக்கிறார்கள். வித்தை பயின்றவர்களாய்ப் பரோபகாரார்த்தம் பாடுபட மனமுள்ளவர்கள்கூடக், கைம்பெண்டுகளின் கதியைக்கண்டு அத்தியந்த பரிதாபமுள்ளவர்களாயினும், தம்முடைய மூடப்பெண்சாதிகளுக்கும் பெற்றோர்களுக்கும் உற்றோர்களுக்கும் கஷ்டவிசாரங்களைக்கொணர்ந்து சுமத்த இஷ்டமற்றவர்களாய்ப், பாழ்ம்பஹிஷ்காரத்துக்குப் பயப்படுகிறார்கள். பிறத்தியருடைய நன்மைக்காக எத்தனைவருத்தங்களையாயினும் தாமனுபவிக்கச் சம்மதித்தவர்களாயினும், தமர்

களனைவரையும் சிரமத்துக்குள்ளாக்குவது நியாயத்துக்கு விரோதமென்றெண்ணித், தமது அபீஷ்டங்களின் பிரகாரம் நடந்துகொள்ளச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். எவ்வளவு படித்தவர்களாயினும் இவர்களும் மானிடப்பிறப்பினர்களே யல்லவா? ஒவ்வொருவர் மிகுந்த துணிச்சலுற்றவர்களாய் கைம்பெண் மணங்களை நடத்தியபோதிலும், அவர்களுக் கனேகர் தோழமைப்படாதவர்களானார்கள். மேலும் தோழமைப்படுவோமென்று முதற் றுணிச்சல்காட்டி வாக்குத்தானஞ் செய்தவர்கள், முன்னே யிறங்குங்களென்று சாகசிகளைத் தூண்டித் தள்ளியவர்க ளனேகர் பின்னுக்குத் திரும்பி நல்லதருணத்தில் பின்வாங்கி ஓடிப்போய்விட்டார்கள். ஆகா! தோழர்களென்றால் இவர்களையே யல்லவா முதலிலெடுத்துரைக்கவேண்டியது? இந்த மகானுபாவர்கள், அவிவேகிகளோ, அதைரியஸ்தர்களோ, காலத்திற்கேற்ற கோலக்காரர்களோ, குச்சிதர்களோ, குடிலர்களோ, குட்சிம்பரர்களோ நிருணயிக்கச் சக்தியற்றிருக்கிறோம்.

212. விதந்து விவாகங்கள் சாஸ்திரவிரோதமென்றும், இவ்யுகத்தில் அவற்றை நடத்துவது பாபகாரணமென்றும் வாதிப்பவர்களும் சிலர் உளர். ஆனால், அவர்கள் கூடக் கைம்பெண்களின் கெடு நிலைமையைக்கண்டு மனத்தினில் துயரமுற்றவர்களாய் அவர்களுக்குக் கலியாணஞ் செய்தாலே பற்பல விதமான அனர்த்தங்கள் நிலைபெயர்ந்தோடுமென்று நம்புமவர்களாயிருக்கிறார்கள். சாஸ்திர விரோதமெனுங் கூற்று இவர்களுடைய வாயிலிருந்து வெளிப்படும்பொழுது உடம்பு பகீரென்று கொழுந்துவிட்டெரிகின்றது. சாஸ்திரவிரோதமாமே? ஆமாம்! இக்காலத்தில் பிராமணோத்தமர்களென்று சொல்லிக்கொள்பவர்களுடைய பிரவர்த்தனை யெல்லாம் சாஸ்திர சம்மதமாகவே யிருக்கின்றதல்லவா? முண்டைகளிடம் சென்று விபசரிப்பது சாஸ்திரசம்மதமே யல்லவா? முண்டைகள் கருவழித்துக்கொள்வது சாஸ்திரசம்மதமே யல்லவா? ஓய் இராமாயண சாஸ்திரிகளே! உங்களைத்தான்கேட்கிறேன்! விபசாரம் சாஸ்திரசம்மதமேயல்லவா? சோரபுருஷர்களுடன் ஓடிப்போனவர்களை மீளவும் பிடித்துவந்து வீட்டிலிட்டுக்கொள்வது சாஸ்திர சம்மதமே யல்லவா? கன்னிகாதானமென்று மந்திரங்களையோதிப் பொன்னுக்காக ஆசைப்பட்டு விக்கிரயஞ்செய்வது சாஸ்திர சம்மதமேயல்லவா? பொய்பேசுவது,

பித்தலாட்டம் பண்ணுவது, கள்ளு, கபடு, சூது, மாயம், அநியாயம், பிறர்பொருளபகரிப்பது, பொய்ச்சாட்சி சொல்வது, இவையெல்லாம் சாஸ்திரசம்மதமேயல்லவா? கள்குடிப்பது, சாராயபானம் பண்ணுவது, மாமிசஞ்சாப்பிடுவது சாஸ்திரசம்மதமேயல்லவா? வெட்சம்கெட்டுப்போய்ச் சாஸ்திரமென்னும் வேஷமேன்போடுகிறீர்கள்? சாஸ்திரங்கள் உங்களைப்போலக் குரூரமானவையல்ல. இக்கலியுகத்தில் பிரதான பிரமாணமாகிய பராசரஸ்மிருதியில் என்னவென்று கூறியிருக்கிறதோ சற்றுக்கவனியுங்கள். "புருஷன் தேசாந்தரஞ் சென்று போனபோக்கின் வரலாறு தெரியாமலிருப்பினும், இறந்துபோய்விட்டாலும், சந்நியாசியானாலும், நபுஞ்சகனானாலும், பதிதனானாலும், பெண்ணுக்குப் புனர்விவாகஞ் செய்யலாம்." என்று திருத்தமாய் விதிக்கப்பட்டிருக்கிறது. இனி மனுஸ்மிருதியைப் படித்துப்பாருங்கள். அதில்கூட ஸ்திரீயின் புனர்விவாகம் அங்கீகரிக்கப்பட்டேயிருக்கிறது. ஓய் பண்டிதர்களே! உங்களுடைய பாண்டித்தியம் யாவற்றினையும் பயனில் வழிச்செலுத்திச், சாஸ்திரங்களுக்கு இல்லாப்பொருள்களைக் கற்பியாதேயுங்கள். கணவர்கள் மாண்டுபோன பெண்மணிகள்மேல் வெங்கோல்செலுத்துவது பெருஞ்சாம்பிராச்சியமல்ல. தேசக்ஷேமத்தைத் திறந்த கண்களுடன் பாருங்கள். இன்றைக்குப் பிறத்தியருக்கு உண்டாயிருக்கும் துன்பங்களே நாளைக்கு உங்களுக்குக் கூடச் சம்பவிக்கப்போகுது காணுங்கள்! இந்தச் சொல்லை மனத்திலேற்றிவையுங்கள்.

213. ஒருவேளை, விதந்துக்களின் விவாகங்கள் சாஸ்திரத்துக்கு விரோதமென்றே உங்களுக்கு நம்பிக்கையிருக்குமாக. அப்படியிருப்பின் நீங்கள் மணக்கவேண்டாம். உங்களுடைய விதவைகளுக்கு விவாகஞ் செய்யாதிருங்கள். அப்படிக்கன்றி மற்றவர்கள் எவராவது அவ்வித விவாகங்களைச் செய்தாலும், செய்துகொண்டாலும், அவர்களை யேன் சங்கடப்படுத்துகிறீர்கள்? உங்கள் வீட்டில் போசனஞ் செய்வதற்கு அவர்கள் தகார்களா? அவர்கள் வீட்டில் போசனஞ் செய்தால், உங்களுக்கேதாவது பாவம் வந்து சுற்றிக்கொள்ளுமா? ஏதாவது வியாதி வந்துசேருமா? ஜாரசோரர்களும், சுராபான லோலர்களும், பரமபாவனர்களாகி யிருக்க, அநாதைகளான விதவைகளுக்கு விவாகஞ் செய்தவர்களும், அவர்களை விவாகஞ்செய்து கொண்டவர்களும் வெறும் உத

வாக்கரைகளாய் விட்டார்களல்லவா? தோன்றியவர்களுடனெல்லாம் கூட விபசரிக்கும் கைம்பெண்டாட்டிகள் வீட்டில் நீங்கள் போஜனம்செய்யலாம். அவர்கள் கையினல் சமைக்கப்பட்டதை நாக்குகளை நீட்டிக்கொண்டு உதடடித்துச் சாப்பிடலாம். ஆனல் கெட்ட வழிகளில் புகுவதற்கு இட்ட மற்று, யாரோ ஒரு நாயகனைத்தேர்ந்து மணந்துகொண்டு நியாய மார்க்கத்தை யநுசரித்துவரும் விதந்துக்களின் வீட்டுவாயிலையாவது நீங்கள் உங்களுடைய திவ்விய பாதங்களையிட்டு மிதிக்கலாகாதல்லவா? அப்படிப்பட்டவர்களின் வீட்டில் போசனஞ் செய்தவர்கள் கூட உபயோகமற்றவர்களாய்ப் பஹிஷகாரத்திற்குப் பாத்திரமானர்க ளல்லவா? இது எப்படிப்பட்ட நியாயம்? உங்களைக்கடவுளெப்படிப் பெருமைப்படுத்துவான்? சங்கராசாரிகள் ஒப்புக்கொண்டால் நாங்களுமொப்புக்கொள்ள யாதொரு தடையுமில்லை யென்றுசொல்லுகிறீர்களோ? சங்கராசாரிகள் யார்? நீங்கள் செய்யும் அக்கிரமங்களைக்கண்டு அவரால் உங்களை யென்ன செய்யக் கூடியதாயிற்று? நீங்களெல்லாம் கிரமமான காரியங்களைச் செய்ய உடன்பட்டால் அவர்வேண்டாமென்பரா? என்னர். என்னக்கூடார். ஓய் சங்கராசாரியரவர்களே! ஓய் மதாசாரிய சுவாமியாரே! நீரெங்கிருக்கிறீர்? உமது அதிகாரம் நாமத்தில் மாத்திரம் மிகுந்திருக்கின்றது. அதைச் சர்வஜன சம்மதமாய்ப் பலப்படுத்திக்கொள்வதற்கு இதுவே நல்ல சமயம். கைம்பெண் மணமுதலிய நல்ல காரியங்களுக்குக் கையோடு கட்டளை கொடுங்கள். அவ்வித மணங்களைச் செய்பவர்களுக்கும் செய்துகொள்பவர்களுக்கும் பஹிஷ்காரமில்லையென்று பகிரங்கப்படுத்துங்கள். அவர்கள் வீட்டில் பிட்சை செய்வதற்கு அங்கீகாரஞ்செய்யுங்கள். மூடர்கள் சொற்களைச் சட்டை செய்யாதேயுங்கள். உங்களதிகாரம் நிலைபெற்றோங்கி உண்மையாய் நீங்கள் ஜகத் குருக்களாவீர்கள். முதலில் தூஷிப்பவர்களே கடைசியில் பூஷிப்பார்கள். நீங்கள் ஞானசொரூபிகள். விவேகத்திற் குறைவிடங்கள். முன்னளில் பராசரர்முதலிய பரமமகானுபாவர்களைப்போலவே இந்நாளில் நீங்களும் பெரும்பெயர் படைத்துக்கொள்ளுங்கள். இந்த விண்ணப்பத்தைச் கேளுங்கள், சுய புத்தியைக்கொண்டு தீர்க்காலோசனை செய்யுங்கள். இதோ, அனேக கோடி நமஸ்காரங்கள். இதோ லட்சானுலட்ச இளந்தலைக் கைம்பெண்களின் சாஷ்டாங்க வந்தனங்கள்!

214. இது எவ்விடத்து நியாயம்? பெண்சாதி மரண மடைந்தால் புருஷன் மறுபடியும் மணம்புரியலாம். பெண்சாதி பிழைத்திருக்கையிற்கூடப், பின்னுமொரு பெண்சாதியைக் கட்டிக்கொள்ளலாம். பசும்பிராயத்தில் பர்த்தாவை யிழந்துபோன பாலவிதவைகள் மாத்திரம் கலியாணஞ்செய்துகொள்ளக்கூடாதாம்! ஆசையெல்லாம் அடிமாண்டுபோய்க் காலமேல்கால் நீட்டிக்கொண்டு காய்ந்துபோன வற்றலாயிருக்கும் கிழப்பிணங்கூட வெகு சிறு பெண்ணைக் கலியாணஞ்செய்துகொள்ளலாமாயினும், புதிதாய்ப்பூத்த நவயுவதியாகிய பாலவிதவை மாத்திரம், சீவிதகால முழுவதும் மணமில்லாது வணங்கிக்கிடக்க வேண்டுமெல்லவா? என்னகோரம்! ஒவ்வொரு இளந்தலைக் கைம்பெண்ணுக்குள்ள சகஜமான அளவற்ற சௌந்தரியம் எவ்வளவு மனக்கவர்ச்சியுள்ளது! எவ்வளவு விசாரத்தை யுண்டுபண்ணுகின்றது!

"வண்டோவிழிநுதல் வான்பிறையோ வல்குன்மான்குளம்போ
செண்டோமுலை நித்திலமோ நகையிடை சேர்துடிகற்
கண்டோமொழி குழல்காரோ முகங்கமலம்பவளத்
துண்டோவிதழ் கன்னித்தண்டோ தொடையிந்தத் தோகையற்கே."

"பாதாதிகேச முதலாயிவளைப் படைத்தமலர்
வேதாமருங்குல் வெளிவைப்பனோ விரிபூதலத்துள்
ஆதாரமின்றி யிரண்டிளநீ ரந்தரநிற்குமோ
ஏதாகிலுஞ்சற் றங்கில்லாதிரா திடை யேந்திழைக்கே."

அப்பப்போ! இப்படிப்பட்ட நவமோகனங்கிகளின் அள லாச்சவுந்தரியமெல்லாம் காட்டிலுலாவிய நிலவுபோல் பயனிலதாகின்றதல்லவா?

215. ஐயோ பாவம்! கெட்டநடவடிக்கைகளில் பிரவேசிக்காமல் தங்களுடைய கொடியநிலைமையைத் துயரத்துடன் எண்ணியெண்ணிச் சிந்தித்துப் பொறுமையுடன் ஏந்துகின்ற இளங்கைம் பெண்டுகள் எவ்வளவு வருந்திப்பரிதவிக்கிறார்களோ? திவ்விய தரமான விலையுயர்ந்த அணிகளையும் ஆடைகளையும் தரித்துச்சுகப் பட்டுவாழும் தம்முடைய ஈடுள்ள சுமங்கலிப் பெண்டுகளைக்கண்ட பொழுதெல்லாம் தமக்கப்படிப்பட்ட நற்பாக்கியமில்லாமற்போயிற்றேயென்று அவர்களுடைய மனங்கள் எவ்வளவு ஏங்கியேங்கி நொந்து கொதிப்புண்டுபோகின்றனவோ! தோழிகளும், உடன்பிறந்தவர்களும், தம்மீடானவர்களும் கலியாண முதலிய சுபகாரியங்

களிலும், பண்டிகை விழவுதினங்களிலும் சந்தோஷமாய்ப் புன்சிரிப்புள்ள முகங்களுடன் சளித்துத்திரிவதும், மங்கலிப்பெண்டுகள், சமாராதனைகள் முதலியவற்றிற்குப் போசனங்களுக்குப்போவதும் கண்டு, தங்களுக்கு அவ்வித நல்லதிருஷ்டம் பாழ்பட்டுப்போயிற்றென்று எவ்வளவு அளக்கலாத்துயருடன் நினைத்து மனமுருகிக்கொதிக்கிறார்களோ? தம்மீடானவர்கள் கணவர்களுடன் சுகமாய்ச் சமுசாரஞ்செய்துகொண்டு பிள்ளைகளைப்பெற்று வளர்த்துக்கொஞ்சிக் களிப்பதைப் பார்த்துப்பார்த்துத், தங்களுடைய நிர்ப்பாக்கியத்தைப் பலகாலுமெண்ணி வருந்துவதினால், அவர்களுடைய நெஞ்சங்களெவ்வாறு கொதித்துப் படபடத்து வெடித்துப்போகின்றனவோ? ஓ தாய்களே! தந்தைகளே! தம்பிகளே, தமையர்களே! உறவோர்களே! உங்கள் வயிற்றில் பிறந்த அழகிய செல்விகளையும், தங்கை தமக்கைகளையும், மாட்டுப்பெண்களையும், இவ்வித இடுக்கண்களுக்கிரையாக்கி, அவர்கள் ஆவிதவித்துக்கொண்டிருக்க நீங்களெவ்வாறு ஏற்றவழியொன்றுஞ்செய்யாமல் சகித்துச்சும்மாவிருக்கிறீர்கள்? அவர்களுடைய சுந்தரவடிவங்கள், நடுவெயிலிற் பூங்கொடிகள்போல் வாடித் தீனமுகங்களுடன் [illegible]னதினமும் வதங்கிச்சுருண்டுபோவது உங்கள் கண்களில்பட்டுக்[illegible]காண்டிருக்க எப்படிக் கன்னெஞ்சங்களுடன் பார்த்துச் சகிக்[illegible]கள்? அவர்கள் கரட்டுத்தரைமீது ஒன்றியாய்ப்படுத்துத்[illegible]கித்துக்கொண்டிருக்க, நீங்கள் மாத்திரம் கட்டில்களின்மேல் [illegible]மத்தை பரப்பி ஹாயியாகச் சயனித்துச் சமுசாரசுகங்களை எப்படி யனுபவிக்கிறீர்கள்! உங்களுடைய நெஞ்சங்களை உறையவிட்டு எப்படி நிர்விசாரமாய்க் குறட்டையிட்டுறங்குகிறீர்கள்? ஐயோ! ஈதென்ன குரூரம்! கொடுங்குரூரம்!

216. இனி, இத்தேசத்துக் கைம்பெண்டுகளுக்குத் திக்கெவரிருக்கிறார்கள்? எவருண்டு அவரைக் கருணையுடன் காப்பவர்கள்? பரலோகத்திலிருக்கும் ஓ பரமேசுவரனே! உன்னுடைய கருணைக்கண்களைத்திறந்து, இந்தத்தீன அநாதைகளின் கதியைக் கடாட்சித்தருளுவாய். என்னபாவஞ் செய்தார்களென்று அவர்களுக்கிப்படிப்பட்ட கொடுந்துயரங்களைக் கொடுத்துப் படுத்துகிறாய்? ஏனிப்படிக் கருணைகெட்டிருக்கிறாய்? புருஷர்கள்போலவே பெண்களும் உன்னுடைய பெருஞ்சிருஷ்டியில் சேர்ந்த படைப்புகளன்றோ? பட்சபாதம் உனக்கு நியாயமா? தீனபக்

தோ! அநாதரட்சகா ரட்சி, ரட்சி. பரமதயாளோ! அருள்புரிவாயாக.

பெண் கல்வி.

217. நம்முடைய தேசத்தை யபிவிருத்திக்குக்கொண்டுவரக் கூடிய சாதனங்களில் முக்கியமானது பெண்களுக்குக் கல்வி கற்பிப்பது. பூர்வகாலத்தில் நம்முடைய பெண்களில் சிலர் பெரிய பண்டிதைகளாயிருந்தாரென்றும், சிலர் அருமையான நூல்களைக்கூட இயற்றினர்களென்றும் தெரியவருகின்றது. அவ்வித நூல்களிற் சிற்சிலவற்றைக் காண்பதேயன்றி நாம் முதன் முதலில் ஓதுகின்ற ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய வெல்லாம் ஔவையென்னும் மகா பண்டிதையினுற் செய்யப்பட்டனவென்று வாலிபமுதற்கொண்டு அறிந்து கொண்டவர்களாயு மிருக்கிறோம். யூரோப், அமெரிக்காகண்டங்களில் பெண்கள் சாதாரணமாய்க் கல்வி பயின்றவர்களாகவே யிருக்கிருர்கள். இப்பொழுது நமதுதேசத்தில் வசிக்கும் பத்துக்கோடிப்பெண்களுள் நன்ருய்ப்படிப்பதற்கும் எழுதுவதற்கும் கற்றுக்கொண்டவர்கள் பதினுயிரம் பெயராவது இருப்பதாகக்கருத முடியாது. இஃதிப்படியிருக்கப், பண்டிதையென்ற பெயருக்குத் தகுந்தவர்களை விரல்களைக்கொண்டே கணக்கிட்டுக்கொள்ளலாம். இப்படிபபட்டவர்களும் பொம்பாய், கல்கத்தா ராஜதானிகளிலிருக்கிருரேயன்றி நம்முடைய சென்னை ராஜதானியில் ஒருவரேனுமிருப்பதாகத் தோன்றவில்லை.

218. நமது தேசத்துப் பெண்களுக்குக் கல்வியில்லாதிருப்பதினுல் அனேகவிதமான தீங்குகள் விளைகின்றன. இந்தச் சங்கதி அனைவருக்கும் நன்ருய்த் தெரிந்ததே. ஞானவீனர்களாய்த், தாம்சுகப்படும் வழியையாவது, தமது கணவர்களைச் சுகப்படுத்தும் வழியையாவது, தமது பிள்ளைகளை நன்ருய் வளர்க்கும் வழிகளையாவது அறியாதவர்களாய், மூடவழக்கங்களில சம்பூரணமாய் முழுகி மிருகபிராயர்களாயிருக்கும் தாய்களுடனும் மனைவிகளுடனும் நிறைவுற்றிருக்கின்ற இவ்விந்துதேசமானது மேன்மேலும் க்ஷீண தசைக்கு வந்திருக்கின்றது.

219. ஆகா! கல்விவிளக்கமுற்ற கணவியினுல் பெறும் சவுக்கியத்தை வருணிப்பதெப்படி? கஷ்டசுகங்களெல்லாவற்றினும்

பர்த்தாவுடனிணக்கமுற்று ஆபத்துக்காலத்தில் ஆலோசனைசொல்லி அதிகமான விருப்பத்துடன் ஒட்டியிருக்குமவள் அவ்விதக் கணவியேயல்லவா? பர்த்தாவின் விவகாரங்களை யப்போதைப்போது ஆராய்ந்து தெரிந்துகொண்டு, அவனுக்குப் புகழ்வந்தடைந்தபொழுது பேருவகையுடன் நெஞ்சங்களித்துக் களிக்கச் செய்பவளும், மூப்புவந்தபொழுது தைரியத்தையெடுத்துரைத்து விசனத்தைப்போக்கடிப்பவளும், அவ்விதக் கணவியேயல்லவா? வீட்டுவேலை விவகாரங்களையெல்லாம் ஒச்கப்படுத்தி, வீட்டவன் வரும்வேளைக்கு அனைத்தையும் களிப்புறவமர்த்தி, அவனுடைய மனத்தினுக்குச்சிறிதேனும் வருத்தந்தோற்றாது இனிமையுடன் இளைப்பாறவிட்டு, வீடெங்கும் பேரின்பவீடுபோலிருக்கச்செய்பவளும் அவ்விதக் கணவியேயல்லவா? பிரிவுற்று வசிக்கவேண்டி வந்தபொழுது மனத்தையெல்லாமிழுத்து மிதியிலாவிதனத்தையுண்டாக்கியும், நிருபங்களின் மூலமாய் பரிமிதியற்ற ஆனந்தத்தைப் புருஷனுக்குண்டாக்குவது அப்படிப்பட்ட மனைவியேயல்லவா? ஆகாகா! கல்விச்சிறப்பு கூர் கணவிக்கும் அக்கல்வியிலாப் பேதைக்கும் உள்ள பேதமெவ்வளவு கண்டீரோ!

220. பெண்களுக்குக்கல்வி பயிற்றுவதினால் தவறாமல் அனர்த்தங்கள் வந்து சம்பவிக்குமென்று சிலர் மூட சிகாமணிகள் எண்ணுகிறார்கள். கிருக கிருத்தியங்களுக்குப் பங்கங்கள் நேரிடுமென்றும், புருஷனைப் பெண்சாதி பெருமைப்படுத்தாளென்றும், அக்கரையில்லாவேலைகளில் பெண்கள் தலையிட்டுக்கொள்வார்களென்றும் சொல்லுகிறார்கள். பெண்கள் கல்வி கற்றுப் பெரிய வேலைகளிலமர்வார்களாவென்று சிலர் சொல்லிக்காட்டுகிறார்கள். பெண்களுக்கு வீடுகளிலேயே வேண்டிய வேலையிருக்கிறதென்று இவர்கள் அறியார்கள் போலும். புருஷனுக்குச் சமஸ்தவிதமான சௌக்கியங்களையும் கொடுத்துத் தாமும் சுகப்படுவதும், பெற்ற பிள்ளைகளைச்சரிவரப் போஷித்து வளர்த்து அவர்களுக்கு வித்தை புத்திகளையும் நல்வழி நன்னடக்கைகளையும் காட்டிக்கொடுத்து அபிவிருத்திக்குக் கொண்டுவருவதும், ஆகிய இவற்றைக்காட்டிலும் வேறு உத்தியோக மேதுவேண்டியதோ? இவ்வுத்தியோகத்தைச் செவ்வையாய்ச்செய்து முடிப்பதற்கு வித்தையெவ்வளவு ஆவசிகமானது? பிள்ளைத்தனத்திலேயே பெற்ற தாய்களின் மூலமாய்ச சன்மார்க்கத்தில் நிறுத்தப் படாமல், பெரிய

வர்களான பிற்பாடு புத்தி மீளாமல் கெட்டுப் பாழ்பட்டுப்போன பிள்ளைகள் எத்தனைபெயரில்லை? இப்படிப்பட்ட அனர்த்தங்களை யணுகாமல் விலக்குவதற் குபாயம் பெண்களுக்குக் கல்வி கற்பிப் பதைக்காட்டிலும் வேறேதுளது? ஒரு பெண்ணுக்குக் கல்விகற் பிப்பதினால் குடும்பத்திலுள்ள குஞ்சு குட்டிகளெல்லாருக்கும் வித்தை புத்திகள் பிடிபடுகின்றன. கல்வி கற்றுக்கொண்டிருக் கும் கணவிகள் வீட்டுவேலைகளை இன்னுமதிக நுண்ணறிவுடனும், கவலையுடனும் பார்க்கக் கூடுவார்கள். இனி அவர்களைத் துன் மார்க்கத்தினின்றும் தொலைவுப்படுத்தும் கல்வி யெத்தன்மையது? கையினலாகாத கையெழுத்துடன் கள்ளக்கணவர்களுக்குக் கடிதங் களெழுதியனுப்புவதற்கு மாத்திரம் போதுமானபடி இரண்டொரு சொற்கள் மாத்திரம் கற்பித்துப், பிறகு சிங்கார ஜாவளிகளையும், க்ஷேத்திரிய பதங்களையும் அபிநயத்தையும் கற்றுக்கொடுத்து, மதனகாம ராசன்கதை முதலியகதைகளையும் கிருஷ்ணலீலை, தென் பாங்கு விறலிவிடுதூது முதலிய புத்தகங்களையும் படிக்கக்கொடுத் தால், நல்ல பெண்களுடைய நற்குணங்கள் கூட அடியோடு கெட் டுக் குட்டிச் சுவராய்ப் போவதற்குச் சந்தேக மென்னவிருக்கிறது? அப்படிப்பட்ட வித்தை சொல்லிக்கொடுப்பதைக் காட்டிலும் ஒன் றும் கற்பிக்காமல் சும்மாவிருப்பதே நலமுள்ளது. ஆனல், ஞான விவேகங்களை யுண்டுபண்ணி விருத்திப் படுத்தும் நல் வித்தையி னல், கெட்டவர்களுக்குக்கூட நற்குணங்கள் பிடிபடுமேயன்றி நல் லவர்களுடைய குணங்கள் என்றைக்கும் மாறமாட்டா. இதுவே யன்றி, நம்முடைய பெண்களுக்குச் சற்குணசம்பத்தியை விரு த்தி செய்யவேண்டு மென்றால், நல் வித்தையேயல்லா முக்கிய காரணம்? விநயம், விவேகம், பாதிவிரத்தியம், அநுராகம், தயாளுத்துவம், சாக்கிரதை இவற்றை விருத்திப்படுத்துவதற்கு வித்தையேயல்லவா மூலகாரணம்? பெண்களின் தேன்மொழி கள் இன்னுமதிக தித்திப்பாயிருப்பதற்கும், அவர்களுடைய பிரிய மானது இன்னுமதிக பிரியமாயிருப்பதற்கும், அவர்களுடைய சினேகம் சித்தமகிழ்ச்சியாயிருப்பதற்கும், அவர்களுடைய அழ கைக்கண்டு மனங்குழைவதற்கும், அவர்களுடைய மாதர்வடிவமே மாதுரியவெள்ளமாயிருப்பதற்கும் அவர்களுக்குக் கல்வியேயல்ல வா பிரதானமானது? கல்வியில்லாததினலல்லவா, நம்முடைய பெண்களனேகர் மூடாசாரங்களிலடிபட்டு மனைவர்களுக்கு மன

மகிழ்ச்சியுண்டாக்குவதற்குப் பதிலாய் எக்காலும் விசாரத்தையே யுண்டாக்கிக்கொண்டிருக்கிறார்கள்? கல்விமணமில்லாததினால்தானே, நமது பெண்கள் வீண்பேச்சுகளிலும் அற்பசம்பாஷணைகளிலும் தலையிட்டுக்கொள்ளுகிறார்கள்? அனேகர் சோழிக்கும், குன்றுமணிக்கும் ஒருவரோடொருவர் தீராப்போர்கள்செய்து வீட்டைக் காட்டுக்குச் சமானமாக்குகிறார்கள்? கல்விப்பெருமையில்லாதவர்களானதினாலல்லவா, நம்முடைய பெண்களனேகர் கஷ்டசுகங்களைப்பாராமல் தமக்கும் தம்முடைய பிள்ளைகளுக்கும் உடைமைகள்வேண்டுமென்று உடையவர்களை வருத்துகிறார்கள்? நம்முடைய பெண்களுக்குக் கல்விச்செல்வ மாத்திரமிருக்குமானால் அவர்களுடைய மூக்குகளிலும் காதுகளிலும், நாகரிகர்களுக்கு வெறுப்பையுண்டாக்கப் பழிப்புக்கிடமாயிருக்கும் ஓட்டைகளிருக்குமா? அவர்களுடைய கழுத்து நிறையவும் கைகள் நிறையவும் கால்கள் நிறையவும் இப்பொழுதிருக்கும் விலங்குகளும் பூண்களும் வளையங்களுமிருக்குமா? தலைமேல் தங்கத்தகட்டு மூடிகளை அவர்கள் கவிழ்த்துக்கொள்வார்களா? கண்டவர் கண்களுக்குக் கஷ்டத்தையுண்டாக்கும் பச்சைக்குத்துகளும், ஓக்களிப்புண்டாக்கும் நாறுமஞ்சள் பூச்சுகளும் தொலைந்துபோய்விடாவா? எல்லா அனர்த்தங்களையும் விளைக்கும் இராணிவாசம் நிலைபெற்றிருக்குமா? நம்முடைய பெண்களுக்குக் கல்விமாத்திரமிருக்குமாயின் அவர்களுடைய கெடுநிலைமை வெகு சீக்கிரத்தில் மாறிவிடும். அவர்களையடக்கித் துவைக்கும் துராசாரங்களெல்லாம் தூரவோடும். பாலிய விவாகங்களின் சல்லியம் தொலைந்துபோய்விடும். வித்தையின்றவர்களான விதவைகளை வதுவையாடுவதற்குப் புருஷர்கள்போட்டிபோடுவார்கள். விதவைகளும் பின்வாங்காமல் விவாகஞ்செய்துகொண்டு சுகிப்பார்கள். தேசாபிவிருத்தியைக் கெடுத்துக்கொண்டிருக்கும் தடையூறுகளெல்லாம் நிலைகெட்டுப்போய்விடும். சமுத்திரப்பிரயாணம் சாதாரணமாய்விடும். இத்தேசத்திற்கு எல்லாப் பாக்கியங்களும் பூரணைக்கடல்போலப் பொங்கிவரும்.

221. இம் முற் கூறிய விஷயத்தில் எவ்வளவாயினும் அதிசயோத்தி யில்லை. இத்தேசத்தை யிப்பொழுது பிடித்திருக்கும் துர்த்தசையைத்தொலைக்கவேண்டு மென்றால் பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதே உத்தமோபாயமென்று அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதன் குறைவினால் வித்தியாவான்களாகிய புரு

ஷர்களனேகர் பேர் நஷ்டத்தைப் பெறுகிறுர்கள். சிறுதனத்தி லேயே ஒட்டக் கட்டப்பட்ட மூடப்பெண்சாதிகளுக்கும் தங்களுக் கும் மனங்கள் சரிவரப் பொருந்தாமற் போவதினுல் எள்ளளவுஞ் சௌக்கியமில்லாமல், தைரிய சாகசங்களை யொழித்துவிட்டு, எவ் விதப்பட்ட சற்காரியத்தையாவது ஊக்கத்துடன் செய்யச்சக்தி யற்றவர்களாய் நிருபயோகிகளாகிறுர்கள். பெண்சாதிகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டு மென்று முயற்சி செய்பவர்கள் கூடச், சிறுமையிலேயே பிள்ளைகள் பிறப்பதினுல் சமுசார பாசங்களிற் சிக்குப்பட்டு உற்சாக வீனர்களாயிருக்கிறுர்கள். சிலர், தமது பெண்சாதிகளினுல் சிற்றளவேனும் சந்தோஷம் காணுதவர்களாய் விலைமகள் வீடுகளுக்குப்போகிறுர்கள். இதற்கெல்லாம் நம்முடைய பெண்களின் வித்தையின்மையே யல்லவா காரணம்? ஐயையோ! இப்பொழுதாவது, கண்களைத்திறந்து நமது பெண்பிள்ளைகளுக் குச் செவ்வையாய்க் கல்வி கற்பித்தால், முன்னே வரப்போகிற வர்களாவது சுகப்படுவார்களல்லவா? நமக்கில்லாமற்போனுலும் நம்முடைய பிள்ளைகளுக்காவது சவுக்கியத்தைத் தேடிப் பெறு விப்பது எவ்வளவு பெருங்காரியம்? அண்ணர்காள்! இத்தனை சங் கதிகளைக்கண்ணுரக்கண்டுகொண்டிருப்பினும், உங்களது சிறிய கன் னிகைகளின் கல்வியைக்குறித்து நீங்கள் செய்யுமுயற்சிகளென்ன? அவர்களுக்குச் சம்பந்தங்களைச் சம்பாதிப்பதற்காக நீங்கள் படும் பிரயாசைகளில் ஆயிரத்திலொரு பங்காவது கல்வி கற்றுக்கொ டுப்பதற்காக எடுத்துக்கொள்ளவேண்டுமென்ற கருத்து உண்டா யிருக்கிறதா? அவர்களுடைய விவாகங்களின் நிமித்தம் நீங்கள் செலவழிக்கும் பணத்தில் நூற்றிலொருபங்காவது வித்தியாவிஷ யமாய்ச் செலவு செய்கிறீர்களா? இனி நீங்கள் கற்றுக்கொடுக் கும் கல்வி யெப்படிப்பட்டது? மூன்று நாலு வருஷகாலம்பாலி கா பாடசாலைகளுக்கனுப்பித் தேச பாஷையில் இரண்டொரு வார்த்தைகளை யெழுத்துக்கூட்டச் சொல்லிக் கொடுப்பதா?

222. இது கல்வியென்னும் பெயருக்குத்தகாது. இதனுல் விவேகமாவது ஞானமாவது பெண்களுக்கு உண்டாகமாட்டாது. புருஷர்கள் கற்றுக்கொள்ளும் வித்தையெல்லாம் ஸ்திரீகளுக்கு ஆவசிகமென்று எங்கள் தாற்பரியமல்ல. அவர்களைப்போலவே இவர்களும் பெரிய பெரிய பரீட்சைகள் பியாஸாகவேண்டுமென் பது முக்கியமென்று நாங்கள் சொல்லமாட்டோம். ஆனுல், வீட்டு

வரவு செலவு கணக்குகளை மாத்திரம் எழுதுவதற்கு உபயோகப் படும் வித்தையைக்காட்டிலும் அனேக மடங்குகள் அதிகமான வித்தை ஆவசிகமென்று நாங்கள் அழுத்தமாய் வற்புறுத்துவோம். சந்தோஷத்தையும் விவேகத்தையும் பிறப்பிக்கும் புஸ்தகங்களைத் தாராளமாய்ப் படித்துத் தாற்பரியத்தைக் கிரகிக்கக்கூடியவளவு பாஷாஞான மகத்திய மிருக்கவேண்டியது. பிரபஞ்சவிஷயமும், சரித்திரமும், கணிதமும் தெரிந்திருக்கவேண்டியது. சங்கீதம் மிகவும் முககியமானது, இன்றியமையாதது. தையல்வேலை, சித்திரவேலைகூடக் கொஞ்சமட்டுங் கற்றுக்கொடுக்கவேண்டியது. வீட்டுவேலைகளை நன்றாய் நிறைவேற்றுவதற்கும், பிள்ளைகளைச் சீராய் வளர்ப்பதற்கும், நோயாளிகளைச் சாக்கிரதையுடன் காப்பாற்றுவதற்கும், ஆரோக்கியவழிகளின்படி ஒழுகுவதற்கும், வீட்டைப் பரிசுத்தமாகவும் மகிழ்ச்சி பிறக்குமாறும் வைத்துக்கொள்வதற்கும், வீட்டிற்கரசியாய்க் குடும்பத்தை யாண்டுவருவதற்கும், ஆவசிகமான அறிவை முக்கியமாய்ப் பிறப்பிக்கவேண்டியது.

223. இக் கூறிய விஷயங்களனைத்தையும் விளக்கமாய்ப்போதிக்கத்தகுந்த புத்தகங்கள் நமது தேச பாஷைகளில் மிகவும்குறைவாயிருக்கின்றன. இப்பொழுதிருக்கும் பிரபந்தங்களும் காவியங்களும் பெண்கள் படிப்பதற்கு அவ்வளவாய்த் தகுந்தவையல்ல. இக்காலத்தில் சிற்சிலர் பெண்களின் உபயோகத்திற்காக மிகவும் பாடுபட்டுச் சில புத்தகங்களை யெழுதிக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும், வேண்டுமான புத்தக சாமக்கிரிகள் ஏற்படுவதற்கு அனேக வருஷங்கள் பிடிக்கும். இப்பொழுது நமது பெண்களுக்கு நல்வித்தை கற்பிக்கவேண்டுமென்றால், அங்கிலேய பாஷை தவிர வேறு வழி காணப்படாது. இப்பாஷை உலகத்தில் வெகு தூரம் வியாபித்து மிகவும் வளர்ச்சி பெற்றோங்கி ஞானப்பொருளுடன் குவியல் குவியலாய் நிறைவுற்றிருக்கிறது. இதிலெழுதப்பட்டுள்ள முக்கிய புத்தகங்கள் கூடக் கணக்கிடக்கூடாத தொகையுடைத்தாயிருக்கின்றன. அவற்றில் சிரேஷ்டமாயிருக்கு மவற்றினுள் சிலவற்றையேனும் நமது தேசபாஷைகளில் மொழிபெயர்ப்பது மிகவும் கடினமான காரியம். அப்படி மொழிபெயர்த்தாலும், அவை முதற்பாஷையிலுள்ள ருசி கெட்டுப் படிப்பதற்குச் சுவையற்றிருக்கும். ஆதலின் நம்முடைய பாலிகைகளுக்கு அங்கிலேய பாஷையைக் கற்பிப்பதே உத்தமமான வழி. அதைக் கற்பிப்பதி

ஞல் அவர்களுக்கு நல்லறிவுண்டாவது மாத்திரமேயன்றிப், பிற்பாடு கூட அவர்கள் அனேகம் புத்தகங்களைப்படித்து ஞானபிவிருத்தி செய்து கொள்ளக் கூடுவர். இவ்வண்ணம், நமது பாலிகைகளுக்கு அங்கிலேய பாஷை கற்றுக்கொடுப்பதினல், அவர்களுக்கும் அவர்கணவர்களுக்கும் அநுகூல தாம்பத்திய மேற்பட்டுச் சவுக்கியத்தையும் சந்தோஷத்தையும் பெருக்கி இவ்வுலகின் வாழ்வை மேன்மேலும் உயர்த்திப் பேரின்பத்தை வளர்த்தி வரும்.

பெண் சுதந்தரம்.

224. பெண்களுக்கு லேசமாயினும் சுதந்தரத்தைக் கொடுக்காமல் அவர்களை அடிமைகளுக்குச் சமானமாய் நடத்துவ தீதோர் பெருந்துர்வழக்கமாயிருக்கிறது. யூரோப், அமெரிகா முதலிய அனேக தேசங்களில் பெண்கள் எக்காலும் வீட்டிலேயே யுட்கார்ந்திராமல் வெளியே போவதும் வருவதுமாயிருப்பார்கள். புருஷர்களுடன் தாராளமாய்க் கலந்துபேசுவார்கள். மானத்திற்குக் குறைவுவராமல் சுதந்தரத்தை மேற்கொண்டு ஒழுகுவார்கள். நந்தேசத்தில் சாதாரணமாய்ச் சூத்திரசாதிப் பெண்கள், ஈன சாதிப் பெண்கள், மிகவும் எளிமையான குடும்பங்களிலுள்ள பெண்களு மாத்திரம் சுதந்தரம் பெற்று வாழ்ந்து வருகிருர்கள். மிகுந்த சாதிப்பெண்கள் சிறுகவோ பெருகவோ இராணிவாசத்துக்குப் பாத்திரமாகிருர்கள். சில குடும்பங்களிலுள்ள பெண்கள் தமது வாழ்நாட்களில் ஒரு விசையாவது வீட்டுவாயிலைத்தாண்டி எவ்விடத்துக்கும் போக வேலார்கள். சிலர் முக்காடுகள் போட்டுக்கொண்டே எவ்விடத்திற்காவது போவார்கள். சிலர் புருஷர் கண்களிற்படாமல் கதவுகள்மூடின வண்டிகளிலும் பல்லக்குகளிலும் சவாரி போவார்கள். வெளியேபோகும்பொழுது இப்படி யிருப்பதேயன்றி, வீட்டில்கூடப் புருஷர்களுடன் ஸ்திரீகள் தாராளமாய்ப் பழகிப்பேசமாட்டார்கள். சகோதரர்கள், தகப்பனர், சிறுதகப்பனர் முதலிய சமீப பந்துக்களுடன் தவிர மீந்தவர்களுடன் சம்பாஷிப்பது அயோக்கியமென்றும், ஐயத்திற்கிடமானதென்றும் எண்ணப்படுகின்றது. ஸ்திரீபுருஷர்கள் சிறியவர் பெரியவர் ஓரிடத்திற்கூடிக் களிப்புடன் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வதாவது, ஓரிடத்தில் ஒன்ருய்க் கலந்துபோசனஞ் செய்வதாவது,

எந்தவீட்டிலுமில்லை. வீட்டிற்குள் உட்பக்கங்களிலேயே சாதாரணமாய்ப் பெண்பிள்ளைகளிருப்பார்கள். புருஷர்கள் கண்ணில் பட்டபொழுது விர்ரென்றெழுந்து ஓடிப்போய்விடுவார்கள். இல்லாவிடின் தலைகுனித்துக்கொண்டு நின்ற நிலையாயிருப்பார்கள். கணவனுடனேகூடப் பகல்வேளையில் பேசக்கூடாது. அவன் வியாதிகிரஸ்தனுயிருந்தபோதிலும் அண்டையிலிருந்து உபசரித்துதவிசெய்யக்கூடாது!

225. ஓயண்ணேன்! இதென்ன ராணிவாசம்! புருஷர்களுக்குத் தென்படாமல் ஸ்திரீகள் எவ்வளவுக்கெவ்வளவு மறைவாயிருப்பார்களோ, அவர்களுடைய புருஷர்களுக்கு அவ்வளவுக்கவ்வளவு சந்தோஷமாம். அவர்களுடைய குணங்கள் கெடாதிருக்குமென்று புருஷர்களுக்குச் சம்பூரணமான திருப்தி. நேற்று முந்தியநாளே படித்துக்கொண்டு இரண்டு காசுகள் சேர்ப்பவர்கள் கூடத் தங்களுடைய பெண்களுக்கு இவ்விதராணிவாசத்தையே நியமித்திருக்கிறுர்கள். அப்படிக்கில்லாவிடின் தங்களுடைய கௌரவத்திற்குக் குறைவென்று பாவிக்கிறுர்கள். இவ்வளவேயன்றி, இத்துர்வழக்கத்தினுல் எப்படிப்பட்ட தீங்குகள் மூள்கின்றனவோ ஆலோசிக்கமாட்டார்கள். ஆனந்தத்தைத் தருவதான இந்தக் கடவுளின் படைப்பைக் கண்ணாரக்காணுமல் பிரபஞ்சஞானம் ஓரணுவளவேனும் இல்லாதவர்களாய் நமது பெண்கள் மௌட்டியத்தில் மூழ்கியிருக்கிறுர்கள். அவர்களுடைய மனங்கள் அந்தகாரத்துடன் போர்க்கப்பட்டிருக்கின்றன. எப்பொழுதும் வீட்டிலேயேயிருப்பதினுல் பரிசுத்தவாயு கிடையாமல், அவர்களுடைய சரீரங்கள் பலவீனமுள்ளவையாகின்றன. அவர்களுடைய ஆரோக்கியம் வேருடன் குலேந்துபோகின்றது. அவர்களுக்குப் பிறக்கும் சந்தானங்கூடப் பலமில்லாததாய்த் தைரியசாகசாதி குணங்களில் குறைவுபட்டுப்போகின்றது. இது மாத்திரமல்ல. பெண்களின் குணங்கள்கூடக் கொஞ்சமட்டும் கெடுகின்றன. உலகத்திற்கு விலக்கமாய்ப் புருஷதரிசனத்திற்குத் தொலைவில் வைக்கப்பட்ட மனமானது, சிருஷ்டிமகிமைகளைக் கண்டுகளிப்பதற்காகப் பரிதவித்துக்கொண்டிருக்குமல்லவா? எப்பொழுதும் நிர்ப்பந்தத்துக்கு உட்படுத்தப்பட்டு, என்றைக்காவது ஒருநாள் அவ்விதிக்கு விலக்குகாணக்கிடைக்கும்பொழுது சித்தங்கள் சபலித்துக் கெட்ட காரியங்களுக்குத் தூண்டப்படுவது என்ன ஆச்சரியம்?

226. இந்தப்பாழு மிராணிவாசமானது இத்தேசத்தில் எப்படி வந்து சேர்ந்தது? பூர்வகாலத்தில் நமது தேசத்துப்பெண்கள் ஆண்களுடன் சலந்து பேசுமுரிமைபெற்றுச் சுவேச்சைப்படிப் பழகி யொழுகிவந்தார்களென்றும், தோழிகளுடன் கூடச்சேர்ந்து அவர்கள் வனவிகாரங்கள்கூடச் செய்துவந்தார்களென்றும், பாரத ராமாயண முதலிய புராண இதிகாசங்களில் படித்துவருகிறோம். இக்காலத்து இப்படிப்பட்ட விஷயங்கள் கனவிற்கண்ட செய்திகளாயின. மத்தியகாலத்தில் சிலர் மகா புருஷர்கள், ஸ்திரீ சுபாவத்தில் தங்களுக்கு நம்பிக்கை குறைவு பட்டதினாலோ, மற்றெந்தக்காரணத்தினாலோ, பெண்களுக்குச் சுதந்தரம் கொடுக்கத் தகாதென்று தமது அபிப்பிராயத்தை யெடுத்துரைத்தார்கள். பெண்களுக்கியான்றும் சுதந்தரம் கூடாதென்றும், பாலியத்தில் தகப்பனுக்கும், யௌவனத்தில் கணவனுக்கும், விருத்தாப்பியத்தில் புத்திரனுக்கும் அவர்கள் கீழ்ப்பட்டிருக்கவேண்டுமென்றும், மனுஸ்மிருதியிலுரைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிறுவிதையினின்று கிளம்பிப், புருஷர்களின் அநுமானத்தினாலும் அகம்பாவத்தினாலும் செழித்தோங்கி, மேன்மேலும் வளர்ந்து, மகம்மதியர்களின் ராஜ்ஜிய பரிபாலனை காலத்தில் அவர்களுடைய பயத்தினால் நிலைபெற்று, இப்பொழுது பண்டைய வழக்கமாக ஸ்திரப்பட்டு, இந்த ராணிவாச விருட்சமானது, ஆண்பெண்ணியற்கைகளில் தொளைகளைச் செய்துச் சாரத்தைச் சப்பிக்கொண்டு எங்குகண்டாலும் பரவி இத்தேத்துக்குக் காரிருளை யுண்டாக்குகின்றது.

227. மகாசனங்களே! சுதேசவாசிகளே! தேசாபிமானிகளே! கண்டீரா நம்முடைய கடியநிலைமையை? நமது பெண்களைத் தொண்டுகளாக்கி நாமும் தொண்டுகளாய்விட்டோம். புருஷர்களுக்கு அத்தியந்த சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் சவுக்கியத்தையும் கொடுக்கத்தக்க பெண்கள், நமக்குள் சஞ்சலத்திற்கும், விசனத்திற்கும், ஏக்கத்திற்கும், துயரத்திற்கும் காரணமாய் விட்டார்கள். நம்முடைய ஆவிகளைக்காட்டிலும் பதின்மடங்கு அதிகமாய்ப் பார்க்கப்படவேண்டிய ஸ்திரீகளை நாமெவ்வளவோ கனமாகவும் பத்திரமாகவும் வைத்துக்கொள்ளவேண்டுமென்று கருதி, இவ்வவிவேக ஆசாரத்தை யேற்படுத்திக்கொண்டு முதலுக்கே மோசத்தைக்கொண்டுவந்து வைத்துக்கொண்டோம். இதன் மூலமாய், பெண்களின் நல்லியற்கைகள் வற்றிப்போய்த், தைரிய

சாகசமுதலிய குணங்கள் குறைவுபட்டு, அவர்கள் பசுபிராயர்களாகி, எப்பொழுதும் புருஷர்களின் ஆதாரமில்லாமல் தங்களுடைய மானத்தை யெப்படிப்பட்ட நீசன் அபகரிக்கக்கருதினுலும் காப்பாற்றிக்கொள்ளச் சக்தியற்றவர்களாயிருக்கிருர்கள். நண்பர்களே! இப்படிப்பட்ட துரவஸ்தையை விலக்குங்கள். பெண்களுக்குக் கல்விப்பயனைக்கொடுத்து அவர்களுக்கு ஏற்றவிதமான சுதந்தரத்தைக்கொடுங்கள். மிதமான சுதந்தரத்தினுல் அவர்களுடைய குணங்கள்யான்றும் குலைந்துபோகா. சுதந்தரத்தைக்கொடாமல் இருப்புப்பெட்டிகளில் அடைத்துப்பூட்டிவைத்தாலும், துர்ப்புத்திகள் விலகவொண்ணு.

228. நமது பெண்களுக்கு வெகுகாலந்தொட்டு ஏற்பட்டிருக்கும் நிர்ப்பந்தச் சனிகளைக் கிரமகிரமமாயாவது தொலைத்துவிடுவது அத்தியந்த ஆவசிகமானது. ஒரேவிசையாய்ச் சுதந்தரத்தைக்கொடுத்தாலும், அதைப்பெற்றுபயோகிக்கும் நிலைமையில் இப்போது அவர்களில்லர். கல்வியினுலன்றி அவர்கட்குப் பகுத்தறிவும், தைரியவுறுதிகளும், தம்மைத்தாங்காத்துக்கொள்ளும் வல்லமையும், பிறக்கமாட்டா. ஆனல், அவர்களைப் பின்னேடு கூட்டிப்போய்ப், பார்க்கத் தகுந்த காட்சிகளைப் பார்க்கவிடுவதும், தெரிந்துகொள்ளத்தக்க விஷயங்களைத் தெரியப்படுத்துவதும், பரிசுத்த வாயுவைப்பெறச்செய்வதும், இவைபோல்வனவற்றையும் புருஷர்களனைவரும் செய்யவல்லவர். மேலும் வீட்டினில் அவர்களை அடிமைகளைப்போலவும் விலங்குகளைப்போலவும் நடத்தாமல், களிப்புடன் கலந்திணங்கியிருக்கச்செய்யலாம். இப்படிக்கொஞ்சங்கொஞ்சமாகவாவது நமது பெண்களுக்கு ஞானுபிவிருத்தியை வளர்த்துக்கொண்டுவந்து அவர்களுக்குச் சுதந்தரத்தைக்கொடுத்துத் தங்களுடன் சமானமாகப் பார்த்துக்கொண்டாலே புருஷர்களுக்கு மெய்யான சவுக்கியம் லபிக்கும். வீடுகள் உல்லாசத்துடனும் இனிமையுடனும் நிறைவுற்றிருக்கும்.

229. இச்சை வந்த வண்ணம்கட்டு திட்டமின்றி அடங்காப் பிடாரிகளாய்ப் பெண்களைத்திரியவிட வேண்டுமென்பதல்ல, எம்முடைய கருத்து. பின்வாங்காமல் எல்லாவிடங்களுக்கும் அவர்கள் போசலாமென்ருவது, எல்லாவிஷயங்களிலும் அவர்கள் தலையிட்டுக்கொள்ளலாமென்ருவது யாமுரையோம். உசிதமான மௌன

மும், அடக்கமும், அமைதியும் பெண்களுக்கு ஆவசிகமாயிருக்க வேண்டியது. இல்லாவிடத்து, அவர்களுடைய மானத்துக்குப் பங்கம் வந்து நேரிடும். சுகுணத்திற்குக் கூடக் கேடு மூளும். இயற்கையாய் அபலைகளாவதினால், சுதந்தரத்தைக் கொடுத்த பிறகும் ஸ்திரீகளை மிகவும் சாக்கிரதையுடன் காப்பாற்ற வேண்டியது. இப்படியென்று, அவர்களை இல்லத்திலேயே இறுக்கிவைப்பது மிகக் குரூரம். அபலைகளென்று பெண்களைப் புருஷரிலும் தாழ்ந்தவரென்று கருதக்கூடாது. புருஷர்களுக்கு இவ்வுலகத்தில் கடவுளானவர் பெருங்காரியங்களை விதித்திருக்கிறார். பெண்களுக்குக்கூட வீடுகளில் பேருத்தியோகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆதலால் உசிதமான சுதந்தரத்தைக்கொடுத்து அவர்களைத் தம்மிலும் மேன்மைப்பட்டவர்களாய்க் கௌரவப்படுத்திச் சுகப்படச்செய்வதே புருஷர்களின் இன்றியமையாக்கடமை. தாங்கள் சுகப்படுவதற்கும் இதுவே தகுந்த மார்க்கம். இதுபெருமர்மம் காணுங்கள்.

230. சான்றோர்களே! நாமிப்போது ஸ்திரீகளுக்குண்டாக்கும் நிர்ப்பந்தங்கள் யாவும், ஸ்திரீகளினால் நமக்கே யுண்டாயிருக்குமாயின், நாமெப்படி யிருந்திருப்பமோ, எப்படிச் சகிப்போமோ, கொஞ்சம் யோசித்துப்பாருங்கள். தெலுங்கு பாஷையில் இயற்றப்பட்டுள்ள "சத்தியராஜாசாரியரவர்கள் அபூர்வ தேச யாத்திரை"யில் வருணித்திருக்கும் பெண் மலையாளத்தை ஒரு தரம் பார்த்து வாருங்கள். அது, நம்மவர்கள் சாதாரணமாய்ப் பார்த்துவரும் மலையாளதேசத்துக்கு வாயு மூலையிலிருக்கிறதாம். ஒரு மலைக்குகை வழியாய்ப் பாதை போகிறதாம். அவ்விடத்தில் ராச்சியபரிபாலகர்கள் ஸ்திரீகள். மந்திரிகள் ஸ்திரீகள். உத்தியோகஸ்தர் ஸ்திரீகள். வித்துவான்கள் ஸ்திரீகள். சேனாதிபதிகள் ஸ்திரீகள். புருஷர் வீட்டு வேலைகளைச் செய்வார்கள். சமைப்பார்கள். பெண்கள் பெறும் பிள்ளைகளை யெடுத்து வளர்ப்பார்கள். அவர்களுக்குச் சுதந்தரமில்லை. இவ்விடத்தில் இராணிவாசம் போலவே அவ்விடத்தில் ஆண்களுக்குப் பதினாறு பிராய முதல் நாற்பது வயது வரைக்கும் இராஜவாசமிருக்குமாம். இருப்புச்சலாகைகளினால்செய்த பலகணிகளுள்ள பெரிய பெரிய இருப்புக்கூடுகளில் அவர்களை அடைத்துப்பூட்டிப்போடுவார்கள். சிலர் பெண்டுகள் தம்முடைய பர்த்தாக்களை அறைகளி

லொளித்துத் தாள்போட்டுப் பூட்டித் தத்தம் வேலைபார்க்கப் போவார்கள். இவ்விதக் கட்டுதிட்டங்களுக்குக் காரணம், முக்கியமாய்ப் புருஷர்கள் விபசரித்துக்கெட்டுப்போவார்களென்ற அச்சமேயாம். இந்த முகாந்தரத்தினாலேயே புருஷர்களுக்கு வித்தை கூடச் சொல்லிக்கொடுக்காமல், நம்முடைய தேசத்தில் ஸ்திரீகளுக்குப் பதிவிரதைக் கடமைகளை யுபதேசிப்பதுபோல, அவ்விடத்தில் சதிவிரதக் கடமைகளைப் போதனைசெய்வார்கள். புருஷனுக்குப் பத்தினியே பரமதெய்வம். எப்பொழுதும் புருஷன் பத்தினிசேவை செய்துகொண்டிருக்கவேண்டும். நொண்டிச்சியானாலும், குருடியானாலும், குஷ்டரோகிணியானாலும், கிழவியானாலும், பத்தினியிடத்துப் பக்தியுள்ள புருஷனே பத்தினி விரதனாய்க் கருதப்படுவான். பத்தினிகளின் எச்சிலைப் புருஷர்கள் பட்சிக்கவேண்டும். பத்தினிகள் எதிரில் வந்தபொழுது புருஷனெழுந்து ஒற்றைக்கால்மேல் ஓரமாய்க் குனிந்து நிற்கவேண்டும். சட்டங்களை யதிகிரமித்து நடக்கும் பர்த்தாக்களைப் பத்தினிகள் தண்டித்து வருவார்கள். அத்தேசத்துப் பெண்கள் இஷ்டமிருந்தால் எத்தனை பர்த்தாக்களையாகிலும் மணம்புரிந்துகொள்ளலாம். சிலர் விலைமைந்தர்களை வைத்துக்கொள்வார்கள். அவ்விடத்துப் பொருட்குமரர்கள் நம்முடைய பொருட்பெண்டுகளைப் போன்றவர். இவர்கள், வழியேபோகும் யுவதிகளின் இருதயங்கள் சஞ்சலிக்குமாறு பிரதிதினமும் தங்கள் தங்கள் வீட்டுவாயிற்படியண்டை நின்றுகொண்டிருந்து, ஸ்திரீகள் அணுகியபொழுதெல்லாம் வெட்கப்பட்டு உள்ளேபோய்க் கதவுமறைவில் நின்று முகத்தை மாத்திரம் இப்புறமிட்டுக்கொண்டு தொங்கித் தொங்கிப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். அவ்விடத்துப் புருஷர்களுக்குப் பத்தினி வியோகம் வருமாயின் புனர்விவாகஞ் செய்யமாட்டார்கள். செய்தவர்களைச் சாதியினின்று தள்ளிவிடுவார்கள். பாலியத்திலேயே பத்தினி வியோகஞ் சம்பவிக்குமானால் புருஷர்களுக்குத் தாடியும் மீசைகளையும் சிறைத்துவிடச் செய்வார்கள். தலைமொட்டையடிக்கிறதில்லை. குற்றஞ்செய்யும்பொழுது சிண்டைப்பிடித்துக்கொண்டு குனியவைத்துக் குத்துவதற் கனுகூலமாயிருப்பதற்காகத் தலையை மொட்டையடிப்பிக்கார்களாம்! இருபது பிராயம் கழிந்தபிற்பாடு பாரியை வியோகமடைந்த பர்த்தாக்களுக்குப், பன்னிரண்டாநாள் மூக்கின் முன்பாகத்தைக் கத்தரிப்பார்களாம்! இந்தப் புத்தகத்

தைப் படிக்குமவர்களு ளெவராயினும் இப்படிப்பட்ட மகாதேசத்துக்குப் போவதற்குக் கோருவார்களா? எந்தத் தேவதையின் கடாட்சத்தினுலாவது நம்முடைய தேசத்துப் பெண்களுக்கு அமானுஷமான மந்திரசாமர்த்தியஞ் சித்தித்து, இப்படிச் சொல்லிய வண்ணம் அவர்கள் நம்மிடத்து அருள்புரிவாராகில், நமக்குள் எத்தனை பெயர் அதைச் சகிக்கக்கூடுவார்கள். சாதுக்களே! செவ்வையாய் ஆலோசியுங்கள்.

231. பெரும்பெரும் பட்டங்களைக் கட்டிக்கொண்ட கற்றோர்களே! லட்சானுலட்சமான பெண்கள் இந்தக் குரூரவழக்கத்துக்கு உட்படுத்தப்பட்டு, வீடுவிட்டு வெளிப்படாமல் உலகவறிவு ஓரணுவேனுமில்லாமல் பசுபிராயர்களாயிருக்கிறார்கள். பகவான் அருளிக்கொடுத்த இந்தச் செவ்விய ஒளியை, இந்த மாண்புகூர் வாயுவை அக்கோதைகள் அநுபவிக்கத்தகாரா? இப்படைப்பின் மேன்மையைக்கண்டு அவர்கள் களிக்கத்தகாரா? இருட்டுச்சிறைகளிலிருக்கும் பெண்களனைவரும் ஒரேபிடியாய் முறையிட்டுக் கொள்ளுகிறார்கள். அண்ணர்காள்! இம்முறைகளைக்கேட்டு அவர்களை விடுதலை செய்யமாட்டீர்களேன்? அவர்களுடைய அடிமைத்தனத்தை நிவாரிக்கமாட்டீர்களேன்? புண்ணிய புருஷர்களே! உங்களவர்களென்று பாராட்டுங்கள்! உங்களைப்போலவே மனுஷிய சன்மமெடுத்தவர்களென்று கருணைகூருங்கள்! சர்வேசுவரனையெண்ணியாவது, அவர்களை ரட்சியுங்கள்!

கணவி கணவர் சுகப்படும் வழிகள்.

232. விவாகத்தினுல் பெண்சாதி புருஷர்கள் ஐக்கியமாவார்களாதலினுல், அவர்களுடைய இருதயங்களும் மனங்களும் எப்பொழுதும் ஒன்றாயிருக்கவேண்டியது. எவ்வித ரகசியங்களையாயினும் ஒளித்துவைக்காமல் ஒருவரோடொருவர் சொல்லிக்கொள்ளவேண்டும். தப்பிதமானுலும் ஒப்புக்கொண்டு மன்னிப்புக்கோரவேண்டும். அப்படிச் செய்பினே அவர்களுடைய அந்நியோந்நிய நேசம் நிலைபெற்றுப் பரஸ்பராநுராகம் பலப்படும். ஒருவர் மீதொருவருக்கு நம்பிக்கை விருத்தியடையும். ஒளித்துவைப்பதினுல் அநுமானமுதிக்கும். பிற்பாடு நம்பிக்கை பிறப்பதற்குத் தட

வைக்குத்தடவை பிரமாணஞ்செய்யவேண்டிவரும். கடைசியில் இதுகூடக்கெட்டு விரோதமுண்டாகும். ஒருவர்மேலொருவர் விசுவாசம் பிறழ்ந்துபோன இரட்டைகளுக்கும் இல்லறவின்பத் திற்கும் வெகுதூரம்.

233. பாரியைக்குப் பர்த்தாவைக்காட்டிலும், பர்த்தாவுக் குப் பாரியையைக்காட்டிலும் இவ்வுலகத்தில் அதிகமான நண்பர் கள் எவர் உளர்? அவர்களிருவரும் ஒரேசரீரத்தில் பகுதிப்பாகங் களாவதினால், எவ்வித சுகதுக்கத்திலும் பங்குபெற்று இசைந்து இணங்கியிருப்பார்கள். ஒருவரையொருவர் மோசஞ்செய்வதும், ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளாமல் எந்த விஷயத்தையாயி னும் மனதிலேயேவைத்து மறைத்துக்கொள்வதும், ஈதெல்லாம் இயற்கைக்கு விரோதமானவை. தன்னிடத்தில் தனக்கெப்படி அந்நியபாவம் பிறக்கும்? பாரியையைத்தனது ஆத்துமாவாகப் பார்த்துக்கொள்ளும் பர்த்தாவே பர்த்தா. பர்த்தாவைத் தன் னுடைய ஆத்துமாவாகப் பாவித்துக்கொள்ளும் பாரியையே பாரியை. அவரிருவருடைய தாம்பத்தியமே தாம்பத்தியம்.

234. ஒருவரை யொருவர் சுகப்படுத்துவதைக்காட்டிலும் பாரியாபர்த்தாக்களுக்குப் பின்னை யதிகமான சவுக்கியமேதிருக்கி றது? ஒருவருடைய விசாரத்தை யொருவர் போக்கடிப்பதைக் காட்டிலும் அதிகமான சந்துஷ்டி பிறிதேதுளது? எவ்விடமோ பிறந்து, எவ்விடமோ வளர்ந்து, எப்படி யெப்படியோ ஒன்றுகிறார் கள்—தம்பதிகள். அவர்களுடைய பரஸ்பர விருப்பம்—ஆகாகா! அதன் மகிமையை என்னவென்றுரைப்பது? தாய் தந்தைகளைக் காட்டிலும், தம்பி தமையர்களைக்காட்டிலும், தங்கை தமக்கைகளைக் காட்டிலும், தன்னைக்காட்டிலுங்கூட, ஒருவரைபொருவர் அதிகப் படியாய்ப் பாவித்துக்கொள்ளும்படிச் செய்கின்றது! ஓகோகோ! சிருஷ்டி கர்த்தாவின் சாமர்த்தியத்தை யெவ்வாறு கொண்டாடு வது!

235. தன்னவர்களை யெல்லாம் விட்டு விட்டுத்தாயும் தகப் பனும் தெய்வமும் சமஸ்தமும் பர்த்தாவேயென்று நம்பிவருகி றாள்—பாரியை. ஏசினாலும் அடித்தாலும் பாரியைக்குப் பர்த் தாவேயல்லவா பற்றுக்கோடு? ஆதரிப்பதற்கும் அநுக்கிரகிப்பதற் கும்பர்த்தாவே யல்லவா துணைக்கொம்பு? பர்த்தாவுக்குக் கோப

முகித்துப் பேச்சு விட்டு விட்டால் பாரியைக்குத் திக்கி யாருலகத்தில்? ஐயோ! அப்படிப்பட்ட சமயத்தில் பாரியையின் மனமெப்படிப்பரிதவிக்குமோ? எவ்வளவு வருந்தியேங்குமோ? அவளுடைய இருதய மெப்படித் துடிக்குமோ? இவ்வளவு வருத்தத்தை மனையாட்டி சகிக்கவேலாள். ஆதலால் பர்த்தாக்களே! உங்களுடைய பத்தினிகளைத் தயை கூர் மனத்துடன் பேணிப்பெருமைப்படுத்துங்கள். அவர்களை விருப்பத்துடன் கருணியுங்கள். அவர்களைச் சுகப்படுத்திச் சுகியுங்கள். நல்ல வார்த்தைகளை மெல்ல மெல்லப் போதியுங்கள். அவர்களுடைய மனங்களுக்கு வருத்தம் வந்தபொழுது காதலுடன் ஆதரியுங்கள்.

236. நமக்குள் அனேகர் தங்களுடைய மனைவிகளை மிக்வும் தாழ்மையான நோக்கத்துடன் பார்க்கிறார்கள். ஊழியஞ் செய்வதற்கும், பள்ளியறையிலிட்டுச் சுகிப்பதற்குந்தவிர வேறெதற்கும் உதவாத தொண்டுகளாக்கியிருக்கிறார்கள். ஐயோ! ஈதெவ்வளவு அநியாயம்! எவ்வளவு இழிவுள்ளது! உயிர்ச்செல்வத்தையிவ்வாறுவிலங்குக்குச்சமமாய்ப் பார்ப்பது எவ்வளவு அவிவேகம்? மெய்யான இல்லறச் சவுக்கியத்தை யிப்படிப்பட்டவர் எவ்வாறு சுவைபார்ப்பார்கள்? பெண்டுகளை யெவ்வளவோ மேன்மைப் படுத்திச் சுகப்படச்செய்தாலல்லவா புருஷர்களுக்குச் சவுக்கியம் கிடைக்கும்? அவர்களுடன் தங்களுடைய கஷ்டநிஷ்டூரங்களைச சொல்லிக்கொண்டாலல்லவா மனம் அமைதிப்படும்? அவர்களுடைய மரியாதையை யடைந்தாலல்லவா இவர்களுடைய ஆவியும் மகிழ்வுற்றிருக்கும்? அவர்களுடைய சந்தோஷத்தை யநுபவித்தாலல்லவா இவர்களுடைய இருதயங்களும் குளிர்ச்சியடையும்?

237. சிலர் குரூரர்கள் அத்தியந்தம் தயாசூனியர்களாகித் தங்களுடைய பெண்சாதிகளை யடிக்கிறார்கள். பண்டிதர்களென்று பெயர்பெற்றுச் செருக்குற்றப் பரமவேஷதாரிகள்கூட இவ்வாறு செய்கிறார்கள். பெண்பிள்ளைகளை யடிப்பதற்கு இவர்களுடைய கையெப்படியாடுமோ சொல்லச் சக்தியற்றிருக்கிறோம். அபலைகளின் மிருதுசரீரங்களை வருத்துவதற்கு, அந்தோ! இக்கன்னெஞ்சர்களின் மனமெப்படி யொப்புகின்றதோ? அவர்கள் கண்ணீர் விடுவதைக்கண்டு இவர்களெப்படிச் சகிக்கிறார்களோ? ஓ நரமிருகங்களே! உங்களுக்கிது தகாது. அணங்குகள் அல்லல்பட்டுக்

கொண்டிருக்குமில்லங்களினின்று ஐசுவரியங்களெல்லாம் அடியோடு பறந்தோடிவிடும். ஆதலால் அவர்களைச் கொடூரத்துக்குள்ளாக்காமல் எக்காலும் தயையுடன் பார்க்கவேண்டியது. பதினாயிரம் தப்பிதங்கள் செய்தபோதிலும் இல்லாளைப் பூவிதழினாலும் அடிக்கக்கூடாது என்னும் சொல்லை மதியுங்கள். அவர்களுடைய கண்ணீரைத் துடையுங்கள். முத்தமிட்டுப் புத்திசொல்லுங்கள். இப்படிச்செய்யுமிடத்து, அவர்களுடைய மனங்கள் உங்களுடையவையாம். அவர்களுடைய இருதயங்களும் உங்களுடையவை. அவர்களுடைய ஆவிகள்கூட உங்களவையேயென்று திடமாய் நம்புங்கள்.

238. எல்லாவற்றிலும் முக்கியமானது—புருஷர்களே! உங்களுடைய பெண்சாதிகளை மெய்யான நேயத்துடன் பேணுங்கள். உங்களாசைகள் யாவற்றையும் எந்தவேசையின்மீதோ எந்தவேஷக்காரிமீதோ நிறுத்தி, அரைமனதுடன் உங்களுடைய சொந்தப் பெண்களுடன் சேர்வீர்களானல், அவர்களுக்கும் உங்களுக்குங் கூடச் சொப்பனத்திலும் சௌக்கியமுண்டாகமாட்டாது. இன்னுமொன்று—தூசுக்கும் துரும்புக்கும் உங்கள் மானினிகளின்மீது இல்லாச்செல்லா ஐய அநுமானங்களை உண்டாக்கிக்கொண்டு சீற்றமுற்று உங்களுடைய சுகத்தைப் போக்கடித்துக்கொள்ளவேண்டாம். குற்றமிலா நெஞ்சத்துடன்கூடிப் பிழையுங்கள். பிறத்தியரைப் பார்ப்பதின் மாத்திரத்திலும், பிறத்தியருடன் பேசுவதின் மாத்திரத்திலும் கெடுகுணங்கள் பிடிபடுமென்றெண்ணுதேயுங்கள். நிர்ப்பந்தங்கள் நிஷ்பிரயோசனமானவை. காதலைக்கொண்டு கட்டுப்படுத்துங்கள். காதலின் மூலமாய்க காதலிகளை யாளுங்கள். காதல்பெருகிவளர உங்கள் மாதர்களை உங்களவர்களாய்க்கருதிக் கொள்ளுங்கள். இவ்வண்ணம் சுகித்துவாழுங்கள்.

239. பெண்சாதிகளே! எத்தனைவழிகளினுலாவது புருஷர்களைச் சுகப்படுத்தும் வழியே முயலுங்கள். வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டுடையவன் வீடுவரும் வேளைக்குப், பிசாசங்கள் போல் எதிர்சென்று, வீட்டிலுள்ள சமுசாரவருத்தங்களையாவது, அக்கம்பக்கத்தாருடன் நடந்த கலகங்களையாவது சொல்லாமலும், நகைகளுக்காக வருத்தாமலும், அதில்லை இதில்லை, ஐந்தும்மூன்றும் அடுக்காயிருந்தாலல்லவா அறியாப்பெண்ணும் கறியாக்குவளென்று சொல்லி வெடுவெடுத்துக்கொள்ளாமல், கிடைத்த அள

விலேயே திருப்தியடைந்து களிப்பூட்டவேண்டியது. ஒருவேளை அவன் சீறிக் கடூரங்கள் பேசினாலும் ஏசினாலும் எதிராடாமல் சாந்தத்தை வகித்துச் சீற்றம் ஆறியபிறகு குளிரப்பேசி இரக்கப்படச் செய்யவேண்டியது. எப்பொழுதும் நல்ல வஸ்திரங்களை யுடுத்துப் பரிசுத்தமாகவும், மனக்கவர்ச்சியாகவும் இருப்பினே நாயகனுடைய மனத்துக்குச் சந்தோஷமுண்டாகும். இல்லாவிடின், வெறுப்பு பிறந்து அவனுடைய சித்தம் பிறத்தியோரிடத்தில் சஞ்சரிக்கக் கூடும். மெல்லிய ஈரத்துணிகளைப் போர்த்துப் பரபுருஷர்கள் எதிரில்படக்கூடாது. மேலும் அவரெதிரில் நிற்கவந்தபொழுது, முன்றானை தொலங்கியிராமல் சாக்கிரதைப்பட்டிருக்கவேண்டியது. இந்தச் சாக்கிரதை தவறினல், கணவனுக்கும் கண்டவர்களுக்குங்கூட மிகவும் கஷ்டமாயிருக்கும்.

240. பெண்டாட்டிகளே! இன்னுமொரு சங்கதி. பதிகளின் மேல் பிரேமையும் பக்தியும் பொருந்தி, அவர்களுடைய மனங்களுக்கு எள்ளளவும் அனுமானம் பிறவாத வண்ணம் நீங்கள் பிரவர்த்திப்பது மிகவும் முக்கியமானது. அவர்களுடைய இருதயங்களுக்கு உங்களிடத்தில் பரிபூரணமான விசுவாசத்தைப் பிறப்பிக்கவேண்டியது. உங்களுக்குக் கொடுக்கும் சுதந்தரத்தைத் துர்வினியோகப்படுத்தாமல் நீங்கள் பெரும்பெயரைப் பெற்றுக்கொள்ளவேண்டியது. நீங்கள் கெட்டநடவடிக்கைகளுள்ளவர்களாயின், மனைவனுக்கும் அவன் வமிசத்துக்குங்கூடக் கெட்டபெயர்வந்து சேரும். ஆதலால், மனங்களைச் சஞ்சலப்படுத்தாமல், பரபுருஷர்கள் எப்படிப்பட்டவரையும் ஆசிக்காமல், பதியினல்வரும் சவுக்கியத்தை நினைவிலிட்டுக்கொண்டு, பதிவிரதா சிரோமணிகளாய் நீடூழி வாழ்ந்துவாருங்கள். பத்தினிகளுக்குப் பாதிவிரத்தியமே பரமபூஷணம். அஃதில்லாதவிடத்தில் ஆயிரம் சற்குணங்களிருந்தபோதிலும் பிரகாசிக்கமாட்டா. இது உறுதி, முக்காலுமுறுதி.

241. நம்முடைய அவிபக்த குடும்பங்களில் இப்பொழுது பழகிவரும் சிலவழிகள் தம்பதிகளின் சவுக்கியத்திற்கு மிகவும் பிரதிகூலமாயிருக்கின்றன. இராத்திரிகளில் மாத்திரமே அவர்கள் தமது பள்ளியறைகளில் கலந்து பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொள்ளச் சரிப்பட்டிருக்கும். பகலில் பேசுவதற்கு அநுகூலமில்லை. பேசினல் பெரியோர்கள் சொல்லிக்காட்டுவார்கள். பொ

ழுதுவிடியும் வேளைக்கு நமது அழகிகளுக்கு அபரிமிதமான வெட்க முண்டாகின்றது. கணவர்களின் கண்ணுக்குப் புலன் படார். எதிரில் உட்காரமாட்டார். கலந்துபேசமாட்டார். நன்மை தீமைகளைச்சொல்லிக்கொள்ளமாட்டார். ஒரு மிக்க உட்கார்ந்து உடையவர்களுடன் உண்டி புசியார். பொழுது முழுகிப் போசனங்கள் முடிந்த பிறகே தம்பதிகள் கலக்கக் கூடுவர். நோயுண்டிருக்கையில் கூட ஒருவரருகில் ஒருவரிருந்து உபசாரங்கள் செய்துகொள்ளக் கூடாது. இப்படிப்பட்ட துர்வழக்கங்கள்தொலைந்தோடாவிடின் தாம்பத்தியம் சுகத்தைச் கொடுக்கக் கூடியதாக மாட்டாது.

242. தம்பதிகளே! முக்கியமான மர்மத்தைக் கேளுங்கள். உங்களிருவருக்கும் இவ்வளவு காதல் கிடைத்திருப்பதற்குக் காரணமறிவீர்களா? இக்காதல் நீடூழி நிலைபெற்றிருப்பதற்கு உபாயங்களை யறிவீரா? உங்களிருவருக்கும் உள்ள வாஞ்சை யெப்படிப் பட்டதோ கிரகித்தீர்களா? நீங்கள் இணக்க முற்று வாழும் வழியைக் கண்டு கொண்டீர்களா? இஃது சந்தானப்பேறேயன்றி வேறல்ல. சந்தானப்பொருளிலேயே அவர்களிருவருடைய இருதயங்களும் ஓரே யிடத்திலூன்றி யொற்றுமைப்பட்டுக் களிப்பமிழ்தத்தைப் பருகிக் கரையிலா வானந்தம் பெருகுவார்கள். பிள்ளைப்பேறிலேயே அவர்களுடைய கோரிக்கைகள் தீரும். பிள்ளைப்பேறிலேயே அவர்களுடைய அநுராகத்திற்கு வடிவங்கிடைக்கும். பிள்ளைச்செலவமில்லாத் தாம்பத்தியம் தாமரையில்லாத்தடாகம்போல விளக்கமற்றிருக்கும். பிள்ளைப் பாக்கியமில்லா விடத்துப், பின்னைச் சந்தோஷ மெல்லாம் சாரமற்றுச் சப்பென்றுபோய்விடும். கரையிலா மனத்துயரம் மேற்கொண்டு மனத்தைக் கரைத்து வருத்தும். ஆதலால் சாநாள் வரைக்கும் சவுக்கியமாய் இல்லற நடத்தக்கோரிக்கையுள்ளவர்கள் சந்தானமத்தியந்த ஆவசிகமென்று கருத வேண்டியது. சந்தான மில்லாவிடின் உள்ள காலமெல்லாம் நிச்சிந்தையாய்ச் சுகிக்கலாமென்ற ஆசையை மாத்திரம் தூரக் கட்டிவைக்கவேண்டியது.

243. தம்பதிகளின் சம்பூரணசவுக்கியத்துக்குச் சந்தானமெவ்வளவுக்கெவ்வளவு அகத்தியமோ, அதிக சந்தானம் அவ்வளவுக் கவ்வளவு அசந்தோஷத்துக்குத் தடையூறாய் நிற்கும். ஆண்டாண்டும் ஒவ்வொரு பிள்ளையைப்பெற்றுவரும் தாய்களின் சரீரம்

வற்றலாய் மிகமிகவும் ஒடுங்கிப்போய்விடும். சந்தானமுங்கூட அதிக சிலாக்கியமாயிராது. குடும்பம் ஏராளமாய் அதிகரித்துத் தாங்குவதற்கு மிகவுங்கடினமாய்விடும். எளிமை அதிகப்படும். ஆதலால், தம்பதிகள் தம்முடைய நெட்டு நிலைமைகளை மிஞ்சுமாறு சந்தானத்தை விருத்திசெய்யக்கூடாது. முதலதிகாரத்தில் சொல்லியவண்ணம், பிரதிமாதமும் இராஜோதரிசனத்திற்கு முந்தி 4-5-தினங்களும் இரஜஸூற்றம் நின்றபிறகு 7-8-தினங்களும் கழியவிட்டுச் சம்போகஞ்செய்யவேண்டியது. இப்படிக் கிட்டத்தட்ட ஒருபட்சகாலம் சம்போகத்தை யொழித்திருப்பது எவ்வளவு கஷ்டமாயிருப்பினும், பிறபாடு அதனாலகூடிவரும் ஆதாயத்தை நினைவிலிட்டுச் சாபலியத்தை யடக்கிக்கொள்ளவேண்டியது. வேறுபாயங்களைத் தேடுவதும் தொடாவதும் மிகவும் அனுசிதமானது. மேலும் மிகவும் ஆனிகரமானது.

விபசாரம்.

244. இவ்வதிகாரத்தில் இதுவரைக்கும் தம்பதிகளின் அனுகூலத்திற்கும சவுக்கியத்திற்கும் உதவிகரமாயிருக்கும் வழிகளை விளக்கிக்காட்டினோம். இப்பொழுது இவ்விந்துதேசத்தில் நம்முடைய இந்துக்களிலுள்ள தாம்பத்தியங்களிற் சிற்சில, நல்ல பொருத்தம் வாய்ந்து சுககரமாயிருக்கின்றனவென்பதற்கு எவ்வளவேனுஞ் சந்தேகமில்லை. ஒருவர்மீது ஒருவர் அத்தியந்தமாகிய பிரேமையும் அநுராகமும் பொருந்தி கரையிலாச் சமுசார சௌக்கியத்தைப்பெற்றிருக்கும் தம்பதிகள் சிலருண்டு. மிதியில்லா பிரீதியுடன் தமது சதிகளைப் புஷ்பங்களைப்போலப் பத்திரமாய்க்காப்பாற்றிவந்து அவர்களைச் சுகப்படச்செய்து தாமும் சுகமடைந்து வாழும் சரசசிகாமணிகளாகிய கணவர்களும், பதியினிடம் பயபக்தி விசுவாசங்களைக்காட்டி எக்காலும் பதிசேவையே பரமார்த்தமென்றெண்ணிச் சஞ்சரித்துக் கணவனைக் காப்பாற்றுவதற்காகத் தமது இன்னுயிர்களையும் துறப்பதற்குச் சித்தமாயிருக்கும் பதிவிரதா சிரோமணிகளும், கிடைத்தவளவு பாக்கியத்திற்குள் கிரகத்தைப் பூலோக வைகுண்டமென்னும்படி யிட்டுக்கொண்டு, எப்படிப்பட்ட இடையூறுகள் நேரிட்டபோதிலும் கணவனுக்குத்

துணைப்பட்டுத் தைரிய சாகசாதி குணங்களை யுபதேசிக்கும் உத்தமிகளும், எவ்வளவு கொடூரமான மாட்டுப்பெண் ணவஸ்தைகளை யநுபவித்து வந்தபோதிலும், எப்படிப்பட்ட குரூரமான நிலைமைக்குளகப்பட்டுத் திக்கு முக்காடிக் கொண்டிருந்தபோதிலும் வாயெடுக்காமல் சகித்துக்கொண்டிருக்கும் நல்லாட்களுமாகிய இல்லாட்கள் அங்கங்கு காணப்படுகிறார்கள். ஆயினும், அனேக தாம்பத்தியங்கள் ஓரெள்ளளவேனும் பொருத்தமில்லாமல் சுகசூனியங்களாகவும் அனர்த்தமூலங்களாகவும் இருக்கின்றன.

245. இடைவிடாது கலகங்களை யுண்டுபண்ணிக்கொண்டு வீடுகளைக் காடுகளாய்ச் செய்யும் வினைகேடிக் கணவிகளும், வீட்டு வேலை யேதொன்றையும் விரல்போட்டுத் தொடாமல் வயிறு புடைக்கத் தின்றுகொழுத்துப் படுத்துக் குறட்டையிட்டுத் தூங்கும் சோவிற் பெருச்சாளிக் கணவிகளும், வீட்டுப் பொருள்களை விற்றுப் பணங்கூட்டி யொளித்துவைக்கும் திருட்டுச் சிறுக்கிகளும், மாமியாரொருவார்த்தை வசவு ஏசினால் பத்துவசவுகளாய்ப்பாடி யட்டகாசஞ்செய்து புருஷன் வீட்டுக்கு வரும்வேளைக்கு மூலையில் முக்காடிட்டுப் புலம்பியழுது கிடந்திருக்கும் கொடும்பாவிக் கணவிகளும், ஒன்றுண்டாகுமானால் பத்தாய்வளர்த்துப் பொய்யும் புளுகும் சொல்லிப் பொழியும் படுபாவிக்கிழத்திகளும், தூசுக்கும் துரும்புக்கும் துறுதுறுத்துச் சோறுதின்னாமல் சினந்துகொள்ளும் மனைவிகளும், கிணற்றில் விழுவேன் நஞ்சுகுடிப்பேனென்று பயமுறுத்தும் பத்தினிகளும், மனைவன்மீதாவது மாமிமீதாவது சினந்துகொண்டபொழுது குழந்தைகளை யிரக்கமின்றி யடித்துக் கோபத்தைச் சாதித்துக்கொள்ளும் கோமாளிக் கணவிகளும், பானைமேலும் சட்டிமேலும் சாக்கிட்டு வைது கோபத்தை நிறைவேற்றிக்கொள்ளும் பாதகிகளும், கணவன்பேரென்றால் சரிப்படாமல் அவன் முகத்தில் கொள்ளிவைக்கிறேனென்றுகொண்டு நெட்டிகள் நெறநெறவென்று முறிக்கும் பட்டிப்பெண்டுகளும், புருஷன் வீட்டிலுள்ளபொழுதெல்லாம் வெடுவெடுத்துக்கொண்டிருந்து அவன் வீடுவிட்டு வெளியே போன பிறகு சனி தொலைந்ததென்றெண்ணிச் சந்தோஷப்படும் ஜகஜாலசண்டிகளும், புருஷனை யொரு கணக்காயெண்ணாமல் அவனுடைய அனுமதிபெறாமலே ஊரெல்லாம்திரிந்து வரும் ஓடுகாலிக்குறும்பிகளும், வல்லவனை வாய்க்குவந்தபடி யெல்லாமேசிப் பொல்லாத்

தனஞ் செய்யும் வல்லாள கண்டிகளும், குழம்புச்சட்டியைக்கொழுநன் தலைமீது போட்டுடைச்கும் கொழுப்பு மிகு நாயகிகளும், கணவனுக்கெவ்விதச் சங்கடங்கள் நேரிட்டபோதிலும், ஒரு நகையையாயினும் எடுத்துக்கொடுக்க வுடன்படாத படுபாவிகளும், புருஷனுக்குக் கண்கள் குருடு பட்டுப்போகவேண்டுமென்று இச்சித்து மாரியம்மனுக்குப் பொங்கலிடுவோமென்று வேண்டிக்கொள்ளும் பொல்லாட்களும், உடையவனெப்பொழு திறப்பனோ தலையை யெப்பொழுது வெழுமெனச் சிறைப்பேனோ பலகார மெப்பொழுது பண்ணுவேனோவென்று பலதெய்வங்களுக்கும் பிரார்த்தனை செய்யும்பதிவிரதா சிரோமணிகளும், பிசாசு பிடித்ததென்று பாசாங்கு செய்து செவிடுபடக் கூவி யார்ப்பரிக்கும் பத்திரகாளிகளும், புருஷன் வீட்டிலுள்ளவரைக்கும் வீட்டிற் குள்ளேயே எதுமறியாப் பேதைபோல அடைபட்டிருந்து அவன் வாயிற்படி கடந்ததும் வெளிப் பட்டுவந்து தெருவில் போகுமவரையெல்லாம் இருவிழிகளு மசையாமல் பார்த்துக்கொண்டிருக்கும் கொள்ளிக்கண்ணிகளும், தாங்கள் செய்யும் தூர்த்த காரியங்களையெல்லாம் தலைவர்களுக்குத் தெரியவிடாமல் சாக்கிரதை யுற்றிருந்து அவர்களை மாத்திரம் தங்களுக்கு வசமாக்கி வைத்துக்கொண்டிருக்கும் காரியதுரந்தரமாயக்கள்ளிகளும், எவ்வெவ்வாறோ அனுகூலமுண்டாக்கிக்கொண்டு கள்ளக்கணவர்களுடன் கூடிவாழ்ந்து வரும் அவிசாரித்தாரங்களும், இவர்போன்றவ ரனேகரும் இருக்கிறார்கள்.

246. வீணனுமானங்களை வைத்துக்கொண்டு எள்ளளவும் ஈர இரக்கமின்றிச் சதிகளை யதி குரூரமாய் அடித்து வைது வேதனைப்படுத்தி வரும் புருஷர்களும், வேறெவர்மேலோ உள்ளகோபத்தைப் பெண்சாதிகள் மேற் சுமத்தி யவர்களைக் கருணைகெட்டடிக்கும் புருஷர்களும், பெண்சாதி மரித்த பதின்மூன்றா நாளே திரும்பவும் மணம்புரியும் புருஷர்களும், பெண்சாதிகளைத் துறந்து வேறு பெண்சாதிகளுக்காகப் பிரயத்தனஞ் செய்யும் புருஷர்களும், வேசைகள்மே லாசை மிகுந்து வீட்டுச் சொத்தையெல்லாம் அவர்களுக்கு அர்ப்பணஞ் செய்யும் பர்த்தாக்களும், அவர்களைத் தங்கள் வீட்டிலேயே வைத்துக்கொண்டு தங்களுடைய பெண்சாதிகளைக் கொண்டு அவர்களுக்கு ஊழியஞ்செய்விக்கும் மனைவர்களும், பெண்சாதிகளே தெய்வமென்று பாவித்து அவர்களுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்து அவர்களிட்ட கட்டளைப்படித்

தொண்டு செய்யுந் துணைவர்களும், சபைகளில் சிங்கநாதஞ் செய்பினும் மனைகளில் கணவிகளெதிரில் வாயெடுக்க மாட்டாவல்லவர்களும், பெண்சாதிகளின்பேச்சை நம்பிப் பெற்றோர்களைப்புறப்படுத்தும் பரமயோக்கியர்களும், பத்தினிகள் வைதுகொண்டிருக்கத் தலை குனித்துக்கொண்டு நகத்தால் மண்ணைச் சுரண்டிக்கொண்டிருக்கும் மகா பாக்கியசாலிகளும், வீட்டுப்போர் பொறுக்கமாட்டாமல் இரண்டொரு பருக்கைகளை வாயில்போட்டுக்கொண்டு அயல் வீடுகளுக்குப்போய்ப் பொழுது கழித்து வரும் கொழுநர்களும், ஏன் மணம் புரிந்தோமாவென்று துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் அன்பர்களும், பெண்சாதிகளின் பிரசித்தியினால் தங்களுடைய பெயர் எடுபட்டுப்போய்க், காமாட்சி யகமுடையான், மீனாட்சி யகமுடையானென்றுபெயர்பெற்றுவாழும் காதலர்களும், சிறுகன்னிகைகளை மணம்புரிந்து வசிய மருந்துகளுக்காகவும், யெளவனத்தைத்திருப்பும் ஔஷதங்களுக்காகவும் பாடுபட்டுழலும் கிழக்கணவர்களும், உட்கார்ந்து எழுவதற்குச் சக்திபற்றுத் தமது சதிகளின் மீது சந்தேகத்தினால் பெரு விழிகள் புரட்டி ஏற இறங்கப்பார்த்துக்கொண்டு சளுவாய் விழுங்கிக்கொண்டிருக்கும் வீட்டவர்களும், கள்ளிகளை மணந்து அவர்கள் மூலமாய்க் கணக்கில்லாத கஷ்ட நிஷ்டூரங்களுக்குட்பட்டிருக்கும கணவர்களும், இவை போன்றவரும் அனேகர் காணப்படுகிறார்கள்.

247. இனி, அவிசாரிகளான மனைவிகளை வைத்துக்கொண்டிருக்குமவர்களுடைய பிழைப்பு எப்படிப்பட்டதென்று சொல்லக்கூடியது? உள்ளுள்ளே யேங்கிக்கொண்டு சிலர் தமது பெண்சாதிகளின் கெட்ட நடவடிக்கைகளை யறிந்து மறியாதவர்கள் போல வாழ்வார்கள். மறைவில் சச்சரவு செய்துகொண்டு வெளிப்பட வேது மில்லாதது போல் சிலர் நடந்துகொள்வார்கள். இதரர்களுக்குத் தெரியாமலிருந்தாற் போதுமென்று சிலர் பொத்தி வைப்பதற்காகப் பலவிதமாய்ப் பாடுபடுவார்கள். தங்களுக்கொன்றுந்தெரியாதென்று இதரர்களுக்கு நம்பிக்கை யுண்டாகுவதற்காக இவர்களெதிரில் தங்களுடைய சதிகளை இடைவிடாது சிலர் துதித்துக்கொண்டிருப்பார்கள். துர்க்குணங்களை நீக்கவேண்டுமென்று சிலர் அவர்களை யடிப்பார்கள், வைவார்கள், அவர்களுடைய நகைகளைப்பிடுங்கி வைப்பார்கள், வீட்டிலிருந்து ஓட்டிச் சோற்றுக்கும் துணிக்கும் கதியில்லாமற் செய்வோமென்று

3.11.97

பயமுறுத்துவார்கள். கொன்றுபோடுவோமென்று பயமுறுத்துவார்கள். தாங்களிறந்துபோவதாகச் சொல்லிக் கத்தியை யுருவிக் கழுத்தை யறுத்துக் கொள்ளப்போவார்கள். தேசாந்தரம் போய் விடுவோமென்று தீனக்குரலுடன் தெரிவிப்பார்கள். சோறுதின்னுமல் சும்மா சோர்ந்து கிடப்பார்கள். பந்துக்களுடனும் சினேகிதர்களுடனும் தங்களுடைய விதிவசத்தைக் குறிதது முறையிட்டுக்கொண்டு தங்களுடைய மனைவிகளுக்குப் புத்தி சொல்லுவிப்பார்கள். சிலர் தாந்தாமே பற்பல விதமாய் மனமுடுவார்கள். கௌரவ பிரதிஷ்டைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று முகக்கட்டையைப் பிடித்துக்கொள்ளுவார்கள். தேவையான நகைகளைத் தேடிவைப்போமென்று ஆசை காட்டுவார்கள். சிலர் தம்து மனைவிகளைப் பற்பல விதமாய் நிர்ப்பந்தஞ் செய்வார்கள். கிணற்றில் விழுவோமென்று அவர்கள் பயங்காட்ட இவர்கள் பயப்பட்டுச் சும்மா விருப்பார்கள். தமது கணவிகளின் குணங்களைத் தீயர்கள் கெடுத்து விட்டாரென்று துன்பத்துடன் தவிப்பார்கள். அவர்களுடைய கோது மொழிகளைக் காதிலேற்றிச் சித்திராங்கிகளென்று கண்டுகொள்ளமாட்டாமல் சிலர் அவர்களை மகா பதிவிரதைகளென்று பாவிப்பார்கள். சிலர் வீட்டுவேலைக்காரர்களை மாற்றுவார்கள். சிலர் புது விடங்களுக்குக் குடியெழுந்து போவார்கள். இதர புருஷர்கள் தம தில்லங்களுக்கு வராதபடி சிலர் கட்டுதிட்டங்கள் செய்வார்கள். சாவல் வைப்பார்கள். சிலர் எவ்விடத்திற்கும்போக மனமொப்பாமல் வீட்டிலேயே காவல் காத்துக்கொண்டிருப்பார்கள். ஒருவேளை வெளியே போனாலும் உடனே திரும்பிவந்து விடுவார்கள். தமது கணவிகளுக்குக் குணங்கள் திருந்தியவென்று சிலர் திருப்தியடைவார்கள். சிறுதனத்தில் தெரியாத்தனத்தினல் எப்படியிருந்தாலும் பிறகு புத்தி மீண்டு தமது மீதிலேயே அபேட்சையுடன் தமது காதலிக ளிருக்கிறார்களென்று சிலர் கருதுவார்கள். கெடு நடவடிக்கையிருப்பின் தெரியாதிருக்குமாவென்று எண்ணமிடுவார்கள். சிலர் அவர்களைக்கொண்டு பிரமாணங்கள் செய்வித்து நம்பிக்கை பெறுவார்கள். சிலர் ஏதும் தெரிய நேராமல் பர நிந்தைக்குப்பாத்திரர்களாவார்கள். சிலர் தமககெவரும் மெய்கூற வில்லையல்லவா வென்று எண்ணமிட்டுக் கொண்டிருப்பார்கள். எது எப்படி யெரிந்துபோனாலும் போகட்டுமென்று சிலர் சும்மா விருப்பார்கள். கண்டவர்களனைவருடனும்

போகாமலிருந்தாலும் கொஞ்ச நன்றென்று சிலர் தம் மனைவிகளு க்கு இஷ்டமான புருஷர்களை வீட்டிலேயே வைத்துக்கொள்வார் கள். சிலர் பெண்சாதிகளைத்துறப்பார்கள். துறந்து விட்டுத் தம் முடைய கதியை நினைத்துக்கொண்டு சிலர் புலம்புவார்கள். சிலர் திரும்பவும் மணப்பார்கள். இரண்டாம் மனைவியின் குணங்களில் அனுமானந்தோன்றிச் சிலர் முதன் மனைவியை மன்னித்து மறுப டியும் அண்டையிற் சேர்த்துக்கொள்வார்கள். சிலர் தம்முடைய குழந்தைகளின் மீது வாஞ்சையினல் கணவிகளினின்று பிரிய மாட்டாமலிருப்பார்கள். அபகீர்த்தியென்றெண்ணிச் சிலர் சும்மா விருப்பார்கள். உலகமெல்லாம் இந்த வரிசையாகவே யிருக்கிற தென்றும், விபசாரம் பெண்பிள்ளைகளுக் குடன்பிறப்பென்றும், சிலர் மனங்களைத் திருப்திப் படுத்திக்கொள்வார்கள். சிலர் தமது முன்னைய வினைப் பயனென்று எண்ணியிருப்பார்கள். சிலர் பெண் களின்மீது நம்பிக்கை கெட்டுப் பாதிவிரத்தியம் பர்த்தாக்களின் சொப்பன மெனப் பாவிப்பார்கள். சிலர் மதி கெட்டுப் போவார் கள். நாய் தொட்ட தோண்டியை உடைக்காமல் தீருமாவென்று சிற்சிலர் தமது சதிகளைக் கொன்று விடுவார்கள். இவ்வளவு கோர கிருத்தியத்தைச் செய்ய மனம் வராமல் சிலர் தம்முடைய உயி ரையே யொழித்துவிடுவார்கள். சிலர் சமுசாரத்தை யொழித்துத் தேசாந்தரத்துக் கெழுந்துபோய் விடுவார்கள். துறவிகளாவார்கள். தமது பத்தினிகளைக் குலைத்தவர்களின் பத்தினிகளை யனுபவித் துச் சிலர் பழிதீர்த்துக்கொள்வார்கள். சிலர் தமது தாரங்களையே சங்கதூதிகளாக்கி அவர்களை மன்னிப்பார்கள். பிரகஸ்பதியைக் காட்டிலும் பெரியவர்களாவென்று, சிலர் வீடுவிட்டெழுந்து போன வீட்டுக்காரிகளைத் திரும்பவும் கூட்டிவந்து வைத்துக் கொண்டு குடித்தனஞ்செய்வார்கள். பிறத்தியருக்குப் பிறந்த பிள்ளைகளென்று தெரிந்திருந்தும் சிலர் தம்முடைய பெண்சாதி கள் பெற்ற பிள்ளைகளைத் தம்மவர்களாய்ப் பிரியமுடன் பாவித்துக் கொள்ளுவார்கள். இன்னுஞ் சிற்சிலர் பெண்சாதிகளைக்கூட்டிக் கொடுத்துக் காரியங்களை நிறைவேற்றிக்கொள்ளுவார்கள். ஆகா! விபசார பிசாசம் எவ்விதமான துன்பங்களுக்கும் அவமானங்களுக் கும் மூலமாகின்றது! ஸ்திரீ புருஷர்களுக்குள்ள தோஷங்களில் விபசாரதோஷத்தைக்காட்டிலும் சாமானியமாயிருப்பது மற்றே துங்காணப்படாது. இதற்கு ஆதாரமான காரணங்களையும் பரி

காரங்களையும் இதனால் விளையும் பேரனர்த்தங்களையும் சற்றுப்பரி சீலித்துப் பார்ப்போம்.

248. விபசாரம் மானிடசரீரத்திற்கு இன்றியமையாததென் றும், நாக்கிற்குச்சுவைகெடாதிருப்பதற்காக ஆகாரபதார்த்தங்களை யெவ்வாறு மாற்றிவருகிறோமோ அவ்வாறே பரிசேந்திரியங்கூட மாறுதல் கோருமென்றும், விவாகபந்தமானது மானிடர் செய்த கட்டுப்பாடென்றும், மனுஷியகோடிகளில் தவிர மற்றைப் படைப் புவகைகளில் இவ்விதக்கட்டில்லாமல் இச்சைக்குத் தோன்றியூ படிப் புணர்வதே காணப்படுகின்றதென்றும்—இவ்வாறு சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால், இந்த வாதமானது எவ்வள வேனும் நிலைநிற்கமாட்டாது. எல்லாவற்றிலும் மேன்மையுள்ள தான பிள்ளைப்பேறு என்னுஞ் செல்வத்திற்கு முக்கிய சாதனமா யிருக்கும் வாஞ்சையைச் சரீரபோஷணத்திற்காதாரமான இதர வாஞ்சைகளுக்குச் சமானமாய்ப் பார்ப்பதும், சிருஷ்டி சிரோமணி யாகிய மனுஷியவருக்கத்திற்குக்கூட மிருகங்களுக்குள்ளதுபோல கட்டுப்பாடுகளில்லாமலிருப்பதே நன்றென்பதும், மிகவும் பரிகா சத்திற்கிடமாயிருக்கும்.

249. சௌந்தரியத்தினால் ஓர்பொழுது சித்தஞ் சஞ்சலப் படுமென்பதற்கு எவ்வளவேனுஞ் சமுசயமில்லை. மகாசுந்தர மான சித்திரபடங்களைக் கண்டுகூடச் சிலர் மூர்ச்சையடைகிறார் கள். ஓர் கவிராயர் :—

> நின் சீருருவு வெளிப்படுதலோக்கி நோக்கி நிலை தளரு
> மென் பூடுருக விளமுலை மேற் புல்லு முனிந்தாயென வருந்து
> மன் போடேநீர்த்தனன் போனகைக்கு மகன்றாயென வெளியிற்
> பின் போதரு நல்லுணர்விழந்த பித்தர்போலப் பேதுறுமால்.
>
> வடிவமை நூலிற் சொல்லும் வனப்பெலா மமைத்து வேசன்
> கடிமலர்ச் செங்கைவண்ணங் காட்டிய வுருவு கொல்லோ,
> வடுகளை வேனிலா னின்னமுது கோரேய்த்துத் தீட்டும்
> படிவமோ யுயிரை வாட்டும் பாவைதன் வடிவந்தானே.

என்று பாடியிருக்கிறார். மேலும் சமுசாரத்தைத் துறந்து பற் றுக்கோடற்றவர்களாய் வனாந்தரங்களிற் காய் கனி கிழங்குகளைத் தின்றுகொண்டு தலைகீழாய்த் தவஞ்செய்யும் மகாமுனிவர்கள் கூடக் காமவிகாரத்துளகப்பட்டு அடாதகாரியங்களைச் செய்தார்க ளென்று கிரந்தங்களில் வாசித்துவருகிறோம். இனிமனுஷியமாத்

திரர்கள் காமத்துக்கு வசப்படுவார்களென்றால் ஆச்சரியமேதுள து? புராணவைராக்கியங்களெவ்வளவு படித்தாலும், சமயம் கை கூடினால் எவ்விதப்பட்ட திடசித்தர்களும் மனத்தையடக்க வேலார் களல்லவா?

நிதியான நிறை நீருக்குடைகுளமிக் கானகுல நெறிக்சோர் தீன
மதியான மதி விழுங்குங் கோளரவு பவத்தூற வளர்க்குங்கானங்
கொதியான நரகிழுக்குங் கொடும்பாச முயிருருச்கிக் குடிக்குங்கூளி
கதியான வழியடைக்குங் கற்பெருங்க பாடமன்றோ கடியகாமம்.

தந்தாரமன்றியே பரதாரமேனினைவு தனைவைத்த காமுகர்க்குத், தயை யில்லை நிசமில்லை வெட்கமிலை சமரினிற் றைரியஞ் சற்றுமில்லை, அந்தாரமி ல்லை தொடர் முறையில்லை நிறையில்லை யறிவில்லை மரபுமில்லை, யறமில்லை நிதியில்லை யிரவினிற்றனிவழிக் கச்சமோமனதிலில்லை, நந்தாத சனமில்லை யினமில்லை யெவருக்கு நட்பில்லை கனதையில்லை, நயமில்லை யிளமை தனில் வலிமையிலை முத்திபெறு ஞானமிலை யென்பர்கண்டாய், மந்தார பரிமள சுகந் தாதி புனையுமணிமார்பனே யருளாளனே, மயிலேறி விளையாடு குகனேபுல் வயநீடு மலைமேவு குமரேசனே.

ஆதலினே மனு தருமசாஸ்திரியானவர், இந்திரியவருக்கமானது ஆய்ந்தோய்ந்துணர்ந்த கல்வியறிவுள்ளவர்களைக்கூடக் கவர்ந்தாளு மென்று சொல்லுகையில், தாயுடனாகிலும், உடன்பிறந்தவளுட னேயாகிலும், பெற்றபெண்ணுடனேயாகிலும் இரகசியமாய் உட் காரக்கூடாதென்று விதித்திருக்கிறார்.

250. ஸ்திரீகள் இயற்கையாய்த் துஷ்டைகளென்றும், அவ ர்களை நம்பக்கூடாதென்றும், அவர்களுக்குச் சிறிதேனும் சுதந்த ரங்கொடுக்கத் தகாதென்றும் அவர்கள் அழகை மதியாரென்றும், வயது பாராரென்றும், வரிசை வாவிகளைப் பாராட்டாரென்றும், எப்படிப்பட்டவனாயினும், எந்தச் சாதியானாயினும், எவ்வளவு அற் பனாயினும், அனகாரியாயினும் சரி, புருஷனென்றமாத்திரத்திலே யே அவர்கள் மோகப்படுவாரென்றும், எத்தனை பிரமாணங்கள் செய்தபோதிலும் அவர்களுக்கு மனவுறுதி நிலைபெற்றிராதென் றும், அவர்களை நம்பி நடந்து கொள்பவர்கள் வெறும் பைத்திய காரரென்றும், அதோகதியில் வீழ்ந்து விடுவார்களென்றும், அவ ர்கள் நரகத்துவாரமென்றும், தேன் முகமுள்ள நஞ்சுக்குடங்க ளென்றும், அவர்களுடைய சித்தவிர்த்திகள் வெண்ணெய் தட விய கருங்கற்களென்றும், அவர்களுடைய இருதயங்கள் சர்ப்ப

விருதயங்களைக்காட்டிலும் குரூரமானவை யென்றும், சமயமும் சந்தர்ப்பமும் யௌவன முள்ள புருஷனும் கிடைக்காத வரைக்குமே அவர்களுடைய பாதிவிரத்தியம் நிலைபெற்றிருக்குமென்றும், புருஷன் எவ்வளவு சுந்தர முள்ளவனானாலும், யௌவன வானானாலும், எவ்வளவு நற்குண சீலனானாலும், சங்கீத சாகித்திய சதுரனானாலும், ஜகன் மோகனனானாலும், சதிகளின் மதிகள் இதரர்களை சகோராமலிராவென்றும்,—இவ்வாறு பற்பல விதமாய் நம்முடைய புராணங்களும் காவியங்களும் சதைகளும் மேன்மேலும் சோஷிக்கின்றன. ஆனால் இது மிகவும் தவற்றபிப்பிராயம். நம்முடைய கிரந்தங்களை ஸ்திரீகளே யெழுதியிருபபார்களானால், இம்முற் கூறிய குற்றங்களை அவர்கள் இன்னுமேற்றமாய்ப் புருஷர்களின்மேல் ஆரோபித்திருப்பார்களல்லவா! நியாயமாலோசித்துப் பார்த்தால் இவ்விஷயத்தில் ஸ்திரீபுருஷர்களுக்குப் பேதங்காணப்படாது.

251. ஸ்திரீ புருஷர்களின் விபசாரத்துக்கு முக்கியகாரணம், பொருத்தமில்லா விவாகங்கள். சரீர வியற்கைகளிலும் மனவியற்கைகளிலும் ஒருவருக்கொருவர் செவ்வையாய் ஏற்றிருக்கும் இரட்டைகள் மரண பரியந்தம் அந்நியோந்நிய நேசம் வாய்ந்து சௌக்கிய மனுபவிக்கப் பெற்றிருப்பார்கள். பரஸ்பராகருஷணமும் பொருத்தமுமில்லாத தாம்பத்தியத்தினால் மனந்திருப்தியடையாமல் இதரர்கள் மேல் பாயும். செவ்விய கணவனுக்கு மிகவும் குரூபியாகும் பெண்சாதியாவது, அரம்பைக்குச் சமானமான கட்டழகிக்குக் குரங்குபோன்ற புருஷனாவது, நல்ல கல்வி சாதுரிய முள்ளவனுக்குப் பரமமூடையாகும் பத்தினியாவது, சாதுரியம் வாய்ந்த பாரியைக்கு மரக்கட்டைபோன்ற மட்டிப் புருஷனாவது, இள நவ்வி பூத்தொழுகும் பூங்கொடி யன்னவளுக்குக் கைகால நடுககுற றுட்கார்ந் தெழுவதற்குச் சக்தியற்ற கிழக்கட்டையாவது, கிடைக்கும் பட்சத்தில் விபசாரம் எப்படிப் பிறக்காம லிருக்கும்? சிறுதருணத்திலேயே கன்னிகைகளுக்குக் கலியாணஞ் செய்யும் வழக்கம் நமது தேசத்தில் பிரபலித்திருக்கும் வரைக்கும் விபசாரதேவதைக்கு ஆகாரங்கிடைக்காமலிருக்குமாறெப்படி? நடுப்பருவத்தில் தார மிழந்தவர்களாகச் சம்பவித்த புருஷர்கள் சிறு குட்டிகளையே மணக்கவேண்டிய நிர்ப்பந்தமிருக்கையில், பெண்சாதிகள் வளர்ந்து பூத்துக் குடித்தனத்திற்கு வரு

வதற்குள் அவர்கள் சாமானியமாய் விபசார விருத்தியில் பிரவேசிப்பதற் கையம் அட்டியேதிருக்கிறது? திரட்சிக்கலியாணம்நடக்குமிரவிலேயே தங்களுடைய காந்தைகளுக்குக் கடுந்துன்பமுள்ள சுக நோய்களனேகத்தைத் தாராளமாய்ப் பங்கிட்டுக்கொடுத்த புண்ணிய புருஷர்களெத்தனைபேரில்லை? உத்தியோகத்தையும் வைபோக பாக்கியங்களையும் கண்டு கிழக்கணவர்களுக்கு ஊற்ற புண்ணுருச குட்டிகளைக் கட்டிக்கொடுக்கும் வரைக்கும் பாதி விரத்தியம் பரபுருஷர்களுடன் ஓடிப்போவதிற் றவிர வேறெவ்விடத்துக் காணப்படும்? எவ்வளவு திரவியங் கொடுத்தாலும், எவ்வளவு பூஷணங்கள் பூட்டினாலும், எவ்வளவு திவ்வியமான சேலைகளை வாங்கிக்கொடுத்தாலும், எவ்வளவு வித்தியாசாதுரியம் காட்டினாலும், எவ்வளவு மன்றாடி வேண்டிக்கொண்டாலும், எவ்வளவு பூசை செய்தாலும், மெய்யான திருப்தி ஓரணுவளவாயினும் உதிக்காமல், பறவை சிறகுகளை விரித்தோடினுலென்ன ஆச்சரியம்?

252. இராணிவாசத்தினாலும், சிறிதும் சுவேச்சைகொடாமல் ஸ்திரீகளை நிர்ப்பந்திப்பதினாலும், ஒவ்வோரிடத்து விபசாரம் நேரிடும். நிர்ப்பந்தத்தினல் ஆவல் அதிகரிக்கும். எத்துணைச் சமயம் வாய்த்தபோதிலும், ஆகருஷணை அதிகப்பட்டதாப் மனமசபலித்து விலக்கு வழியில் பிறழ்ந்துபோகும். ஸ்திரீபுருஷர்கள் ஒருவரோடொருவர் கூடியிணங்கிச் சஞ்சரித்துச் சாமானியமாய்ப் பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டுவருமிடத்து, அவர்களுக்கு அவ்வளவாக ஆகருஷணையும் மனோவிகாரமும் பிறக்கமாட்டாது. இப்படியென்று, ஸ்திரீபுருஷர்கள் அதிபரிசயம்செய்து பிரவர்த்திக்கக்கூடாது. அப்படிப் பிரவர்த்திக்கும் பட்சத்தில் செடுநடவடிக்கைகளுக்கு இடமுண்டாகும். ஒருதரம் பிறழ்ந்துபோனுல் பிற்பாடு திரும்புவது துல்லபமாய் மேன்மேலும் கெடுவதற்குக் காரணமுண்டாகும். ஆதலால், முதற்கோணற்படாமல் தகுந்த சாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டியது. ஆடவர்களை மனம் போனபடிச் சஞ்சரிக்க விடுவதாவது, அவர்களுடைய சுகுணசம்பத்தில் அத்தியந்த நம்பிக்கைவைத்துத் துட்டர்களுடன்கூடிப் பேசும்படி விடுவதாவது எவ்வளவேனுங்கூடாது. சிலபுருஷர்கள் பெண்டிரை அரைநொடிக்குள் மின்னிமயக்கி வலைக்குள் போட்டுக்கொள்ளும் சாதுரியம் வாய்ந்திருப்பார்களென்று அறிந்

திருக்கவேண்டியது. விவாகாதிகாரியங்களில் வயதுப்பெண்களும் புருஷர்களும் ஒருவரிடத்தொருவர் காட்டும் சுதந்தரங்கள் அடிக்கடியும் தோஷகாரியங்களுக்கு மூலங்களாகின்றன.

253. வீட்டுவேலைகளெவற்றையும் விரல்வைத்துத் தொடாமல் சோம்பேறிக்கழுதைகளாய்ச சுகபோசனங்களைச் சாப்பிட்டுக்கொண்டு வெகுசுகுமாரிகளாய் வளர்ந்துவரும் நாகரிகஸ்திரீகளின் புத்திகள் துராலோசனைகளில் சாதாரணமாய் விழுந்துபோய் துன்மார்க்கமான நடவடிக்கைக்கு இழுத்துக்கொண்டுபோகும். உடம்பு வளைந்து வேலைவித்தைகள் பார்த்துக்கொண்டு கஷ்டசீவனநடத்திவரும் பள்ளிப்புறத்துப் பெண்களுக்குக் காமவிகாரம் அவ்வளவாய் உதிக்காமல் மனசசபலம் குறைவுற்றிருக்கும்.

254. கெட்டசகவாசத்தினுலும் கெட்டகாரியங்களைப் பார்ப்பதினுலும் விபசாரம் பிடிபடுகின்றது. வீட்டில் தாய்தந்தையர்களாவது கலன்கழிமடந்தைகளாவது, விபசார நடவடிக்கைகளில் வீழ்ந்தொழுகினுல், அதைக்கண்டு பிள்ளைகளுங் கற்றுக்கொள்ளுவார்கள். மேலும் சிலதுஷ்டர்கள் சிறுகன்னிகைகளை யருகிற்சேர்த்து, தீயவொழுக்கங்களைப் பயிற்றித் தேற்றுகிறுர்கள். பார்ப்பதற்குப் பெரிய மனுஷர்கள்போலவிருக்கும் சில விருத்தர்கள் கூட இவ்விதக் கெட்டகாரியங்களுக்கு ஒரொருக்கால் உட்படுகிறுர்கள். எச்சரிக்கை! எச்சரிக்கை!

255. எக்காலும் துராலோனைகளைச் செய்து வருவதினுலும், துஷ்ட சம்பாஷணைகளில் தலையிட்டுக்கொள்வதினுலும், கடைசியில் துஷ்ட காரியங்களில் பிரவேச முண்டாகின்றது. சுப்பராமையர்பத முதலிய சிங்கார பிரபந்தங்களைப்படிப்பதினுல் கூட காம விகாரம் மேலிட்டு விபசாரத்திற்கு அவகாச முண்டாகின்றது. பாகவதத்தில் தசமஸ்கந்தத்தில் வருணிக்கப்பட்டிருக்கும் சிருங்கார கிரீடைகளெல்லாவற்றையும் கேட்கும் பட்சத்தில் நிஷ்சாம முள்ளவர்களுக்குக்கூடக் காமோத்திரேக முண்டாவதற்கென்ன சமுசயம்?

256. ஆலயங்கள், உற்சவங்கள், புராண காலட்சேபங்கள், நாடகங்கள்—இவற்றினுல் கூட அடிககடி விபசாரத்துக்கு வழியேற்படுகின்றது. கோவில்களுக்கும் திருவிழாக்களுக்கும் போகுமவர்கள் அனேகர் தெய்வபக்தி யென்னும் பெயர் வைத்துக்

கொண்டு தங்களுக்கு இஷ்டமான அன்பர்களின் நேத்திர காத்திர ஸ்பரிசங்களைச் சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். புராணங்கள் கேட்பதற்குத் திரளுகின்ற மொட்டைச்சிகளின் வரலாறுகள் அனைவருக்கும் நன்றாய்த்தெரிந்தவையே. இனி நாடகங்களென்பமா? இவற்றின் மூலமாய்ச் சனங்களுக்கு நீதிபோதிக்கப்படுமென்று அனேகர் சொல்லுவார்களாயினும், நம்முடைய தேசத்தில் இப்போது சாதாரணமாய்ப் போடப்படுகின்ற நாடகங்களினால் இன்னுமதிககாமோத்திரேகமுண்டாய்க் கெட்ட நடக்கைக்கு வழிகாட்டுகின்றன. சில ஸ்திரீகள் கூத்தாடிகளைப்பின்பற்றிப் பறந்துபோவார்களு முள்ளனர். டம்பாசாரி நாடகத்தைப் பார்த்துச சிலர் மகா புருஷர்கள் தாமே டம்பாசாரிகளாய்விடுகிறார்கள். நேற்று மூன்றுநாளே ஒரு பெரிய கிரகஸ்தன் மதனசுந்தரியை மோகித்து டம்பாசாரியின் முதலாமவஸ்தையை யனுபவித்துக்கொண்டிருக்கிறான்.

257. வேசைகளின் மூலமாய்க கொஞ்சமட்டும் விபசாரம் அதிகரித்துவருகின்றது. அவர்களுடைய சௌந்தரிய சங்கீத வபிநயங்களினாலும், அவர்களுடைய தளுதளுக்கு, குலுகுலுக்கு, மினுமினுக்குகளினாலும், கிரமகிரமமாய் வஞ்சிக்கப்பட்டு மயக்குண்டுபோய் அனேகர் அவர்களின் வலைகளில் வீழ்ந்து மோசத்தில் ஆழ்ந்துபோகிறார்கள். அவர்கள் சாதாரணமாயப் பாடிக்கொண்டுவரும் சிருங்கார பதங்களும், பச்சைவசவுகளுடன் நிறைவுற்றிருக்கும் சாவளிகளும் கேட்பவர்களின் மனங்களில் காமத்தீயைப் பற்றவைக்காமற்போகாவல்லவா? பெரியவர்களின் வழிகளைப்பற்றியே சிறியவர்களும் நடந்துகொள்வார்களாதலால் விபசாரதோஷமானது தகப்பன் மூலமாய்ப் பிள்ளைகளிடத்தும் பாய்கின்றது. மேலும், வீட்டுக்காரர் ஜகன்மோகனாங்கியண்டை சேர்வதைக்கண்டு, வீட்டுக்காரி, கோபீகாந்த பாகவதருடைய பிரசாதத்திற்குப்போனால் ஆச்சரியமென்னவிருக்கிறது?

258. ஸ்திரீகளின் விபசாரத்துக்குக் காரணம் முக்கால்வாசி புருஷர்களேயென்று சொல்லக்கூடும். எத்தனையோ மாயோபாயங்களைச் சூழ்ச்சிசெய்து, அனேகவிதங்களினால் அவர்களுக்கு ஆவலைக் கிளப்பிக், காதலையுண்டுபண்ணி, அவர்களை வலைகளில் போட்டுக்கொள்ளுகிறார்கள்—பலபெயர் புருஷர்கள். மேலும் தலைவர்கள் விலைமகட்களின் வீடுகளில் சேர்வதினாலும், மற்றோ

ருத்தியை மணப்பதினாலும், இடைவிடாது அடிப்பதினாலும் வைவதினாலும், நீடூழிபிரிவுற்றிருப்பதினாலும், பகன்முழுவதும் எங்கெங்கோ காலங்கழித்துவிட்டு இரவில் இரண்டு சாமவேளைக்கு அண்டைசேர்ந்து உசிதமான வழிப்படி ஆதரிக்காமற்போவதினாலும், சில கணவிகள் ஆவிநொந்துபோய்ப் பரபுருஷர்களின் மூலமாய்ச் சுகம்பெறுவதற்குத் துணிவுறுகிறார்கள்.

259. வீட்டிற்குள்ளிருக்கும்பொழுது அனேகர் ஸ்திரீ புருஷர்கள் பரிசுப்பிரமாகிய நல்லாடைகளை யுடுக்காமல், எந்தப் பீற்றற்றுணியையோ, பழஞ் சீலையையோ, நாறற் கந்தலையோ உடுத்துககொண்டிருப்பார்கள். எங்களுக்குக் கலியாணத்திருக்கோலம் வரவேண்டிய அக்கரையில்லையென்று பரிகாசமாய்க் கூறுவார்கள். எவ்விடத்திற்காவது போகவேண்டியிருந்தாலும் எவராயினும்புதியவர்கள் தமதில்லங்களுக்கு வந்தபோதுமாத்திரமே அவர்கள் நல்ல வஸ்திரங்களை யுடுப்பார்கள். இது மிகப் பெரிதான தவறுபாடு. சதிபதிகள், தாமொருவருக்கொருவர் மனோகரமாயிருப்பதற்காகத் தலை வகிர்ந்துகொண்டு பரிசுத்தமான ஆடைகளை யுடுத்திருப்பது அத்தியந்த அவசியமானது. அப்படியிருப்பினே அவர்களுடைய மனங்கள் வேற்றாரைப் பார்த்தால் சபலிக்காமலிருக்கும். மற்றவர்கள் வீட்டுக்குப் போகும்பொழுது உடுத்துக்கொள்ளும் பளுவான வஸ்திரங்களையாவது விலையுயர்ந்த சீலைகளையாவது வீட்டிலுள்ளபொழுதும் உடுத்துக் கொள்ள வேண்டிய தென்றல்ல, எமது தாற்பரியம். நல்ல வஸ்திரங்களைக் கட்டிக்கொண்டு பரிசுத்தமாகவும் சந்தோஷத்தை யுண்டாக்கும் வண்ணமாகவும் இருக்கவேண்டுமென்பதே கருத்து.

260. விபசாரம் ஸ்திரீகளிடத்திலிருப்பின் மாத்திரம் குற்றத்திற்கிடமானதேயன்றிப் புருஷர்களிடத்தில் அவ்வளவாய்க் குற்றமுள்ளதல்லவென்று சாதாரணமாய் அனைவரும் அபிப்பிராயப்படுகிறார்கள். பெண்கள்கூட இவ்வித அபிப்பிராய முள்ளவர்களாகவே யிருக்கிறார்கள். இதனால் இத்தோஷமானது மேன்மேலும் விருத்தியடைகின்றது. துன்மார்க்கத்தில் சுவேச்சையாய்ப் பழகிவரும் புருஷர்களிடந் தவக்கமேதுமின்றி அனைவரும் மரியாதைகாட்டி, அவர்களுடன் எப்படிப்பட்ட பெரியவர்களும் கலந்து ஒழுகுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பெண்களுருகிற்கூடி, இனிய விச்சக வார்த்தைகள் பேசியும், விசித்திரமான கதைகளை

யும், விந்தையான சமாசாரங்களையும் சொல்லியும் அவர்களுடைய இருதயங்களுக்கு மகிழ்ச்சி யுதிப்பித்து அவர்களுடைய மனங்களைக் கவர்ந்து கொள்ளுகிறார்கள். இனிக் கெட்ட காரியங்களெவ்வளவு தூரம்?

261. கட்டெளியவர்களா யிருப்பதினாலும் ஓர் பொழுது விபசாரம் உண்டாகின்றது. கூழுக்கும் கந்தலுக்கும் கதி கெட்டு இரண்டு காசுகள் எவன் கொடுப்பனோ அவனுடன் கூடிக் கிரீடிப் போர்கள் ஆங்காங்கு காணப்படுகிறார்கள். அன்னே! இவ்விதத்திக்குக் கெட்ட அநாதைகளைத் தங்களுடைய கெடு விருப்பங்களுக்குப் பலியாக்காமல் திரவிய சகாயமாத்திரம் செய்து காக்கும் புண்ணியவான்கள் அனேகர் இல்லையல்லவா?

262. மேற் கூறிய காரணங்களில் எதனாலுமல்லாமல், சிற்சில பெண்டுகளிடத்து அமிதமாகிய விபசாரங்காணப்படுகின்றது. மெய்யை யாராய்ந்து பார்த்தால், இது மதன வியாதியினால் உதிக்கின்றது என்பதற்குச் சந்தேகமில்லை. இந்த வியாதி, மேன்மக்களின் வங்கிசங்களி லுதித்த பெண்மக்களிடத்திலும், இழிகுலங்களி லுதித்த கீழ்மகளிர்களிடத்தும் சம மாகவே காணப்படுகின்றது. இதன் மூலமாய் வேதனைப்படும் ஸ்திரீகளுக்குச் சாதாரணமாய்ப் பகலிங்கமும், பகவுதடுகளும் பெரியவையாகவும், அவற்றிலும் மதன மந்திரத்திலும் எக்காலும் சகிக்கமுடியாத புளகச் சிலிர்ப்பும் தினவுக்குடைச்சலும் அதிகரித்துப் புணர்ச்சியின் மீது வெறி விருப்பம் மேலிட்டிருக்கும். இவர்களுக்குச் சம்போக காலத்தில் தேகம் பரவசமாய்விடும். எவ்வள நேரமானாலும் எத்தனை தரமாயினும் எள்ளளவும் திருப்தி தோன்றாது. நாலுபெயர் நடுவிலிருக்கையில் எவ்வளவு குணவதிகளாய்த் தோன்றினாலும் கடுகளவு சந்தகப்பட்டாலும் சம்போகத்தை விரும்புவார்கள். புருஷனென்றும் பரபுருஷனென்றும் விவஸ்தை பார்க்கமாட்டார்கள். எவனாயிலும், எந்தச் சாதியிற் பிறந்தவனாயினும், பெருமூப்புப்பிணியனாயினும் சிறுவயதுப் பிள்ளையாயினும், முடவனானாலும், குருடனானாலும், குரூபியானாலும் எப்படிப்பட்டவனாயிலும் சரித்தான், ஆண்பிள்ளை யென்றிருந்தால் போதும், சம்போகிக்கச் சித்தப்படுவார்கள். சேரக்கூப்பிடுவதற்கும் மனங் கூசார். சம்போகேச்சை மேலிட்டாற் பின்வாங்கார், ஒளிக்கவுமேலார். நிறுத்திக்கொள்ள உறுதி கூரார். கணவனுடனே கூடக் கணக்கு வழக்கின்றிப் புண

ர்ச்சி செய்யப் பலவந்தஞ் செய்வார். அவனை யெவ்வளவு காதலித்திருப்பினும், அவனிடத்தில் விசுவாசமுற்றிருக்க வேண்டுமென்று விரும்பி எவ்வளவு முயற்சி செய்பினும், சமயம் கை கூடியபொழுது சரீரம் புளகித்து, மகிழ்ச்சியுடன் பொங்கி மருண்டு, மனம் பரவசப்பட்டு விபசாரத்துக்குட்படுவார்கள். கணவனிடத்திருக்கும்பொழுது, ஐயையோ, இவனுக்குத் துரோகஞ் செய்தோமல்லவா இனி யிந்தப்பிறப்பேன் என்று பலவாருய்ப் பச்சாத்தாபப் பட்டுருகிப் பரிதவிப்பார்கள். இந்தக் காமவெறிப் பிணியினுல் அவதிப்படும் யுவதிகள் நமது கருணைக்குப் பாத்திரர்களேயன்றி யெவ்வளவேனும் அவதூற்றுக்குப் பாத்திரமாகார். இப்பிணியை "இலெக்ட்ரிஸிடி" யென்னும் மின்சக்தியினுல் சொஸ்தப்படுத்தலாமென்று சில வைத்தியர்கள் அபிப்பிராயப் படுகிருர்கள்.

263. இனி, விபசாரத்தின் பொருட்டுச் சாமானியமாய்ச் செய்யப்படும் சூழ்ச்சிகளைக்குறித்துச் சற்றுப் பரிசோதித்து நோக்குவோம். குருக்களென்றும், சீடர்களென்றும், வைத்தியர்களென்றும், பூத வைத்தியர்களென்றும், சந்தான மாந்திரிகர்களென்றும், சமையல் பிராமணர்களென்றும், சேவகர்களென்றும் வீட்டில் சேர்வது, வாயிற்றிண்ணைகளின் மேல் படுத்துக்கொள்வதறகென்று வருவது, வீட்டில் குடியிருப்பது, அண்டை அயல் வீடுகளில் வந்து குடியிருப்பது, விவாகமுதலிய காரியங்களில் நாட்டாமை செய்வது, கணவர்களுடன் தோழமைப்படுவது, சீட்டாடுவது, பாடுவது, கதைகள் சொல்லுவது, விகடங்கள்செய்வது, புராணஞ்சொல்லுவது, சோதிடங் கூறுவது, சாமுத்திரிகம் பார்ப்பது, கபட்டுச் சந்நியாசம், கொக்குச் சபங்கள், தேவதார்ச்சனைகள், திருட்டு விபூதிகள், பூனை ருத்திராட்சங்கள், தம்பி தமையர்கள் கணவர் முதலியவருக்கு உத்தியோகங்கொடுப்பது, பெண்களுக்குப் பிரியமாயிருக்கும் நகைகள், சீலைகள், படங்கள், கண்ணாடிகள், அத்தர், ஜவ்வாது முதலிய பதார்த்தங்களைக் கொணர்ந்து காட்டுதல், அவர்களுடைய குழந்தைசளுக்கென்று சாக்கிட்டு, பூ, பழம், பணியாரம், மிடாய் முதலிய பொருள்களைக்கொடுத்தல், அவர்களெதிரில் குழந்தைகளைப் பிரீதியுடன் முத்த மிடுவது, விளையாடுவது, இருமுவது, சைகை காட்டுவது, கடிதங்கள் அனுப்புவது, வீட்டு வேலைக்காரிகள், பணிவிடைக்காரர்கள், சமையற்காரிகள், குழந்தைகள், பிச்சைக்காரர்கள் முதலியவர்கண் மூலமாய்ச்

செய்திகள் சொல்லியனுப்புவது, அண்ணை, அக்கா, மாமா, அத்தான், சிற்றி இவைபோன்ற வரிசைகளை வைத்துக் கூப்பிட்டுக்கொள்வது, வேண்டுமென்று மேலாக்கைத் தளரவிடுவது, பொய்த்தூரம், பொய்நோய்கள், பொய்ப்பேய்கள்—இப்படிப்பட்ட தந்திரங்கள் எத்தனையோ லட்சானு லட்சங்களுள்ளன—விபசாரப் பிசாசங்களுக்கே தெரியும்! ஜனங்களே! சாக்கிரதை மிகுந்து சமுசாரங்களைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்.

264. எவ்வளவு தூரமாலோசித்துப் பார்த்தாலும் சிற்சில அமிசங்களுக்குத்தகுந்த சமாதானங்கள் தோன்றாமலிருக்கின்றன. 1. புருஷன் எவ்வளவு விபசரித்தாலும் தோஷ மில்லையாம்! பெண்பிள்ளை ஒரு முறை பிறழ்ந்தாலும் எத்துணையும் உதவமாட்டார்ளாம்!—2. ஒரு முறை பிறழ்ந்த இல்லாளை விரும்பமாட்டார்களாம்! பலருடன் போகிக்கும் பரகாந்தைகள் பயன்படுவார்களாம்! 3. தாம் இதரர்களின் பெண்டுகளைக் கெடுக்கலாமாம்! தமது பெண்டுகளைப் பிறத்தியர் தொடலாகாதாம்!—4. ரூப, யௌவன, வித்தியா, யசோ, தன, குணங்களில் சிறந்தவர்களான பர்த்தாக்களிருப்பினும், தவசிப்பிள்ளைகள், அடிமைகள் முதலிய நீச புருஷர்களுடன் கிரீடிக்கிறார்கள், சிலமகளிர்கள்.—5. சகல குண சம்பன்னைகளும், சவுந்தரியவதிகளும் ஆம் பெண்சாதிகளிருப்பினும், வீடு கூட்டும் சூத்திரச்சிகள் முதலிய ஈனஸ்திரீகளுடன் புணர்கிறார்கள், சில புருஷர்கள்.—6. அண்ணன் தம்பிகளென்று ஆலோசிக்காமலும், மைத்துனர்களென்று மதியாமலும், பாட்டன் தகப்பனென்று பாராமலும், தங்கை தமக்கைகளென்று சங்கிக்காமலும், மகளென்றும் மாட்டுப்பெண்ணென்றும் மனத்திலெண்ணாமலும், வரிசை வரையறைகளைக் கருதாமலும், சினேகிதர்களென்று சிந்திக்காமலும், பரதாரங்களென்று பயப்படாமலும், விபசரிக்கிறார்கள்—தீய வியற்கையுள்ள ஸ்திரீ புருஷர்களனேகர்.—7. பரர் பெண்டுகள் அவிசாரிகளென்று கோதுகள் கூறிக்கொண்டு, தமது பெண்டிரின் தட்டுவாணித்தனத்தை யறியாமல் மோசம் போகிறார்கள், சில கணவர்கள்—8. தாமாத்திரம் விபசரிப்பவர்களாயினும், பிறத்தியர்களின் விப்சாரத்தொழில்களை எடுத்துக்காட்டுகிறார்கள், சில ஸ்திரீ புருஷர்கள்.

265. நல்லோரே! கண்டீரா! விபசாரத்தினின்று விளையும் கஷ்ட நஷ்டங்கள். தன நஷ்டமும், மான நஷ்டமும், ஒவ்வோரிடத்

துப் பிராண சங்கடமும் சம்பவிக்கின்றன. விபசாரத்தினுல் உண்டாகும் விரோதங்கள் மற்றெதனுலும் உண்டாகமாட்டா. விபசாரமூலத்தினுல் செவ்வையாய் உதைபட்டவர்களையும், குடுமியறுபட்டுப்போனவர்களையும், மூக்குச் செவிகள் மூளிபட்டுப்போனவர்களையும், பற்கள் கழன்றுபோக தடிகார பலகாரங்களைச் சாப்பிட்டவர்களையும், அனேகரை யறிவோம். பெரிய உத்தியோகஸ்தர்கள் கூடச் சிலர் அப்போதப்போது இந்த பாக்கியத்துக்குப் பங்காளர்களாகிருர்கள். சிலர் ராஜ தண்டனைக்கு ஆளாகிருர்கள். ஒரு வேளை இவ்விதத் தண்டனைகளைப் பெருமல் தப்பித்துக்கொண்டபோதிலும், தவிர்த்துக்கொள்ள முடியாத நஷ்டங்களனேகமுள்ளன. விருத்திமார்க்கங்கள் அழிந்து போகின்றன. சரீரம் சுகநோய்களுக்கு இரையாகி சாநாள் வரைக்கும் கணக்கிட முடியாத துன்பங்களையடைந்து வாடியழுகியழியும். அகாலமரணம் அருகு கூடும். சந்தானமுற்பவிக்கமாட்டாது. உற்பவித்தாலும் பிணிகளுக்குறைவிடங்களாகி நானுவிதமான வருத்தங்களையும் பட்டுத்தவிக்கும். அகத்துக்காரிக்குக்கூடப் பெருநோய்கொண்டு ஆசுபத்திரியைச் சரணமடையவேண்டிவரும். அவ்வம்மையும் தன் பங்கு குறைவுருதபடி விபசாரத்தொழில் படிக்கத்தொடங்குவாள். இம்முற்கூறிய கெடுபயன்களேதும் அடையாமற் போயினும், விபசார தோஷம் யான்றும் வீண்போகாது. அதனுல் சம்போக சவுக்கியம் சுவை கெட்டுச் சாரமற்றுப்போகும். பல முறையும் கிளைத்தேன் சுவை பார்த்தவருக்குப் பழவகைகள் ருசிக்காவல்லவா! இச்சைவந்தபடி அத்தாட்சி ஆக்கினையின்றித் திரிந்து சம்போக சவுக்கியத்தை யனுபவித்தவனுக்குப் பெண்சாதியின் மூலமாய் வரும் சாமானிய சுசம் திருப்தியுண்டாக்காது. சம்போக சக்தியும் சீக்கிரமாய் வலிமை குன்றி யௌவனத்திலேயே விருத்தாப்பியஞ் சித்திக்கும். வாய் விபசாரம் மேலிடும். பெண்சாதியின்மீது அனுமானம் பிறக்கும். இறுதியில் மதிகெட்டு வேதாந்தத்திலாவது பிராணுந்தத்திலாவது போய்முடியும். விடர்களே! கேட்டீர்களா இவ்விஷயங்களை? வேசைப்பிரியர்களே! எந்தச்சாதியானையாவது எவ்வளவு மடைய சாம்பிராணியை யாவது ரொக்கங்கொடுத்த மாத்திரத்தினுல் அண்டைசேர்க்கும் வேசைப்பிசாசுகளுடன் கூடுவதற்கு நீங்களெவ்வாறு உடன்படுகிறீர்கள்? கபட்டுக்காதல் காட்டி மனங்களை மயக்கிப் புரட்டித் தனத்தை யபகரிக்கும் பொருட்

பெண்டுகளிடத்து நீவி ரெங்ஙனம் புணர விருப்பப் படுகிறீர்கள்? கைப்பொருளனைத்தையும் கைக்கொண்ட பின்னர் தாய்க்கிழவிகளை யேவித் தமது வீடுகளினின்று வெளிப்படத் துரத்தியோட்டும்பரத்தைகளென்னும் வஞ்சகக் கள்ளிகளை யெவ்வாறு அஞ்சாது தஞ்சமடைகிறீர்கள்? லட்சாதிகாரிகள் கடைசியில் பிட்சாதிகாரிகளாய்த் தெருக்களில் திரிந்து திண்ணைகளில் கூடுவதைக்காணவில்லையா? அரை நாழிப் போகத்திற்குச் சபலித்து ஆறுமாத ரோகம் பிரபலித்து வருத்தும்படிச் சரீரத்தை யெப்படிப் பரத்தையருக்குப் பலியிட விருப்புறுகிறீர்கள்? சூதுக்காரிக் கள்ளிகளையெப்படிக் கோதிலாமாதரசிகளாய்க்கருதி மோசம்போகிறீர்கள்? அவர்களை யுங்களது இல்லங்களிலேயே வைத்துக்கொண்டு வாழ்வதற்கு எங்ஙனமுமது மனமொப்புகின்றன? அவர்கள் பிள்ளைகளையுங்கள் பிள்ளைகளுடன் தோழமைப்படுத்த எவ்வாறு உங்களுக்குப் புத்திதோன்றுகின்றது? அவர்களை உங்களுடன் சமானமாய் வண்டிகளிலேற்றிக்கொண்டு கடலோரங்களுக்கும் சிங்காரவனங்களுக்கும் சர்க்கஸ்ஸுகளுக்கும் நாடகங்களுக்கும் திருவிழாக்களுக்கும் தீர்த்தங்களுக்கும் சவாரிபோக எங்ஙனம் வெட்கமழிந்திருக்கிறீர்கள்? அவர்களுடைய தங்கைகளையும் தம்பிகளையும் அண்டைகூட்டி ஆதரித்து இச்சகங்களெந்தமனத்துடன் ஆடத்துணிகிறீர்கள்? இவர்களா உங்களுக்கு இறுதியில் துணைபடு தெய்வங்களானார்கள்! சிணுசிணுங்கிக்கொண்டிருக்கும் கிழத்தட்டுவாணிகளா உங்களுக்கு மாமிகள்? ஐயையோ! மூடங்களே! பெரியவர்கள் கூட்டிய திரவியமனைத்தும் செலவழிய, அவர்கள் பெற்றுவளர்த்த இன்னுடல்கள் துன்புற்றழுங்க, இல்லங்களி லில்லாட்கள் இரவும் பகலும் அல்லல்பட்டலற, பிள்ளைகள் சோறுகிடையாமல் வயிறொட்டித் தளர்வுற்றுவீழ, சான்றோர் சாலவு மிகழ, கண்டவர் கேட்டவர் கைகொட்டிச் சிரிக்கக், குருபதேசங்கள் குருபத்தில்வந்துமுடியப், பாவங்களில் சிக்குற்று ஆத்துமா வாதைகள்பட்டிட, பரத்தைகளினன்பர்களே! நீங்களெவ்வித சுகத்தை யனுபவிக்கிறீர்களோ யறிந்துகொள்வதற்கு முடியாமலிருக்கிறது. நண்பர்களே! பகுத்தறிவுடன் பாருங்கள். பரத்தையரைத்துறவுங்கள். விபசாரத்தை விட்டொழியுங்கள். உங்களுடைய சமுசாரங்களைக் காப்பாற்றிக்கொள்ள விரும்புவீர்களானால், பரர்சமுசாரங்களைப் பாழ்க்கத்துணியாதே

யுங்கள். அது பெரும்பாவம். அநியாயம். உங்கள் பெண்டுகள் பதிவிரதைகளாயிருக்கவேண்டுமென்ற பிரியமுற்றவர்களானால் நீங்கள் பத்தினிவிரதர்களாயிருங்கள். அக்கினி சாட்சியாய்க் கை தொட்ட உங்களது இல்லாட்களைச் சுகப்படுத்துங்கள். நீங்களும் சுகப்படுங்கள். இந்தநீதியைக் கேளுங்கள் :—

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று.

"வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து."

"புதுப்புனலும் பூங்குழையார் நட்புமிரண்டும்
விதுப்புறநாடின் வேறல்லப்—புதுப்புனலு
மாரியறவே யறுமே யவரன்பும்
வாரியறவே யறும்.

"கட்கினியாள் காதலன் காதல்வகைபுனைவா
ளுட்குடையாளூர் நாணியல்பினா—ளுட்கி
யிடனறிந்தூடி யினிதினுணரு
மடமொழி மாதராள் பெண்."

3/11/97



ஐந்தாம் அதிகாரம்.

சம்போக மர்மங்கள்.

266. இதுவரைக்கும் தாம்பத்திய மர்மங்களைக்குறித்துச் சவிஸ்தாரமாய் விவரித்துச் சொன்னோம். அவற்றைச் செவ்வையாய்த் தெரிந்துணர்ந்து நடந்துகொண்டால், சவுக்கியத்துக்கு வழியேற்படும். இவ்வதிகாரத்தில் சம்போக மர்மங்களை விவரித்துரைப்போம். சம்போக சவுக்கியத்தின் உபயோகத்தையும், சுபாவத்தையும், அதன் பரிமிதியையும், விதி தவறி நடந்துகொள்வதினால் வரும் தீமைகளையும், இவை முதலாகிய விஷயங்களையும் தெரிந்து கொள்வது அனைவருக்கும் ஆவசிகமே யல்லவா!

சம்போக சவுக்கியம்.

267. முதற்புணர்ச்சிக்கு முன்னர் சாதாரணமாய்ப் பெண்களின் பகவாயானது மெல்லிய உள்ளிப்புரைபோன்ற தோலொன்றினால் மூடப்பட்டிருக்கும். இந்தத் தோலின் மையத்தில் வட்டமான தொளையொன்றிருக்கும். இதன்வழியாய் இருதுவிரத்தம் ஒழுகியோடும். இருதுவதிகளாகுமுன்னர் பகமார்க்கத்து உட்டோலுக்கும் கருப்பகோசத்துக்கும் சீதளமேறாதபடிக் காப்பாற்றுவதற்காக இந்தச சருமம் உபயோகப்படும். முதல்தடவை புணர்ச்சித்தொழில் நடக்கும்பொழுது இத்தோற்புரை கிழிவுண்டு சொற்பமாய் இரத்தபிந்துக்களும் காணக்கூடும். இதனாலேயே முதற்புணர்ச்சி மிகவும் வருத்தமுள்ளதாயிருக்கும். கருப்பாதானத்தன்று சம்போகம் வருத்தமுள்ளதாயிராமலும், தோற்புரைகிழிந்த அடையாளம் தெரியாமலும் இருப்பின், ஸ்திரீயின் நடவடிக்கையைக்குறித்து அனுமானமுண்டாகக்கூடும். ஆயினும், நிச்சயமாய்க் குற்றத்தையேற்றுவதுங்கூடாது. ஏனெனில, சிற்சிலருக்குச் சுபாவமாகவே இம்முற்கூறிய தோற்புரை செவ்வையாய்

மூடியிராது. மேலும், புண்ணுண்டாவதினாலாவது, வேற்றுப் பொருள்களின் அராவலினாலாவது, அது கிழிவுண்டுபோயிருக்கலாம். ஆயினும், நூற்றில் தொண்ணூற்றொன்பது பங்கு கருப்பாதானத்தன்றே அது உடையக்கூடியதென்று கருதத்தகுந்ததாயிருக்கிறது.

268. சிருஷ்டி சவுக்கியங்களெல்லாவற்றிலும் மேன்மையானது சம்போக சவுக்கியம். இஃது எல்லாப்பிராணிகளுக்கும் பொதுவானது. எக்காலமும் நாசம்பெறாது சிருஷ்டி நீடூழி நிலைத்திருப்பதற்கு இதுவே யாதாரம். ஆதலினே இதனில் எல்லாம்வல்ல கடவுள் அத்தியந்த அதிகமான ஆனந்தத்தை ஏற்றியிருக்கிறார். புணருமாவல் மேலிட்டபொழுது ஸ்திரீபுருஷர்களின் மர்மஸ்தானங்களில் புஷ்களமாய் இரத்தம் பிரவகித்து எழுச்சியும் இலிர்ப்பும் அதிகரிக்கும். ஸ்திரீகளின் ஸ்தனங்களில்கூட இரத்தம் நிறைவாய்ப்பாய்ந்து பெருகிக் காம்புகளுக்குக் கிளப்பமும் புளகமும் உண்டாக்கும். சம்போகக் கிரீடை நடக்கும்பொழுது மேலுக்குமேல் பரவசமும் ஆனந்தமும் மேலிட்டுப் புருஷனுக்கு வீரியஸ்கலனத்துடன் திருப்தியுண்டாகும். பெண்ணுக்குக்கூடப் பகமுகத்திலிருக்கும் நாடிகளினின்று திரவமுதித்தோடிச் சுகத்தைக்கொடுக்கும். புணர்ச்சிச சமயத்தில் ஆண்பெண்களின் சரீரங்களிலுண்டாகும் புளகமும் காமவெப்பமும் ஒருவருக்கொருவர் பாய்ந்து அபரிமிதமான ஆனந்தத்தையும் சவுக்கியத்தையும் பிறப்பிக்கும். தழுவல் முத்தமிடுதல் முதலிய தொழில்களினாற்கூடக் காமவெப்பமும் சவுக்கியமும் அதிகப்படும்.

269. புழுகு, ஜவ்வாது, குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம், அத்தர், வாசனைத்தைலம் முதலிய பரிமள திரவியங்கள் கலந்து பன்னீரில் அரைத்த சுகந்தத்தினாலும், சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், இலவங்கம், இலவங்கப்பட்டை, வால்மிளகு, கொப்பரை, பச்சைக்கர்ப்பூரம், குங்குமப்பூ, கஸ்தூரி முதலிய் பதார்த்தங்களைச் சேர்வையிட்ட தாம்பூலத்தினாலும், திவ்விய பரிமளம் கமழ்கின்ற நன்மலர்களினாலும், ஊதுவர்த்தி, சாம்பிராணி கர்ப்பூரமுதலிய திருமணங்களினாலும்—விலையுயர்ந்த வஸ்திராபரணங்கள், நவமணிகள், இரத்தினங்கள், அழகிய சித்திரபடங்கள், நிலைக்கண்ணாடிகள், பளிங்கு விளக்குகள் முதலியவற்றினாலும்—சுவேச்சை, மந்தமாருதம், குளிர்ந்தென்னல், ஒண்ணிலவு, பூம்பந்தர்கள், பொதும்பர்

கள், உத்தியானவனங்கள், கேளீதடாகங்கள், கிளி குயில் வண்டொலிகள், மிருகபட்சி முதலியவற்றின் இரட்டைகளை நோக்குதல், சரசங்கள், சல்லாபங்கள், பிரியவசனங்கள், இளமுறுவல், இரதிசாதுரியங்கள், விரகதிருஷ்டி, பிரணய கலகங்கள், ஊடலுவகைகள், ஆட்டபாட்டங்கள், கதைகள், கேளிகள், பரிகாசங்கள்—இவைபோல்வனவற்றினலும், உல்லாசமதிகரித்துச் சம்போக சவுக்கியம் மேன்மேலும் பெருக்கமுறும். அவ்விதச் சம்போகத்தினல் உற்பவிக்கும் சந்தானம் சகலசுகுணசம்பன்னமாயிருக்கும்.

270. சுகவாழியில் வீழ்ந்து நீந்தும் பெண்சாதி புருஷர்களின் தாம்பத்தியம் "சதாரத்தினவளி"யில் இவ்வாறு வருணிக்கப்பட்டிருக்கிறது—"அச்சதிபதிகளின் அந்நியோந்நிய நேயம் இவ்வளவவ்வளவென்று அளவிட எவர்தரமுமல்ல. கருதற்கரிய அவ்விரட்டையின் காதலை வருணிக்க வல்லமையேது? நிமிட நேரமேனும் அவரிருவரும் ஒருவரையொருவர் பிரிவுறத் துணிவுறுர். ஓரிடத்தில் ஓர் காலத்திலேயன்றி வேறுபட்டுப்புசிக்க விருப்புகூரார். மாமிவீடென்று மாட்டுப்பெண்ணுக்குப் பிடுங்கலிடைஞ்சலில்லாமல் இழிவுங்கொடுமையுமான ஊழியக்குற்றேவல்களுக்குட்படாமல், அத்துணர்மேனியள் இராணிபோல் விளங்கினுள். தலைவனது நன்மதிகள் அத்துணைவிக்குக் கொழுகொம்பாய்த்தோன்றிட, அவனிடம் நயபயவிநயங்கள் விளங்க, வெகு தோழமையுடன் பழகியொழுகுவாள். நால்வர் எதிரிடையில் நாயகன்தோன்றினனென்று தும்பிபோல் துஸ்ஸென்று துரிதமாயோடிமறைவதும், அவரிவர்வந்தனரென்று அடிக்கடித்தோப்பிக்கரணம்போடுவதும், சொப்பனத்திலும் அறிந்திலள். நோன்புகள் நோற்பதில்லை. மஞ்சள் பூச்சுவப்பதிலள். கருமணிகள், கண்ணுடி வளைகள், புல்லாக்குகள், நத்துகள், மெட்டிகள், குருடுகள், பேசரிகள், ஓலை ஜிமிக்கிகள் முதலிய ஆபரணங்களின்னவையெள்ளளவு மிச்சியாள். காதுகளுககு ரவைக்கம்மல்களும், கைகளுக்குப பொற்காப்புகளும, சுண்டுவிரலுக்கு மரகதத்திருமோதிரமும், மருங்கிற்கு மணிகள்கட்டிய அபரஞ்சி யொட்டியாணமும், கழுத்தில் இரத்தின ஹாரமும் தவிர வேறெவ்விதமாண ஆபரணங்களையும் அந்தத்தருணி தரிக்கமாட்டாள். எவ்வேளையும் விலையுயர்ந்த சேலைகளையுடுத்து அழகிய விண்மீன்போல விளங்குவாள். இருதயேசுவரன் இல்லத்திற்குத் திரும்பிச்சேரும் வேளைக்கு எதிர்

கொண்டுபோய், அவன் கழற்றி நீட்டிய உடுப்புகளைக் கைக்கொண்டு, களைதீர்க்க விசிறிப், பழம்பண்ணியாரங்களைச் சித்திரக்கிண்ணங்களில் ஏந்திக்கொணர்ந்து தளிர்க்கை மலர்களுடன் பிரிய மிக உதவி, அவ்வவற்றில் காதலன்கொடுத்தவற்றைத் தான்தின்றுகொண்டு, எண்ணிறந்த வண்ணங்களாய் அக்காதலிதனது காந்தனுக்கு மனக்களிப்புறுத்துவாள். சைபாகிருகத்தைச சிங்காரத்துடன் அலங்கரித்துக் கமழ்மணங்களைப் பரவவீசும் பரிமளத்திரவியங்களைத்தெளித்து, மல்லிகை மலர்களையும் இகழும் வெள்ளியபட்டுசசேலையும், சொகசுள்ள பிகுவான சொக்காயுமுடுத்து, அழகிய சிறு திலகத்தைச் செந்நுதலிலிட்டு, மயிர்முடியில் நிலத்தாமரைப் பூவொன்று செருகிக், கன்னங்களில் சிறுகுழிகள் குழிந்திட, இளமுறுவற்றீந்தேனொழுக்கி, அளமிக்க பக்கத்துடன் அச்சினி சருக்கரைப் பொம்மையானவள், விரிக்கைகளைப் பரிவுமிகநீட்டித் தன்னது உயிர்த்தனத்துக்கெதிர்வர, அம்மணமகனும் தனது மையல்கூர்காதலித் தையலைவாரியெடுத்து, மார்பொடுமார்பணைத்துக் கைவட்டமிட்டு மருங்கைவளைத்து, அருகுகூட்டி, இறுக்கமுடன் அணைத்து, விழைவுமிகத்தழுவிக், கொங்கைகொண்டொத்திக், கொடிறுமேல் கொடிறிணைத்தமுக்கி, மூக்கை மூக்குடன்சேர்த்து, முத்திகள் அளித்து, இதழ்கள் கடித்துத்தூக்கி, மருண்மிக நிலைக்கண்ணாடியண்டை கொண்டுபோய்ச் சேர்த்தபின், சதிபதிகளிருவரும் மிதியிலாக்காமமேற்கொண்டு எவ்வாறு ரதிகேளியிற் களித்துக் கடைத்தேறினரோ, தேர்ந்துணர்ந்து திறமைவாய்த்த துணைவர்க்கே தெளிவுறத் தெரியத்தக்கது. ஒருவரையொருவர்மீறிய அந்நிறைசரசிகளின் சரசசல்லாபங்களும், கிரீடாவிலாசங்களும், ஆட்டுகளும் பாட்டுகளும், கடிசளுமிடிகளும், கலவிகளும் புலவிகளும், கரத்தலுமிரத்தலும், இளித்தலும் சுளித்தலும், குதித்தலும் பிடித்தலும், அழைத்தலும் பழித்தலும், தள்ளலும் விள்ளலும், எள்ளலுங்கொள்ளலும், கிள்ளலும் கீறலும், கண்பொத்தியும் கைப்பொத்தியும், அக்கிட்பாப்ச்சலும் வெக்கற்கூச்சலும், மறறைய பற்பல கேளிகளும் கூத்துகளும், ரசிகசிகாமணிகள ஆழ்ந்தறியவல்லவர். ஆயினும், தமது சுந்தரிகளிடத்து அந்தவண்ணமாய்ப் புணர்ந்து போகித்துச் சுகித்த புண்ணியசாலிகள் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் சிற்சிலரே. சுயமாய்விருப்பமுற்று வரித்துவதுவையாற்றின அச்சதிபதிகளின் கூட்டிசைவைக் குறிப்புடன் நோக்க

நோக்கத், தாரையைத்தொன்னுளில் தாராதிபன் தாரமாயாட்கொண்ட சீரையே நேர்ந்திருந்தது. கரைகடந்த காமமேலிட அந்தக் கிளிக்கூற்றுக் குலுகுலுக்கி தன்னுடைய காதல்வேந்தனுக்கு மேலாடைகளைத் தரிக்கக்கொடுத்துச், செங்காந்தளன்னசெங்கைத் தளிர்களுடன் பரிமளசுகந்த சந்தனத்தைப்பூசி, அத்தர் பனிநீர் தெளித்து முகமன்கள் தொடுத்து மகிழ்வுடன் புகழ்ந்து சல்லாபங்கள் நடத்துவாள். தலைமயிரில் தைலமிட்டு வாரி, அலர்மலர்களைச்சூட்டி, அன்புடன் குடுமிகூட்டிச் செவ்விதாக்கிச், சக்கரவாகங்களை யுந்திக்கரித்து அடர்ந்து திரண்டிடங்கொண்டண்ணுந்து விம்மி முகம்பார்க்கும் கொங்கையிணையை வெந்நுமேல்சாய்த்து, மெய் மயிர்பொடிப்ப அமுக்குவாள். உடையவனது தொடைமேலுட்கார்ந்து தனது சுருங்கிய மருங்கை அவனுடைய புயத்தினுல் வளைவிட்டணைத்திடக்கொண்டு, பெரும்பரிவுடன் சுருள்களையுதவியும், உதவியசுருள்களைத் துரிதமாய் முறுவலிற்பிடித்துப் பகிர்ந்தும், வாய்த்திரை யடிக்கடிக்கடித்து இதழமிழ்துகுடித்தும், இதழமிழ்து குடிக்க அதரத்தைக் கடிக்க உதவியும், மையல் மிகுந்திட மெய்யையும் மறந்து, குழைந்த கண்களில் விழைவுநீர் ததும்பி வழிய, விழிகள் சுழன்றிடச் சொக்கிக் காதலன் தார்மார்புமேல் சாய்ந்து ஆனந்தாம்புதியில் வீழ்ந்து சோர்வாள். ஒவ்வொரு முறை பட்டுத் துகில்விழுத்துவிட்டுச், சன்னமான சரிகை உத்தரீயத்தை ஒய்யாரமாய்ச் சுற்றிக்கொண்டு, விம்மிய கொம்மைகள் தோகையினின்றும் வீங்கி அவாத்தூண்டி வாயில் நீரூறச்செய்திட, அந்தக்கொடியுடலாள் செங்காவிக் கஞ்சுகம் கைக்கொண்டு கணவன் மருங்குசேர்ந்து, இதைத்தொடுக்கவா என்று கேட்பாள். அவ்வயின் அந்தரசிகன் பரவசனாய் நகைப்பற்றடக்க முடியாது, அக்கஞ்சுளியைப் பிடுங்கியெறிந்துவிட்டு, ஆர்வமிகத்தன்னையணையமேவ, அவ்வுழியே குதித்துதமி, அடிவேண்டுமா என்றுகொண்டு, ததும்பியிறுமாந்த தடமுலையிணைகொண்டு உரம் அதிர்ந்திடமுட்டி, இரட்டைக்கும் ஹாயியாக இன்பமிகுந்திட இணைத்தணைத்துத் தழுவி யிறுக்குவாள். ஒருவேளை யவ்வணங்கு திலகம் திலகத்தைத் துடைத்தெறிந்து, முடியவிழ்த்துக் கூந்தல்விரிகோலமாய், ஹௌஸுடன் கௌன்தொடுத்து வேவேசமாய்க் கணவனண்டை கூடித், துரைசாணி வந்தனள் என்று எச்சரிக்கைசெய்து, மதன் போர்செய்திட மதமிகுந்து சமிக்கைசெய்வாள். வேறுவேறு

தவிசுகளில் பள்ளிகொண்டு முன்னெவர் எழுந்து கலவிக்களைப் பரோ காண்பமென்று பந்தியங்கூறி, அக்கூரறிவினள்—ஸரஸகு ராரா—என்றும்—தாளஜாலரா—என்றும்—கருணிஞ்சுட கிதே சமயமுரா—வென்றும், பதங்கள் பாடுவாள். தனது கூரன்புகாத லன் பந்தயமறந்து பாங்கர்சேர, அவனைத் தழுவவிட்டுத் தழுவிப் பந்தயந்தோற்றீரென்று கோடங்களாடிக் கவுளைவிசையுடனிடித்து வலித்ததோவென்று குருகுயத்துணையைக்கூட்டி அணைத்தமுக்கு வாள். வல்லவன் சினமுற்றுச் சொல்லற்று வாளாவிருப்பின், அவ்வல்லவி பிகுவுகள் தகாவென்றும், பந்தயங்கள், பிரதிக்கினை கள், இத்தோழமைக்குச் சந்தமல்லவென்றும், இளங்குட்டியை இவ்வாறு தளம்பித் தத்தளிக்கச்செய்வது தருமமாவென்றும் கோ பமேனென்றும், தாயும்தந்தையும் தெய்வமும் நீயேயென்று நிறை வுற நம்பிய மெல்லியற் பேதையென்னை இகழ்ச்சிசெய்வது எற்கு மாவென்றும், எனது மனுவுகேட்டருளடாவென்றும், பலபலவித மாய் முறையிட்டு மன்றாடிக் கருணையுதிக்குமாறு ஜாவளிகள்பாடி மனத்தை மெழுகுபோலுருக்குவாள். பூவில்லியின் போரில்பயிற்சி தேர்ச்சிகளை முயற்சியுடன் விளக்கிக், களைத்துத் தளர்ந்துசோர்ந்து உடன்மறந்திருக்கையில், அந்தப் பூங்கொடி தனது உயிர்த்தலைவன் முகமீது மெய்மீது சிறுவெயர்வுத் துளிகளைத் தோகைநுனியினால் துடைத்து, நனிக்களைத்தனிரென்று நகைகொண்டு, கைமலர்களி னால் மெய்தடவிக்கொடுத்து—எனது உயிர்த்தனமல்லவோடி! எனது சுவர்னச்சுகமல்லவோடி!—என்றுகொண்டு அணையக்கூட் டுவாள். கொஞ்சநேரம் கர்ணமிருதமாகக் கீர்த்தனைகள்பாடி விசி த்திரவேடிக்கையான கதைகளைச் சொல்லச்சொல்லி அளவற்ற விநோதத்துடன் செவிகொடுத்துக்கேட்பாள். அந்தப் புருஷோ த்தமனும் சர்வகலாவல்லவனும் சம்பூர்ணரசிகனும் பரமதயாந் தரங்கனும், ஆதல்பற்றிக், கோரிக்கைகளனைத்தையும் தீர்த்தும், வித்தைகள் பற்பலக்கற்பித்தும், தனது சகியின் சுகதுக்கங்களைத் தன்னுடையவாய்ப் பாவித்துப், பஞ்சபிராணங்களையும் அத்துணை விமேல் நிறுத்தி யெள்ளளவும் மனவருத்தப்படுத்தாமல், கடிமலர்க் கொடிபோலக் காத்துவந்தான். அச்சதிபதிகள் அனவரதமும் தமது மணமாண்புகளைச் சொல்லிக்கொண்டு தாஞ்செய்த மேலைத் தவத்துயர்ச்சியினால் இவ்வந்நியோந்நியமான இசைநசைகள் பொ ருத்தமாய் இணைவுற்றனவென்று முறைமுறையுங்களித்து, வரும்

பிறப்பிலும் தமக்கித்தகைய பொருத்தமே வாய்க்கும்படிக் கோரிக் கொண்டிருப்பார்கள். அவரிருவருக்கும் பரஸ்பரம் மனமும் நெஞ்சமும் ஒன்றுபட்டு, எப்படிப்பட்ட இரகசியமாயினும் ஒளித்து வைக்கவேலாமல் வெளிப்படச் சொல்லிக்கொண்டு, ஒருவரின் பொருட்டொருவர் உயிரையும் துறக்கத்துணிவுற்று வாழ்க்கை செய்தனர். ஆகா! தாம்பத்தியமென்றால் அவர்களதேயன்றோ பேரொப்பிவிளங்குவது? சௌக்கியமென்றால் அவர்களதேயன்றோ, முதன் முதலில் குறிக்கத்தகுந்தது?"

271. கலவிச்சுகம் பரிபூரணமாயிருப்பதற்காக ஸ்திரீபுருஷர்களுக்கு அந்நியோந்நிய பிரேமை மேலிட்டிருப்பது மிகவுமவசியம். கள்ளக்காதல்களைக்காட்டிக் காமத்தீயைப் பற்றவைத்து வளர்க்கும் கணிகைகளுடன் செய்யும் கலவியினால் புருஷனது சரீரத்தினின்று காமவெப்பம் கிளம்பிப் பாய்ந்து நீங்குமேயன்றிப், பெண்மூலமான காமவுட்டிணம் அவனுடைய சரீரத்தினுள் ஏறமாட்டாது. ஆதலின் புருஷனது சரீரவலிமை யழிந்துபோய்ச் சம்போகசக்தியும் வெகு சீக்கிரமாய்க் குன்றியழியும். கள்ளக்கலவியில், சுவேச்சை நடையும், ஸ்தலசமயங்களின் அனுகூலமும் கூடிவரமாட்டாது. அன்றியும், பயமும், ஐயமும் மனத்தை வேதனைசெய்யும். ஆதலால், பரஸ்பரக்காமவுட்டிணங்கள் செவ்வையாய் உதித்து ஓடாமல், புணர்ச்சிச் சுகமென்னும் பெயர்மாத்திரமுடையதாகிச், சரீரத்துக்குக் கெடுதி சம்பவிக்கும். இதுவேயன்றி, வரையறையின்றி வந்தவர் போனவர்களுடனெல்லாம் ரமிக்கும் பெண்புருஷர்களின் தேகங்களில், பரஸ்பரங்காமவெப்பத்தை மூட்டிப் பாய்ச்சும் வல்லமையும் ஆகருஷணைசெய்யும் வல்லமையும் கேடுண்டிருக்கும், இல்லையா, மிகவும் குறைவுபட்டிருக்கும். ஆதலால்; அப்படிப்பட்டவருடன் கலவிசெய்வது, மெய்யையாராயுங்கால், ஹஸ்தப்பிரயோகத்திற்கும் தாழ்ச்சிபெற்றதாய் அனேகவிதப்பட்ட கேடுகளை யுண்டுபண்ணுவதற்குக் காரணமாயிருக்கும். எப்படிப்பட்ட திடகாத்திரமுள்ளவனாயினும் துரிதகாலத்திலேயே தளர்வுற்று மெலிந்து மரித்துப்போவான். இப்படியென்று வைத்தியசாஸ்திரபாரங்கதர்கள் ஊன்றிச் சொல்லுகிறார்கள்.

272. சம்போக சவுக்கியங்களைச் சிரகாலமனுபவிக்கக்கோருவோர்கள், கஞ்சா, அபின், குடி முதலிய லாகிரி பதார்த்தங்களை

யாவது, அபரிமித காமத்தைக் கிளப்பும் இலேகியங்கள், மாஜூனங்கள், பற்றுகள், தைலங்கள் முதலியவற்றையாவது, வீரியஸ்தம்பனஞ்செய்யும் ஔஷதங்களையாவது உபயோகிக்கக்கூடாது. இவற்றின்மூலமாய்த் தற்காலத்துச சவுக்கியமொருவேளை மிகுந்தாலும், பிற்பாடு சரீரவுறுதி அளவுக்கதிகமாய்க் கெடுபட்டுப், பலவிதப்பட்ட பிணிகளுமுண்டாகும். கலவிச் சமயத்தில் வீரியம் தன்னிடம் பெயர்ந்துவந்த பின்னர் அதை உள்ளுக்கிழுத்து நிறுத்தும் வழக்கம் சிற்சிலருக்குளது. அப்படிச்செய்யின் அது மூத்திரகோசத்திற்சேர்ந்து பற்பல வியாதிகளையுண்டாக்கும். மேலும் கருப்போற்பத்தியைத் தவிர்த்துக்கொள்வதற்காக, ஸ்கலனசமயத்தில் சடிதியில் இணைபிரியக்கூடாது. ஏனெனில் அதனால் தேகவலிமை குன்றிவிடும். ரப்பர் உறைகளை உபயோகப்படுத்தக்கூடாதென்று இதன் முன்னரே கூறப்பட்டது. அவற்றை யுபயோகிப்பதனால் ஸ்திரீபுருஷர்களுடைய சரீரங்களிலுள்ள காமவெம்மை செவ்வையாய்க் கலக்கவேலாமல் கலவிச்சவுக்கியத்துக்கும் கடைசியில் புணர்ச்சி வலிமைக்குங்கூட மிக்கூனமுண்டாகும். புணர்ச்சி முடிந்தபின்னர் தண்ணீர் குடிப்பதனுசிதம். அதனால் காமவெப்பம் சடிதியில் தணிந்துபோய்க் கேடுவிளையும். நகச்சூடான பசுவின்பால் பருகுவது நன்று.

சம்போக சமயங்கள்.

273. கொஞ்சமாயினும் நன்மைதீமைகளைக் கருதாமல், அனேகர் இச்சைவந்தபொழுதெலாம் புணர்ச்சிசெய்யப் புகுகிறார்கள்; இது பெருந்தவறு. சம்போக சவுக்கியத்தைச் செவ்வையாய் அனுபவிக்க விரும்புவோர்களும், சற்சந்தானம் பெறவிருப்புறுவோர்களும், நல்லசரீராரோக்கியமடைந்திருந்து மனத்தினில் எவ்விதப்பட்ட விசாரமும் இல்லாது சந்தோஷமாயிருக்குஞ் சமயங்களிலே சம்போகிக்கவேண்டும். சந்தோஷகரமான படங்களைப் பார்த்துக்கொண்டு நல்லவெளிச்சத்திலேயே புணர்ச்சி நடத்துவது பிரசஸ்தமானது. இருட்டுக்கலவி சிலாக்கியமானதல்ல. இரட்டைக ளிருவருக்கும் கேளிவிருப்பம் மேலிட்டிருப்பினே புணர்ச்சி யுசிதமேயன்றி, ஒருவருக்கு மாத்திரமிச்சையிருந்து மற்

றவருக்கு இச்சையில்லாதிருப்பின் எள்ளளவும் உசிதமாகாது. இவ்விதத்தருணங்களில் பலவந்தப்படுத்திக் கலவிசெய்யுமிடத்துச் சரீரத்துக்குக் கெடுதலுண்டாகும். அன்றியும் அப்புணர்ச்சியின் பயனுய்ப் பிள்ளைகள் பிறப்பின் அவை மிகவும் பலவீனமாயும் பிணியுண்டனவாகவுமிருக்கும். இரட்டைகளிலெவருக்கேனும் விசாரமதிகப்பட்டுள்ளபொழுதும், மனத்தையூன்றி நெடுநேரம் வேலைசெய்து களைத்திருக்கும்பொழுதும், மனத்தினில் குழப்பமும் கலக்கமு முற்ருவது இருக்கும்பொழுதும், அளவுக்கதிகமாய்ச் சரீராயாசப்பட்டு மிகவும் இளைப்புற்றிருக்கும்பொழுதும், மிகப்பசியுண்டிருக்கும்பொழுதும், இரேசனங்களினுலாவது தலைவலியினுலாவது காய்ச்சலினுலாவது மற்றெவ்விதப்பிணியினுலாவது வருத்தப்பட்டிருக்கும்பொழுதும், விழைவுதல் கூடவேகூடாது. போசனஞ்செய்த பின்னேடே புணர்வதுங்கூடாது. புணர்ந்தால் சீரணகோசம் பிணியுண்டுபோய், அதிசார முதலிய ரோகங்கள் சனிக்கும். கனன்று கொதிக்கும் நடுக்கோடையில் வெவ்வுருமவேளையில் விழையக்கூடாது. ஸ்திரீகள் மாதத்தீட்டுப்பட்டிருக்கும்போது அவர்களுடன் புணர்வது நலமன்று. தூரங்குளித்த பிறகு கூட இரஜவூற்றம் அடியோடே நிற்பதற்கு முன்னரும் கிரீடிக்கக் கூடாது. இருதுரத்தமானது புருஷனுடைய அங்கத்திற்படுவதினுல் வியாதியுதிக்கும். பெண்களின் இரகசியத்திலிருந்து வெளுப்பு முதலிய கெடுநீர்கள் வெயர்த்தொழுகிக்கொண்டிருப்பின் அவர்களுடன் புணர்வதுகூடாது. அப்படிக்கூடினுல் வியாதி பிடித்துக்கொள்ளும். பிரசவித்த பெண்டுகள் மூன்றுமாசம்வரைக்கும் சம்போகத்திற்கு ஏற்றிருக்கமாட்டார்.

சம்போக பரிமிதி.

274. சம்போகத்திற்குப் பரிமிதி நிருணயிப்பது சாத்தியப்படாது. சிலர் மாதத்துக்கொருவிசை போதுமென்று புகலுகிருர்கள். சிலர் வாரத்துக்கொரு விசை யென்றும், சிலர் நாளுக்கொரு விசை யென்றும், சிலர் இச்சை யுதித்த பொழுதெல்லாம் கூடுமென்றும் கூறுகிருர்கள். ஒன்று மாத்திரம் நிச்சயம். உண்மையாய் எப்பொழுது சரீரத்தில் காமமுதிக்குமோ அப்பொழுதே சம்போகஞ் செய்யலாமேயன்றி உத்தீபனத்தினுல் அவா

வலிமைகளையுண்டாக்கிக்கொண்டு சம்போகிக்கக் கூடாது. நல்ல யௌவனமும், சரீரத்திற்கேற்ற சக்தியும் பெற்றிருந்து தன்னிச்சையாய் ஆவல் தூண்டிய பொழுது கிரீடை செய்வதினால் கேடு விளையாது. ஆனால் மிதத்துக்கு மிஞ்சிய கூட்டம் எக்காலுமே லாது. அதிசம்போகமானது சரீரத்தின் சாரத்தைப் பிழிந்து விடும். யௌவனத்தில் கணக்கு வழக்கு பாராமல் அளவற்றுப் போகிக்கும் ஆசைமேலிட்டவருக்குச் சரீரதிடத்தை யொட்டிச் சம்போகவிச்சை பிறப்பதற்குப்பதிலாய், அடிக்கடியும் வேளைவிலக்கின்றி அப்பியாச வசத்தினால் பிறந்து தூண்டும். பிற்பாடு, கலவிச் சவுக்கியம் பதனழிந்து விரசமாய் விடும். சரீராரோக்கியங் கெடும். வீரியம் உறுதிகுன்றும். பிள்ளை பிறவாது. பிறப்பினும் வலிமையற்றதாகவும் குறைவயதுள்ளதாகவு மிருக்கும். நரம்புகளின் புஷ்டிகெடும். கூட்டச் சக்தி குறைவுபட்டு விரைவில் கேடுண்டுபோகும். 35—40 வருஷத்து வயது வருமுன்னரே விருத்தாப்பிய மேற்பட்டு, விழைபு மாவலதிகரித்திருப்பினும் அதற்கேற்ற வல்லமையின்மைக்கு விதன மேலிட்டு உயிர்த்திருப்பது பெருஞ் சுமையாய்க்காணப்படும். சித்தப்பிரமையும் பிடிக்கத்துவங்கும். ஆதியில் வரையறையின்றித்திரிந்த முகாந்தரத்தினால் அந்தத்தில் இத்துர்க்கதி பிடித்து வருத்துமனேகரைப் பார்த்திருக்கிறோம்.

275. அதி சம்போகத்தைப் போலவே சம்போக மில்லாமையும் சரீரத்துக்குக் கெடுதலுண்டாக்கும். சீவித காலத்தில் சம்போக மின்னதென்றே தெரியாமலும், சம்போகவிச்சையை மற்றெவ்விதமாய்த் தீர்த்துக்கொள்ளாமலும், வாழும் மகா புருஷர்கள் எங்கோ வோரிடத்துக்காணப்படுவார்கள். ஆயினும் பிரமசாரிகளென்னும் பெயர்வைத்துக் கொண்டவர்களுள் முக்காலே மூன்று வீசம் பெயர், தன்னிச்சை யொழுக்க முள்ளவர்களாயும், இல்லாவிடின் கெடுவழக்கப் பிரியர்களாயும், காணப்படுகிறார்கள். சம்போகவின்மையினாலும், நெடுங்காலம் சம்போகத்தைப் பரிசரித்திருப்பதினாலும், ஸ்திரீகளுக்கும் புருஷருக்கும் ஆனி தவறுமலுண்டாகும். மனத்தினில் உற்சாகமில்லாததாய், உலகத்தின்மீது வெறுப்பும், முன்கோபச்குணமும், பரர்மீது உவப்பின்மையும், நல்வழியில் அலட்சியமும் பிறக்கும். புத்தி தெளிவு கெடும். ஓர் பொழுது விசனமதிகரித்து வெறிபிடிக்கும். தேகத்தின் களை

யொளிகள் குலைந்து போகும். புணருமாவலும் புணரும் வல்ல மையும் நாளுக்கு நாள் குறைவு படும். சம்போக அவயவமா னது கிரமகிரமமாய் உறுதி கெட்டுத் தளர்வுறும். காமவெப்பத் தையுண்டாக்குஞ் சக்தியும் ஆகருஷிக்குஞ் சக்தியும் மேலுக்கு மேல் குன்றிப்போய் இறுதியில் அழிவுண்டுபோம். சரீராரோக் கியமும் கெடும். ஆதலின் சர்வேசுவரன் சவுக்கியத்திற்கென்று ஏற் படுத்திய சம்போகத்தொழிலைப் பயனற்றதென்று பாவித்து ஒழி த்துவிடாமல், வரையறை கண்டு அநுபவித்து வாழ்வது சவுக்கிய த்துக்கும் பெருவாழ்வுக்கும் இன்றியமையாததாய்த் தெரிந்து கொள்ளத்தக்கது. சம்போக பரிமிதி அவ்வவர்களின் சரீர விய ற்கைகளை யொட்டியிருக்கும். மிதமிஞ்சாமல் இரதிசுகம் கண்ட வர்கள் 60-வருஷவயதிற் கூடச் சுகத்தையடையக் கூடும். சம் போகத்திலெவ்வளவுக் கெவ்வளவு மிதமுற்றிருப்பார்களோ அத னுடைய சுகமும் அவ்வளவுக்கவ்வளவு அதிகப்பட்டிருக்கும். அமி தமாகிய சம்போகமானது ஸ்திரீ புருஷர்களுக்கு அத்தியந்தம் ஆனிகரமானது. ஸ்திரீகளைக்காட்டிலும் புருஷர்களுக்கு அதி சீக்கிரமாய்த் தீங்கு வந்து விடியும்.

ஹஸ்தப்பிரயோகம்.

276. இயற்கையான நடவடிக்கைகளுக்கு எதிரிடையான கெடுவழக்கங்கள் சில, சிலரிடத்துக் காணப்படுகின்றன. இவை யனையவும் மிகவும் ஆனிகரமானவையே. ஆயினும் இவற்றினுள் அஸ்தப்பிரயோக துரப்பியாசமானது எல்லாவற்றிலும் பொல்லா ததாய்க் காணப்படுகின்றது. இதனாலுண்டாகும் கேடுகள் இன் னவையென்று விரித்துரைப்பதற்கு எவர்தரமுமல்ல. சம்போக வங்கமானது படிப்படியாய் நாளடைவில் உறுதிகெட்டுத் தளர்ந் துபோய், கடவுளேற்படுத்திய காரியத்துக்கு உதவாதுபோய்விடு ம். தேககாந்தி கெட்டு உடல் வெளுவெளுத்துப்போய்விடும். மனம் கலக்கமடையும். புத்திகூர்மை கெடும். சுறுசுறுப்பும் ஞாபக சக்தியும் குறைவுபடும். பசிகெட்டு மந்தமடையும். சீர ணசக்தி சிதறும். கண்பஞ்சடையும். எப்பொழுதும் கெடுவழக் கத்தின்மேலே மனது செல்லும். காரணமின்றியே வீரியம் அசை ந்தொழுகிப்போகும். புணர்ச்சியில் சுவை தவறும். வீரியவுறு

திகெட்டு ஆண்மை நசிக்கும். சரீரம் கிருசித்துப்போய் அகால மரணத்திற்குப் பாத்திரமாகும். ஆதலின்! சிறியோரே! பெரியோரே! என்றைக்கும் இவ்விதத்துரப்பியாசத்தைக் கற்றுக்கெடாதேயுங்கள். அதில் எவ்வளவேனும் விழுந்திருப்பீர்களாயின் தட்சணமே யொழித்துவிடுங்கள். நம்புங்கள் இதனிலும் உயிருக்குப் பெரும்பகையாளி வேறேதுமில்லை.

சித்த சாபலியம்.

277. சிலர் அதி சம்போகத்திலாவது, அஸ்தப்பிரயோக முதலிய துரப்பியாசங்களிலாவது சிக்குப்படாமலே, சித்தசாபலியத்தினல் பெரு நஷ்டங்களுக்குப்பாத்திரராகிருர்கள். எவ்வேளையும் ஆடவரின் குணுகுணங்களைக்குறித்தும், புணர்ச்சியைக்குறித்தும் எண்ணி யெண்ணி, சிங்கார காவியங்களையே படித்துக்கொண்டு, துஷ்ட சம்பாஷணையிலேயே காலங்கழிப்பவர்களுக்கு, இடைவிடாத கலவியாவல் உதித்து மனத்தினுக்கு வருத்தத்தைப் பிறப்பிக்கும். இறுதியில் பேச்சுகளிலே யிருந்து காரியங்களில் விழும். விழாதபோதிலும், சரீரத்துக்குண்டாகும் கெடுதி பெரிதென்றே கருதவேண்டும். புணருவதினுலுண்டாவதைக் காட்டிலும், நிரந்தரமும் துர்ச்சிந்தையினுல் தேகத்திற்காயாசமும் மனத்திற்குச்சலிப்பும் புணரும் வல்லமைக்கு நட்டமும் விளையும். ஆதலால், பெரியவர்களே! மதிகேளுங்கள். எவ்விடத்திற் கேகினும் பெண்களுக்காகத் தேடுமியற்கையை விட்டொழியுங்கள். பெண்ணுனவள் கண்ணுக்குப் புலன்பட்டவளவிலேயே ஆவற் படாதேயுங்கள். திருட்டுப்பார்வைகளை நீத்து விடுங்கள். கெட்ட சிந்தையை விடுங்கள். கெடுவழியிலுருளாது நில்லுங்கள், நில்லுங்கள்.

வீரிய நஷ்டம்.

278. இது அனேக காரணங்களினுலுண்டாகின்றது. அஸ்தப்பிரயோக முதலிய துரப்பியாசங்களினுல் சரீரபடுத்துவங்கெட்டு, எத்துணைச் சிறிதான விழைச்சாவலுண்டாயினும் வீரியம் சிதறுண்டுபோகும். அதிசம்போகத்தினுல்கூட அங்கங்களின்

உறுதிகெட்டு வீரியகமலங்களும் ஸ்கலன நாடிகளும் நெகிழ்வுற்றுப்போய் வீரிய நஷ்டத்துக்கு முகாந்தரமாகும். இடைவிடாது சம்போக சிந்தையில் மனமோடுவதினல் நரங்களில் காமவெப்பம் நிறைவுபட்டிருந்துப் பலகாலும் சுக்கில நஷ்டமுண்டாகும். சம்போக வாசனையைச் சற்றேனு மறியாமலே இருப்பதினாலும், விலக்கியிருப்பதினுலும்கூட வீரியச் சிதற்றமுண்டாகும். இக்கூறிய காரணங்களைப்பற்றிப், பலமுறையும் நித்திரையில் கலவிக்கடுத்த கனவுகள் தோன்றிக் கலனஞ் சித்திக்கும. என்றைக்கோ இரண்டொரு விசை வீரியமசைந்தொழுகுவதினல் அபாயமேதுமில்லையாயினும், மிகவும் அதிகமான தடவைகள் உண்டாகுமானல் பெருங்கேடு மூளுமென்பதற் கையமில்லை. அதிசீக்கிரகாலத்தில் சரீர பலமெல்லாம் சிதறுண்டு மனதுகெட்டுப்போய்விடும். தலைவலி, கிறுகிறுப்பு, கண்மயக்கம், இடுப்புவலி, காதில் ஓசை, வஞ்சணத்தில் வலி, நிஸ்திராணை, புத்திமந்தம், நிராசை, அதைரியம், பயமும் காலக்கிரமத்திலுண்டாய்க் கடைசியில் பைத்தியம் பிடித்து அகாலமரணத்துக்கிடமாகும்.

279. வீரியநஷ்டத்தினுல் உபாதிப்படுபவர்கள் தகுந்த வைத்தியனைக்கொண்டு பரீட்சை செய்வித்துக்கொண்டு ஔஷதமருந்தவேண்டும். ஸ்திரீ சம்பர்க்கத்தினுல் வீரிய நஷ்டம் கட்டுப்படுமென்று சிலர் எண்ணுவார்களாயினும், இது எல்லாப்பொழுதுமெய்யல்ல. நல்ல யௌவனத்திலிருந்து சம்பர்க்கமில்லாக் காரணத்தினுல் வீரியநஷ்டமப்போதப்போது நேரிடுமாயின், பெண்சாதியின் மூலமாய் இந்த உபாதி தொலையக்கூடும. ஆனல், அதிசம்போகம், அஸ்தப்பிரயோக முதலிய துர்ப்பழக்கங்கள், சித்தசாபலியம், இவை முதலிய காரணங்களினுல் வீரியநஷ்டமுண்டாய்ச் சரீரம் மெலிவடையுமவர்களுக்குச் சம்போகத்தினுல் நல்முண்டாகமாட்டாமற் போவதேயன்றித் தீமையும் விளையும். இப்படிப்பட்டவர்கள் சம்போகத்தை யடியோடே விட்டுவிட்டு, மனத்தைத் துர்ச்சிந்தையில் செல்லாதபடி அடக்கி நிறுத்திச், சரீர ஆரோக்கியத்தை விருத்திப்படுத்துக்கொள்வதற்குப் பிரயத்தினப்படவேண்டியது. இரத்த புஷ்டியைக் கொடுக்கும் ஆகாரபதார்த்தங்களை யெடுத்துக்கொண்டு, சரீர பரிசிரமத்தை விட்டுவிடாமல் பழகிவந்து சீரணசக்தியைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். அன்றியும் மலபந்தமில்லாமல் சாக்கிரதையுடன் சரீரத்தைப் பாது

காத்துக்கொள்ளவேண்டும். தேகபரிசுத்த விஷயமாய்த் தகுந்த சாக்கிரதை யெடுத்துக்கொள்ளவேண்டும். மிகவும் சூடான பதார்த்தங்களையும், மாப்பண்ணியார வகைகளையும், புசிக்கக்கூடாது. குதிரைச் சவாரிகூடாது. மிகவும் மிருதுவாயிருக்கும் மெத்தைகள்மேல் படுக்கக்கூடாது. மல்லாந்தவா படுக்கக்கூடாது. படுத்துக்கொள்வதற்கு முன்னரும், விழிப்பு வந்தபொழுதும், ஒன்றுக்குப்போய் வரவேண்டியது. இவ்விஷயத்தில் எள்ளளவுஞ் சோம்புறப்படக்கூடாது. இப்படி நடந்துகொள்வதினால் குணமுண்டாகும். "இலெக்ட்ரிஸிடி" என்னும் மின்சக்தியை மர்மஸ்தானத்தில் பாயச்செய்வதினுல் அதிகமான நன்மையையுண்டாக்கலாமென்று சில டாக்டர்கள் சொல்லுகிறார்கள். ஆயினும், செவ்வையாய் அனுபவம் வாய்த்தவர்களே இவ்வேலையைச் செய்யவேண்டியிருக்கும்.

சம்போக சக்தி.

280. தீவழிகளில் பிரவேசிக்காமல் கிரமமான விதமாய்ப் புணர்ச்சியின்பம் அனுபவிக்கும் ஆண் பெண்களுக்குப் புணர்ச்சி வலிமை நீடூழி நிலைத்திருந்து சவுக்கியத்திற்காதாரமாய் இருக்கும். அதி சம்போகத்தில் அடிபட்டவர்களுக்கும், முதலே சம்போகமொழித்தவர்களுக்கும், அஸ்தப்பிரயோக முதலிய இயற்கைக்கெதிரிடையான வழிகளில் பழக்கப்பட்டவர்களுக்கும், எல்லாக் காலங்களிலும் சம்போக சிந்தையே செலுத்தினவர்களுக்கும், தற்காலத்துச் சுகத்தை யதிகப்படுத்துவதற்காக மருந்து வகைகளையுண்டவர்களுக்கும், விபசாரத்தில் விழுந்து அடிபடுமவர்களுக்கும், புணர்ச்சி வலிமை வெகு சீக்கிரத்தில் குறைவுபட்டுப்போகும். இப்படிக் குறைவுபடுவதற்குக் காரணங்களை இதன் முன்னரே விளக்கியிருக்கிறோம். இக்குறைவு பாட்டைக் கண்டுகொள்வதற்குப் பலவிதப்பட்ட குறிகளுள்ளன. மர்மாவயவங்கள் திடனழிந்து தளர்வுறும். கிளர்ச்சியும் புளகமும் செவ்வையாய் உண்டாகமாட்டாது. பரிசம் பதன் கெட்டிருக்கும். ஆழியளவாவவிருந்தாலும் நாழியளவு காமச் சூடாயினுமிராது. காமச் சூடடை யிழுத்துக்கொள்ளும் வல்லமை செவ்வை பட்டிராது. வீரியவொழுக்கம் வெகு சீக்கிரமாயாவது எழுச்சியுண்டான தட்சண

மேயாவது உண்டாகும். ஒருவேளை கிளப்பமே யுண்டாகமாட்டாது. இவ்விதக்கதி பெற்றவர்கள் சிரத்தையுடன் சிகிற்சை செய்வித்துக்கொண்டு சுகப்படும் வழியைத் தேட முயலவேண்டும்.

281. தம்பதிகள் நெடுங்காலம் பிரிவுண்டிருப்பதினல், அவர்களுடைய விழைச்சுவலிமைக்குத் தீங்கு நேரிடும். கலவிச்சவுக்கியத்தைப் பலதடவையு மெண்ணி யுமிழ் நீர் ஊறுவதினுலும், விரகவேதனையினுலும், நித்திரையில் பலகாலும் கனவுகள் காண்பதினுலும், காமச்சூடு அதிகமாய்ப் புறம்பாகி, இதற்குப் பதிலாய்ச் சேகரிக்கவேண்டிய காமோட்டிணம் சரீரத்திற்சேர்வதற்கு வசதியில்லாததினல், அத்தியந்தமாகிய நிஸ்திராணையும் புணர்வலிமைக்குச் குறைவு பாடு முண்டாகும். சம்போக நடத்தியதுபோலச் சொப்பன முண்டாகுமாயின், காமோட்டிணத்துடன் கூடப் பெண்களுக்குக் காம நீர் மாத்திரம் நஷ்டமாகும். ஆனல் புருஷனுக்குப் பிராண சமானமாகிய வீரியம் நஷ்டமாய்த் துர்ப்பலத்தை யுண்டாக்கும்.

282. பலதடவையும் குளிர் நீரில் இடைவரைக்கும் ஊறுவதினுலும், கோமணமாவது லங்கோடியாவது மிகவும் இறுக்கிக் கட்டுவதினுலும், மர்மஸ்தானத்தைச் செவ்வையாய்க்கழுவிக்கொள்ளாமல் அழுக்குச் சேர வைத்துக்கொள்வதினுலும், கலவிக்கருவி நாளடைவில் பலவீனப்பட்டுத் தளர்வுற்றுப் போய்விடும். சுசரத்து செய்தவர்களான மல்லர்களனேகர் புணர்ச்சித் தொழிலில் அவ்வளவாய்ச் சதுரர்களாகாமற் போவதற்கு இதுவே முக்கியகாரணம். விதையுபத்திரவம் வருமென்னு மச்சத்தினல் லங்கோடியைக் கெட்டியாய்க்கட்டிக்கொள்வதினல், இவர்கள் சிலம்பம் பயிலும் பொழுது சாமானியமாய்ச் சரீரமுழுவதும் இரத்தம் பெருக்கமாயோடிப் பலமுண்டாகி யதிகரிக்குமாயினும், சம்போக அவயவத்திற்குமாத்திரம் நஷ்டம் நேரிடும்.

283. மேற்கூறிய காரணங்களினல் கலவிச்சக்தி கேடடையாமல் சம்பூர்ணதசையிலிருக்கும்பொழுதுகூடச் சிற்சில வேளைகளில் அது மிகவும் குறைவுள்ளதாய்த்தோன்றும். அரைமனம், அசங்கியம், அநுமானம், அதைரியம், அச்சம், அபாயபயம், பாவப்பயம், வெட்கம், இவ்வித மனேவிகாரங்களினல் விழைச்சு வலிமை தற்காலத்துக்கு முழுதுமில்லாமற்போயினும் போகலாம்.

அல்லாவிடின், வெகு சீக்கிரத்தில் வலிமை தளர்வுறும். ஆனல் ஸ்திரீபுருஷர்களின் சித்தங்கள் சம்பூரண சுவேச்சையுடனும் அபேட்சையுடனும் விருப்புடனும் உற்சாகத்துடனும் கூடியிருந்தால், கிடைத்திருக்குமட்டும் கலவி வல்லமை திடமுள்ளதாகவே தோன்றும்.

284. சம்போக அவயவமானது பலவீனமாயிருக்கும்பட்சத்தில், வெதுவெதுப்பான வெந்நீருடன் அப்போதப்போது ஒத்திடம் போடுதல் உபயோககரமாயிருக்கும். சம்பங்கித் தைலத்தை மர்மாவயவத்தின்மீதும் அதைச்சூழவும் தடவுதலினலகூட சம்போகசக்தி யுண்டாவதற்கு வழியாகுமென்று வைத்தியர்கள் சிலர் வசனிக்கிருர்கள். வீரியவிருத்தியைப் பிறப்பிக்கும் பதார்த்தங்களைப் புசிப்பதும் இச்சக்தி கிடைப்பதற்கு அனுகூலமாயிருக்கும்.

வீரிய விருத்தி.

285. நம்முடைய ஆகாரபதார்த்தங்களில் சரீரத்துக்குப் பலத்தை யதிகரித்து வீரியவிருத்தியை யுண்டாக்குவன அனேகமுள்ளன. பசுவின்பால், நெய், தேங்காய்ப்பால், பாயசம், சீமையிலந்தைப்பழம், திராட்சப் பழம், பாதம்பருப்பு, பிஸ்தா பருப்பு, சாரைப்பருப்பு, குல்கண்டு, முந்திரிகைப்பருப்பு, பேரீச்சங்காய், முருங்கைக்காய், வெங்காயம், சேனைக்கிழங்கு, முள்ளங்கி, அபரஞ்சித்தகடு, பவளச் சுண்ணத்துடனும் முத்துச் சுண்ணத்துடனும் தடவிய வெற்றிலை விடயம், ஸாலாமிசிரி, கோழிமுட்டை, கோழிக்குஞ்சிறைச்சி, ஆட்டிறைச்சி, ஆண் ஊர்க்குருவியிறைச்சி, கவுதாரியினிறைச்சி, புருவிறைச்சி—இவை இரத்த புஷ்டியை யுண்டாக்கி வீரியத்தை விருத்திசெய்யும்.

286. வீரிய விருத்திக்கு லேகியம்—ஆண் ஊர்க்குருவி மாமிசத்தை ஒரு சாமப்போது காயவைத்து நெய்யில் கறகறப்பாய் வறுத்துக் குத்திச் சூரணஞ் செய்துகொள்ள வேண்டும். ஜாதிக்காய், ஜாதிபத்திரி, இலவங்கம், இலவங்கப்பட்டை, சன்னராஷ்டிரம், கண்டுபாரங்கி, பளிங்குச்சாம்பிராணி, கருங்குங்கிலியம், வெட்பாலையரிசி, இந்துப்பு, தேவதாருச் சக்கை, சிவேதைவேர், கொடிமஞ்சள்—இந்தப்பொருள்களை ஒவ்வொரு துலம் இடை

போட்டெடுத்துக்கொண்டு சூரணஞ்செய்து மெல்லிய துணியில் வஸ்திரகாயம் பண்ணவேண்டும். பிற்பாடு இப்படி வஸ்திர காயம் பண்ணிய சூர்ணத்துக்குச் சமமாய் ஊர்க்குருவிச் சூரணத்தை இடைபோட்டு, இரண்டையும் கலக்கவேண்டியது. அதன்மேல் இரண்டு சேர் தேனைக் காய்ச்சிப் பாகாய்ப் பதன்பட்டபொழுது அதில் இந்தச் சூரணக்கலவையைப் போடவேண்டியது. இப்படிச் செய்த லேகியத்தைப் பிரதிதினமும் ஒரு துலம் எடுத்துச் சாப்பிட்டுவந்தால் இரத்த புஷ்டி யூறி வீரிய விருத்தி யுண்டாகும். புணர்ச்சிவலிமை மெத்தவும் அதிகரிக்கும்.

சுகநோய்கள்.

287. மானவ சரீரத்திற்குண்டாகும் வியாதிகளில் சுகநோய்கள் மிகவும் உபாதிகரமும் இழிவானவையுமாயிருக்கின்றன. நியாய மார்க்கத்தை நீத்து விபசரிப்பவர்களுக்குப் பரலோகத்தில் தண்டனையிருப்பினு மில்லாவிடினும், இப்பிறப்பில் அவர்களனுபவிக்கும் சுகநோய்களின் சங்கட மொன்றே சன்ம சன்மங்களுக்கும் போதுமானது. இவ்விரோகங்களினால் வரும் வேதனை கண்ணாரக் காண்பவர்களுக்கும், இவற்றின் பெருமையைக் காதாரக்கேட்பவர்களுக்கும், எனறைக்கும் கெடு நடவடிக்கையில் இஷ்ட முதிக்க மாட்டாதென்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடும்.

288. சுகநோய்கள் மூவகைப்பட்டன—பிளவை, மேகவெட்டை, கிரந்திப்புண். ஸ்திரீ புருஷர்களின் மர்மாவயவங்களில் வியாதியினால ஜனிக்கும் விஷநீர்களின் சேர்க்கையினால் இந்நோய்களுண்டாகின்றன. இவ்விஷநீரி னியற்கையை யனுசரித்து வேறுவேறு பிணிகளும் பிறக்கும். பிளவைக்கும், மேகத்துக்கும் ஒரேவிதமான விஷ நீர் காரணமாகும். கிரந்திப் புண்ணை யுண்டுபண்ணும் விஷ நீர் வேறுவிதப்பட்டது. சம்போகக்கிரியையில் மாத்திரமேயன்றி, இந்த விஷ நீர் எவ்வழியாய்ச் சரீரத்தில் சேர்ந்தாலும் வியாதியுண்டாகும். இந்தப் பிணியுள்ளவர்களைத் தொடுவதினாலும், முத்தமிடுவதினாலும், அவர்களுடைய துணிகளைக் கட்டுவதினாலும், அவர்களுடைய பொருள்களை உபயோகிப்பதினாலும், அவர்களுடைய படுக்கைகளின்மேல் படுப்பதினாலும், அவர்கள் ஒன்

றுக்குப் போன விடத்தில் ஒன்றுக்குப்போவதினாலுங் கூடச்சுக நோய்கள் பிடிபடுவதுண்டு. அம்பட்டக்கத்திகள் மூலமாயும், பாற்ருதிகளின் மூலமாயும் சுகநோய்கள் ஒட்டிக்கொள்ளும். பெற்ருேர்கள் வழியே பிதிரார்ஜ்ஜிதமாய்க்கூட வருவதுண்டு.

289. பிளவைப் பிணி புருஷர்களுக்கு மாத்திரமே யுண்டாகும். ஸ்திரீயின் மர்மாவயவத்தில் ஊறும் விஷநீர்த் துளிகள் புருஷனுடைய லிங்கநுனியில் படுவதினால் அது சிவப்பு நிறம் பாய்ந்து வீங்கி யதன்மேற்ருேல் முன்னும் பின்னு மசைய முடியாமல் மூடுபட்டுப்போம். இரஜோ ரத்தமாவது, ஸ்திரீகளின் மர்மாவயவத்தில் சீதளத்தினால் சனிக்கும் சுவேத நீராவது இருப்பதினால்கூட இப்பிளவை நோய் ஓர்பொழுது உண்டாகின்றது. எந்தக்காரணத்தினாலுண்டானாலுஞ் சரி. அதன் குணக்குறிகள் ஒரு தன்மையவாகவே யிருக்கும். இலிங்க நுனி வீங்கி அதன் நுனித்தோல் முன்னும் பின்னுமாடமாட்டாமல் மூடுபட் டிருப்பதேயன்றி, அதனுள் கெடுநாற்றமுள்ள நீரூமூறும். அதிகமாகத் தினவும், சொற்பமாய் எரிவும், ஓரோர்காலத்து அதிகமான கலவியாவலும் உதிக்கும். சுன்னத்து செய்துகொண்டவர்களுக்கும், சம்போகத்தின் பின்னர் செவ்வையாய்த் தண்ணீர்கொண்டு கழுவிக்கொள்பவர்களுக்கும் இவ்வியாதி சாதாரணமாய்க் காணமாட்டாது. பிளவை நோய் கண்ட தட்சணமே, லிங்க நுனியையும் அதன் மேற்ருேலையும் பரிசுத்தமாய்த் தண்ணீர் கொண்டலம்பி, அவையொன்ருேடொன்று உரைத்துக்கொள்ளாதவண்ணம், இலிங்க நுனியைச் சூழவும துணிப்பீற்றலைச சுற்றி அதன் மேற்ருேலைவிடவேண்டியது. இப்படித்தினத்திற் கிரண்டு மூன்று விசை செய்யும் பட்சத்தில் மூன்று நான்கு தினங்களுக்குள் வீக்கம் வாசியாகி விடநீர் சுண்டும். அதிகமாய் நீரூறும் பட்சத்தில், மிகச் சொற்பமாய்ப் படிக்காரப் பொடிகலக்கிய தண்ணீருடன் கழுவிச், சுற்றியிருக்கும் துணிப் பீற்றலைக் கூட இந்நீருடன அப்போதப்போது நனைத்துக்கொண்டிருக்கவேண்டியது. பிளவைப் பிணி தீருவதற்குப் பரிசுத்தமே பிரதான சாதனம். பரிசுத்தத்தைக் குறித்துச் சாக்கிரதையின்றி அசிரத்தையாயிருக்குமிடத்து லிங்க நுனி மேலுக்கு மேல வீங்கி, மேற்ருேல் முழுதும அடைபட்டுப் போய், உட்பக்கம் அழுகுவதற்குத் துவங்கும். அப்படியாயின் சஸ்திர வைத்தியஞ் செய்யவேண்டிய தவசியமாகும்.

Surgical Treatment.

290. சுக நோய்களி லிரண்டாவது சுக்கிரதோஷ, மல்லது மேகவெட்டை. பகமார்க்கத்தினின்று விஷத்துளிகள் லிங்க நுனித் தொளைவழியாய் மூத்திரக்கால்வாயில் ஏறிச்சென்று அதனுட்டோலைப்புண்படுத்துவதினால் இவ்வியாதி சனிக்கும். சம்போகத்தின் பின்னர் 4—5 தினங்களுக்குள் லிங்க நுனியோட்டை சிவப்பேறிக் கொஞ்சம் தினவும் ஒருக்கால் குத்தலுங் காணும். பிற்பாடு மூத்திரக்காலிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய்ச் சீயும் வரத்தொடங்கும். அது துவக்கத்தில் வெண்மைபாகவும் இலேசாகவுமிருந்து, மேலுக்குமேல் அதிகமாய்க் கட்டியாகிக்கொண்டு, மஞ்சள் வர்ணமாகவும், பச்சை நிறமாகவும் மாறும். இலிங்க நுனியை விரல்களின் நடுவில் பிடித்து நசுக்கினக்கால் வலிதோன்றும். ஒன்றுக்குப் போகும்பொழுது எரிவுகாணும். சிலருக்கு இவ்வெரிச்சலினால் வருத்தம் மிகவும் அதிகமாய் மூத்திரம் கொஞ்சம் கொஞ்சமாய் வெளிப்படும். இரவுகளில் துயிலும்பொழுது இலிங்கம் எழுச்சிபெற்று, பச்சைப்புண்ணாயிருக்கும் மூத்திர நாடி வளைவதினால் அபரிமிதமான வேதனையைத் தரும். ஐயையோ! இந்த வேதனையின் வலி பரமசிவனுக்கே தெரியும். சிலர் நித்திரையிலெழுந்து மர்மஸ்தானத்தின் மேல் தண்ணீரூற்றிக்கொள்வார்கள். சிலர் ஈரத்துணியை மடியிலிட்டுக்கொள்ளுவார்கள். சிலர் குளிர்ந்த சுண்ணச் சாந்துத் தூண்களைத் தழுவிக்கொண்டு, ஸ்வாமி, இனிப் புத்திவந்தது என்று புலம்பிக்கொண்டு அழுது தொழுது அஞ்சலி செய்வார்கள். அந்தோகோ! எவ்வளவு கஷ்டம்!

291. இந்த மகா வியாதி சொஸ்தப் படுவதற்குப் பரிசுத்தம் மிகவும் ஆவசிகம். அது கண்ட வன்றுமுதல் 5—6 தினங்கள் வரைக்கும், வெதுவெதுப்பான நீர்கொண்டு நாளுக்கு மூன்று முறை பீர்ச்சாங்குழலடித்து, மூத்திரக்காலைப் பரிசுத்தபடுத்திவரவேண்டியது. அதிகமாய்ச் சீ வருமாயின், நகச்சூடான நீருக்குப்பதிலாய், “ஸில்வர் நைட்ரேட்” என்னுமருந்தாவது “ஜிங்க் ஸல்பேட்” என்னு மருந்தாவது வாங்கி—ஒரு அவுன்சு நீரில் அரைகிரெயினுக்குக் குறைச்சலாய்க் கலந்த தண்ணீருடன் 5—6 தினங்கள், தினத்துக்கு மூன்று விசை பீர்ச்சாங்குழலடித்துப், பிற்பாடு 5—6 தினங்கள் வெறும் வெந்நீருடன் குழலடிக்க வேண்டியது. இப்படிச்செய்யின், 10 தினங்களுக்குள்ளாகவே விஷநீரெல்லாம் நின்று போகும். பிறகு வால் மிளகாவது, சந்தன

தைலமாவது கொஞ்சம் சேவிக்கலாம். இவ்வியாதிக்குச் சிகிற்சை செய்துகொள்ளுங்காலத்தில், கூடுமானவரைக்கும் திரியாமல் படுத்த நிலையிலேயே யிருக்கவேண்டியது. ஆகாரம் இலேசாயிருக்கவேண்டியது. அதிகமாய்ப் புளியாவது உறைப்பாவது உஷ்ண பதார்த்தங்களையாவது சேர்க்கக்கூடாது. மாமிசம் புசிக்கக் கூடாது. குளிர்மைப்படுத்தும் பொருள்களைப் புசிக்கலாம். பால் குடிக்கலாம். பழங்கள் தின்னலாம். மலபந்தமில்லாதிருக்குமாறு சாக்கிரதைப்பட்டிருக்கவேண்டியது. அசத்தியமானல் பேதிக்கு மருந்துவாங்கிக்கொள்ளவேண்டும். சம்போகங் கூடவே கூடாது. இலிங்கநுனியினின்று சொட்டும் சீயைத் தவறுபாட்டினல் விரல்களில்படவிட்டுக் கண்ணுக்குத் தேய்த்துக்கொள்ளாமல், சாக்கிரதையாயிருக்கவேண்டியது. அந்தச் சீபடுமானல், கண்வீங்கி முழுதும் குருடுபட்டுப்போனலும் போகலாமென்று நினைவிலிட்டுக் கொள்ளவேண்டியது.

292. இந்த வியாதி தோன்றியபோது, முதன் முதலினின்றும் கருத்துகூர்ந்து முற்றிய சிகிற்சை செய்துகொள்ளாதபட்சத்தில், அதிகமான தீங்குநேரிடும். 20 - 25 தினங்கள் கழிந்தபிறகு, மூத்திரக்காலிலுள்ள வீக்கம்போய் ஒன்றுக்குப்போகும்போது எரிச்சலும் பெரும்பாலும் குறைந்துபோய் வியாதி குணப்பட்டது போல்தோன்றும். ஆயினும், இலிங்கநுனியைப் பிசைந்துபார்த்தால் மாத்திரம் இரண்டொரு சொட்டுகள் நீர்போன்றதிரவமானது துளிக்கும். சிலருக்கு இவ்வாறு அனேக வருடங்கள் வரைக்குங்கூடத் தங்கியிருக்கும். இந்நீரினல் இதரருக்கு நோய் ஒட்டாமற்போயினும், கலவியினலும், சூட்டுப் பதார்த்தங்களைச் சாப்பிடுவதினலும் அது அதிகப்பட்டுத் திரும்பவும் எப்போதும்போலவே வியாதி திரும்பும். இதுவேயன்றி இவ்வியாதியை முதலிலேயே செவ்வையாய்க் குணப்படுத்திக்கொள்ளாமல் அசட்டை செய்வதினல் மூத்திரக்காலில் உண்டாகிய புண் படிப்படியாய் மேற்பாகத்திற் கோடிப்படர்ந்து மூத்திர கோசத்துக்குக்கூடச் சென்று வியாபிக்கும். மேலும் ஓர்பொழுது, அந்தப்புண், வீரியகமலங்களுக்கும் பீஜங்களிலுள்ள நாடிகளுக்கும் பாய்ந்து வீரியத்திலுள்ள சக்தியை மாய்த்துவிடும். பீஜங்கள் வீங்கும். ஓரோர்பொழுது அரைப்பூட்டிலிருக்கும் நாடிகளுக்கு வியாபித்து கிரந்திப்புண் சங்கடத்தில் உண்டாவதுபோலவே, அரையாப்புக்கட்டிகள் கிளம்

பும். மேலும் ஒருபொழுது, மூத்திரக்கால் குறுகுவதினுலும், அது கோணலுங் குறுக்கும் பட்டுக்கெடுவதினுலும், அடியோடே மூடுபட்டுப்போவதினுலும், மூத்திரம் தாராளமாய்ப் பாயமுடியாமல், அபாயத்தை விளேக்கும். அதலால், இத்துஷ்ட ரோகத்தைச் சம்பாதித்துக்கொண்ட புத்தியீனர்கள், அசட்டையினுலாவது, நாணத்தினுலாவது சோம்பாமல் உடனேக்குடனே ஏற்ற சிகிற்சையைச் செய்துகொள்ளவேண்டியது. பொருட்செலவைப் பெரிதாயெண்ணுமல், கனவைத்தியனுதவி மூலமாகவே குணப்படுத்தும்படிச் செய்துகொள்ளவேண்டியது.

293. பெண்களுக்குச் சுக்கிரதோஷம் வருமாயின் பகவுதடுகள் வீங்கிச் சிவப்பு பாய்ந்து பகத்துவாரத்தினின்று சீயொழுகும். அனேகருக்குத் தினவும் வலியும் அபரிமிதமாயிருக்கும். பிற்பாடு மூத்திரத்துவாரங்கூட வீக்கப்பட்டு ஒன்றுக்குப்போகும்பொழுது எரிச்சல்காணும். ஆனுல், புருஷர்களுக்குள்ளளவு எரிவும் குத்தலுமிராது. செவ்வையாய்க் குணபபடுத்திக்கொள்ளாமல் கருத்தழிந்திருப்பதினுல், இந்த வியாதி, பகமார்க்கத்துட்டோன் முழுதையும் புண்படுத்திக் கருப்பகோசத்துக்குக்கூடப்போய்ப் படரும். ஸ்திரீகள்கூட மேற்கூறிய வழிசுளேயே தொடர்ந்து இந்தப் பிணியைக் குணப்படுத்திக்கொள்ளவேண்டும். பகவுதடுகளேப் பிரித்துச் சிறுதுணிச்சுருளொன்றை நடுவில் நுழைத்து வைக்கவேண்டியது. மருந்து நீருடனும் வெதுப்பான நீருடனும் பீர்ச்சாங்குழலினு லடிப்பதினுலே பகமார்க்கத்தைச் செவ்வைப் படுத்தவேண்டியது. பெண்டுகளில் இந்தப் பிணிகாணும் பிரதேசம் விசாலமுள்ளதாதலின், நீருடன் மருந்தை இரண்டு மடங்கு கூட்டலாம். என்றுல், ஒரு அவுன்சு நீருக்கு 1—கிரெயின் "ஸில்வர்நைட்ரேட்" ஆவது, 1—கிரெயின் "ஜிங்க்ஸல்பேட்" ஆவது கலக்கலாம். படிக்காரப்பொடி கலக்கிய நீருடன் கழுவுதலினுல் கூடக் குணமுண்டாகும். தூரமாயிருக்கும் தினங்களில் மருந்து விட்டுவிடவேண்டியது. பெண்களுக்குச் சுக்கிரதோஷங்கண்டபொழுது அது சுத்தமாய்க் குணப்படுவது துர்லபமென்று அனேகர் கனவைத்தியர்கள் சொல்லுகிறுர்கள். ஆதலின், மிகுந்த சிரத்தை வகித்துச் சிகிற்சை செய்வித்துக்கொள்ளவேண்டியது.

294. சுகநோய்களில் மூன்ருவது உபதஞ்சம், அல்லது கிரந்திப்புண். இது எல்லாவற்றிலும் மகாபயங்கரமானது. ஸ்திரீ

களுக்குப் பகவுதடுகளின்மீதும், சூழவிருக்கும் பிரதேசத்தின்மீதிலும், புருஷர்களுக்கு லிங்கநுனியின்மீதிலும், அதன் மேற்றோல் மீதிலும், விஷநீர்ப்பட்டுக், கட்டிகளாவது புண்ணாவது கிளம்புவதினால் இவ்வியாதியுண்டாகும். இது துருவடிப்புண்ணென்றும் கிரந்திப்புண்ணென்றும் இருவகைப்படும். இவற்றை வேறுவேறாக விவரிப்போம்.

295. சம்போகம் நடந்த மறுதினத்திலேயாவது, 10 - 15 தினங்களுக்குள்ளேயாவது, லிங்கத்தின்மீது இரண்டு மூன்று துருவடிப்புண்கள் புறப்பட்டு, அவை அகன்றனவாகவும் வில்லைகள் போலவும் வெகு சீக்கிரமாய் வளர்ந்து, உள்ளே தொளைகள் தொளைகளாய் ஏற்பட்டுக்கொண்டு சீழுடன் நிறைவுறும். பிறகு, இப்புண்கள் லிங்கமுழுவதும் பரவிச் சருமத்தைத் தின்றுகொண்டு வந்து கடைசியில் அவயவத்தையும் விழுங்கிவிடும். இவ்விரணங்களின் சீழ் எங்குபட்டாலும் அங்கெலாம் புண்புறப்படும். ஓர் பொழுது சீழ்பட்டு உடல்முழுவதும் புண்களுடன் வெடிக்கும். துருவடிப்புண்கள் புறப்பட்ட 15 - 20 தினங்களுக்கெல்லாம் அரைப்பூட்டுகளிலுள்ள நாடிகளுக்குக்கூட விஷநீரோடி வீக்கங் காணும். பிறகு அரையாப்புக்கட்டிகள் கிளம்பும். தருணத்தில் தகுந்த சிகிற்சை செய்துகொள்ளாவிடின், சரீரமுழுவதும் புண்களுடனும் ரணங்களுடனும் உடலழுகி மரணஞ் சம்பவிக்கும்.

296. கிரந்திப்புண் வந்து சேர்ந்தபொழுது ஒருநிமிஷமாயினும் தடைப்படாமல் நல்லவைத்தியனைக்கொண்டு குணப்படுத்திக் கொள்ளவேண்டியது. வளரவிடாமல் நிறுத்துவதே இவ்விரணங்களுக்கு முன் முன்னர் செய்யவேண்டிய சிகிற்சை. ஆதலால், வேலம்பட்டையாவது, அரசம்பட்டையாவது போட்டுக்காய்ச்சிய நீருடன் புண்களைச் செவ்வையாய்க்கழுவி, அவற்றிற்குள்ளே நாலு பக்கத்திலும், அடிப்பாகத்திலும், "ஸில்வர் நைட்ரேட்" என்னும் மருந்துக்கட்டியுடன் தொடவேண்டியது. இல்லாவிடின், "கந்தகாமிலம்" (ஸல்பியூரிக் ஆஸிட்) ஆவது, "தர்க்கியாமிலம்" (நைட்ரிக் ஆஸிட்) ஆவது கொணர்ந்து, மெல்லிய நுனியுள்ள குச்சியுடன் மேற்கூறிய வண்ணம் தொடவேண்டியது. இப்படித் தொடுவதினால் புண்களின் நாற்பக்கமுமுள்ள சருமமும், கீழிருக்கும் சருமமும், கருகி, நீங்குவதற்குத் தொடங்கும். இவ்வண்ணம் மருந்தினால் தொட்டபின்னர், புண்களின்மீது "விண்ட் என்னும்

துணிக்கிழிவைப்போர்த்துச் சுற்றிக்கட்டவேண்டும். தினத்திற்கு இரண்டு முறை விழுக்காடு, இவ்வாறு இரண்டு தினங்கள்செய்ய வேண்டும். பிறகு வேலம்பட்டை நீருடன் மாத்திரம் கழுவிக் கொண்டு வரும்பட்சத்தில், சீக்கிரகாலத்திலேயே விரணங்களாறிப் போய்விடும். அரைப்பூட்டில் அரையாப்புக்கட்டிதோன்றியபோது, அவற்றிற்கு உடனே மாக்கட்டுகள்கட்டி ஒத்திடங்கள் போட வேண்டும். அப்படிச்செய்ய அவை யொருவேளை கரைந்துபோனாலும் போகலாம். இல்லாவிடின், மெதுவாகலாம். மிருதுவு பட்டபிற்பாடு, உடனே அவற்றைக் கத்திகொண்டு திறந்து, துருவடியைக் குணப்படுத்திக்கொள்ளுமாறே குணப்படுத்திக்கொள்ள வேண்டியது. இப்படித் திறப்பித்துக்கொள்ளாமல் அவை தமக்குத்தாம் உடையும் வரைக்கும் சும்மாவிருந்தால், பெரும்புண்ணாகி அதிகமான உபாதியை யுண்டாக்கும்.

297. கிரந்திப்புண் அல்லது சிலந்தி மிகவும் கோரமான வியாதி இது குணப்படுவது கனவிற்கண்ட வார்த்தை. குணப்பட்டதுபோலக் காண்பினும், வயது முதிர்ந்து தேகம் கொஞ்சம் துர்ப்பல நிலைமைக்கு வரும்பொழுதும், இதரப்பிணிகளேதேனும் சம்பவித்தபொழுதும், திரும்பவும் அது தலைகாட்டும். சந்தானத்துக்குக்கூடவது வந்துபிடித்துக்கொள்ளும். சம்போகத்தின் பின்னர் 2-3 தினங்கள் முதல் 20-தினங்களுக்குள்ளே மர்மாவயவத்தின்மீது ஒரு சிறுபருப்போன்ற கெட்டியான கட்டி புறப்பட்டு வாயுடைந்து சீழுடன் நிறைந்து, பிறகு ஆறிச் சாதாரணமாய்த் தனக்குத்தானே நீங்கிப்போய்விடும். ஒருக்கால், வஞ்சணத்தில் வீக்கம் காணுமே யாகிலும், அது அரையாப்பாய்ப் பரிணமிக்காமல் சில தினங்களுக்குள்ளேயே அடங்கிப்போய்விடும். இரண்டு மூன்று நான்கு மாதங்கள் கழிந்த பின்னர் சரீரத்தில் அங்கங்கு புண்கட்டிகள போன்ற பிளவைகள் புறப்பட்டு உடைந்து சீயொழுகிப், பிறகு உலர்ந்து காவிவர்ணமுடைய தழும்புகள் ஏற்படும். வாய்க்குள்ளும், அண்ணத்திலும், கழுத்தினுள்ளும், மூக்குமேலும் சீழுடன் கூடிய அண்டைகளும் காணப்படும். உள்ளங்கை, உள்ளங்கால் முதலிய பிரதேசங்களில் தேமலுண்டாகும். கழுத்து முதலிய பிரதேசங்களில் சீழ்ப்புண்கள் காணும். சிலருக்கு இதழ்கள் இதழ்களாய்க் கறுப்பான இரணங்கள் கிளம்பிப் படர்ந்து கொண்டு போகும். ஒன்றிரண்டு வருடங்கள் கழிந்தபின்னர், வியாதிதோன்

றிய நாற்பது வருடங்களுக்குள்ளாக இன்னும் மகாகோரமான கஷ்டங்கள் பிராப்தியாகும். மூக்கு, அண்ணம், தாடைகள், கபாலம், முதலிய பிரதேசங்களில் எலும்புகள் கிரமகிரமமாய்த்தின்று போடப்பட்டுத், தோலைகளும் மூளிகளும் விகிருத வடிவங்களும் சித்திக்கும். ஒருபொழுது தொண்டையில் புண்கிளம்பும். அண்ணத்துக்கும் மூக்குக்கும் வழியேற்படும். எலும்புகள் சிறுசிறு பின்னங்களாய் உதிர்ந்துகொண்டுவரும். விரல்நுனிகள் அழுகிக்கொண்டுவரும். சிவசிவா! சொல்வதற்குக்கூட மிகவும் கஷ்டமாயிருக்கிறது. இந்த வியாதி தீராவைரிகளுக்குக்கூட வராதிருக்குமாக!

298. கிரந்திப் புண் தோன்றிய உடனேயே அக்கிரந்தியை மெல்லென அறுத்துப்போடவேண்டும். அல்லது, மருந்துக்கட்டியுடனாவது, ஆமிலதிராவகத்துடனாவது சூழவும் சுட்டுக் கருகச் செய்யவேண்டும். பிற்பாடு துருவடிப்புண்ணுக்குப் போலவே சிகிற்சை செய்யவேண்டும். நிலக்கரியைப் பொடியாக்கி "கந்தகாமிலத்" (ஸல்பியூரிக் ஆஸ்ட்) துடன் கலந் தரைத்துப், புண்மேல் தடவிக் கொஞ்சநேரம் வைப்பதினாற்கூடச் சீக்கிரமாய்க் குணப்படும். இப்படிக்கஷ்டப்பட்டுக் குணப்படுத்திக் கொண்டபோதிலும், பிற்பாடு தேமலகடி முதலியவை யுண்டாகலாம். இந்தக் கொடுந்துயரம் சம்பவிக்கும்பொழுது கனவைத்தியனைக் கொண்டு சிகிற்சை செய்வித்துக்கொண்டு காலங்கழிக்கவேண்டும்.

299. கிரந்திப்புண் சங்கடத்திற்குச் சிகிற்சை செய்துகொள்ளுங்காலத்தில் ஆகாரம் சாமானியமாயிருக்க வேண்டும். மாமிசம் புசிக்கக்கூடாது. சூட்டுப்பதார்த்தங்களை விலக்கவேண்டியது. மலபந்தமில்லாதிருக்கும்படிப் பழங்களாவது இரேசன ஔஷதமாவது அப்போதப்போது உட்கொள்ளவேண்டியது. இரத்தத்தைச் சுத்திசெய்வதற்காக நன்னாரிவேர்க் கஷாயத்துடன் "போடாஸ் அயோடைட்" என்னு மருந்தைக் கூட்டி, உதயத்திலும் அஸ்தமனத்திலும் சாப்பிடவேண்டியது. இந்தக் கஷாயத்தைச் செய்யும் விதமென்னவெனில்—நன்னாரிவேர் 4 துலம், பரங்கிப் பட்டை அரைத்துலம், மிளகு அரைத்துலம், சுக்கு அரைத்துலம்—ஆக இந்தப்பொருள்களைக் குத்தி ஒரு சட்டியில் அரைச்சேர் நீரில் இராத்திரி வேளையில் ஊறவைத்து, விடிந்த பிறகு நாலிலொருபங்காகக் காய்ச்சிக் கஷாயத்தை வடிக்கட்டிக்கொள்ள

வேண்டும். பிற்பாடு, இந்தக் கஷாயத்தில் 8-நென்மணியிடை "போடாஸ் ஐயோடைட்" என்னும் பொடியைக்கலந்து, பகுதி காலையிலும், பகுதி மாலையிலுமாகப் பருகவேண்டும்.

300. ஒவ்வோர் வேளை, துருவடிப்புண் மூத்திரக்காலில் உண்டாகும். ஒருவேளை துருவடிப் புண்ணும் பிளவையுங் கலந்து காணும். மற்றோர்வேளை, கிரந்திப்புண்ணும், சுக்கிரதோஷமும் சேர்ந்து தோன்றும். அப்படிப்பட்ட தருணங்களில் உண்டாகும் வேதனையும் குத்தலும் இவ்வளவவ்வளவென்று சொல்லத்தீர மல்ல. அரை நாழிப்போகம், ஆறுமாத ரோகம் என்று சொல் வார்களாயினும் ஆயுஷ்காலமெல்லாம் ரோகமென்றால் சரிப்பட் டிருக்கும்.

301. சம்போக நடத்திய தட்சணமே மூத்திரம் பெய்து வருவதும், சம்போகித்த பின்னர் மர்மாவயவங்களைப் பரிசுத்தமா யக கழுவிக்கொள்வதும், ரப்பர் உறைகளைப் போட்டுக்கொள்வ தும்—இவ்விதச் சாக்கிரதைகளினால் சுக சங்கடங்களினின்றுங் காத்துக்கொள்ளலாமென்று சிலர் சொல்லுவார்கள். ஆயினும், இந்தப் பொல்லாப்பிணிகளின் வாயிற் படாமலிருப்பதற்கு, ஒரே யுபாய முள்ளதென்று உறுதியாக நம்பவேண்டியது. கெட்ட நீட்வடிக்கைகளை யொழிகக வேண்டியது, கெடு நடச்கையில் அடிபட்டுச் சஞ்சரிப்போரது பாடுகளைக் கண்டு புத்தி பெற்றிருக் கவேண்டும். இச்சொற்களை மனத்தினில் மறவாதிட்டுக்கொள்ள வேண்டும்.

4 VI 97

Pitagh Ayodike

ஆறாம் அதிகாரம்.

மனோ மர்மங்கள்.

302. சிருஷ்டி மர்மங்களெல்லாவற்றிலும் மிகவும் இரகசிய மானவை மனோமர்மங்கள். பஞ்சபூதங்களினாலாக்கப்பட்ட இம் மானவ சரீரத்தினுள் ஏதோ ஒரு சக்தி குடிகொண்டிருந்து, மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறிகளினால் வெளியுல கத்து ஞானத்தைக் கிரகித்துப், புத்திக்கும் சுகதுக்க முதலியவற் றிற்கும் இருப்பிடமாய், காரியகரணத்துக்கு மூலமாயிருப்பதாகப், பிரதி நிமிஷமும் நமக்குப்புலன்படுகின்றது. இவ்விசித்திர சக்தி மனம் என்று சொல்லப்படுகின்றது. இது, தலையிலுள்ள மூளை, அதனுடன் சம்பந்தப்பட்டிருக்கும் நரம்புகள்—இவற்றின் குண மென்றும், சரீரம் நசித்த பின்னர் அதுகூட லயப்படுமென்றும், சிலர் வசனிக்கிறார்கள். மற்றுஞ்சிலர் மனம் தனிப்பட்டபொரு ளென்றும், சரீரம் நாசமடைந்த பிறகு ஆத்துமா வடிவமாய் அது நிலைபெற்றிருக்குமென்றும், எண்ணுகிறார்கள். இவ்விஷயம் எப் படியாயினும், தேகத்தில் பிராணனுள்ளவரைக்கும், மனத்தின் மகிமை யனேகவிதங்களாய் நமக்குத் தெரியவருகிறது. இஃது அனைவருக்கும் தெரிந்ததே. ஆயினும், மர்மங்களாய் இருக்கும் சிலவிஷயங்களை யிவ்விடத்தில் விசாரிப்போம்.

மனோபலம்.

303. மனோபலத்தினால் மகா அற்புதமான காரியங்களனே கத்தைச் செய்யலாம். ஜனவசிய மிருகவசியங்களுக்கும், செய் ய்ச் சாத்தியப்படாக காரியங்களைச் செய்வதற்கும் இதுவே முக் கியமான கருவியாயிருக்கிறது. இம்மனோபலமென்னப்பட்டது, ததேகதிருஷ்டியினாலும் தியானத்தினாலும் உண்டாகும். ஜபங் கள், பட்டினிகள், யோகங்கள் முதலியவை அசைவிலாத்தியானத் துக்கு வழிகளேயன்றி வேறல்ல. ஆங்கிலேய பாஷையில் "மெஸ்

மரிஜம்" என்று சொல்லப்படும் சக்திக்கு மனோபலமே மூலசாதனம். இச்சக்தியைச் செவ்வையாய் அப்பியசித்தவர்கள், எவரையாவது எதிரில் உட்காரவைத்துக்கொண்டு, கொஞ்சநேரம் அவருடைய கண்களுள் குறுவிழிகளுடன் உற்றுப்பார்த்துப் பார்த்துப், பிற்பாடு அவருடைய முகமுதல் கீழே அடிகள் வரைக்கும் கைவிரல்களுடன் மந்திரித்ததுபோலத் தடவியும் விசிறியும்; அவரை உறங்கச்செய்யக்கூடுவர். இதுவேயன்றி, அவ்வித நித்திராவஸ்தையிலிருக்கும்பொழுது அவர் மூலமாய் அனேகமான விசித்திர காரியங்களையுஞ் செய்விப்பர். கண்கள் திறக்கவொண்ணாய், எங்கே திறந்துபார் பார்ப்போம்—என்று அவனுடன் மெஸ்மர்காரகன் சொல்லியக்கால், எவ்வளவு முயற்சிசெய்தபோதிலும் அவன் கண்களைத் திறக்கமுடியாதவனாகவேயிருப்பான். அதோபார், உன்னுடைய துணி எரிவுண்டுபோகிறது என்று சொன்னால், அவன் தடுமாற்றமுற்றவனாய் வஸ்திரங்களை யவிழ்த்துப்போடுவான். அதோபார் ஏரி காண்கிறது நீந்து என்றால், நீந்துவது போல் கால் கைகளை விரித்து நீச்சுபோடுவான். உன் காலில் பாம்பு சுற்றிக்கொண்டிருக்கிறது என்று சொன்னபொழுது, பயப்பட்டழுதுகொண்டு பாம்பை யிழுத்தெறிவதற்காகப் பிரயத்தினப்படுவான். பானகமென்று சொல்லி உப்பு நீரைக்கொடுத்தாலும் குடித்துத் திருப்தியடைவான். உன்கையில் பழமிருக்கிறது தின்னென்றால், மெய்யாய்ப் பழந்தின்பதுபோலவே தின்று சந்தோஷப்படுவான். நீ தெருவில் திரியும் நாயென்றால், நாய்போலக் குலைக்கத்தொடங்குவான். இப்படிக்காடமான சொப்பனவஸ்தையிற்போல, எந்த வழி காட்டப்படுமோ அதின் வழியே நடப்பான். இறுதியில், மெஸ்மரிப்பவன், அவனுடைய அடிகள் முதல் முகம் வரைக்கும் விரல்களுடன் மேற்புறமாய் விசிறவே, அவன் துயிலெழுந்து, முன்னே நடந்ததொன்றுமறியேனென்று சொல்லுவான்.

304. இவ்வித மெஸ்மர் சரியைகளை அனேகர் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள். மெஸ்மரிப்பவனது மனோபலத்தினாலும், மெஸ்மரிக்கப்படுபவனது மனம் உட்படுவதனாலும், காணக் காண அவன் கண்கள் களைத்து மூடுண்டு போவதினாலும், முதலில் நித்திராவஸ்தைக்கும் பிறகு சொப்பனவஸ்தைக்கும் வழியேற்படுவதாகக் காணப்படுகின்றது. மெஸ்மரவாதியினுடைய விரல்

களினின்று ஒருவிதப்பட்ட ஆகருஷணச் சக்தி எதிராளியிட்த்துப்போய்ப் பாய்கின்றதென்றும், நித்திராவஸ்தை அதன் மகிமையென்றும், சிலர் செப்புவார்கள். எந்தக்காரணத்தினால் உண்டானபோதிலும், நித்திராவஸ்தையும் சொப்பனவஸ்தையிற்போல நடவடிக்கைகளும், உண்டாவது நிச்சயம். மெஸ்மரிக்கப்படுபவன் அதிகமான மனோபலமுள்ளவனான பொழுதும், அவன் தன்மனத்தை உட்படுத்தாமல் மெஸ்மரவாதியைத் திக்கரித்து இருக்கையிலும், நித்திரையுண்டாகமாட்டாது. தூரத்திலிருப்பினும், மனத்தினில் உத்தேசத்தை மாத்திரம் நிறுத்திக்கொண்டு இதரர்களை மெஸ்மரிக்கும் மகா வல்லமை சிலருக்குண்டென்று சொல்லுவார்கள். ஆயினும் அப்படிப்பட்ட மகா புருஷர்களிதுவரையில் காணப்படவில்லை.

305. மனுஷியர்களைக்காட்டிலும் பட்சிகளையும் மிருகங்களையும் மெஸ்மரிப்பது சுலபமாக விருக்கும். இம் "மெஸ்மரிஜம்" எல்லாவற்றிற்கும், செய்பவனது மனோபலமும் அவன் உண்டாக்கும் அச்சமும் காரணங்களாய்த் தோன்றுகின்றன. கோழிக்குஞ்சு, கபோதம், ஊர்க்குருவி முதலிய பட்சிகளைக் கையிற்கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, அவற்றின் கண்களுள் விழிபுரட்டாமல் சொற்பநேரம் பார்த்துக், கைவிரல்களுடன் மந்திரிப்பதுபோலச் சிலதடவைகள் தலைமேல் தடவிக்கொடுத்துப், பிற்பாடு ஒரு மேசைமேல் வைத்தால், அவைசாதாரணமாய் அசையாமல் விழுந்துகிடக்கும். பூனைகள், நாய்கள், பசுக்கள், எருதுகள், குதிரைகள் முதலிய செந்துக்களைக்கூட மெஸ்மரித்து வசப்படுத்திக் கொள்ளலாம்.

306. எவ்வளவு கொழுத்த குதிரையானாலும், இதனடியில் விளக்கிய வழிப்படி மெஸ்மரித்து இரண்டுமூன்று மணி நேரத்துக்குள் வசப் படுத்திக்கொள்ளலாமென்று கிரந்தங்களில் கூறப்பட்டிருக்கிறது. இது மெய்யென்று சுய அனுபவத்தினால் இந்நூலாசிரியர் செப்பவல்லவர். அதிகமாகிய தைரியத்துடன் மனத்தைப் பலப்படுத்திக்கொண்டு குதிரைபண்டை சாக்கிரதையாய்ப் போய், அதன் மூக்குத் துவாரங்களில் விரல்களைவிட்டுக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, மற்றக் கையுடன் காதைப் பிடித்துக்கொண்டு தலையைக் குனித்துச், செவியில் கெட்டியாய் ஊதவேண்டும். ஒருவேளை யிப்படிச் செய்வதற்கு அனுகூலப்

படாத பட்சத்தில் குதிரைக்காஸ்தாரியின் உதவியுடன் ரப்பர் குழலொன்று செவியில் நுழைத்து ஊதவேண்டும். இப்படி 4-5-நிமிஷங்கள் ஊதிய வேளைக்குக் குதிரை கடகடவென்று நடுங்கத்துவங்கும். பிற்பாடு அவ்வண்ணமாகவே, மூக்கைப்பிடித்துக்கொண்டிருந்து, இரண்டாங்கையுடன் கழுத்துப்பக்கங்களைத்தட்டி, கழுத்தினின்று வாலுைக்கி வெந்நு மீதாக மெதுவாய்த்தடவவேண்டும். பிறகு, அதன் கண்கள்பக்கமாயும் முகப்பக்கமாயும் சற்று நேரம் விழியூன்றிப்பார்த்து, முகத்தின் மீது மந்திரித்ததுபோல விரல்களுடன் கீழுக்குத் தடவிக்கொடுத்து விசிற வேண்டும். இப்படி விடாப்பிடியாய் இரண்டு மூன்று மணி நேரம் செய்தபிறகு குதிரையை விட்டு விட்டு, வரும்படிக் கூப்பிட்ட மாத்திரத்திலேயே அது தன்னிச்சையாய்ப் பின்னே வரும், எவ்விடத்திற்குப் போயினுமவ்விடத்திற்குப் பின்தொடர்ந்து எப்படித்திரும்பியபோதிலும் அப்படித்திரும்பும். நாலைந்துதினங்கள் இவ்வாறு வழக்கப்படுத்தினல் குதிரை செவ்வையாய்ச் சாதுவாய்ப்போகும். எருதுகளையும் பசுக்களையும் கூட இவ்வண்ணமாகவே சாதுவாக்கி வசப்படுத்திக்கொள்ளலாம்.

307. யானைகள், புலிகள், சிங்கங்கள் முதலிய துஷ்ட செந்துக்களையும் மெஸ்மரித்துச் சில வனசஞ்சாரிகள் சுலபமாய் வசப்படுத்திக்கொள்வார்களென்று கேள்விப்படுகிறோம். அப்பொழுதப்பொழுது சில துரைகள் கூடச் சாதுவாக்கிய புலிகளையும் சிங்கங்களையும் கொணர்ந்து சர்கஸ்ஸுகளில் ஆட்டுகிறார்கள். இப்படி ஆட்டும் பொழுது அவற்றைப் பயப்படுத்துவதற்காக எரிந்துகொண்டிருக்கும் கொள்ளிகளையும் துணிகளையும் அவர்கள் கூட்டுக்குள் கொண்டு போகிறார்கள். சர்ப்பங்களைத் தைரியத்துடன் சிலர் சடிதியில் பிடித்துக்கொள்வார்களென்று தெரியவருகிறது. இவையெல்லாவற்றிற்கும் மனோ பல தைரியங்களும் அவற்றினல் அச்செந்துக்களுக்குண்டாகும் அச்சமும் காரணங்களென்று அறிந்துகொள்ளவேண்டியது. இம்மனோபல தைரியங்களில் எவ்வளவு குறைவு காணப்பட்டபோதிலும், அச்செந்துக்கள் தட்சணமேயறிந்துகொண்டு, எதிர்த்துத் தீங்குசெய்வது நிச்சயம்.

வியாதி நிவாரணம்.

308. மெஸ்மர் சக்தியின் பெரும்பிரயோசனம் வியாதிநிவாரணத்தில் காணப்படுகின்றது. யூரோப் கண்டத்தில் சில டாக்டர்கள் சஸ்திர வைத்தியஞ் செய்யும்போது, லாகிரி மருந்துகளினால் மயக்கத்தை யுண்டுபண்ணுவதற்குப் பதிலாய், மெஸ்மர் சகதியின் மூலமாய்க் காடநித்திரையைத் தூண்டிச் சஸ்திரஞ்செய்வார்கள். அவ்வித நித்திராவஸ்தையில் கொஞ்சமாயினும் வாதைதோன்றாது. இதுவேயன்றி, வீக்கம், வலி, குத்தல் முதலிய சிற்சில பிணிகளை மெஸ்மர் சக்தியினால் தணியச்செய்கிறார்கள். மெஸ்மரிப்பவனது மெய்யினின்று ஒருவித ஆகருஷண சக்தி நோயாளியின் தேகத்தில் பிரவேசித்து இப்படிக் குணத்தைக் கொடுக்குமென்று அவர்கள் கூறுகிறார்கள். உண்மையாய் இவ்வண்ணமே நடக்கிறதோ, அல்லாமல், ஈ தனைத்தும் பிணியாளியின் நம்பிக்கைப்பலத்தின் மகிமையோ, நிருணயிக்கவொண்ணோம். ஆனால் வியாதி நிவாரணத்துக்கு நம்பிக்கைப்பலம் மிகவும் அனுகூலமாயிருக்குமென்பதற்கைய மெள்ளளவேனுமில்லை. இந்த நம்பிக்கையே மனோபலம். எவ்விதப்பட்ட கனவைத்தியன் சிகிற்சைசெய்துகொண்டிருந்தாலும், குணப்படுமென்று பிணியாளிக்குத் திடநம்பிக்கை யிருந்தாலே சீக்கிரகாலத்தில் குணமுண்டாகும். யாத்திரைகள், தீர்த்தஸ்நானங்கள், தேவதைகளுக்கு வேண்டுகோள்கள், முடிப்புகள், பிரார்த்தனைகள், சேவைகள், ரட்சாபந்தனங்கள், தாயித்துகள், திருஷ்டி பரிகாரங்கள்—இவற்றினால் நலமுண்டாவதற்கு நம்பிக்கை யென்னு மனோபலமே காரணமாம். பக்தி விசுவாசத்துடன் கருங்கல்லைச் சேவித்தபோதிலும் ஒருபொழுது பயன்தரும். இதற்குச் சந்தேகமில்லை.

309. ஒரோவொருபொழுது ஒவ்வொரு மகாபுருஷன் கிளம்பி ஜபதீர்த்தத்தினாலும் மந்திரவிபூதியினாலும் வியாதிகளைக் குணப்படுத்துவதாக வதந்தியுண்டாகி, லட்சானுலட்சங்களாய்ச் சனங்கள் அவனிடத்திற்கேகுவார்கள். சிலருக்குச் சிற்சில வியாதிகள் நிசமாய் நிவாரணமாவதுமுண்டு. இதற்குப் பிணியாளிகளின் நம்பிக்கையென்னும் மனோபலமே மூலமானது. தீர்த்தத்திலும் திருநீற்றிலும் எவ்விதக்குணமுமிலதாயினும், ஏதோ மகிமையுண்டென்னும் நம்பிக்கையுடன் பிணிபட்டவர்கள் வாங்கிக்கொள்வதினால்

சிற்சில வியாதிகள் குணமடையும். இக்குணப்பாட்டைக்கேட்டுக் கேட்டு அந்த மகாபுருஷனுக்கும் தன்னிடத்தேதோ மகாசக்தி யுள்ளதென்னும் நம்பிக்கை யுதித்துத் திடனடையும். அதன்மேல் சனங்களின் பக்திவிசுவாசங்கள் இன்னுமதிகமாய்ப் பலப்படும். இப்படிக் கொஞ்சகாலம் தேசதேசத்தினின்றும் அபரிமிதமாகிய நம்பிக்கையுடனும், அன்புடனும் ஆசையுடனும், அனேக பிரஜைகள் ஒருங்குகூடிப் பெரியவிசித்திரமாயிருக்கும். கடைசியில் அந்த மகாத்துமாவின் சக்திபோய்விட்டதென்றும், வியாதிகள் சொஸ்தப்படுவதில்லையென்றும் எவனோ ஒருவன் மூலமாய் வார்த்தை பிறக்கும். வெகு சீக்கிரத்தில் இந்தச்செய்தி பரவிப்பலப்பட்டு, மெய்யாய்ச் சக்திபோயிற்றுக்குமென்று ஜனங்களுக்கு அனுமானம் பிறக்கும். அனுமானம் பலப்பட்டு, நம்பிக்கையும் பக்தியுங்கெடும். எந்த வியாதியும் பிற்பாடு குணப்படமாட்டாது. அப்போது மகாபுருஷன் நிஷ்பிரயோசகனாய்விடுவான். இவ்வித விசித்திரங்களை நாமனைவருங் கண்டும் கேட்டுமிருக்கிறோம்.

310. இப்படி முற்சொல்லப்பட்ட மகாபுருஷனுடைய மகிமைக்கு மெஸ்மர சக்தியே காரணமென்றும், அவன் கொடுக்கும் தீர்த்தங்களிலும் திருநீறுகளிலும் அச்சக்தி செலுத்தப்படுவதினாலேயே பிணியாளிகளுக்குக் குணமுண்டாகிறதென்றும், அச்சக்தி யெஞ்சியொழிந்துபோவதே அவனுடைய மகிமை முடிவுக்குவருவதற்கு முகாந்தரமென்றும் சிலர் சொல்லுவார்கள். இஃதனைத்தும் மெஸ்மர சக்தியின் மகிமையோ, பக்திவிசுவாசங்களின் மகிமையோ, நிருணயிப்பதற்குச் சக்கியமாகாமற்போயினும், ஒன்று மாத்திரம் நிச்சயம். மெஸ்மர சக்தியின் மூலமாயாவது பக்திவிசுவாசத்தினாலாவது குணப்படுத்த முடியாத பிணிகளனேகமுண்டு. எந்த மகாபுருஷனது மகிமையின் மூலமாயும், குருடுபட்ட கண்கள் கூடிவராது. முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு விழுந்து விழுந்து தொழுதாலும் மூக்கறையனுக்கு மூக்குமுளைக்காது. கழியையொடித்த மாத்திரத்திலே நொண்டிக்கால் கூடிவராது. மந்திரமகிமையினால் ஊமையனுக்கு வாய்வராது. பக்தியின்மூலமாய்ப் பிள்ளைகள் பிறக்கமாட்டா. பாம்பு கடித்தபொழுது, உன்னையல்ல சுவரைக்கடித்ததென்று சொல்லிச், சிலர் மகாபுருஷர்கள் உபாதியை ஓட்டிவிடுவார்களாம்! தேள்கொட்டியபொழுது

பளீரென்று சன்னத்தில் ஒருபோடுபோட்டு வலியை நீக்குவார்களாம்! இது நிச்சயமாய்ப் பெரியசக்தியே. அப்படிப்பட்டவர்களுடைய கஷ்டத்துக்குக் கன்னத்திலறையே வெகுமானங்கொடுக்கவேண்டும். ஜனங்களே! இது முழுவதும் வெறும்பொய். முழுமோசம்! மோசம்! நம்பிக்கையினால் கொஞ்சம் பிரயோசனமிருந்தபோதிலும், தகுந்த ஔஷத பிரயோகமன்றியில் பெரிய வியாதிகள் போகமாட்டா. பாம்புக்கடிக்கு மந்திரிப்பவர்கள்கூட மருந்துக்களை யுபயோகித்தே வருகிறார்கள். ஆதலால் மந்திரங்களை நம்பி மருந்துகளை விடாதேயுங்கள். மூடவனை நம்பி பரசனைக் கைவிடாதேயுங்கள். ஏற்ற ஔஷதசேவை செய்யாமல் பணச்செலவுபண்ணி நல்ல டாக்டர்கள் மூலமாய்ச் சிகிற்சைசெய்வித்துக்கொள்ளாமல், சூரியநமஸ்காரங்களினாலும், நவக்கிரக ஜபங்களினாலும் கைலாசத்துக்கு விஜயஞ்செய்தவர்க ளனேகரை யறிவோம்.

திவ்விய திருஷ்டி.

311. கடுகளவுள்ளதாயின் மலையளவாய் நினைப்பதும் சொல்லுவதும் உலகத்தவரியற்கை. மெஸ்மர சக்தியின் மூலமாய் நித்திராவஸ்தையும் சொப்பனவஸ்தையு முண்டாவதை ஆதாரமாய் வைத்துக்கொண்டு, என்னென்னவோ மகாற்புதங்கள் அதனால் கைகூடுமென்று சிலர் பிரபஞ்சத்தில் பிரசுரப் படுத்தினார்கள். மெஸ்மர சக்தியின் மூலமாய் இன்னொருவருடைய மனத்தினிலிருக்கும் எண்ணங்களைக் கண்டுகொள்ளக்கூடுமாம்! தூரத்துப் பொருள்களையும் தூரதேசங்களையும் பார்க்கக்கூடுமாம்! வரப்போகும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளக் கூடுமாம். லகோடா செய்யப்பட்ட நிருபங்களிலுள்ள விஷயங்களை வெளியிடுவார்களாம்! பணம் புதைத்து வைத்திருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்பார்களாம்! போன பொருளைக் கண்டுகொள்வார்களாம்! மனது மாத்திரம் உலகமெல்லாம் சஞ்சரித்து வரக்கூடுமாம்! இன்னுமெத்தனையோ விசித்திரங்களாம்! இவ்வித அற்புதங்களுள்ளனவென்று சொல்வதேயன்றி, அப்பொழுதப்பொழுது அனேகர் அனேக தேசங்களில் பகிரங்கமாய்ச் செய்து காட்டியதாகக் கூடக் கிரந்தங்களிலும் வர்த்தமான பத்திரிகைகளிலும் வாசித்து வருகிறோம்.

312. ஐயையோ! உலகத்திலெவ்வளவு மௌட்டியம் மேற்கொண்டது! இக்கூறிய விந்தைகளனையவும் மெய்யெனச்சனங்களெல்லாரும் சர்வசாமானியமாய் நம்புகிறார்களல்லவா! மோசத்தைக் கண்டுகொள்ளமாட்டாமல், மகாவித்துவான்களும், சாஸ்திரபாரங்கதர்களும் கூடப் பலமுறையும் தவறி மோசம் போகையில், எத்தனையோ குதந்திரங்களையும் குயுக்திகளையும் கற்பித்துச் சொல்பவரது சொற்களைச்சாமானிய சனங்கள் நம்பாமலெங்ஙனமிருப்பார்கள்? காரடி வித்தைகளின் இரகசியங்களையெல்லாம் கண்டுகொள்வதெவர்தரம்? பிரபஞ்சத்திலெங்கணும் பரவியிருக்கும் தியோஸாபிகல் சமாஜத்தை ஸ்தாபித்த "பிளாவட்ஸ்கீ" துரைசானியின் மாயங்களைக் கண்டுகொள்வதற்கு எத்தனையோ வருஷங்கள் பிடித்தன. இமாலய பர்வதப்பிரதேசத்தில் மகாத்துமாக்களுள்ளனரென்றும் அவர்கள் தனக்கப்போதப்போது சமாசாரங்களை வெளியிட்டு வருவார்களென்றும் சொல்லி, ஒரு சிறிய பீடத்தின் வழியாய் அவர்களுக்குக் கடிதங்களனுப்பிக்கொண்டும் விடைகள் வரவழைத்துக்கொண்டும், அம்மாது எத்தனைபெயரை மோசம் பண்ணவில்லை? மோசம் வெளிப்படுத்தப்பட்டபின்னர் கூட எத்தனைபெயர் தங்கள் நம்பிக்கையை நீக்கவொண்ணாமல், தமது பிறழ்பாட்டை யொப்புக்கொள்ளாமல், உள்ளுள்ளேயே அசைபோட்டுக்கொண்டு, தியோஸாபிகல் சமாஜத்துக்கு மகாத்துமாக்களுடன் வேலையொன்றுமில்லையென்று சொல்லிக்கொண்டு, அதைத்தழுவியே யிருக்கவில்லை? பிளாவட்ஸ்கீ துரைசானியின் கள்ளவார்த்தைகளில் சிக்குண்டேயல்லவா, அதற்கு முன்னர் நிரீசுவர வாதஞ்செய்துவந்த "ஆனி பெசாண்டு" துரைசானியவர்கள் பைத்திய நம்பிக்கையிலகப்பட்டு வேதாந்தமார்க்கந் தனக்குத் தெளிவுபட்டதென்று எண்ணிக்கொண்டு, உலகத்திற்குக் கூட வெளியிட்டுப்போதிக்கத்தொடங்கி, இந்த வருஷத்து முதலில் நமது தேசத்துக்கு வந்து சில பிரசங்கங்களைச் செய்தனள்? இவ்வளவு தூரமேன்? நமது தேசத்திலேயே எத்தனைபெயர் மோசஞ் செய்வதில்லை? எத்தனைபெயர் மோசம் போவதில்லை?

313. கும்பகோணத்துக்கருகாமையிலிருக்கும் வலங்கிமான் கிராமத்தில் கோவிந்தசெட்டியென்பவன் நெடுநாளாய்ப் பிரசினைகள் சொல்லிவந்து பணஞ்சேகரித்துக்கொண்டிருக்கிறான். இவனுடைய சக்தியைப்பரீட்சிக்கக் கருத்துற்று ஐந்தாறு வருடங்களு

க்கு முன்னர், நாம் அவனிடத்திற்குப்போயிருந்தோம். முதல்விசை மோசத்தைத் தெரிந்துகொள்ளமாட்டாமல் இரண்டாமுறை சென்று மோசத்தைக் கண்ணாரக் கண்டுபிடித்து இரண்டு ஓலைச் சுருள்களை மாற்றிக்கொண்டிருக்கையில் கையுங்களவுமாய்ப் பிடித்துக்கொண்டோம். இந்த விஷயத்தை அனேகருக்குச்சொல்லிச் சொல்லி எமது ஆவி சலித்துப்போய் விட்டது. ஆனால் தாங்கள் கண்டோமென்ற அகம்பாவத்தினால் அனேகர் நம்பமாட்டாதவர்களானார். சிலர் எம்மூலமாய் இச்செய்தியைத் தெரிந்துகொண்டபிறகு கூடச் சென்று மோசம் போய்வந்தார்கள். இன்றைக்கும் நாளைக்குங்கூட அவன் மகா சக்தியுள்ளவனென்றே உலகத்தவரால் நம்பப்படுகிறான்.

314. இன்னுமொரு திருஷ்டாந்தம். நாலைந்து வருடங்களுக்கு முன்னே, பல்லாரியில் பரரெண்ணங்களைத் தெரிந்துணர்த்தக் கூடிய மகா சமர்த்தனொருவனிருந்தானென்று கேள்விப்பட்டு அவ்விடத்துக்குப்போய் அவனுடைய தந்திரங்களைக் கண்டுகொண்டு வெளிப்படுத்தினோம். அப்புறம் அவன் அவ்விடத்திருந்து ஓசையில்லாமல் வழுவிவிட்டானாயினும், இப்பொழுதிப் பட்டணத்திலிருந்துகொண்டு இன்னுந் தன்னுடைய சக்திசாதுரியங்களைக் காட்டிச் சிலரை வஞ்சித்துக்கொண்டிருக்கிறானாம். இவ்வித மோசக்காரர்களெத்தனை பெயரையோ பார்த்திருக்கிறோம்.

315. பூமியில் புதைக்கப்பட்டிருக்கும் தனத்தை மந்திர சக்தியினாலும் மைதீட்டிக்கொள்வதினாலுங் கண்டுகொள்வதுண்டு. இதற்குத்திருஷ்டாந்தமாய்ச், சிலவருடங்களுக்கு முன்னே, நெல்லூர் நகரில் ஒரு மாத்துவாசாரியின் வீட்டில் ஓரறையில் ஏழடியாழத்தில் ஒரு பெரிய தனபாத்திரம் இவ்வாறு கண்டுகொள்ளப்பட்டது. ஒருநாளாகஸ்மிகமாய் ஒரு சந்நியாசி அந்த மாத்துவாசாரியின் வீட்டிற்குவந்து, அவனுடைய பாக்கியத்தை விவரித்துக்கொண்டு, அவ்வீட்டில் ஓரிடத்தில் தனமுள்ளதென்றும், தனக்காயிரம் ரூபாய் கொடுக்கும்பட்சத்தில் ஜபஞ்செய்து கண்டுகொள்வதாகவும் சொன்னான். இப்பேச்சுகளைக் கேட்டாசாரியன் பேராசைகொண்டு, தனங்கண்டுபிடித்த பிறகு வெகுமானங்கொடுப்பதாகச் சொன்னான். சந்நியாசியுமாகட்டுமென்று கூறி மூன்று தினங்கள் ஜபஞ்செய்து பள்ளியறைக்குள் ஆழமாய் வெட்டுவித்

தான். நாலாநாளுதயத்தில், கடப்பாறைபட்டுக் கணீரென்று சப்தஞ் செவியிற்பட்டது. கொஞ்சம் மண்ணெடுத்துவிட்டுப் பார்க்கையில் ஒரு செப்புக்கங்காளத்தின் விளிம்புங்காதுகளுங்காணப்பட்டன. அதன்மேல் அச்சந்நியாசி ஜபத்தை நிறுத்தி விட்டுத் தனக்குக்கிடைக்கவேண்டிய வெகுமதியைக் கொடுக்கச் சொல்லிக் கேட்டான். கொடுப்பினே ஜபத்தை முடித்துப்பலிகொடுத்துக் கங்காளத்தைக் கிளப்புகிறேனென்முன். மேலும், அவ்வறையின் கதவுகளை மூடிப் பூட்டுப்போடுவித்தான். வீட்டுக்கிழவிக்கு மகிழ்ச்சி நடுக்க முண்டாயிற்று. பெண்சாதி புருஷர்களுக்கு அளவிடாமனக்களிப்பு பிறந்தது. ஆயினும், கையில் பணமில்லாதிருந்ததுபற்றி அவர்கள் என்னசெய்வதென்று ஏதுந்தோன்முது திகைத்து நின்முர்கள். கடைசியில் அவர்களுக்கோருபாயந்தோன்றியது. புதையலைக்கிண்டி யெடுத்ததன் பின்னர் விலையுயர்ந்த ஆபரணங்களைச் செய்வித்துக்கொள்ளலாமென்று அவர்கள் மூவருமாலோசித்து, வீட்டுக்காரியின் நகை நட்டுடைமைகளெல்லாவற்றினையும் சந்நியாசிக்குக் கொடுத்து விட்டார்கள். அவன் சந்தோஷித்து, ஒரு வீசையிடைக் கருப்பூரத்தையும் ஒரு கோழிப்பெட்டையும் கொண்டுவரச்சொல்லிக் கட்டளையிட்டு, மறுநாள் அதிகாலையில் கங்காளத்தைக்கிளப்புவதாகத் தெரிவித்தான். ஆயினும் விடியற்காலைவந்தபொழுது சந்நியாசியின் சாடைகாணவில்லை. வீட்டவர்களுக்குச சந்தேகமுண்டாயிற்று. அறைதிறந்து பார்க்கையில் கங்காளம் இருந்தவிடத்திலேயே நிலைபெயராதிருந்தது. அதுகண்டு அவர்கள் ஆனந்தப்பட்டுக் கங்காளத்தைத் தாங்களே கிளப்புவதற்குப் பிரயத்தனப்பட்டார்கள். மாத்துவாசாரி தன்னுடைய கையாரக் கோழிப்பெட்டையை அறுத்துப் பலி கொடுத்தான். பாட்டி கர்ப்பூரம் ஏற்றினுள். பெண்சாதி தனலட்சுமிக்குச் சாஷ்டாங்க தெண்டனிட்டாள். அப்புறம் அவர்கள் மூவரும் கூடிப்பிடித்துக் கங்காளத்தைக் கிளப்பினுர்கள். மேல்மண்ணைப் பறித்துத்தள்ளவே, உமி புலப்பட்டது. ஆசாரியன் வெளுவெளுத்துப்போனுன். சிறுவி சித்திரம்போல அசையாது நின்முள். தனத்தின்மீது உமிமூடிவைப்பது வழக்கந்தானென்று கிழவி பழமை சொல்லித் தைரியங்கூறினுள். அப்புறம் தெம்புபட்டவர்களாய், மனைவி மனைவரிருவரும் கங்காள முழுவதையும் தோண்டிக்கொட்டினுர்கள். ஆயினும் அடிவரைக்கும்

உமிதவிர வேறொன்றுமில்லை. ஒரு நிமிஷம் இமையசையாது நோக்கி—நம்முடைய கண்களுக்கு இப்படிப் புலன்படாதிருக்குமாக்கும், இன்னுமெவருக்காவது காட்டுவமா?—என்று கேட்டான். ஆசாரியன் பெண்சாதி மெய்ம்மறந்து நின்றாள். மூக்குமேல் விரலிட்டு அந்தக்கிழவி—ஐயோ பிள்ளாய்! இது நம்முடைய கங்காளமடா!—என்று தலையிலடித்துக்கொண்டாள். அவர்கள் மூவரும் மூன்றுமாத பரியந்தம் பிணியுண்டிருந்தார்கள். இப்படிப் பணவாசைப் பிசாசுக்குக் கையிலுள்ள பணமெல்லாம் இழந்துகொண்ட பாக்கியவான்கள் அனேகருள்ளனர். உள்ளவிடத்தில் எந்தவிதமான மந்திரங்களுமில்லாமலே தன்னிச்சையாய் வெட்டுகையில் தெய்வ வசத்தினால் புதையல் கிடைப்பதுண்டு. ஆயினும், மந்திரங்களினாலும், மைத்தீட்டுகளினாலும், திவ்வியதிருஷ்டியினாலும், நிட்சேபங்கண்டுபிடிப்பது வெறு மோசடிவார்த்தை யென்றறியத்தக்கது.

316. மோசடியென்று ஆயிரமுறை வதறினாலும் ஜனங்கள் நம்பமாட்டார்கள். இக்கலியுகத்தில் மனுஷியனுக்கு அவ்வித அற்புத சக்திகள் மாத்திரங் கிடைத்திருக்குமாயின் பிரபஞ்சம் நிற்கவொண்ணவே யொண்ணாதென்று ஊசி முனையளவும் எண்ணமாட்டார்கள். யூரோப் கண்டத்தில் இககாலத்துச் சாஸ்திரவிசாரதர்களென்று பேர்பெற்ற மகாவித்துவான்களிடத்தில், இவ்வற்புத வல்லமைகளை யெவருமேன் காட்டமாட்டார்கள்?—என்றாவது, இம்மகா சாஸ்திரிகளுள் ஒருவராயினும் அவ்வித அற்புதவல்லமைகளை ஏன் நம்பமாட்டார்கள்?—என்றாவது, கொஞ்சமாயினும் ஆலோசிக்கமாட்டார்கள். ஆதலினே, மாந்திரிகர்களும், சோதிடர்களும், குறிசொல்பவர்களும் ஆகிய அனேகர் மாயாவிப் புரட்டர்கள் வயிறு நிரப்பிக்கொள்ளுகிறார்கள். வித்துவான்களென்று தலைகீழாய்க் கவிழ்ந்துபோகும் அகந்தைக்காரர்கள்கூட இந்தப் பேர்வெறியில் அகப்பட்டு முழுகிப்போகிறார்கள். சிலர் முகஸ்துதிப்பிரியமுள்ளவர்கள், மகாத்துமாக்களென்று புறப்பட்டவர்களையெல்லாம் பெருமைப்படுத்திக் குருபதங்கொடுக்கிறார்கள். ஒரோவொருவர், தாமே அப்பெரு மகிமையைச் சம்பாதிக்கவேண்டுமென்றுகருதி யோகமார்க்கத்தைப் பின்பற்றியும், உபாசனைநிமித்தம் உண்பதற்குத் தகாதனவற்றையெல்லாம் விழுங்கியும், துர்யோகங்களுக்கு ஆளாய்விடுகிறார்கள்.

317. இப்பூவுலகத்தில், எந்த மெஸ்மரவாதியுளனே, எந்த மந்திரசாஸ்திரியுளனே, எந்த லகோடாவினுப்படிக்கு நிபுணனுளனே, எந்தச் சோதிடனுளனே, எந்த யோகிசுவரனுளனே, எந்த மகாத்துமா உளனே, எந்த வலங்கிமான் கோவிந்த செட்டியுளனே, அவன் எம்மிடத்துக்குவந்து, பத்துப்பெயர் பெரியவர்கள் முன்னிலையில், இதனடியிற் கண்டிருக்கும் காரியங்களிலெதையாயினும் ☞ ஒன்றனைச், செய்யச்சக்தியுற்றிருப்பானுயின், பதினுயிரம் ரூபாய்கள் வெகுமானமாய்க் கொடுப்பதற்கு நாங்கள் சித்தப்பட்டிருக்கிறேம்.

1. எம்மால் கவருக்குள்ளிடப்பட்டு லகோடா செய்யப்பட்டுள்ள காகிதத்தின்மேல் எழுதப்பட்டிருக்கும் கேள்வியை, அல்லது, தொகையைக் கண்டுகொள்வது.

2. எம்மால் இருப்புப்பெட்டியில் வைத்துப்பூட்டப்பட்டிருக்கும் ஒரு பொருளை மாயமாக்கிவிடுவது.

3. எம்மால் அறைக்குள்ளிட்டுப் பூட்டுப்போடப்பட்ட பெயர்வழி சபையோரெதிரில்வந்து நிற்றல். இக்காரியங்களிலெதையாயினும் மெஸ்மரசக்தியினுலாவது வேறெவ்விதச் சக்தியினுலாவது செய்யக்கூடிய மகாபுருஷனுளனுயின் அவனுக்குப் பதினுயிரம் ரொக்கங்கொடுப்பதேயன்றி, நாமவர்களுக்கு ஆயுளெல்லாம் அடிமைப்பட்டுக் கூட விருப்போம்.

பேய்கள், மந்திரங்கள்.

318. எவ்வளவு போதித்தபோதிலும், ஜனங்கள் தெரிந்துகொள்ளமாட்டாத பெருஞ்சங்கதி யின்னுமொன்றுளது. அது பேய்ச் சமாசாரம். இறந்துபோனவர்களுட் சிலருடைய ஆத்துமாக்கள், இப்பூமண்டலத்தில் சஞ்சரித்துக்கொண்டு, அப்போதப்போது மனுஷியர்களுக்குப் புலப்படுவதும், அவர்கள்மேற் பாய்ந்து தமது கோரிக்கைகளையும் கோபங்களையும் தீர்த்துக்கொள்வதுமாயிருக்கின்றனவென்னும் பைத்திய நம்பிக்கை பிரபஞ்சத்திலெங்கணும் பரவியிருக்கின்றது. முக்கியமாய் நமது தேசத்தில் இந்நம்பிக்கை சர்வசாமானியமாய் அனைவருக்குமுள்ளதாகும். பிரபஞ்ச சம்பந்தமான மோகந்தீராதவர்களின் ஆத்துமாக்கள், மர

ணனந்தரம் இவ்விடமே பாராடிக்கொண்டிருக்குமென்னும் பிர மையினுல், இப்பேய்கள் பிறந்தன. பேய்களை நினைத்துக்கொண்ட பொழுது மரணசிந்தையுண்டாவதனுலும், அவை தீங்குசெய்யு மென்றும், தம்மிடத்துக்குக் கொண்டுபோகுமென்றும் மனத்துக் செட்டுவதினுலும், பேயுடன்கூடப் பயமும் பிறந்தது. இப்பயத் தினுல் சிற்சில சமயங்களில் சிலருக்குச் சித்தப்பிரமை யுண்டாகி அவர்களை யனேகவிதப்பட்ட இடையூறுகளில் வீழ்த்துகின்றது.

319. இப்பிரபஞ்சப் படைப்பனைத்தையும் எண்ணிப்பார்க் குங்கால், மனுஷியன் அணுவளவாய்த்தோன்றுவான். ஆகா சம், சூரிய சந்திராதி மண்டலங்கள், நட்சத்திரகோடி, பருவதங் கள், சமுத்திரங்கள், நதிகள், பிரவாசங்கள், அரணியங்கள், விரு ட்சக்கூட்டம், ஜந்து சமூகம், பட்சிவருக்கம், வாயுபலம், பேரொ ளிவெளிச்சம், காடாந்தகாரம், பிரபஞ்ச விஸ்தீரணம்,—இவற் றைக்காண்பினும், கருதினும், இப்பெரும்படைப்பைப் படை த்த மகா வல்லமைக்கு நம்முடைய வாழ்வு உட்பட்டதாய்த் தெளிவுபட்டு, எவ்விதக்கன்னெஞ்சாகிலும் உறுதி நெகிழ்ந்து, தன்னது அற்பத்தன்மைக்குக் சடகட நடுங்கும். அதனுல் பக்தி யுதித்துக் காத்தருளும்படிப் பரமாத்துமாவைப் பிரார்த்தித்துப், படைப்பின் மேன்மைகளைக் கொண்டாடி மகிழும். இக்குணம் மனிதனுக்குப் பிறவி யியல்பாயிருக்கின்றது.

320. பரமதயாபரனென்று நாமனைவரும் நம்பிவரும் தெய் வமானது நமக்கு நினைவுக்கு வந்தபொழுது, பக்தியெவ்வாறுதிக் குமோ, அவ்வாறே பிசாசுகளை நினைவுக்கிழுத்தபொழுதெல்லாம், நம்முடைய இழிந்தன்மை மனத்துக்குத்தோன்றிப், பயமுதித்துச் சித்தப்பிரமையுண்டாகும். ஒன்றித்தனம், இருட்டுப்பாங்கு முத லிய காரணங்களினுல் இந்தப் பயபிரமைகள் வெகு சுலபமாய்ப் பிறந்து வளரும். இந்தமனப்பிரமையே பேயென்று பிசாசென்று வழங்கிவருகின்றது.

321. பேய்கள் மெய்யாய் உள்ளனவா இல்லனவா வென் றனேகர் சங்கிதது வந்து, சிலருண்டென்றும் சிலரில்லையென்றும் வாதஞ் செய்து மண்டைகளையுடைத்துக்கொள்ளுகிருர்கள். பேய் களிருப்பினும் இல்லாவிடினும், பேய்கள் பிடித்துக்கொள்வது மா த்திரம் மெய்யாயுள்ளது. மரணமடைந்தவர்களின் ஆத்துமாக்

களின் உருவங்களாகிய பிசாசுகளொருவேளை யிருப்பினும், அவை யெப்படிப்பட்டனவோ நாமறியோம். அவற்றுடன் பேசுவதற்காவது, அவற்றைப்பார்ப்பதற்காவது வழிகள் புலன்படா. புலன்படினே நமக்கினி வேண்டுவதென்னை? நம்மவர்கள் மாண்டார்களென்று நமக்கு வருத்தமேனிருக்கும்? அவர்களுடைய ஸ்திதிகதிகளைக்கண்டுகொண்டு, செவ்வையாயிருப்பின், நாம் கூட அவர்களிடத்துப்போக முயலோமா? இவ்விதப்பட்ட பெரும்பேறு நமக்கில்லை. ஆத்துமா ரூபங்களாகிய பிசாசுகளிருப்பினும் நமக்குப்புலப்படமாட்டா. நமக்குப் புலப்படும் பேய்களும், நம்மை வருத்தும் பேய்களும், இவை வேறு. இவற்றிற்குப்பிறப்பிடம் மனது. மனத்தினுள்ளே பிறந்து மனத்தினுள்ளே இவை இறந்து போகின்றன. பயபிரமைகளினாலே இப்பேய்களுதித்தனவாய்ச், சித்தச் சுவாதீனம் வரும் வரைக்கும் வருத்துகின்றன.

322. இறந்தவர்களான உறவினர்கள், நண்பினர்கள் முதலியவர்களை இடைவிடாது எண்ணுவதினாலும், அவர்களுடைய சொரூபங்கள் மனத்தினுள் ஊன்றிப்போய், அவர்களுடைய கஷ்ட சுகங்கள் தம்மவையாய்ப்பாவித்துக்கொண்டு, இறந்தவர்கள் மெய்யாய் வந்து பிடித்ததுபோலவே தாமே யவர்களாய்ச், சிலர் நடந்துகொள்ளுகிறார்கள். மாமிகள், மாமர்கள், மைத்துனிகள், ஓரகத்திகள், சகலத்திகள், பெண்சாதி புருஷர்கள்—இப்படிப்பட்டவர்கள் பிடித்துக்கொண்டால், அவர்களுக்குச் சீவிய காலத்திலிருந்த அபேட்சையும், கோபமும், விரோதமும், ஆசையும், விருப்பங்களும், சண்டைகளும், வெளிப்படுகின்றன. தேசாந்தரம் போய் வழியில் மரித்துப்போன கணவனை யெக்காலுமெண்ணி யெண்ணி வருந்துவதினால், கணவியின் மனமானது கலவரப்பட்டு அம்மாதின் கண்களுக்கு அவன் புலப்படுவான். அவனுடைய சொற்கள் செவிபிற்படும். கடைசியில் சித்தப்பிரமை முற்றிப் போய் அவனே பிடித்துக்கொண்டதுபோல் தோன்றும். அப்பொழுது கோலம் போட்டு உட்காரவைத்து உள்ளதுள்ளபடிச் சொல்லும்படிக் கேட்கும்பட்சத்தில், அவ்வில்லாள் கடகட நடுங்கிக்கொண்டு—'என்பேர் ஐயாவையன், நான் அம்மாளு அகமுடையான். ஆகாத தேசத்தில் திக்குகெட்ட பரதேசியாய்ச் செத்துப் போனேன். என்னிடத்துக்குக் கூட்டிப்போகிறேன்'—என்று சொல்லுவான். இப்படிப்பட்ட மனோவிகற்பங்க ளனேகத்தை

யாம் நோக்குகின்றோம். சத்துரு பூதங்கள் பிடித்துக்கொண்ட பொழுது, அடிப்பதுபோலவும், கடிப்பதுபோலும், மார்மேலேறித்துவைப்பதுபோலுந் தோன்றி, மிகமிகவும் கதறியழுவார்கள். சொப்பனவஸ்தையிற் போலவே, பாவம்! அவ்வடிகள் உண்மையாய் எவ்வளவோ வருத்தத்தை யுண்டாக்குகின்றனவொக்கும்.

323. ஒன்றியாய்ச் சுடுகாட்டுப்பிரதேசங்களில் சஞ்சரித்து வருகையில் பயப்படுவதினாலும், அடவிகள், தோட்டங்கள், முதலிய விடங்களில் உலாவுகையில் பயப்படுவதினாலும், மரங்களின் கிளைகளும் இலைகளும் காற்றினாலுண்டாக்கும் ஓசைசேட்டுப்பயப்படுவதினாலும், தற்செயலாய்ப் பயங்கரமான பொருள்களைப்பார்ப்பதினாலும், இருட்டிலாவது நிலவிலாவது வெட்டவெளிகளில் திரிகையில் கண்கள் மின்னிக் கூசிப்போய்ப் பிரமைப்படுவதினாலும், சேற்றுளை நிலத்தில் ஒவ்வொருக்கால் வாயுக்களின், சேர்க்கையினால் உற்பத்தியாகி இங்குமங்குமோடுவதுபோல் தோன்றும் "கொள்ளிவாய்ப் பிசாசுக" ளென்று வழங்கிவரும் ஒளி விசேஷங்களைக்கண்டு பயப்படுவதினாலும், பேய் மனைகளென்று பேர்பெற்றிருக்கும் வீடுகளில் குடித்தனஞ் செய்வதினாலும், இறந்தவர்கள் தத்தம் வாழ்நாட்களில் நடமாடிக்கொண்டிருந்த இடங்களில் பிழைத்திருப்பவர்கள் நடமாடுவதினாலும், திருஷ்டி சுற்றிப்போடுதல் முதலியவற்றைக் கண்டு அச்சமுறுவதினாலும், நோய்கொண்டிருப்பவர்களின் கைபார்த்துப் பேய்நாடி யாடிக்கொண்டிருக்கிறதென்று பூதவைத்தியர்கள் சொல்லும் புரட்டு மொழிகளினாலும், கொண்டபிணியானது நெடுங்காலங்கழிந்தும் குணப்படாமலிருக்கக்கண்டு வீட்டவர்கள் குறிகேட்டு வந்து மாமியார் பிடித்துக்கொண்டிருக்கிறாளென்றோ மைத்துனியார் பிடித்துக்கொண்டிருக்கிறாளென்றோ சித்தாந்தப் படுத்திச் சொல்லிக்கொள்ளும் பேச்சுகளினாலும், பேய்கள் புகுந்துகொள்ளுகின்றன. எவ்விதப்பேய்கள் அவ்வந்தப் பிரதேசங்களி லுள்ளனவென்று முன்னதாகத்தெரிந்திருக்குமோ, அல்லது பயமுண்டாகுமோ அவ்விதப்பேய்களே புகுந்து அவ்வவற்றின் நடவடிக்கைகள் காணப்படும். மேலும், பேய்பிடித்துத் தன்னினைவு தப்பியிருக்குங் காலத்தில், சின்னநாள் முதல் கேட்டிருக்கும் வார்த்தைகளும் பாட்டுகளும் பதங்களும் நினைவுக்குத்திரும்பும். காய்ச்சல் முதலிய வியாதிகளினால் பீடிக்கப்பட்டபொழுதுகூட ஓரோர்பொ

ழுந்து இவ்விதப்பட்ட அற்புதமான ஞாபக சக்தி காணப் படுகின்ற தல்லவா? இனித் துலுக்கக் கோரிகளண்டை பயப்படுவதினுல் துலுக்கப்பேய்பிடித்துச், சிறுவயதில் எப்பொழுதோ தற்செயலாய்க்கேட்டிருந்த நாலைந்து துலுக்கவார்த்தைகள் பிராமணப்பெண்களின் வாயினின்று வந்தால் என்ன ஆச்சரியம்?

324. வீட்டிலெவருககாயினும் பிசாசு பிடித்திருக்குமாயின் மற்றொருவருக்குக்கூடச் சித்தம் கலக்கமுற்று ஆவேசமுண்டாகி, வெங்கடேசுவரர் முதலிய தேவதைகள் தோன்றித், தம்முடைய மகிமையே யென்று சொல்லி, முடிப்புகளும், காணிககைகளும், நிலைப்பறிகளும், தலைமயிர் முடிகளும் கேட்பதுண்டு. இவற்றிற்கெல்லாம் மனப்பிரமையே யல்லவா காரணம்? நமது பெண்கள் கல்விமணமற்றவர்களாகி மௌட்டியத்தில் முழுகிக்கிடப்பதினுலேயல்லவா அவர்களுக்கு அடிக்கடியும் மனோவிகாரம் பிறந்து பேய்ப்பிணி உண்டாகின்றது. வித்தையின் மூலமாயும் மனோதைரியத்தின் மூலமாயுமல்லவா இதரதேசப் பெண்களுக்கு இப்பெரும்பிணி அவ்வளவாய்ப் பிடித்துக்கொள்வதைக் காண்பதிலம்? மூடத்தனத்தில் மூழ்கிப்போயிராமல் நெஞ்சழுத்தம் வாய்த்திருக்கும் ஆண் பெண்களுக்கு, இப்பேய்ப் பிணி என்றைக்கும் உண்டாவதில்லையல்லவா?

325. இப்படிக் கீழ்க்கூறிய பேய்ப்பிணியானது மெய்யாய் அனேகருக்குண்டாகின்றது. அதற்குச் செய்யவேண்டிய சிகிற்சை, வியாதியின் மெய்யான காரணங்களையொட்டியே யிருக்கின்றது. ஓர்பொழுது தேகாரோக்கியம் குலைந்துபோய், மூளை நரம்புகள் முதலியவற்றினுள் சில வியாதிகள் உதித்து மனோ விகாரம் உண்டானபோது கூடப், பேய்ப்பிணியென்று தவற்றெண்ணமுற்றுப் பேய் போக்கும் வழிகளையே தொடர்கிறூர்கள். இதனுல் தகுந்த மருந்து சேராததுபோக அப்பிணி மிக மிகவும் முதிர்ந்துபோய் உயிருக்கு மோசமாய் முடிவதுமுண்டு. ஆதலால் இவ்விதச் சமயங்களில் பூதவைத்தியர்களின் புரட்டுகளை நம்பி வஞ்சிக்கப்படாமல், தகுந்த ஔஷதத்தைக் கூட்டவேண்டியது. ஒரோவோர்பொழுது சிலர் கெட்டபெண்கள் தங்களுடைய் கெட்ட நடவடிக்கைகளுக்கு அநுகூலஞ் சம்பாதித்துக் கொள்வதற்காக இல்லாப் பிசாசுகளை மேலெடுத்துப் போட்டுக்கொண்டு, வீட்டவர்க

ளைப் பயப்படுத்திச், சந்து செய்துகொண்டு இஷ்டமான கள்ளக் கணவர்களுடன் கலவி நடத்துகிறார்கள். இப்படிப்பட்டவர் களுக்குப் பொய்ப்பேயோட்டிகளில் கூட அனேகர் மகாயோக் கியர்களுள்ளனர்.

326. பயத்தினாலும், சித்தப்பிரமையினாலும், பேய்ப் பிணி பிறக்குங் காரணத்தினால் அவ்விதப் பயமயக்கங்களைப் போக்கடித்து மனத்தினைச் செவ்வைப் படுத்துவதே அதற்குச் செய்யவேண்டிய சிகிற்சை. தலையும் தாடியும் நகங்களும் வளர்த்துக்கொண்டு, முகத்தில் குங்குமப்பொட்டும், கையில் மந்திரப்பிரம்பும் மாலையும் செப்புக்காப்பும் போட்டுக்கொண்டு, மந்திரவாதிகளென்று மாய மொழிகளைப்பேசிக்கொண்டு பயங்கரமான பார்வையை உடைத்தாயிருக்கும் பூதவைத்தியர்களைப் பார்த்தவளவிலேயே, எப்படிப்பட்ட மனவுறுதியுள்ளவர்களுக்கு மெய் நடுங்கிப் பயம் பிறக்கும். இனி, முடியவிழ்த்துக்கொண்டு தலைவிரிகோலமாய் முகமுழுவதும் குங்குமம் பூசி அவர்கள் செய்யும் அட்டகாசமும் துட்ட தந்திரங்களும், பலவித வருணங்களுள்ள கோலங்கள் போட்ட பயங்கர விக்கிரசங்களும், கண்களைச் சுழலச் செய்யும் தீபங்களும் தூபங்களும், அகண்டங்களும், விழிகளைச் சிவக்கச் செய்துகொண்டு அவர்களுச்சரிக்கும் ஹ்ராம், ஹ்ரீம், ஹ்ரூம் முதலிய பீஜாட்சரங்களும், ஹோம்காளி, பத்திரகாளி, மலையாளபகவதீ, வீரபத்திர மகா ருத்திர முதலிய மந்திரங்களும், நெஞ்சு வெடித்துபோகுமாறு அவர்கள் போடும் பெருங் கூச்சல்களும், உடம்பு முழுவதும் மயிர்ச்சிலிர்ப்புண்டாக்கும் குடவோசைகளும்,—இவற்றையெல்லாம் காண்பினும் கேட்பினும், அவர்சளடிக்கும் அடிகளைச் சுவைபார்ப்பினும், பேய்க்குக்கூடப் பயம்பிடித்து ஓடிப்போகுமென்றால் ஆச்சரியமேதுளது? இப்படி மனப்பிரமையை ஓடவடித்துக், காப்புத் தகட்டுகளினாலும், தாயித்து களினாலும், கைக்காப்புகளினாலும் மனத்தைப் பலப்படுத்தி நம்பிக்கையைப் பிறப்பித்தாலல்லவா அந்த பொல்லாத பிசாசுப்பிணி பறந்தோடும்? ஐயையோ! மூடத்தனத்தினால் எப்படிப்பட்ட கேடுகள் மூளுகின்றன?

327. பூத வைத்தியர்களிடத்து எந்தச் சக்தி யில்லாதிருப்பினும், அவர்கள் செய்யும் தந்திரங்களினாலும் அவர்கள் உச்சரிக்

கும் மாய மந்திரங்களினாலும் பயமுண்டாகிப் பேய்ப்பிணி யெவ்வாறு நிவாரணமாகுமோ, அவ்வாறே எந்த வியாதியுமில்லாதவர்களுக்குப் பூத வைத்தியர்கள் மூலமாய்ப் பயமுண்டானபொழுது வியாதியுதித்துக் கடைசியில் அது பேய்ப்பிணியாய் முடிகின்றது. இதுவே பேயோட்டிகளென்று பெயர் பெற்றிருக்கும் துன்மார்க்கர்களுக்குள்ள முக்கிய சாதனம். மந்திரசாஸ்திரிகளென்று பிரசுரப்படுத்திக்கொண்டு, கிரகண முதலிய சமயங்களில் மந்திரோபதேசங்களைப் பெற்றுக் கிரியைகளைச் சேகரித்து, நிசிவேளையில் சுடுகாட்டில் கள்ள செபங்களைச் செய்துகொண்டு, யட்சிணி, டாகினி, குட்டிச் சாத்திரி முதலிய துச்ச தேவதைகள் தமக்கு உட்பட்டிருக்கின்றனவென்று வீணடம்பரங்கள் முழக்கி, மூடசனங்களைப் பயப்படுத்தி வாழ்ந்துவரும் பேயோட்டியோடு பகைமைப்பட்டு, அவன் மூலமாய்ப் பயமுண்டாய்க் கடைசியில் மரணம் வந்து சேர்ந்தால் ஆச்சரியமென்னவுண்டு? முதலில் பயமுண்டானபொழுதே பகுதி யுயிர் பறந்துபோகும். பிற்பாடு அந்த மாயாவிசெய்யும் வஞ்சகச் சூழ்ச்சிகளினால் மிகுந்த பகுதிக்கும் மோசம் வந்துசேரும். இனித் தூக்கிப் பார்ப்போமானால் இவர்கள் செய்யும் கபடுகள் ஒன்றிரண்டா? ஊருக்குவெளியில் சாதாரணமாய்ச் சனங்கள் சஞ்சரிக்கும் இடங்களிலும், பகையாளியின் வீட்டு வாயிலிலும், மாப் பொம்மைகளையும், எலும்புகளையும், நெருஞ்சில் முள்ளுகளையும், தேள்களையும், பாம்புகளையும் போடுவார்கள். கோழிக்குஞ்சுகளைக் கொன்று எலுமிச்சம்பழங்களை யறுத்துப் பழங்காசுகளைப் போடுவார்கள். தம்முடைய மந்திர மகிமையென்று நம்பிக்கையுண்டாக்குவதற்காக மருந்துகளையேற்றி மரங்களைப் பட்டுப்போகும்படிச் செய்வார்கள். பகைவனுடைய வீட்டின்மேல் மீன்களை யிறைத்து, அவற்றினுக்காகப் பூனைகள் கூட்டமாய்ச் சேர்வதினால் மார்ச்சாலப் பிரயோகஞ் செய்தது போலப் பயத்தை யுண்டாக்குவார்கள். குயவன் சூளையில் எந்த உபாயத்தைக்கொண்டாவது இரண்டு மூன்று கழற்கோடிக்காய்களைச் சேர்த்து, அவை வெடிப்பதினால் பானைசட்டிகள் உடைந்து சுக்கல் சுக்கலாய் வீழ்கையில் பிரயோக மகிமையென்று நம்பிக்கை பிறக்குமாறு காட்டுவார்கள். இன்னும் பலவிதக் கொடுஞ்செயல்களுக்குச் சலியாது சித்தப் படுவார்கள். வீடுகளுக்குத் தீமூட்டுவோர்களும், தம்முடைய மகிமையை உறுதி நிலைபெறச்

செய்வதற்காகப் பகைவர்களுக்கு விஷ மூட்டுவோர்களும்கூட உள்ளனர். இப்படிப்பட்டவர்களுக்கேற்ற தண்டனை யப்போதப்போது கிடைத்துக்கொண்டே வருகிறது. சில தினங்களுக்கு முன்னரே ஒரு பேயாண்டி விஷப்பிரயோகத்தின் பொருட்டுத் தீவாந்தரவாச தசையைச் சம்பாதித்துக்கொண்டான். ஓரானோர் பொழுது ஏதேனும் பெரிய சனோபத்திரவம் நேரிடுமாயின், அஃது பேயாண்டியின் ஏவலினால் உண்டானதென்று அநுமானப் பட்டவர்களாய்க், கிராமஸ்தர்களெல்லாம் சேர்ந்து அவனைக்கொலை செய்வது முண்டு. ஆதலின், கொழுத்துச் செருக்குண்டிருக்கும் பேயாண்டிக் கரவடர்களே! உங்களுடைய கபடங்களையும் இடம்பங்களையும் நீத்துப் புத்திபெற்றவர்களாய் நன்னடைக்கை கொண்டு நல்வழி பிடித்தொழுகுங்கள்.

மரணம், மரணாநந்தரம்.

328. சிருஷ்டி மர்மங்களெல்லாவற்றிலும் மிகப் பெருமையுள்ளது மரணம். இஃது சகல பிராணிகளுக்கும், சமஸ்த பதார்த்தங்களுக்கும் இயல்பானது. பிறப்பெடுக்கையிலேயே இறப்பு மதனோடிணைபட்டேயிருக்கும். பிறப்பிறப்பில்லாப் பொருளொன்றே யுளது. அஃது நமக்குப் புலம்படாதது. பெற முடியாதது. இப்படைப்புக்கு ஆதாரமாயிருக்கும் சக்தி யொன்றனுக்கன்றி அப்படிப்பட்டது வேறொன்றனுக்குமில்லை. பிறப்பிறப்புகள் அனைவருக்கும் பொதுவானது. பிறப்பிறப்பு வழிகளில் அனைவரும் ஒப்பானவர். எப்படிப்பட்ட அரசர்க்கரசனும் பிறக்குங்கால் ஏதும் கொணர்ந்துவாரான். இறக்கையிலேது மெடுத் தேகான். உடைமை வறுமைகளும் ஏற்றக்குறைவுகளும் மூன்று நாளைய முழக்கமே. மரணம் அநியாயந்தொடராது. ஓரஞ்சாராது. சிறியவன் மண்ணும் பெரியவன் மண்ணும் மரணத்துலாக்கோலிலிட்டக் கால், இடத்தகடுஞ் சாயாது வலத்தகடுஞ் சாயாது. மரணத்தின் சந்நிதியில் உத்தியோக முபயோகப்படாது. கல்வி பயன்படாது. செல்வந்தடுக்காது. தான தருமங்கள் உதவா. உறவினர் உதவார். கூற்றுவனென்றால் அனைவருமஞ்சுவார். எவனுக்கும் அஞ்சாது கூற்று. எதையும் அஞ்சாது. கூற்றுவனே நமது ஈற்று

நண்பன். மண்ணே நமது பிறப்பிடம், மண்ணே யிறப்பிடம், மண்ணே யிருப்பிடம். இஃது சாலவு முறுதி, முக்காலு முறுதி.

329. மரணனந்தர மேதுளதோ எவரு மறிந்திலர். மண்ணுடன் மண்சேருமென்பது சிலர் மதம். மற்றொரு பிறப்பு சிலர் மதம். ஆத்துமா உள்ளதென்று சிலர் மதம், இல்லதென்று சிலர் மதம். விழிப்பிலாப் பெருந்துயிலென்று சிற்சிலர் கொள்கை. விழிப்புளதென்றேனையோர் கொள்கை. நய ர் அனைவரையும் மீண்டும் காணுவமென்று எண்ணுவார் சிலர். இது வெறும் விருப்பமென்று ஏனையோர் உறுதிப்பாடு. வீடென்றால் களிப்பு குழியென்றால் அச்சமும் படுவார் சிலர். வீடுங் குழியும் ஈண்டே யன்றி வேறெங்கு மிலதென்று உறுதி சிலருக்கு. அறமறங்களுக்குப் பிறவுலகில் ஆராய்வு மாக்கினையு முள்ளனவென்று எண்ணுவர் சிலர். அனைத்தும் இவ்வுலகிலே முடிவுறு மென்பர் சிலர் தெய்வமுண்டென்று சிலர், இல்லையென்று ஏனையோர். இப்பிர பஞ்சமே கடவுளின் வடிவமென்பார் சிலர். கடவுள் நமக்குள்ளே யே யுளனென்று பிறத்தியர் கொள்ளுவர். பிரபஞ்சமெலாம் மாய வடிவென்றும், இந்நம்மது பிழைப்பே பெருமாய மென்றும் சிற் சிலர் கருதுவர். இங்ஙனம் எத்தனை யெத்தனையோ வழிப்படிப் பெருகக் கற்றறிந்த சான்றோரும், ஆய்ந்தோய்ந்துணர்ந்த பேர் ஞானிகளும் யோகிகளும் வேறுவேறெண்ணங்கள் கொண்டு திரிபுற்றிருக்கின்றனர். இவ்வித வேறுபாடுகளினாலே மறைகளும் மறையீற்று நூல்களும் பிறந்தன. குரான் பிறந்தது. பைபில் பிறந்தது. அனேக சமய நூல்கள் பிறந்தன. சமயகோடிகள் பிறந்தன. நம்பிக்கையே யன்றி இன்னதே யுறுதியென்றெவரு மறியார். மரித்தவரெவரும் வந்து தெரிவியார். படைத்தவனும் சொல்லான். சொல்லினும், நுண்ணியோராகிய யாம் அறிந்துகொள்ள நிகரேமல்லவா!

330. இவ்வையங்களுடன் நமக்கேது வேலை? எத்தனைத் திரிபெண்ணங்களிருப்பினும் அனைவரும் கூடித் துணிவதொன்றுளது. கடவுள் பற்றுபவரும், கடவுள் பற்றாதவரும் ஆமிருவரும் பற்றுவதொன்றுளது. எல்லாக் கொள்கைகளுக்கும் பொதுவான கொள்கை யொன்றுளது. இம்மண்ணுலகில் உயிர்ப்பவ ரனைவரும் பற்றாது ஒழிக்காத தொன்றுளது. இஃது நமது மெய்மையும்—

படைப்பின் பெருமையும். நமது நொய்யறிவைச் சூழவும், நமக்குத் தெரியாததும் நாம் தெரிய வேலாததும் எவ்வளவோ மாயையுள்ளது. எவ்வளவோ ஆழமுள்ளது. இம்மாயையே தெய்வம். இவ்வாழ்வே தெய்வம். இத்தெய்வத்தின் கண் பிரபஞ்ச மாழ்ந்திருக்கின்றது. பிரபஞ்சமனைத்தும் தெய்வ மயமாயிருக்கின்றது. நாம் தெய்வத்தினுள்ளனம். தெய்வம் நம்முளுள்ளது. நம்முள் தெய்வ மெப்பொழுதும் நல்வழியே காட்டும். எக்காலும் பேரின்ப வீட்டுவழியே காட்டியியங்கும். இன்னா செய்யாமையே ஒப்பிலா வறமென்றும், பிறர்க்குதவி செய்தலே பிறப்பினுக்குப் பெரும் பயனென்றும், நமக்குப் புலம் படுத்தும். மானிடரே! இம்முத்தி வழியைப் பிடித்தொழுகுமின். இவ்வழியே உம்மை யின்பத்துக்கு ஒப்பிலாப் பெருவழியென்றுணருமின். இவ்வழி யிலக்கி யொழுகுவது துன்பவழிக்கு முதலாம். குழியில் வீழ்த்தும் வழியிதுவே. ஆதலின் கடவுளன்பே முதல்தரமென்று கருதி நல்வழி விடாதொழுகுமின். நல்வழி யொழுகாதிருப்பிரேல் கடவுளன்பு வெறுங் கரவடமாம். உருத்திராட்சங்கள், துளசிமாலைகள், செபமாலைகள், பூணூல்கள் கடவுளன்பாகா. பூதிகள், புண்டரங்கள், திருமணிகள், திருமண்கள், கோபி சந்தன முத்திரைகள், அட்சலிதகள், பொட்டுகள்—இவை கடவுளன்பாகா. சந்தியாவந்தனங்கள், ஔபாசனங்கள், அக்கினியோத்திரங்கள், வைசுவதேவங்கள், தேவதார்ச்சனைகள், தருப்பாசனங்கள், ராமாயண பாராயணங்கள், புஷ்பங்கள், பூசைகள், தூபங்கள், தீபங்கள், ஆரதிகள், நைவேத்தியங்கள்—இவையல்ல கடவுளன்பு. தொங்குங் குடுமிகள், பஞ்சகச்சங்கள், பட்டு வேஷ்டிகளும் கடவுளன்பாகா. நாளொன்றுக்கு நாற்பது தடவை தலைமுழுக்குப் போடுவதும் கடவுளன்பல்ல. பட்டினிகள், நோன்புகள், விரதங்கள், வாயனங்கள்—இவையுமாகாக் கடவுளன்பு. கோயிற்றிருப்பணிகள், நவராத்திரித் திருவிழாக்கள், ஹரி பஜனைகள், சீதாகலியாணங்களும் கடவுளன்பாகமாட்டா. விஷ்ணு ஸஹஸ்ர நாமங்கள், சூரிய நமஸ்காரங்களும் தெய்வ பக்தியாகா. பிட்சைகள், சமாராதனைகள், சந்தர்ப்பணைகள், பூரி தட்சிணைகள்—இவை தெய்வ பக்தியாகா. வேண்டுகைகள், பிரார்த்தனைகள், முடிப்புகளும் தெய்வ பக்தியல்ல. வேதபாராயணம், வேதாத்தியனமும் தெய்வ பக்தியாகாது. தெய்வ பக்திக்கு இக்குறித்தவை ஆவசிகமல்ல. இவை

யெல்லாம் பொருந்தி யிருப்பினும் நல்வழி யொழுக்க மில்
லது பயன்படா. நல்வழி பிடித்து ஒழுகுபவனுக்கு இது கு
றைவாகாது. ஆதலின் நல்லீர்! நல்வழி நன்னடக்கையேமுத
ன்மையானதென்று தெரிமின். ஆத்தும சுத்தி ஆவசகமென்று
நம்புமின். பரம நிஷ்டாபரர்களென்று வழங்கிவரும் வேஷதாரி
களைப் பரமதுராத்துமாக்களென்று பகுத்தறிமின். வெளிவேஷ
ங்களில்லாதிருப்பினும், திரிகரண சுத்தியும் நல்வழிப் பிடிப்புமுள்
ளவனை மேலானவனென்று பாவியுங்கள். இப்படிப்பட்டவன் வே
ற்று மதத்தனாயினும் மரியாதை பாராட்டுங்கள். ஆசாரம் வேறு
பட்டிருப்பினும் உபசாரஞ் செய்தாதரியுங்கள். எளியவனாயினும்
பெருமைப்படுத்துங்கள். குடுமிகளையும், குறிகளையும், உடுப்புக
ளையும் பாராட்டாதேயுங்கள். வேற்றுத்தேசத்துக்குப் போய்வந்
தவனென்று சாதியினின்று வெளிப்படுத்துவது வெகு அக்கிரம
மானது. கைம்பெண்டுகளைக் கைதொட்டு மணந்தவனென்று கை
விட்டுப் புறம்பாக்குவது கடினமும் குரூரமு முள்ளது. பெண்
பிள்ளைகளுக்குப் படிப்புக் கற்றுக்கொடுப்பவனென்று பழிப்ப
பேரநியாயமாம். விவேகத்துடன் பகுத்தறியுங்கள். அனையவ்
விலும் பெரிதான பயனைச் சீர்தூக்கிப்பாருங்கள். ஆத்தும சுத்தி
ஆவசிகமென்று விடாது நம்புங்கள். நல்வழியைக் கடைப் பிடி
யுங்கள். சன்மார்க்கமே தெய்வ பக்திக்குப் பிரதானமானது. சன்
மார்க்கமே சவுக்கியத்துக்குப் பெருவழி. சன்மார்க்கமே சுவர்க்கம்.
சன்மார்க்கமே மோட்சத்துக்கு மார்க்கமாம்.

முற்றிற்று.

PRINTED BY SRINIVASA, VARADACHARI & CO., MOUNT ROAD—MADRAS.